உரத்த சிந்தனை

சிவசங்கரி

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 1993

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 35.00

16856
3288079

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17
Printed at :
ஸ்ரீ முருகன் ஆப்செட் பிரிண்டர்ஸ் சென்னை — 600 005.

பதிப்புரை

வாழ்க்கையை ஆக்கபூர்வமாக வைத்துக் கொள்வது அவரவர்கள் கையில்தான் இருக்கிறது. தன்னம்பிக்கையோடு சுறுசுறுப்பாக, துணிவாகச் செயலாற்றினால்தான் வெற்றியோடு வளமான வாழ்க்கை வாழமுடியும். அப்பொழுதுதான் நம்மைச் சுற்றியிருப்பவர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்தி, நம் வாழ்க்கையையும் சிறப்பாக நடத்தமுடியும்.

யாவரும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும், சமுதாயம் சீரோடும் சிறப்போடும் விளங்க வேண்டும் என்ற உயரிய கருத்துக்களை 'உரத்த சிந்தனை' என்ற இந்த நூலின் மூலம் திருமதி சிவசங்கரி வாசகர்களுக்கு வழங்குகிறார்.

திருமதி சிவசங்கரி தாம் சந்தித்த மனிதர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றியும் தமக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றியும் விளக்கி "சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது" என்ற நூலைப் படைத்து, பெரும் பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றவர். அந்நூலில், தனி, மனித வாழ்வின் விழிப்புணர்வுகளுக்குப் பல சிந்தனைகளை வழங்கியிருந்தார்.

இப்பொழுது 'உரத்த சிந்தனை'யின் மூலம் தனி மனித வாழ்க்கை மேம்பாட்டுக்கும் சமுதாய விழிப்புணர்வுக்குமான உயரிய சிந்தனைகளை உளந்திறந்து கூறுகிறார்.

உண்மைகளை மூடிமறைத்து பிரச்சினைகளை எதிர்நோக்கத் திராணியில்லாமல் அவற்றைக் கண்டு நடுநடுங்குவதால் தனிமனிதனுக்கோ சமுதாயத்துக்கோ நன்மை இல்லை. அவற்றை எதிர்கொண்டு துணிவோடு செயலாற்றி வெற்றி கொண்டால்தான் தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும் உய்வு கிடைக்கும் என்பதை 'உரத்த சிந்தனை' மூலம் சிவசங்கரி உரக்கச் சொல்கிறார்.

ஒரு மனிதன் "ஏதோ பிறந்தோம் வாழ்கிறோம்" என்று இருப்பதை விட, பொறுப்புணர்வோடு கடமைகளை ஆற்றி விழிப்புணர்வோடும் துடிதுடிப்புடனும் குறிக்கோளுடனும் செயல்பட்டால்தான் வெற்றிகரமான வாழ்க்கை வாழ்ந்ததாக ஆகும் என்று இந்நூலில் தெளிவாகவும் அழுத்தந்திருத்தமாகவும் கூறுகிறார்.

தனிமனிதனையும் சமுதாயத்தையும் சீர்கேடடையச் செய்யும் குடிப்பழக்கம், சூதாட்டம், பேராசை, லஞ்ச ஊழல், எய்ட்ஸ் இவைகளினால் ஏற்படும் தீமைகளை எதிர்த்து தீவிரமாக இந்நூலின் மூலம் குரல் கொடுக்கிறார்.

மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தவும், சமுதாயம் சீரோடும் சிறப்போடும் விளங்கவும் உயரிய கருத்துக்கள் நிரம்பிய "உரத்த சிந்தனை" நூலை வானதி பதிப்பகம் பெருமையோடு வெளியிடுகிறது. பயனுள்ள நூலையளித்த ஆசிரியை சிவசங்கரியை நன்றியோடு போற்றிப் பாராட்டுகிறேன்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

16856
3288079

1

சமீபத்தில் ஓர் அனுபவம்.

என்னையும் அறியாமல் மனசின் மண்ணில் சிறு விதையாக விழுந்து, நான் உணரும் முன்பே தபதபவென்று வளர்ந்து, இன்று வேறு எது குறித்தும் சிந்தனை செய்ய முடியாத அளவுக்கு கவனம் பூராவும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் விஷயத்துக்கு மேற்சொன்ன அனுபவம்தான் அடிப்படைக் காரணம்.

விவரமாகப் புரிவதற்கு உங்களுக்குக் கோதண்டராமனை முதலில் அறிமுகப்படுத்துவது அவசியமாகிறது.

கோதண்டராமன் என்னைவிட வயசில் பல வருஷங்கள் மூத்தவர். அவர் குடும்பத்துக்கும் என் குடும்பத்துக்கும் நீண்ட காலப் பழக்கம். படித்தவர், கெட்டிக்காரர், நேர்மையானவர், உழைக்க அசராததில் இன்று வசதியாக வாழ்பவர்.

இத்தனை இருந்தும் நண்பர்களும் உற்றார் சுற்றாரும் அவரிடமிருந்து பத்தடி தள்ளி விலகியே இருந்தார்கள். ஆத்மார்த்த சினேகிதம் என்று சொல்லிக் கொள்ள ஒரு ஆசாமி கிடையாது. மனைவி

மக்கள் கூட கடமைக்காக அவரைப் பொறுத்துக் கொண்டிருந்த மாதிரிதான் வெளியில் பேசிக் கொள்வார்கள் என்று நான் குறிப்பிட்டால் 'வசதியானவர், நல்லவர் என்று வர்ணிக்கப் பட்டவருக்கா இந்த நிலை?' என்கிற ஆச்சர்யம் சிலருக்காவது எழலாம்; நியாயம். ஆனால், அவரிடம் இருந்த ஒரு துர்குணம்தான் எல்லாரையும் எட்டிப்போக வைத்தது என்று விவரம் தெரிந்த எவரும் ஒப்புக் கொள்வர். அப்படி வேண்டியவர்களையும் எட்டடி தள்ளியே நிற்க வைத்த குணம்தான் என்ன?

சொல்கிறேன்.

மனுஷருக்கு துசுக்கென்றால் கோபம் வந்தது கூட பெரிய குறை இல்லை, ஆனால் நாக்கை சவுக்காக்கி சதா சர்வகாலம் 'யாருடைய தயவும் எனக்குத் தேவையில்லை; எவனையும் சார்ந்து நிற்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை, தனியாக வந்தேன், தனியாகத்தான் போகப் போகிறேன், இதில் அடுத்தவனின் உதவி எனக்கெதற்கு? ம்ஹூம், வேண்டாம், பணம், அது இது என்று மற்றவர்களுக்குத் தான் என் தயவு வேண்டுமே தவிர எனக்கெதற்கு!' என்று தெரிந்தவர் தெரியாதவர் என்று சமயம் கிடைத்தால் சாடுவார் பாருங்கள், அதுதான், அந்தப் பழக்கம்தான் கோதண்டராமனை மற்றவர்களுக்கு எட்டிக்காயாகக் கசக்க வைத்தது என்று நினைக்கிறேன்.

இப்படி எழுதுவதைப் படிக்கும் வாசகர்களில் ஒரு சிலராவது, 'உழைத்து முன்னுக்கு வந்த கோதண்டராமனுள் தன்னம்பிக்கை நிறைந்திருக்கிறது, அதனால் அடுத்தவரை அண்டி வாழக்கூடாது என்கிற

பிடிவாதம் வந்திருக்கலாம். இதில் தவறு என்ன? சுயமரியாதை, தன்னம்பிக்கையோடு வாழ்வது மனிதராய் பிறந்த எவருக்கும் அவசியம் என்று கூறும் நீங்களே இப்படி எழுதலாமா?' என்று உரிமையுடன் என்னிடம் சண்டை போட நினைக்கலாம்.

உண்மை. மானம், மரியாதையோடு வாழ்வது உயர்வுதான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால், நண்பர்களே, தன்னம்பிக்கை வேறு, அகம்பாவம் வேறு. இரண்டையும் பிரிப்பது மெல்லிய கோடுதான். மறந்துபோய் தாண்டி விட்டால் க்ஷணகாலத்தில் தன்னம்பிக்கை அகம்பாவமாக மாறிவிடும் அபாயம் உள்ளது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இதை மறக்கக் கூடாது.

'கூடுமானவரையில் நான் யாரையும் சார்ந்து வாழ மாட்டேன்; என் கை, கால், புத்தியைக் கொண்டு உழைத்து முன்னேறுவேன்; தேவையில்லாமல் அடுத்தவரிடம் உதவி கோர மாட்டேன்; இலவசமாக எதையும் பெற்றுக் கொள்ளவும் மாட்டேன்' என்கிற வைராக்கியத்தைக் கடைப் பிடிப்பது தன்னம்பிக்கை நிறைந்த அற்புதமான வாழ்க்கைக்கு வழி செய்யும். நூற்றுக்கு நூறு சரி. ஆனால், 'உன் பரிவு எனக்கெதற்கு? யாருடைய உதவியோ, துணையோ இல்லாமல் என்னால் வாழ்ந்துவிட முடியும்' என்று மார்தட்டுவது இறுமாப்பு; அகங்காரம்! இந்த குணம் யாருடைய வளர்ச்சிக்கும் எந்த விதத்திலும் உதவாது, நிச்சயம்.

கோதண்டராமனையே எடுத்துக் கொள்ளுங்கள்.

'எவருடைய தயவும் எனக்கு வேண்டாம்' என்று ஆர்ப்பரித்தவரால் கடைசி வரையில்

அப்படியே இருக்க முடிந்ததென்றால், இந்த விஷயத்தை ஒரு தலைப்பாக எடுத்துக் கொண்டு இங்கே நாம் அலச வேண்டிய சந்தர்ப்பமே வந்திராதுதான். ஆனால் இல்லையே!

ஆறு மாசங்களுக்கு முன்னால் டெல்லிக்குச் செல்ல சென்னை விமானக் கூடத்துக்கு வண்டியில் சென்றபோது, ஏர்போர்ட்டுக்குள் திரும்பும் இடத்தில், வேகமாய் லாரி ஒன்று நெடுஞ்சாலையில் வர, கண்மூடித் திறக்கும் நாழியில் விபத்து நடந்து விட்டது. வண்டியோட்டி ஸ்தலத்திலேயே மாண்டு போனார். கோதண்டராமனுக்கு முதுகுத் தண்டிலும், மண்டையிலும் பலத்த அடி.

இரண்டு மாசங்கள் போல தனியார் ஆஸ்பத்திரியில் படுத்திருந்துவிட்டு, உன்பாடு என்பாடு என்று உயிர் பிழைத்து வீட்டுக்கு வந்தவரை அண்மையில் சென்று பார்த்தேன். மனசு இழை இழையாகப் பிரிந்துதான் போயிற்று.

நரம்பு மண்டலம் வெவ்வேறு இடங்களில் பாதிக்கப்பட்டிருப்பதில் நடமாட்டம் இல்லை. அசைவு இல்லை, பேச்சுகூட இல்லை. 'யாருடைய தயவும் வேண்டாம்' என்று கர்ஜித்து வளைய வந்தவர் இன்று வாயில் திரவ ரூபத்தில் உணவை ஊற்ற, உடம்பைத் துடைக்க, துணி மாற்ற. ஏன், உடலைப் புரட்டி விடக்கூட அடுத்தவரின் உதவியை நாடும் பரிதாப நிலையில் இருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா?

இப்படி படுத்துவிட்ட கஷ்டம் ஒரு பக்கம் என்றால், மனதளவில் இந்த மாதிரி ஒரு நிலைமைக்குத் தயாராக இல்லாமல் போனதில் வேண்டியவர்கள்

பரிவுடன் செய்யும் பணிவிடைகளை ஏற்பதுகூட கோதண்டராமனுக்குப் பெரும் அவஸ்தையாக இருப்பது இன்னொரு பக்கம்!

அடுத்தவர்களின் உதவியை ஏற்க மனமில்லை, ஆனால் சுத்தமாய் வேறு வழியும் இல்லை!

என்ன அவலம் இது!

வாழ்க்கை என்பது ஒரு கூட்டு முயற்சி - 'Life is a team work' என்கிற உண்மையே சின்ன வயசு முதற் கொண்டே புரிந்து கொண்டிருந்தால் கோதண்டராமனின் தவிப்பு ஓரளவுக்காவது குறைந்திருக்குமோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆம், வாழ்க்கை ஒரு கூட்டு முயற்சிதான். சகலத்தையும் துறந்த ஆண்டியாக இருந்தாலும் சரி, சர்வ சுகங்களையும் அனுபவித்து வாழும் பணம் படைத்தவர்களானாலும் சரி, எவராக இருப்பினும் அடுத்தவரை, சமுதாயத்தைச் சார்ந்து வாழ்வது அவசியம் என்பதாலேயே உயிர் வாழ்தல் ஒரு கூட்டு முயற்சி என்கிறார்கள்.

'இது என்ன கட்டுக்கதை! சுவாசிப்பதும், உண்ணுவதும், உறங்குவதும் நான்; பிறகு அதெப்படி கூட்டு முயற்சியாகும்?' என்று தர்க்கிக்க நினைப்பவர்கள் கொஞ்சம் நிதானிக்க வேண்டும். வாழ்க்கை ஒரு கூட்டு முயற்சி என்று ஏன் குறிப்பிடுகிறார்கள் என்று சிந்திக்க வேண்டும்.

முதலில், துறவி சச்சிதானந்தாவை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். வாழ்க்கையை முற்றும் துறந்த நிஜமான சன்யாசி. புகழ் பெற்ற மடம் ஒன்றில் தங்கியிருப்பவரை அண்மையில் சந்தித்த

போது அவரைப் போன்றவர்கள்கூட சமுதாயத்தை சார்ந்து வாழ்வது எதனால் என்பதை மிக அழகாக விளக்கினார்.

"சுக போகங்களை விடுத்து வாழும் நபர்களும் அடுத்தவர் தயவை எதிர்பார்த்து வாழ்வது உண்மை. என் தேவைகள் மிகக் குறைவு. இருப்பினும் அவற்றையும் நான் மற்றவர் உதவியின்றி பெற்றுவிட முடியாது. உடுத்தும் காவித் துணியை நெய்து கொடுக்க ஒருவர்; படிக்கும் புத்தகங்களை அச்சடிக்க, தயாரிக்க, விற்பனை செய்ய என்று சிலர்; ஊன்றி நடக்கும் தடியை உருவாக்க ஒரு ஆசாரி; குடிக்கும் பாலைச் சுரக்க பசு, கறக்க கோனார்; சாப்பிடும் பழங்களைத் தரும் மரங்களைப் பராமரிக்க தோட்டக்காரர்; அவற்றைச் சந்தையில் விற்கும் வியாபாரி என்று பட்டியலே போடலாம். அடிப்படைத் தேவைகளைக் கூட அடுத்தவர் தயவு இல்லாமல் பூர்த்தி செய்வது இயலாது என்பதால்தான் 'வாழ்க்கை ஒரு கூட்டு முயற்சி' என்று பெரியவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்."

ஸ்வாமிஜி பேசியதைக் கேட்ட பிறகு வீட்டுக்கு வந்து தனிமையில் அமர்ந்து கணக்குப் போட்டேன். வகை வகையான உணவுப் பொருட்கள், அலங்கார சாதனங்கள், உடைகள், வசிக்கும் வீடு, உபயோகிக்கும் சாதனங்கள், அனுபவிக்கும் உல்லாசங்கள் . . . ஏ அப்பா! லிஸ்ட் நீண்டு கொண்டே போக, அன்றாட அவசியங்கள் என்று எண்ணுவதைக் கூட குறைந்த பட்சம் ஆயிரக்கணக்கானோரின் உதவி இல்லாவிட்டால் பூர்த்தி செய்வது சாத்தியமில்லை என்கிற யதார்த்தம் மண்டையில் ஓங்கி அறைந்தது.

குடிக்கும் தண்ணீரிலிருந்து, உண்ணும் உணவு, உடுக்கும் உடை, வசிக்கும் இல்லம் - போன்று உயிர் வாழ மிக மிக அத்தியாவசியமான பொருட்களைப் பெற பலரின் கையை எதிர்பார்ப்பதுதான் நிஜம் என்று இருக்கையில், 'வாழ்க்கை ஒரு கூட்டு முயற்சி' என்பதை உணராமல், 'உன் தயவு எனக்கெதற்கு?' என்று வீராப்புப் பேசுவது விவேகம்தானா?

சிந்திக்க வேண்டும்.

2

ஒரு கூட்டத்தில் உரையாற்றியபோது, கேள்வி பதில் நேரத்தில் கல்லூரி மாணவன் ஒருவன் எழுந்து கேட்டான். "என் வீட்டுப் பெரியவர்கள் எப்போது பார்த்தாலும் 'அடுத்தவர்களிடம் அன்பாய் இரு - அவர்களிடம் அக்கறை காட்டு' என்று அறிவுரை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அடுத்தவர் என்பவர் யார் - அவர்பால் நாம் ஏன் அக்கறை கொள்ள வேண்டும்? என் வாழ்க்கையை ஒழுங்காக அமைத்துக் கொண்டால் போதாதா?" என்று கேட்டான். நல்ல கேள்வி.

வாழ்க்கை என்பது சமுதாயத்தில் இருக்கும் பலரைச் சார்ந்து வாழும் ஒரு கூட்டு முயற்சி. உண்மை.

சமுதாயத்தில் அங்கத்தினர்களாக நாம் இருக்கும் வரை இந்த உண்மையை புரிந்துகொண்டு இதற்காக பதிலுக்கு என்ன செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வோடு இருப்பது அவசியமாகிறது என்பதால் இது குறித்து இன்னும் கொஞ்சம் விளக்கமாக யோசிக்கலாமா?

சமுதாயம் என்பது என்ன?

சமுதாயத்திற்கும் எனக்கும் என்ன உறவு? - என்று என்னிடம் பலர் கேட்டிருக்கிறார்கள்.

தனிநபர் சேர்ந்து உருவாக்குவதுதான் சமுதாயம். இதை மறக்கக் கூடாது. அதனால்தான் அடுத்தவர் மேல் அக்கறை என்ற தலைப்பிலே சிந்திக்கும் போது அடுத்தவர் யார் என்ற கேள்வியும் எழுகிறது.

அடுத்தவர் என்பவர் யார்?

நம்முடைய குடும்பத்திலே இருப்பவரா?

பக்கத்து வீட்டுக்காரரா?

உறவினரா?

நண்பரா?

அல்லது - இவரா? அவரா?

எல்லோரும்தான்.

சமுதாயத்தை நாம் சார்ந்து நிற்கிறோம், பலர் தயவில் வாழ்கிறோம் என்ற உண்மை நமக்கு புரியும் போது நிச்சயம் சமுதாயத்தில் இருக்கும் மற்ற அனைவர்பாலும் அக்கறை கொள்வது மனித நேயமாகிறது என்பது விளங்கும்.

மனித நேயம் என்பதை சொல்லும்போது மதர் தெரஸா அவர்களை சந்தித்த அருமையான நாள் நினைவுக்கு வருகிறது. நோபல் பரிசு அவருக்கு கிடைத்த தினத்தில் அதிருஷ்டத்தின் காரணமாக நான் கல்கத்தாவில் இருந்தேன். அதனால், அந்தக் காலைப் பொழுதில் அந்த உயர்ந்த உள்ளத்தை சந்தித்த முதல் பத்திரிக்கையாளர் என்ற பெருமை எனக்கு கிடைத்தது. அன்றைக்கு கிட்டத்தட்ட ஒன்றரை மணி

நேரத்திற்கு மேல் அன்னையிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் சொன்ன பல கருத்துக்களில் ஒன்றை மட்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 'Love everyone my child, love everyone around you, love everybody in the society - உன்னைச் சுற்றியுள்ள அனைவரையும் நேசிக்க கற்றுக்கொள் மகளே, உன்னைச் சார்ந்தவர், உன்னைச் சாராதவர், உறவினர், உறவினரல்லாதவர், என்ற பாகுபாடு இல்லாமல் உலகத்தில் இருக்கும் அத்தனைப் பேரையும் நேசிக்கக் கற்றுக்கொள். அப்படி நேசிக்கத் துவங்கினால், ஒருவர்பால் மற்றவருக்கு இருக்கும் காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு, அகங்காரம், பொறாமை எல்லாம் சுத்தமாக அகன்று, கோபம் என்ற உணர்வே எழாமல் போய் நேசத்தன்மை மட்டுமே மிகுந்து நிற்கும்' என்று அன்றைக்கு அவர் மிக அழகாகச் சொன்ன கருத்தைத்தான் இப்போது இந்தக் கட்டுரையில் வலியுறுத்த விரும்புகிறேன்.

சமுதாயத்தில் அங்கத்தினராக இருக்கும் நாம் அடுத்தவர் மேல் அக்கறை கொள்வது நம்முடைய கடமைகளுள் ஒன்றாகும் என்றுகூட நான் சொல்லுவேன். சிலர் சமுதாயத்துக்கும், தனக்கும் சம்பந்தம் இல்லை என்று விலகி நிற்கிறார்கள் என்று துவக்கத்தில் குறிப்பிட்டேன். அந்தக் கூற்றைத் தெளிவாக்க சில உதாரணங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

நண்பர் சுந்தரம் படித்தவர். நல்ல வேலையில் இருப்பவர். வசதியான வாழ்க்கை. எல்லாம் இருந்தும் கூட இவரிடம் ஒரு வேண்டாத குணம். அது என்ன தெரியுமா? ஒரு விஷயம் மனசுக்கு வேதனையைத்

தருவதாக இருந்தால் அதைப் பார்க்க மாட்டார்; கேட்க மாட்டார். அதைப் பற்றியே நினைக்கவே மாட்டார்.

ஏன், டெலிவிஷன் அல்லது சினிமாவில் கொஞ்சம் வருத்தம் தரக்கூடிய காட்சி ஏதாவது வந்தால்கூட நிறுத்தி விடுவார் அல்லது எழுந்து போய்விடுவார். அவரால் அதை எடுத்துக் கொள்ள முடியாது. கேட்டால் இந்த மாதிரி சோக அனுபவங்கள் எனக்குத் தேவையில்லை என்று சொல்லுவார். இப்படி ஒரு குணம் சுந்தரத்துள் வளர்ந்து அவரை மட்டும் பாதித்துக் கொண்டிருந்த போது அதை யாரும் பெரிசு பண்ணவில்லை; ஆனால் அவரையும் மீறி அடுத்தவரை தொட்டபோது 'என்ன மனிதர் இவர்!' என்கிற நெருடல் அவரை அறிந்தவருள் தோன்றவே செய்தது.

சுந்தரத்தின் வீட்டுக்கருகில் சில குடிசைகள் இருந்தன. வீட்டில் இருந்த எல்லாரும் வெளியே போயிருந்த சந்தர்ப்பத்தில் அந்தக் குடிசைகள் தீப்பிடித்துக் கொள்ள, ஒரு குழந்தையை தீக்காயங்களுடன் உயிருக்குப் போராடும் நிலையில் தூக்கிக் கொண்டு வந்தனர். தோல் வழண்டு போய் குழந்தைக்கு காயம் அதிகம்தான். குழந்தையை தூக்கி வந்தவர்கள் சுந்தரத்திடம் 'வீட்டுக்குள் வந்து முதலுதவி செய்ய அனுமதியுங்கள். ஆஸ்பத்திரிக்கு போன் செய்து ஆம்புலன்சை வரவழையுங்கள்' என்றெல்லாம் கெஞ்சி இருக்கிறார்கள். ஆனால் சுந்தரம் மறுத்து விட்டார். ஏனாம்? வெந்து போயிருக்கும் குழந்தையை பார்ப்பது தனக்கு பெரிய அதிர்ச்சியாகிவிடும் என்பதற்காக 'உடம்பு சரியில்லை,

படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாத நிலையில் இருக்கிறேன்' என்று நிர்தாட்சண்யமாக சொல்லி அனுப்பி விட்டார். இந்த மாதிரி தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்தபோதெல்லாம் "எதற்காக அந்தக் காட்சிகளையெல்லாம் பார்க்க வேண்டும், அப்புறம் ஏன் அமைதியை ஆயுசுக்கும் இழக்க வேண்டும், மன அமைதி எனக்கு முக்கியம்" என்று நிதானமாக சொல்லுவார்.

இதை எழுதும்போது எனக்கு காந்தாமணி என்ற பெண்மணியின் நினைவும் வருகிறது. இவரின் குணம்கூட கிட்டத்தட்ட சுந்தரத்தின் குணம் போலதுதான். ஸ்னேகிதியும், இவரும் ஒன்றாக வேலை பார்க்கும் அலுவலகத்திலிருந்து கிளம்பி வந்திருக் கிறார்கள். ஸ்னேகிதி பஸ்ஸில் ஏறப்போகும்போது கீழே வழுக்கி விழுந்து, பஸ் சக்கரத்தில் மாட்டிக் கொண்டு ரத்தப் போக்கில் கிடக்க, காந்தாமணி என்ன செய்தார் என்று நினைக்கிறீர்கள்? "எனக்கு ரத்தத்தைப் பார்த்தால் மயக்கம் வரும். ஆட்டோ பிடித்து வீட்டுக்கு அனுப்பி விடுங்கள். என்னால் கோரக் காட்சி எதையும் பார்க்க முடியாது" என்று கெஞ்சி விட்டு நிற்காமல் போய்விட்டார்!

'ரத்தத்தைப் பார்த்து மயங்குவதும் கோரக் காட்சியைக் கண்டு பயப்படுவதும் ஒருவருடைய மென்மையான சுபாவமாக இருந்தால் அதற்காக அவர்களெல்லாம் சமுதாயத்தின் மேல் அக்கறை இல்லாதவர்கள் என்று ஒட்டு மொத்தமாக ஒதுக்குவது நியாயமாகுமா? அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? சுபாவத்திற்கு மாறாக செயல்படுவது சாத்தியமானதா?' என்று என்னுடன்

சண்டை போட நினைக்கும் நண்பர்களே, என் நோக்கம் அப்படி ஒரே வீச்சில் சகட்டு மேனிக்கு எல்லாரையும் பழிப்பது அல்ல - லேசாக நம்மை வருத்திக் கொள்வதனால் அடுத்தவருக்கு பெரிசாய் நன்மை செய்ய முடியும் என்றால் அதைப் பற்றி நினைக்கத் துணிய வேண்டும் என்றுதான் சொல்ல வருகிறேன். 'துளி கூட அடுத்தவரைப் பற்றி கவலை படமாட்டேன்; எக்கேடு கெட்டால் எனக்கு என்ன?' என்று இருக்கக்கூடாது என்றுதான் வலியுறுத்த முனைகிறேன்.

பக்கத்து வீட்டுக்கு தண்ணீர் விடாமல் தனக்கு இருந்தால் போதும் என்று உபரியாய் பிடித்து வைத்துக் கொள்ளும் நபர்கள், அருகாமையில் ஒரு நோயாளியோ, அல்லது பரீட்சைக்குப் பாடம் படிக்கும் சிறுவனோ இருப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் லவுட் ஸ்பீக்கரில் சத்தமாய் பாட்டுக்களை ஒலிக்கச் செய்து விழாக்களை நடத்துபவர்கள், கலப்படம் செய்யும் வியாபாரிகள், ஏன் பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்ய துணிந்துவிட்ட, மனசாட்சியை அடகு வைக்க முனைந்துவிட்ட எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், இதர பல தொழில்கள் செய்கின்ற எல்லாரையும் சேர்த்துதான் சொல்கிறேன் - இவர்கள் எல்லாருமே சமுதாயத்தின்பால் அக்கறை இல்லாதவர்கள்தான். தான் தன் சுகம் முக்கியம் என்று வாழ்பவர்கள்; நானும், என் குடும்பமும் நன்றாக இருந்தால் போதும் என்கிற சுயநலத்தோடு செயல்படுபவர் தாம்!

மனிதராகப் பிறந்துவிட்ட நாம், சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் நாம், பல்லாயிரக்கணக்கானவரின்

உதவி இல்லாமல் வாழ முடியாது என்றிருக்கும் நாம், அவசியமான சந்தர்ப்பங்களில்கூட மற்றவர்களுக்கு நம்மால் இயன்ற சின்னச் சின்ன விஷயங்களை உடம்பால், மனதால், எண்ணத்தாலும் செய்யத் தவறி விடுகிறோம் என்பது வருந்தத்தக்கது. அக்கறையோடு பரிதாபப்படும் ஒரு சிலர்கூட ஸிம்பதி Symbathy இருந்தால் போதும் என்று நினைக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஸிம்பதி என்று சொல்லும் போது அது கருணை, பரிவைக் குறிக்கிறது. ஆனால், இப்போது நம் நாட்டிற்குத் தேவையாய் இருப்பது கருணை மட்டும் அல்ல. 'அய்யோ பாவம்' என்று பரிதாபப்பட்டு நகர்வதினால் யாருக்கு என்ன பயன்? அதனால்தான் நமக்கு இப்போது தேவையாய் இருப்பது எம்பதி (empathy) என்று அழுத்தமாக நம்புகிறேன். 'எம்பதி' என்றால் 'நாம் அவர்களாக' மாறி யார் யார் என்னென்ன வேதனைப் படுகிறார்களோ, சிரமப் படுகிறார்களோ, அந்த வேதனை, சிரமங்களை உணர்ந்து, புரிந்து கொள்வது, நல்லது கெட்டதை அனுபவிக்கிற தன்மை ஒருவருக்கு எப்போது வருகிறதோ, அப்போதுதான் மனித நேயங்களில் உயர முடியும். ஆக, அடுத்தவர் மேல் எனக்கெதற்கு அக்கறை என்று விட்டேத்தியாக பேசாமல், நாடு உயர வேண்டும் என்றால், பல விதங்களிலும் வளர்ச்சி பெற்று உன்னதமான நிலையை அடைய வேண்டு மென்றால், முதல்படியாக தனி நபர் சரியான விழிப்புணர்வு பெற்று இந்த சமுதாயத்தை நேசிக்கத் துவங்குவது அவசியம். சமுதாயத்தை நேசிப்பது என்பதைப்பற்றி எழுதுகையில் சமூக சேவை குறித்து எனக்கு உள்ள அபிப்ராயத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

போதை பற்றியும், மற்ற விஷயங்களுக்காகவும் விழிப்புணர்வு உண்டாக்க பாடுபடுவதை அறிந்த சிலர் 'சிவசங்கரி ஒரு சமூக சேவகி' என்று சொல்வதுண்டு. இந்தக் கூற்றில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்தக் கருத்தை நான் வரவேற்பதில்லை. சமுதாயத்தின் மேம்பாட்டுக்காக பாடுபடுபவரை சமூகசேவகர் என்று குறிப்பிடுவதில் என்ன ஆட்சேபணை என்கிற சந்தேகம் சிலருக்கு எழலாம் - சொல்கிறேன்.

உயிர் வாழ்தல் பொருட்டு சமுதாயத்திலிருந்து பல விஷயங்களை எடுத்துக் கொள்வதனால், சமுதாயத்திற்கு திரும்ப ஏதாவது கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன் என்ற நோக்கத்திலேயே சில காரியங்களைச் செய்கிறேன். நான் வசிக்கும் தெரு சுத்தமாக இருக்க ஆசைப்படுவதும், நான் சுவாசிக்கும் காற்று கலப்படம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைப்பதும் எப்படி சமூக சேவையாகும்? அவசரப்படாமல் நிதானமாக யோசிக்க வேண்டும். பொதுநலத்திற்கு அவசியமான நடவடிக்கைகளை சமூகசேவை என்று சட்டம் கட்டி வைப்பதனால் 'அரசாங்கமோ, பிரபலமானவர்களோ, தொண்டு நிறுவனங்களோதான் இவற்றைச் செய்ய வேண்டும். அந்தக் காரியங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை' என்று நினைப்பவர்கள் பலரை எனக்குத் தெரியும். 'தெருவை சுத்தமாக வைத்துக் கொள்வதும், பொது உடைமைகளைக் காப்பாற்றிப் பேணுவதும் என் வேலை இல்லை' என்ற கருத்து பெருமளவுக்கு நிலவுவது மாற வேண்டாமா?

வேண்டும் . . . நிச்சயமாய் . . .

நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன, மேலே விழுந்து பிடுங்காத வரை என்கிற மனோபாவம் உடைய வேண்டும். சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு வர வேண்டும். மனித நேயங்களை அடிப்படையாகக் கொண்ட சமுதாய வளர்ச்சிக்கு வித்துக்கள் ஊன்றப்பட வேண்டும். இன்றே – இப்போதே ...

3

செடிக்கு வேர் போல அர்த்தமுள்ள மனித வாழ்வு ஒவ்வொருவருக்கும் அவசியமானது தன்னம்பிக்கை என்பது என்னுடைய அழுத்தமான கருத்து. இதைச் செம்மையாய் நிருபிக்க சில மனிதர்களும், அவர்களின் அனுபவங்களும் . . .

யமுனா – புருஷோத்தமன் தம்பதி. பத்து வருஷங்களுக்கு மேலாக எனக்குப் பழக்கம். ரொம்பவும் சுவாரஸ்யமான தம்பதி. அன்யோன்ய மான கணவன், மனைவி. புருஷோத்தமனுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். யமுனாவுக்கு நாற்பது இருந்தால் அதிகம். இவர்களுக்கு மணி மணியாய் இரண்டு குழந்தைகள். சில வருடங்களுக்கு முன்னால் சற்றும் எதிர்பாராத விதத்தில் புருஷோத்தமனுக்கு கேன்சர் நோய் வந்தது. எல்லோரையும் போல அவர்களும் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும் இடிந்து, கலங்கி, அலண்டு, குலைந்துதான் போனார்கள். ஆனாலும் விஷயம் கையை மீறியது என்பது புரிந்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்ற தெளிவுடன் புருஷோத்தமன் யோசிக்க முற்பட்டார். தான் இருக்கப் போவது இன்னும் இரண்டு வருடங்கள்தான், இதற்குள்ளாக மனைவியை

படிப்படியாக வளரச் செய்து தொழிலையும், குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளும் திறமைசாலியாக மாற்ற வேண்டும் என்று தீர்மானித்தான். யமுனாவுக்கு தைரியம் கொடுத்து எல்லா விதத்திலும் ஊக்குவிக்க வேண்டும் என்ற உறுதி பூண்டு, அடுத்து வந்த மாதங்களில் வலியை பொருட்படுத்தாமல் மனைவியை கிட்டத்தில் வைத்துக் கொண்டு வியாபாரம் சம்பந்தப்பட்ட அத்தனை விஷயங்களையும் கற்றுத்தந்ததும், யதார்த்தத்தை ஏற்று யமுனாவும் தன் வேதனையை ஒதுக்கித் தள்ளிவிட்டு நல்ல மாணவியாக இருந்ததும் பாராட்டுக்குரிய விஷயங்கள். வைத்தியர் சொன்னபடி புருஷோத்தமன் ஆறு மாசங்களுக்கு முன் இறந்தபோது அந்த இழப்பை தாங்கிக் கொண்டு யமுனா வியாபாரத்தை நல்லமுறையில் நடத்தி வருகிறாள், இலாபம் ஈட்டுகிறாள், அப்பா இருக்கும்போது எப்படி அருமையாக வளர்க்கப்பட்டார்களோ - அதேபோல் குழந்தைகளை வளர்த்து எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்று வருகிறாள். அவளுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இதற்கு நேர் மாறான இன்னொரு தம்பதியை மூர்த்தி - லக்ஷ்மி-யை சந்திக்கலாமா?

மூர்த்தி ஒரு பெரிய கம்பெனியில் வேலையில் இருப்பவர். இவர்களுக்கு ஒரே ஒரு பிள்ளை, கண்ணன் - பதினேழு வயசு. நினைத்த நினைப்பில்லாமல் சென்ற ஆண்டு விபத்தில் லக்ஷ்மி மரணமடைய மனைவி இறந்த துக்கத்தை தாங்கமுடியாமல் மூர்த்தி குடிக்கத் துவங்கினார். சுயபச்சாதாபத்தில் அவர் எப்போது பார்த்தாலும் 'ஐயோ, எனக்கு இப்படி ஆகிவிட்டதே, யாருக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?' என்று சதா

சர்வகாலம் புலம்புவது ஒரு பக்கம் என்றால், அவரது பிள்ளை கண்ணன் தத்தாரியாக, படிக்காமல், யார் பேச்சையும் மதிக்காமல் 'யாருக்கு என் மீது அக்கறை இருக்கிறது?' என்ற அலட்சியத்துடன் இன்றைக்கு திரிந்து கொண்டிருக்கிறான். அவனிடம் குடி கொள்ளாத கெட்ட பழக்கம் இல்லை. புத்தி சொல்லவோ, அன்பு காட்டவோ கிட்டத்தில் போனால் 'நீ யார் என்னிடம் பரிவு காட்ட?' என்று வள்ளென்று விழுகிறான். மொத்தத்தில் ரொம்ப பரிதாபம்!

மேற்சொன்ன இரண்டு குடும்பங்களிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான இழப்பு வந்த போதும் ஒருவர் அதனால் இடிந்து போகாமல் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ முயற்சிக்கையில் மற்றொருவர் உடைந்து போய் விட்டதைப் பார்க்கும்போது, முதலாமவருக்கு இருந்த தன்னம்பிக்கை, யதார்த்தத்தை ஏற்கும் மனோ தைரியம், இரண்டாமவருக்கு இல்லை என்பது துல்யமாகப் புரியும்.

நண்பர்களே - பிரச்சினை இல்லாத வாழ்க்கையே கிடையாது. வீட்டுக்கு வீடு வாசப்படி. ஒரு வாசப்படி பெரியதாக இருக்கலாம். இன்னொன்று சிறியதாக இருக்கலாம். வித்தியாசம் அவ்வளவுதான்!

பன்னீரும், சந்தனமும், தென்றலுமாக வாழ்க்கை எப்போதும் யாருக்கும் அமைவதில்லை. கல்லும், முள்ளும், பிரச்னையும் இடையிடையே சந்தோஷங்களும் நிறைந்ததுதான் வாழ்க்கை. அதனால் பிரச்னை எழும்போது 'ஐயோ எனக்கா இந்த சோதனை!' என்று சுயபச்சாதாபத்தோடு அரற்றாமல், நாம் நிமிர்ந்து நிற்க வேண்டுமென்றால் அதற்கு

அஸ்திவாரமாவது தன்னம்பிக்கை என்ற குணம்தான். இதை மறக்கக் கூடாது.

தன்னம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்க்கை இல்லை. தனியாக அமர்ந்து, கவனமாக சிந்தித்துப் பார்த்தால் இந்தக் கூற்றில் உள்ள அழுத்தம் புரியும். நம்பிக்கை இருப்பதனாலேயே நாமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காலையில் எழுந்திருப்போம் என்கிற நம்பிக்கையில்தான் தூங்கவே போகிறோம். காலையில் எழுந்திருப்பது சந்தேகம் என்று சொல்லி விட்டால் நம்மில் எத்தனை பேர் தூங்கப் போவோம் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். நம்பிக்கை என்னும் நூலைக் கொண்டு வாழ்க்கை என்ற சம்சாரத்தைக் கடப்பது உசிதம். புத்திசாலித்தனம் என்று பெரியவர்கள் ஆண்டாண்டு காலமாக நமக்கு சொல்லித் தந்திருக்கிறார்கள். இருந்தும் வாழ்க்கைக்கு உரமாக வேண்டிய நம்பிக்கை குணத்தை முழுமையாக வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் குறித்து இன்னும் நாம் விழிப்புணர்வைப் பெறவே இல்லை.

'நம்பிக்கை நிறைந்தவர் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். சந்தோஷத்துடன் காணப் படுவார், பிரச்னைகள் வந்தால் இடிந்து போக மாட்டார், எதனாலும் கசந்து போக மாட்டார், தானும் சந்தோஷமாக இருந்து கொண்டு, சுற்றிலும் இருப்பவர்களையும் சந்தோஷமாக வைத்துக் கொள்வார். இதற்கு மாறாக அவநம்பிக்கை உள்ளவர். அதாவது தன்னம்பிக்கை இல்லாதவர், எப்போதும் சிடுமூஞ்சித்தனம் சுயபச்சாதாபம், எரிச்சல், கோப தாபம் நிறைந்தவராய் இருப்பது மட்டுமல்லாமல், தான் துக்கமாக இருப்பதுடன் தன்னைச் சுற்றியுள்ளவர்களையும், ஏன் சூழ்நிலையையே

பெருமளவுக்கு வேதனைக்குள்ளாக்கி விடுவார்!' என்பது நிபுணர்களின் கருத்து.

என்னைக் கேட்டால் நம்பிக்கையை இரண்டு விதமாகப் பிரிக்கலாம் என்பேன். ஒன்று தன்னம்பிக்கை. இரண்டாவது அடுத்தவர்மீது நாம் வைக்கும் நம்பிக்கை. இவை இரண்டையுமே சரியான அளவில் வளர்த்துக் கொண்டால்தான் வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்கும் ஆக்கபூர்வமான பலன் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

தன்னம்பிக்கை என்று எதை குறிப்பிடுகிறேன் என்பதை ஏற்கனவே சில உதாரணங்கள் மூலம் உங்களுக்கு விளக்கிவிட்டேன். அடுத்தவர் மீது நம்பிக்கை என்று சொல்லும்போது முதல் தம்பதியில் அறிமுகமான புருஷோத்தமனை சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

'யமுனா தெளிவான சிந்தனை கொண்டவள். நான் காட்டும் வழியில் நிமிர்ந்து நடப்பாள்' என்று மனைவி மீது நம்பிக்கை வைத்து அவளுக்கு விடாது பயிற்சி கொடுத்தாரே, அது இரண்டாவது பிரிவைச் சேர்ந்ததுதானே? உலகிலுள்ள அனைவருமே ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதால், நம்மேல் வளர்த்துக் கொள்ளும் தன்னம்பிக்கை அளவுக்கு அடுத்தவர் மீதும் நம்பிக்கை வைப்பது அவசியமாகிறது. நம்மால் முடியும் என்கிற சிந்தனையை ஸ்திரப்படுத்திக் கொள்வது யாருக்குமே சரியான திசையை நோக்கி வளர, வாழ நிச்சயமாய் உதவும். இதில் சந்தேகமே வேண்டாம்.

வர வர நம் நாட்டில் நெகடிவ் திங்கிங் ஒரு பரவலான குணமாக மாறிவிட்டதை உணரும்போது

வருத்தம் மேலிடுகிறது. 'நாடு உருப்படாது', 'இவன் உருப்பட மாட்டான்' 'இதெல்லாம் சரி பண்ணக் கூடிய விஷயமில்லை' என்று புலம்பிக் கொண்டே இருப்பதில் தீர்வு வந்து விடுமா? நெகடிவ் திங்கிங் வளருவதற்குக் காரணம் மனிதர்களிடம் தன்னம்பிக்கை குறைந்து வருவதுதான். தேவையற்ற கசப்பு, கையாலாகாதத் தன்மையை நமக்குள் வளர்த்துக் கொள்வதும் அல்லாமல் நமக்குப் பின்னால் வரும் இளைய தலைமுறையினருக்குள்ளும் நெகடிவ் திங்கிங் என்று சொல்லக்கூடிய எதிர்மறைக் கருத்துக்களை பயிராக்கி அவர்களையும் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் ஆக்கிவிடுகிறோம். இது நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் எத்தகைய வீழ்ச்சியை விளைவிக்கும்! நம்மைச் சுற்றியுள்ள அனைவரையும் தட்டிக் கொடுத்து, 'நிச்சயமாக நம்மால் முடியும், முடியாதது இல்லை' என்ற தன்னம்பிக்கையை நமக்குள்ளே விதைத்துக் கொண்டு அடுத்தவருள்ளும் அதை விதைக்கும்போது பலன் பிரமாதமாக இருக்கும் என்பது அனுபவித்தவர்களின் கருத்து.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் சுதந்திரம் வாங்கப் போகிறோம் என்று சொன்னால் எல்லாரும் பைத்தியக்காரப் பேச்சு என்று சிரித்திருப்பார்கள். ஆனால், கோடானு கோடி மக்கள் ஒரு சக்தியாக உருண்டு, திரண்டு, பொங்கி எழுந்து வெள்ளையனை வெளியேற்றவில்லையா? சரித்திரம் படைத்தவர்கள் நம் நாட்டில் நிறையவே இருக்கிறார்கள். அவர்களை முன்னோடியாகக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற முனைவது புத்திசாலித்தனம். அவதூறு வம்பு சொல்லி, வேண்டாத விமர்சனங்கள் செய்து நம்மைக் காயப் படுத்தி, வளர்ச்சியை, முக்கியமாய் தன்னம்பிக்கை

முளை விடுவதை தடுக்கிறவர்கள் இருக்கிறார்கள்தான். நான் மறுக்கவில்லை. இவர்களிடமிருந்து எங்களை காப்பாற்றிக் கொள்ள வழி என்ன? - என்றால் சொல்கிறேன்.

புத்தரைப் பற்றி அருமையான சிறுகதை ஒன்றைச் சொல்லுவார்கள். புத்தர் தினமும் யாசகத்திற்குச் சென்று பிச்சை கேட்டு வாங்கி உண்ணுவது வழக்கம். அப்படி இருக்கும்போது ஒருநாள் ஒருவர் "என்ன இது, ராஜ குடும்பத்தில் பிறந்து பிச்சையெடுக்கிறாயே, வெட்கமாக இல்லையா?" என்று ஆரம்பித்து கொஞ்சம் கேவலமாகவே திட்ட, புத்தர் எதற்கும் பதில் கூறாமல் சிரித்துக் கொண்டே இருந்தாராம். புத்தர் கூடவந்த சிஷ்யர்களுக்கு தாங்கவில்லை. திட்டின ஆள் நகர்ந்த பிறகு 'ஐயா, அவர் திட்டியதற்கு பதிலுக்கு அடிக்க வேண்டாம், திட்ட வேண்டாம். ஆனால், சிரிக்காமலாவது இருந்திருக்கலாம் இல்லையா' என்று கேட்டபோது புத்தர் இன்னும் அதிகமாக சிரித்தவாறு, "அப்பனே, நீ ஒரு பொருளைக் கொடுத்து அதை நான் வாங்கிக் கொண்டால்தான் என்னுடையது, வாங்காத வரை உன்னுடையதுதான். அதைப் போலவே அந்த ஆள் சொன்ன வார்த்தைகளை நான் வாங்கவே யில்லை. அவை அனைத்தும் அவனிடத்திலேயே இருக்கின்றன" என்று சொன்னாராம்.

'இது என் வாழ்க்கை, இதை ஆக்கப்பூர்வமாக வைத்துக் கொள்வது என் கையில் இருக்கிறது' என்ற தன்னம்பிக்கையோடு இருந்தோம் என்றால் நம் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதோடு சுற்றி இருப்பவர்களின் வாழ்க்கையும் மேம்பட நாம் பெருமளவுக்கு காரணமாக இருக்கலாம் என்பது உறுதி!

4

'வாழ்க்கையில் வெற்றி பெற அவசியமானது எது?

உழைப்பா?

அதிருஷ்டமா?

சூழ்நிலையா?

குணமா?

படிப்பா?

பணமா?

இவற்றில் எது ஒருவர் வாழ்க்கையில் வெற்றி பெற உதவுகிறது என்று நிறையப் பேர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள்.

நல்ல கேள்வி . . .

சிந்தனையைத் தூண்டும் கேள்வி . . .

மேலே குறிப்பிட்ட விஷயங்கள் அனைத்துமே பெருமளவு காரணங்களாக இருந்தபோதும், அடி உரமான, அஸ்திவாரமான, 'இலக்கு' தெளிவாக

இருந்தால்தான் பரிபூரண பலனைப் பெறுவது எவருக்கும் சாத்தியமாகும்.

மீண்டும் சொல்கிறேன் . . .

வாழ்க்கையில் வெற்றி பெற முதலில் 'குறிக்கோளை' துல்யமாக தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அப்புறம் சரியான செயல்களில் ஈடுபட வேண்டும்.

இவை இரண்டும் கச்சிதமாக அமைந்து விட்டால் வெற்றிக்கனி கிட்டுவது மிக எளிது என்பது என் அனுபவம் மட்டுமல்ல இன்னும் நான் பார்த்து, கேட்ட, பலரின் அனுபவமும்தான்!

'தெளிவான இலக்கு' என்று எதைக் குறிப்பிடுகிறேன்?

'சரியான செயல்கள்' என்று எவற்றைச் சொல்கிறேன்?

முத்து, பெற்றவருக்கு ஒரே பிள்ளை. பள்ளிப் படிப்பை முடித்து விட்டு ஆடிட்டராக வேண்டும் என்கிற எண்ணத்தில் பி.காம் சேர்ந்தான். ஓராண்டு கழிந்ததும் 'இந்த படிப்பு எனக்கு வேண்டாம்' என்று பெங்களூருக்குச் சென்று எக்கச்சக்க பணம் கொடுத்து 'என்ஜினியரிங் கோர்ஸில்' பதிவு செய்து கொண்டான். அங்கு இரண்டு வருஷங்கள். இப்போது வீட்டில் உட்கார்ந்து, 'ஐ.ஏ.எஸ்' தேர்வுக்கு தயார் செய்து கொண்டிருக்கிறேன் என்று அடாவடி பண்ணுகிறான். முத்துவுக்குத்தான் 'இலக்கு' புரியவில்லை என்றால் அவனைப் பெற்றவர்களும் தெளிவில்லாமல் மகன் இழுத்த இழுப்புக்கு ஓடுகிறார்களே, என்ன செய்ய?

அடுத்து கனகா - என்னுடன் பள்ளியில் படித்தவள். திருமணமாகி குடும்பத் தலைவியாக இருக்கிறாள். குழந்தை, கணவன் எல்லோருடன் மனநிறைவோடு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாள், கெட்டிக்காரி, சுறுசுறுப்பானவள். தெரியாதவற்றைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் உள்ளவள். எல்லாம் இருந்தும் கூட ஒரு சமயம் சின்ன விஷயத்தில் இவள் எப்படிக் கோட்டை விட்டாள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

கோயமுத்தூருக்கு கல்யாணம் ஒன்றுக்குப் போக வேண்டிய அவசியம் எழுந்தபோது முன்கூட்டியே டிக்கெட் எடுத்துவிட்டாள். கல்யாணத்தன்று என்ன புடவை கட்டுவது என்று தீர்மானித்து பெட்டியை 'பேக்' செய்துவிட்டாள். கோயமுத்தூரில் பார்க்கப்போகும் உறவினர் வீட்டு குழந்தைகளுக்காக சில பரிசுகளைக்கூட திட்டமிட்டு வாங்கி விட்டாள். இத்தனையும் செய்தவள் எங்கே கோட்டை விட்டாள் என்றால் தெற்கே போகும் வண்டிகளெல்லாம் எழும்பூரிலிருந்துதான் கிளம்பும் என்று தானே உத்தேசம் செய்து கொண்டு எங்கே, என்ன என்று விசாரிக்காமல் குறிப்பிட்ட தினத்தன்று நேரே எழும்பூருக்குச் சென்று விட்டாள். கோயமுத்தூருக்குச் செல்ல சென்னையில் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கே ரயில் ஏற வேண்டும் என்கிற சின்னச் சின்ன விவரத்தை விசாரித்து, தெரிந்து கொள்ளாமல் போனதில் அன்றைக்கு திட்டமிட்டபடி அவளால் ரயிலைப் பிடிக்க முடியவில்லை; ஆசைப்பட்ட ரீதியில் கல்யாணத்திற்குப் போக முடியவில்லை!

சின்ன விஷயம்தான்.

நித்தமும் வாழ்க்கையில் பார்க்கும், சமாளிக்கும் விஷயம்தான். ஆனாலும், இலக்கு என்பது தெளிவாக இருந்தும்கூட செயல் சரியாக இல்லாமல் போனதால் சிரமங்கள் வந்தன.

இலக்கும் சரியாக இருந்து செயலும் சரியாக அமைந்து விட்டதற்கு லக்ஷ்மண் அற்புதமான எடுத்துக் காட்டு.

லக்ஷ்மணை அவன் படிக்கும் காலத்திலிருந்தே எனக்குத் தெரியும். வறுமைப்பட்ட குடும்பத்திலிருந்து வந்தவன். படிப்பில் ஆர்வம் கொண்டவன். தலைப்பிள்ளை; தான் தலையெடுத்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி கொண்டவன். அதுவும் தந்தை இறந்து, தம்பியும், தாயும் அவன் பொறுப்பில் வந்தபிறகு, பட்டப் படிப்பில் நல்ல மதிப்பெண்கள் வாங்கி மேலே படிக்க வாய்ப்பிருந்தும் கூட 'தற்சமயம் என் குடும்பத்திற்கு உதவி தேவைப் படுகிறது. பொருளாதார ரீதியிலே நான் பணம் ஈட்டுவது அவசியமாகிறது' என்று நிலையைப் புரிந்து கொண்டவனாய் என்னை சந்தித்தபோது தன் முடிவை வெளிப்படுத்தினான். "எல்லாரையும் போல அடுத்தவரிடம் வேலை பார்க்க எனக்கு விருப்பம் இல்லை. ஏதாவது தொழில் செய்து, திறமையைக் காட்டி, முன்னுக்கு வர வேண்டும் என்கிற ஆர்வம் இருக்கிறது, மேடம்" என்றவன் சில நாட்களில் தொலைநோக்குள்ள திட்டத்தை என்னிடம் நீட்டி, "தென்னம்பிள்ளை கன்றாக இருக்கும்போது அதற்கு சின்ன இடம் போதும். ஆனால் ஏழு எட்டு வருடங்கள் கழித்து அது மதமதவென்று மட்டைகளை விரித்துக்கொண்டு பிரம்மாண்டமாக வளர்ந்து காய்க்கத் துவங்கும்போது

கிட்டத்தட்ட இருபதடி சதுரம் தேவைப்படும், அல்லவா? எதிர்கால வளர்ச்சியை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இன்றைக்கு இருக்கும் இடம் போதும் என்று நட்டுவிட்டால் மரமும் வளராது, நம் முயற்சிக்கும் பலன் இல்லை. இதைத்தானே தொலைநோக்கு இல்லாத திட்டம் என்று சொல்கிறார்கள்? இந்த அவஸ்தை எனக்கு வரக்கூடாது. அதனால் இன்று, நாளை, அடுத்த வருஷம், பத்து வருஷங்கள் என்கிற ரீதியில் சிந்தனை செய்து ஒரு திட்டம் தயாரித்திருக்கிறேன். தயவு பண்ணி உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்'' என்று விளக்கியபோது அசந்துதான் போனேன்!

"இப்போது வேலைக்குச் செல்லும் பெண்கள் வீட்டுக்கு வீடு அதிகரித்து வருகிறார்கள். குழந்தைகளைப் பராமரித்து, அவர்களுக்கு ஹோம் ஒர்க் சொல்லிக் கொடுத்து, வீட்டைக் கவனித்து, எல்லா வேலைகளையும் செய்துவிட்டு நிமிரும்போது, ஆற அமர சமைப்பதற்கு நேரம் இல்லாமல் போகிறது. அதனால் வீட்டுச் சாப்பாடு போல யாராவது மலிவான விலையில் சமைத்துக் கொடுத்தால் வாங்குவதற்கு நிறைய குடும்பங்கள் தயார்ராக இருக்கின்றன. ஒரு மாசமாய் வீடு வீடாக ஏறி விசாரித்ததில் இத்தனை பேர் வாங்கத் தயாராக இருக்கிறார்கள். இதற்கு இத்தனை மூலதனம் தேவைப்படுகிறது: எதிர்பாராத சிரமம் என்றால் . . ." புள்ளி விவரங்களோடு லக்ஷ்மண் பேசப் பேச என் திகைப்பும், சந்தோஷமும் அதிகமாயின.

எனக்குத் தெரிந்த வங்கி அதிகாரியிடம் அவனை அறிமுகம் செய்தேன். அதிகாரி அவன் திட்டங்களை ஏற்றுக்கொண்டு, கடனுதவி செய்ய,

அம்மா, தம்பி உதவியோடு சின்ன அளவில் ஆரம்பித்த சாப்பாடு சமைத்து வினியோகிக்கும் வியாபாரம், நண்பர்களே, நீங்கள் நம்ப வேண்டும், இன்றைக்கு சரியாக ஒரு வருஷத்தில், கிட்டத்தட்ட இருபது ஆட்கள் வேலை செய்யும் நிறுவனமாக மாறி ஆயிரக்கணக்கில் வருமானம் ஈட்டுகிறது.

லக்ஷ்மணின் இந்த வெற்றியை ஆராய்ந்தோம் என்றால் இலக்கும், செயல்களும் கச்சிதமாய் அமைந்து விட்டது புரியும்.

முதலில் குறிக்கோள். அதைத் தொடர்ந்து சுய அலசல். அதாவது விரலுக்கு தக்க வீக்கமாக, ஆசை இருக்கிறதா என்று யோசித்திருக்கிறான். ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஆரம்பிக்க வேண்டும் என்று லக்ஷ்மண் நினைத்திருந்தால் அது நடந்திருக்காது. பகற் கனவாக முடிந்திருக்கும். ஆனால், 'என்னால் எவ்வளவு பணம் புரட்ட முடியும், எவ்வளவு உழைக்க முடியும், எவ்வளவு தாண்ட முடியும், எவ்வளவு சாதிக்க முடியும்' என்று யோசித்திருக்கிறான். அருமையான செய்கை!

அடுத்தவர் நமது பலம், பலவீனத்தை சுட்டிக் காட்டுவதற்கு முன்னால், இது என்னுடைய ப்ளஸ், இது என்னுடைய மைனஸ் என்று எப்போது புரிந்து கொள்கிறோமோ அப்போதுதான் பலத்தை வளர்த்துக் கொள்வதற்கும், பலவீனத்தை குறைத்துக் கொள்வதற்கும் முயற்சி எடுக்கத் தயாராவோம்.

சுய அலசல் மூலம் தன்னைத்தானே நன்றாக உணர்ந்து கொண்ட லக்ஷ்மண் நினைப்பது நிறை வேறாமல் ஒருவேளை தோல்வி பெற்றாலும் கூட தன்னால் அதைத் தாங்க முடியுமா என்றும் சிந்தனை

செய்து, 'ப்ரொஸ் அண்டு கான்ஸ்' என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே அதைப்போல அலசி அலசி பார்த்த பிறகே திட்டமிடுவதில் இறங்கியிருக்கிறான். திட்டத்திற்கு உறுதுணையாக வங்கி அதிகாரிகள் பணம் கொடுத்த கையோடு அவன் அயராத உழைப்பை காட்டியதில் இன்றைக்கு அமோகமாக வளர்ந்திருக்கிறான்.

ஜேம்ஸ் ஆலன் என்ற மேனாட்டு அறிவாளி 'சிந்தனைப் பூக்கள் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறதோ, அவ்வளவு அற்புதமாக பலன்கள் என்ற பழங்களும் இருக்கும்' என்று சொல்லுவார். சிந்தனைக்கு உரம் இட இட, செயல்கள் வலுப்பெற்று பலன்கள் பிரமாதமாய் இருக்கும். இது அனுபவத்தில் எல்லாரும் அறிந்த உண்மை.

வெற்றியைப் பற்றி பேசும்போது தோல்வியைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இலக்கு புரிந்து, சரியான சூழ்நிலை அமைந்து, கடுமையான உழைப்பு இருந்தும் எதிர்பாராத ரீதியில், ஏதோ ஒரு காரணத்தினால், தோல்வியை சந்திக்க நேரிடலாம். அப்படி ஏற்படும் போது, தோல்வியை ஏற்கும் மனப்பான்மை வேண்டும். திட்டம் இடும்போதே தோல்வியடைந்தால் என்ன செய்வோம் என்கிற கணக்கும் இருக்க வேண்டும். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். 'ஃபெயிலியர் இஸ் த ஸ்டெப்பிங் ஸ்டோன் டு சக்சஸ்'. தோல்வி வரும்போது மனம் துவண்டு போகாமல் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை என்ற கருத்தை மனசில் பதிய வைத்து, முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணனின் 'வாழ்க்கை என்பது சீட்டாட்டம் போன்றது. கைக்கு வரும் சீட்டுக்களை நிர்ணயிக்கும் அதிகாரம் நமக்குக் கிடையாது என்றாலும், வந்த சீட்டுகளை வைத்துக் கொண்டு மோசமான அல்லது நல்ல ஆட்டத்தை ஆடும் திறமை நம்மிடம்தான் உள்ளது' என்ற கருத்தை அடிக்கடி நினைவு படுத்திக் கொள்வது எவரையும் சோர்வடையாமல் விழிப்போடு இருக்க வைக்கும் என்பது என் நம்பிக்கை.

5

ஆள் பாதி, அலங்காரம் பாதி . . .

கேள்விப்பட்டிருப்பீர்களே?

இந்த வசனத்தைப் பற்றி நான் குறிப்பிடும் போது சிலராவது 'என்ன பேச்சு இது? சும்மா விளையாட்டுக்காக யாரோ சொல்லிவிட்டுப் போனதை ரொம்ப தீவிரமாக எடுத்துக் கொண்டு என்ன தேவையற்ற சிந்தனை இது? ஆள் பாதியாவது, அலங்காரம் பாதியாவது! அதெல்லாம் ஒன்றும் இல்லை' - என்று முகத்தை சுளிக்கலாம். புருவத்தை உயர்த்தலாம்.

நிஜமான அழகும், புத்தியும் உள்ளவர்களுக்கு மதிப்பு கூடத்தான். அதை விட்டுவிட்டு வெறும் அலங்காரம் பண்ணிக் கொண்டால் மட்டும் போதுமா என்றும் வேறு சிலர் கேட்கலாம்!

இவர்கள் சொல்வதில், வாதாடுவதில் தவறு இல்லை; ஆனாலும் நிதானமாக யோசித்துப் பார்க்கையில் மேற்சொன்ன வசனத்தை உருவாக்கிய பெரியவர்கள் வெறும் அலங்காரத்தை மட்டும்

மனசில் நிறுத்திச் சொன்னார்களா என்று நமக்கு ஒரு யோசனை எழுவது புரியும்.

ஆள் பாதி, அலங்காரம் பாதி . . .

இதன் தொடர்பாக கொஞ்சம் சிந்தனை செய்யலாமா?

சரியான நடை, உடை, பாவனை, தோரணை என்று பலவிதங்களிலும் தம்மை ஒருவர் செம்மைப் படுத்திக் கொள்ளும்போது அடுத்தவர்களிடையே அவருடைய மதிப்பும், கவர்ச்சியும் கூடுவது இயற்கைதான் என்ற உண்மையை ஏற்கும்போது இப்படி சர்வ விஷயத்திலும் கவனத்தைச் செலுத்தி முழுமையாக ஒரு நபர் தன்னை மேம்படுத்திக் கொள்வதைத்தான் ஆள் பாதி, அலங்காரம் பாதி என்று சொல்லியிருப்பார்களோ என்கிற சந்தேகம் பிறக்கிறதா? சந்தேகமே வேண்டாம். நான் அறிந்தவரையில் அதுதான் நிஜம்.

சுகுமார் என்கிற நபரைப் பற்றிச் சொன்னால் எதனால் இக்கோணத்திலிருந்து வாதாடுகிறேன் என்பது உங்களுக்குத் தெளிவாகப் புரியும்.

சுகுமார் சின்ன டவுனில் பிறந்து, அங்கேயே வளர்ந்தவன். சொந்த நிலத்தில் விவசாயம் செய்து பிழைக்கும் சுமாரான வசதியுள்ள குடும்பம். கூடப் பிறந்தவர்கள் நாலைந்து பேர்கள். இவனுக்கு முன் நான்கு பற்களும் ரொம்ப எடுப்பாக துருத்திக் கொண்டு இருக்கும்.

இது குறித்து சின்ன வயசில் அவன் ரொம்ப அலட்டிக் கொண்டதில்லை. பள்ளியில் கூடப் படிக்கும் மாணவர்கள் என்றாவது கோபத்தில்

'போடா - தேங்காய் துருவல்கார வாயா' என்று திட்டினால் கொஞ்சம் அழுவான். வீட்டுக்கு வந்ததும் அம்மா 'அவன் கிடக்கிறான் மடையன். நீ கிளாஸில் முதலாவதாக வருவதில் அவனுக்கு உன் மேல் பொறாமை. அதனால்தான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்கிறான்' என்று சமாதானம் செய்தால் தேறிவிடுவான்.

ஆனால், காலேஜில் சேர்ந்து படிக்க அவன் பட்டிணத்திற்கு வந்தபோது ஆறுதல் சொல்லி தைரியம் கொடுக்க உறவினர் கிட்டத்தில் யாரும் இல்லாததோடு, இயற்கையாகவே மண்டிவிட்ட தாழ்வு மனப்பான்மையும் சேர்ந்து கொள்ள பற்கள் பிரச்னை பூதமாய் வளர்ந்து பயமுறுத்த ஆரம்பித்தது.

கருகருவென மீசை வளர்த்தும் அதை மீறிக் கொண்டு முன் நாலு பற்கள் நீட்டிக் கொண்டிருக்க, உதடுகள் சதா பிரிந்து வாய் மூட முடியாமல் இருந்ததில் எச்சில் ஊறிக் கொண்டு அவன் பேசும்போது வெளியே தெறிக்க, நண்பர்களும் 'ஷவர் பாத்' என்று முகத்துக்கெதிரிலேயே கேலி பண்ண ... வகுப்பிலே முதலாவதாக வந்தும்கூட இதையெல்லாம் மீறிக்கொண்டு சுகுமாரை கூச்சமும், தாழ்வு மனப்பான்மையும் கலந்து ஆக்ரமிக்க முற்பட்டதில் ஓட்டுக்குள் ஒடுங்கும் நத்தையாக மாறிப்போனான். தேவையில்லாமல் ஹாஸ்டல் அறையைவிட்டு வெளியே வரமாட்டான். எவரோடும் பேசமாட்டான். காலேஜுக்குப் போவான். படிப்பான். வாத்தியார் கேட்கும் கேள்விகளுக்கு கூட பதில் சொல்லமாட்டான் - பின்னே? பேசினால்தான் 'ஷவர் பாத்' என்று சிரிக்கிறார்களே! ஹாஸ்டலுக்கு வந்தால் மொட்டை மாடி, இல்லை தன் அறை, படிப்பு. ஆக,

கோல்ட் மெடல் வாங்குமளவுக்கு புத்திசாலித்தனம் இருந்தும்கூட இரண்டு வார்த்தை அன்பாக சகஜமாக ஒருத்தரிடம் பேச அவனால் முடியாது. இப்படி இருந்தவனை கிட்டத்தட்ட சில வருடங்களுக்கு சந்திக்காமல் இருந்துவிட்டு சமீபத்தில் சந்தித்தபோது எனக்கு ஒரு இனிய அதிர்ச்சி காத்திருந்தது. சுகுமாரை ஒரு டாக்டர் பம்பாயில் பார்த்துவிட்டு முன்னால் நீட்டிக் கொண்டிருந்த நாலு பற்களை எடுத்து, போலி பற்கள் கட்டி, சில நாட்களுக்கு ஸ்பீச் தெரபியை சின்னச் பயிற்சியாகக் கொடுத்ததில், இன்றைக்கு அவன் நாகரீக தோற்றம் கொண்ட, கம்பீரம் மிகுந்த ஆண்மகனாய் இருக்கிறான். பேச்சு, நடத்தை எல்லாமே அடியோடு மாறிவிட்டன! உருவத்தில் சின்னதாய் கொண்டு வரும் மாற்றம் எப்பேர்ப்பட்ட வளர்ச்சிக்கு, வித்தியாசமான விழிப்புணர்வுக்கு உதவியிருக்கிறது!

பானுவின் அனுபவமும் கிட்டத்தட்ட இப்படிப்பட்டதுதான். அவளுக்கு சின்ன வயசிலிருந்தே கண்களைச் சுற்றி நீர்க் கோர்த்துக் கொண்டு 'சைனீஸ்' கண் என்று சொல்வார்களே, அதைப் போல இடுங்கிப் போய், மேல் இமைகள் வீங்கிக் கொண்டு இருக்கும். கண்கள் அசிங்கமாக இருக்கின்றன என்கிற நினைப்பில் அவள் யாருடனும் சகஜமாய் பழகவே மறுப்பவள். இவளுக்கு சமீபத்தில் பிளாஸ்டிக் சர்ஜரி மூலமாக 'போஃபோ பிளாட்திரி' என்னும் அறுவைச் சிகிச்சை உபரியாக இருக்கக்கூடிய கொழுப்பை உறிஞ்சி எடுப்பது - நடந்ததும் மூன்றே மாசங்களில் அவள் தோற்றத்தில் மட்டுமல்லாது, ஸ்வபாவத்திலும்தான் என்னென்ன மாற்றங்கள்! பேச்சு, சிரிப்பு, தன்னம்பிக்கை எல்லாமே கூடிப்போய்

பழைய பானுவா இது என்று மூக்கில் விரலை வைக்கத் தோன்றுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் என் ஸ்னேகிதி மாலாவையும் குறிப்பிடுவது அவசியமாகிறது. பள்ளி நாட்களிலிருந்தே பழக்கம். ரொம்ப அழகாக இருப்பாள். ஆனால் வெள்ளைத் தோலுமாய், மூக்கும் முழியுமாய் இருந்தும்கூட பிடித்து வைத்த மாவு பொம்மை மாதிரி இருப்பாள். பேசும்போது இழுத்து இழுத்துப் பேசுவாள். சுத்தமாய் சுறுசுறுப்பே கிடையாது. எவ்வளவுக்கெவ்வளவு அழகு இருந்ததோ அத்தனைக்கத்தனை கவர்ச்சியான நடத்தை இல்லாமல் இருந்ததனாலேயே அவளை 'வெள்ளைத் தோல் மக்கு', அசடு என்று எல்லாரும் சொல்வார்கள்.

இந்த மாலாவை சமீபத்தில் விமானப் பணிப் பெண்ணாகப் பார்த்தபோது பிரமித்துப் போனேன்! நளினப் பார்வை. நேர்த்தியான பேச்சோடு அவளது நடை. உடை. பாவனை எல்லாம் முறையான பயிற்சியில் சுத்தமாய் மாறி இருந்தன! ட்ரான்ஸ்பர்மர்ஷன் என்று சொல்வோமே அந்த மாதிரி முன்னர் இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் சம்பந்தமே இல்லாத அதிசய மாற்றம்!

சுகுமார், பானு, மாலா - ஆகியோரின் அனுபவங்களை எதற்காக இங்கே குறிப்பிடுகிறேன் என்றால் நடை, உடை, பாவனைகளை சரி பண்ணிக் கொள்வது மூலம் ஒருவர் தன் ஆளுமையில் பர்சனாலிட்டியில் அடுத்தவர் மலைத்துப் போகும் அளவுக்கு வளர்ச்சியைக் காண முடியும் என்பதை நிரூபிக்கத்தான்!

தோற்றப் பொலிவை கச்சிதமாய் வைத்துக் கொள்ளுவது பற்றி எழுதும்போது பல பெண்களிடையே சாதாரணமாக காணப்படும் சில பிரச்னைகள் ஞாபகத்துக்கு வருகின்றன. முகத்திலும், கை, கால்களிலும் வேண்டாத முடி வளர்வதனால் பல குடும்பத்துப் பெண்கள் என்னென்ன ஏச்சு பேச்சுக்கு உள்ளாகிறார்கள் என்று நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது.

வெளியில் பகிரங்கமாகக் கூற முடியாது. குடும்பத்தில் உள்ள மூத்த பெண்களிடம் சொன்னால் 'நாங்கள் அந்தக் காலத்தில் மஞ்சள் பூசிக் கொண்டோம். நீயும் பூசிக் கொள்' என்று சொல்வார்கள். மஞ்சள் தடவி முடி கொட்டினது எனக்குத் தெரிந்து எங்கும் நடக்கவில்லை. வீட்டிலோ, அழகு நிலையங்களிலோ வேண்டாத முடிகளை அகற்றி விடுவதுதான் பலர் மூலமாக நான் அறிந்த ஒரே வழி. இப்போதெல்லாம் இங்கும் அங்கும் பியூட்டி பார்லர்கள் தோன்றிவிட்டன. அங்கே மாடல்கள், பணக்காரர்கள் அல்லது தவறான நடவடிக்கை உள்ள பெண்கள்தான் போகலாம் என்று இன்னமும் சிலர் நினைக்கிறார்கள். இது ரொம்பத் தவறான எண்ணம். தலைக்கு சாயம் போடுவதும், முகத்தில் இருக்கும் வேண்டாத முடியை எடுப்பதும், முகக் கருமைக் குறைய பிளிச்சிங் செய்வதும் அழகை மட்டுமல்லாமல், மனிதர்களின் பர்சனாலிட்டியை மாற்ற உதவுகின்றன என்று நிபுணர்கள் அடித்து சொல்கின்றார்கள். கண் சரியாகத் தெரியாதவர்கள் கண்ணை டெஸ்ட் செய்து கண்ணாடி அணிவதில்லையா? அதைப் போலவே தோற்றத்தில் கொஞ்சம் கோளாறு இருந்தால் அதை ஏன் சரி பண்ணக் கூடாது! கவர்ச்சி என்பதை ஆபாச

கோணத்திலிருந்து பார்க்கும் குணம் முதலில் நம்மிடமிருந்து மறைய வேண்டும் என்பதோடு 'தன்னம்பிக்கையை வளர்க்கக்கூடிய ஆரோக்கியமான ஈர்ப்புத்தன்மையாக தோற்றக் கவர்ச்சியை கருத முனைவதும் அவசியம்.

தோற்றப் பொலிவு என்கிற தலைப்பில் உரத்த சிந்தனை செய்கின்ற இந்த நிமிஷத்தில் மேற்சொன்ன நடவடிக்கைகளை - நடை, உடை, பாவனை, தோற்றம் ஆகியவற்றை மாற்றிக் கொள்ள முனைவதை எல்லாரும் ஒட்டுமொத்தமாக கடைபிடித்துத் தீரவேண்டும் என்று வலியுறுத்துவதாக அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. யார் யாருக்குத் தேவையோ, யார் யார் மனதுக்கு எது இதமாக இருக்கிறதோ, எது வளர்ச்சிக்கு, நிம்மதிக்கு உதவுமோ அதைச் செய்தால் போதுமானது. வயிற்றில் புண் இருக்கும் நபர் மிளகாயை சாப்பிடக் கூடாது. அது அவரைப் பொறுத்தவரையில் தவறு. புண் இல்லாதவர் தாராளமாக மிளகாயைச் சேர்த்துக் கொள்ளலாம் அல்லவா! சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இனிப்புக்களை சாப்பிடக்கூடாது. மற்றவர்களுக்கு அது தடை இல்லை என்பது போல அவரவர் மனநிலை, தேவை, சூழ்நிலையை துல்யமாகப் புரிந்து, அதற்கேற்ப தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்தப் பிரச்னைக்கும் தீர்வு கண்டு, வளர்ச்சிக்கு அஸ்திவாரம் போடுவது எளிது, மிக எளிது!

6

"ஆஹா, என்ன பர்ஸனாலிடி!" என்று மேடையில் அமர்ந்திருந்த நபரைப் பார்த்து வியந்தார் ஒரு கூட்டத்தில் என்னுடன் இருந்த நண்பர்.

பர்ஸனாலிடி என்ற வார்த்தைக்குப் பொருள்தான் என்ன?

தோற்றமா? நடை, உடை, பாவனையா? சுபாவமா? ஒருவரது செயல்பாடுகளா?

ஏன் இந்த சந்தேகம் என்றால், வசீகரத் தோற்றத்தைப் பார்த்து வியந்தபடி பேசிய நண்பரே தொடர்ந்து வேறு ஒருவரைப் பார்த்து "அவர் பெரிய பர்ஸனாலிடி தெரியுமா?" என்றார்! இப்போது இந்த வார்த்தைக்கு 'முக்கிய புள்ளி' என்று பொருள் கொள்ளலாமா?

'பர்ஸனாலிடி' என்ற வார்த்தைக்கு ஈடான தமிழ்ச் சொல்லாக 'ஆளுமை'யைக் குறிக்கலாம்.

பல்வேறு விதங்களில் வித்தியாசமான முறைகளில் 'ஆளுமை'யைப் பற்றி பல பொருள் தொனிக்கப் பேசும் இந்த வார்த்தைக்கு ஆங்கில 'வெப்ஸ்டர்' அகராதி சொல்லும் பொருள் - 'எது ஒரு

நபரை முழுமையாக, பூரணமாக உருவாக்குகிறதோ, அதுதான் பர்ஸனாலிடி!' தோற்றம், சிந்தனை, செயல்பாடு என்று பல அம்சங்களை ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் போட்டு கலந்தால் கிடைப்பதுதான் - பர்ஸனாலிடி! புரிகிறதா?

இதை இன்னும் எளிதாகச் சொல்ல வேண்டும் என்றால், அகம், புறம் என்ற இரண்டைப் பற்றி விளக்க வேண்டியிருக்கிறது.

புறம் என்பது வெளித்தோற்றம், உடையணிந்து அலங்காரத்துடன் தோன்றும் பாங்கு, நம்மை நாமே வெளிப்படுத்திக் கொள்ளும் முறை, பேச்சு போன்றவை. அகம் என்பது - ஆன்மாவின் அழகு. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களே, அந்த மன அழகு.

'Beauty is in the beholder's eye - அழகு என்பது அவரவர் கண்ணோட்டத்தைப் பொறுத்தது என்பார்கள். ஒப்புக் கொள்கிறேன்.

என் பார்வையில் அழகு என்பது ஆரோக்கியத்தின் ஒரு பகுதி. தன்னம்பிக்கையைக் கூட்டும் ஒரு சிறப்பு அம்சம்.

பளிச்சென்ற தோற்றத்துடன், சற்றே கவர்ச்சியும் வசீகரமும் கலந்து வெளிப்படும்படி விழிப்புணர்வுடன் வளர்த்துக் கொண்டால் அது தன்னம்பிக்கையைக் கூட்டி, வாழ்க்கையில் பல வெற்றிகளை ஈட்டித் தருகிறது, நிச்சயமாய் . . .

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி கையில்லாத ரவிக்கை அணிந்து எப்போதும் தலைப்பால் போர்த்தியபடியே இருப்பார்! கூடவே

'எல்லாரும் பார்க்கும் போது கூச்சமாக இருக்கிறது' என்று காரணம் வேறு சொல்வார்! கூச்சம் என்றால் எதற்காக அணிய வேண்டும்? தோற்றம் தன்னம்பிக்கையைக் கூட்ட வேண்டுமே தவிர, இப்படிக் கூச்சத்தை ஏற்படுத்தி தயக்கப்பட வைக்கலாமா?

புடவைக்குப் பொருத்தமில்லாத ஜாக்கெட் ஒருவர் அணிந்தால், "என்ன இப்படி அழகுணர்வே இல்லாமல் டிரெஸ் செய்து கொண்டிருக்கிறார்!" என்ற கிண்டல் பிறப்பது இயற்கை. புடவைக்கு ஏற்ற ரவிக்கையைத் தேடித்தேடி வாங்குவது எதற்காக? கச்சிதமாய் தோற்றம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தானே? இப்படிச் செய்வதோடு நிற்காமல் இன்னும் ஒரு படி மேலே போய், அழகு நிலையத்துக்குச் சென்று முகத்திலுள்ள வேண்டாத முடிகளை நீக்குவதும், 'வேக்சிங்' என்ற மெழுகு சிகிச்சை எடுப்பதும், தலைக்கு சாயம் பூசி வருவதும், உடலையும் மனதையும் அழகு படுத்தும் அடுத்த கட்டம்தானே!

முந்தின அத்தியாயத்தில் சொல்ல விட்டுப் போன ஒரு உதாரணத்தை இப்போது எழுதப் போகிறேன்.

என் வாசகர் ஒருவருக்கு மூக்கு மிகப் பெரியதாக குடமிளகாய் போல இருக்கும். முகத்தில் முக்கால் பாகம் மூக்குதான். "எனக்கு இது பிடிக்கவே யில்லை, யார் என்னைப் பார்த்தாலும் கிண்டல் செய்கிற மாதிரியே இருக்கிறது" என்பார் அடிக்கடி. நன்றாகப் படிக்கக்கூடியவர்தான் என்றாலும், இந்த மூக்கு ஏற்படுத்திய தாழ்வு மனப்பான்மையினால் பட்டப்படிப்புக்குப் பிறகு உருப்படியாக எதையும் செய்ய முடியவில்லை; எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை.

எனவே, என்னிடம் ஒருமுறை, தன் ஆதங்கத்தை வெளியிட்டபோது நான் சொன்னேன், "தினம் காலையில் எழுந்ததும் தனக்குத்தானே 'என் மூக்கு ஒன்றும் அத்தனை பெரியது இல்லை' என்று சுயபோதனை செய்து கொண்டால் நாளடைவில் அதைப்பற்றி கவலைப்படுவது குறைய வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் சொல்கிறார்கள். இந்தப் பழக்கம் தவிர, முடியுமானால், பிளாஸ்டிக் சர்ஜரி செய்து மூக்கை சரிசெய்து கொண்டுவிடுங்களேன்!"

இரண்டு மூன்று வருடங்களுக்குப் பின் இவர் பெங்களூரிலிருந்து ஒருநாள் போன் செய்தார். "என்னை நினைவிருக்கிறதா மேடம்? இப்போது ஆபரேஷன் மூலம் மூக்கை சரி செய்து கொண்டு விட்டேன்! பழைய உறுத்தல் இல்லாமல் சகஜமாக எல்லோருடனும் பழக முடிகிறது" என்று சந்தோஷத்தோடு சொன்னார்.

இதை எதற்குக் குறிப்பிடுகிறேன் என்றால், தோற்றம் எத்தனை முக்கியம் என்பதை மீண்டும், இந்த இடத்திலும் வலியுறுத்தத்தான்.

அழகு என்று நான் குறிப்பிடுவதை வெறும் 'கவர்ச்சி' என்று பொருள்படுத்தி குழம்பிவிடக் கூடாது. ஐம்புலன்களை எவையெல்லாம் வருடிக் கொடுக்கின்றனவோ, சிலிர்க்க வைக்கின்றனவோ, சந்தோஷப் படுத்துகின்றனவோ - அவையெல்லாம் 'கவர்ச்சி'க்குள் அடங்கும்.

கிராமத்தில், ஏற்றமிறைக்கும்போது தெம்மாங்கு பாடிக்கொண்டே வேலை செய்வார்களே, அந்தப் பின்னணியில் அழகிய நீல வானமும், பச்சை வயலுமான காட்சி மிகப்பெரிய கவர்ச்சி! பாலூட்டும்

தாய் பாடும் தாலாட்டும் கவர்ச்சி! கச்சிதமான உடையலங்காரம் ஒரு கவர்ச்சி!

எது மனதை லயிக்க வைக்கிறதோ, ஈர்க்கிறதோ அதுதான் கவர்ச்சி என்றும் சொல்வேன். இந்தக் கவர்ச்சியைப் பெற தோற்றம் உதவும் என்றால் அதில் நிச்சயம் கவனம் செலுத்தத்தான் வேண்டும்.

மகாகவி பாரதி 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை ...' என்று சொன்னாரே, அதெல்லாம் தன்னம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய தோரணைகள் அல்லாமல் வேறு என்ன?

காலையில் எழுந்ததும் கண்ணாடி முன் நின்று, 'இன்று பூராவும் நான் அழகாக தோற்றமளிக்கப் போகிறேன்' என்று கூறிப் பாருங்கள். அன்று முழுவதும் கூடுதல் சந்தோஷமும் தன்னம்பிக்கையும் ஏற்படுவது நிச்சயம்! இந்தக் கூற்றை நானாகக் கண்டுபிடித்துக் கூறவில்லை நண்பர்களே - மன இயல் படித்தவர்களின் ஆராய்ச்சியின் முடிவு!

மிகச் சாதாரணமாக இருந்தவர்கள்கூட தங்கள் தோற்றத்தைப் பற்றிய விழிப்புணர்வு பெற்று தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டபோது, அதன் பலன் பிரமாதமாக இருக்க முடியும் என்பதை ஏற்றுக் கொண்டு விட்டால் -

அடுத்து, அக அழகுக்கு வருவோம்.

'எஸ்தெடிக் சென்ஸ்' என்ற கலையுணர்வு மன அழகை உருவாக்குவது, ஆத்ம திருப்தி கொடுப்பது.

சில நாட்களுக்கு முன் தொலைக் காட்சியில் திருமதி சுனந்தா பார்த்தசாரதி அவர்கள் பகவத்கீதை குறித்து பேசும்போது ஓரிடத்தில் மனம் என்பதிலிருந்து

புத்தி எப்படி மாறுபடுகிறது, புத்தியை எப்படி வளர்த்துக் கொள்கிறது என்றெல்லாம் மிக அழகாகப் பேசினார். புத்தியும், மனமும் பூரணமாய் வளர்ந்து ஜொலிக்கும் அழகைப் பெறும்போது அகத்தின் அழகு கண்டிப்பாய் முகத்தில் பிரதிபலிக்கும்!

நான் அடிக்கடி நினைவுபடுத்திப் பார்க்கும் கதை ஒன்றை உங்களோடு இந்த இடத்தில் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

மெத்தப் படித்த ஞானி ஒருவர் இருந்தார். ஊர் ஊராகச் சென்று தான் கற்றதை மற்றவர்களுக்கு உபன்யாசம் போல எடுத்துச் சொல்வார். ஒருமுறை ஒரு கிராமத்திலிருந்து வேறு ஒரு இடத்துக்குச் செல்லும் போது, நுப்பும் நுரையுமாக ஓடிக் கொண்டிருந்த ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. அங்கிருந்த பரிசலில் ஏறி கொஞ்ச தூரம் போனதும், பரிசல்காரனிடம் மெல்ல பேச்சுக் கொடுத்தார். தன்னைப் பற்றி எப்போதுமே பெருமையாகப் பேசிக் கொள்ள இவருக்கு விருப்பம் அதிகம். அதனால், "நான் உபநிஷத் பற்றியும் மற்ற உயர்ந்த விஷயங்கள் பற்றியும் ஊர் ஊராகப் பேசி வருகிறேனே, நீ கேட்டிருக்கிறாயா?" என்றார்.

"உபநிஷத் - ஆ? அப்படியென்றால் என்ன ஐயா?" என்றான் பரிசல்காரன். "ஐயோ, வாழ்க்கையில் கால் பகுதியை வீணாக்கி விட்டாயே!" என்று அங்கலாய்த்தவர், கொஞ்ச தூரம் போனதும் மறுபடி கேட்டார், "சரி, ராமாயணம், மகாபாரதம் சொற் பொழிவுகளையாவது கேட்டு, சில நீதிகளை புரிந்து கொண்டதுண்டா?" - என, " ஏதோ என் பாட்டி சொல்லி கேட்டிருக்கிறேன், ஆனால் நீங்கள்

சொல்கிற மாதிரி நீதி அது, இது என்று விளக்கமாக தெரியாது ஐயா!" என்று பரிசல்காரன் சொன்னதும், "அடப்பாவி, வாழ்க்கையில் பாதி நாளைக் கோட்டை விட்டு விட்டாயே!" என்றார் கோபமாக. நடு ஆற்றைக் கடக்கும்போது மீண்டும் சும்மா இருக்காமல், "பெரிய பெரிய விஷயங்களைப் பற்றி தெரியவில்லை என்கிறாய், போனால் போகிறது! நம் நாட்டில் ராமானுஜர், சங்கரர், மாத்வர், ராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற பெரிய மனிதர்கள் வாழ்ந்தார்களே, அவர்களைப் பற்றியாவது தெரியுமா?" என, பரிசல்காரன் அப்பாவியாய் கேட்டான்.

"சாமி, மன்னித்துக் கொள்ளுங்கள். இவர்களெல்லாம் யார்? உங்கள் உறவுக்காரர்களா?"

பண்டிதருக்கு கோபமான கோபம்!

"போச்சு, போச்சு! வாழ்க்கையில் முக்கால் பாகத்தை வீணடித்து விட்டாயே!" என்று ஆத்திரத்தோடு திட்டினார். இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும் பரிசல்காரன் சங்கடத்துடன் நெளிந்தான். "ஏன் தவிக்கிறாய்?" என்று பண்டிதர் கேட்க, அவன் மெதுவாக "உங்களுக்கு நீச்சல் தெரியுமா ஐயா?" என்றான்.

"தெரியாது, ஏன் கேட்கிறாய்?" என்றதும் பரிசல்காரன் பளிச்சென்று, "அடடா! முழு வாழ்க்கையையுமே வீணாக்கி விட்டீர்களே! படகு ஓட்டையாகி மூழ்கப் போகிறதே!" என்று சொல்லிவிட்டுத் தான் மட்டும் நீரில் குதித்துத் தப்பித்துப் போய் விட்டான்!

சிரித்து முடித்த பிறகு தனியாய் உட்கார்ந்து அழுத்தம் திருத்தமாக சிந்தித்தால் நாமெல்லாம் பல சந்தர்ப்பங்களில் அந்த மெத்தப் படித்தவர் நிலையில் இருப்பது நன்றாகவே புரியும்.

உலகத்தைப் பற்றியும், நாடுகளைப் பற்றியும், அரசியலைப் பற்றியும், சீதோஷ்ண நிலை பற்றியும், சுற்றுப்புறச் சூழல் பற்றியும், பொருளாதாரம் பற்றியும், விஞ்ஞானம் பற்றியும், சினிமா பற்றியும், நாட்டின் சீரழிவைப் பற்றியும், அதைப் பற்றியும், இதைப்பற்றியும் அக்கு வேறு ஆணி வேறாக போகவர அலசிப் பேசுகிறோம். ஆனால், நான் என்கிற அந்த தனிநபரின் வளர்ச்சி பற்றி பர்ஸனாலிடியை முழுமையாக்குவது பற்றி - சிறிதாவது யோசிக்கிறோமா?

என் பலம், பலவீனம் என்ன? என்னிடமிருக்கும் நல்ல அம்சங்கள் எவை? வேண்டாத துர்குணங்கள் எவையெவை? இவற்றைப் பற்றியெல்லாம் நான் பூரணமாக உணர்ந்திருக்கிறேனா? நிம்மதியான வாழ்க்கை வாழ்கிறேனா? இப்படி எத்தனை கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்ளலாம்! அத்தனையும் தவிர்த்து, அந்தப் படித்தவர் மாதிரி வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்கள் பற்றின அறிவு பெறாமல் நாம் தண்டத்திற்கு வளையவருவதுதானே நிஜம்?

டாக்டர் டயர் என்ற மேல்நாட்டு அறிவாளி, 'ஒருவர் பல பட்டங்களைப் பெற்று மிகச் சிறந்த புத்திமான் என்று பெயர் வாங்கியிருக்கலாம். ஆனால், தன்னுடைய அன்றாட வாழ்வுக்கு, நிம்மதிக்கு, 'சர்வைவல்' என்கிற உயிர்வாழ்தலுக்கு எது வேண்டும், எது அவசியமில்லை போன்ற அடிப்படை

விஷயங்களைக் கூட புரிந்து கொண்டு வாழா விட்டால், அவரைவிட ஒரு சாதாரண, படிக்காத விவசாயி, தனக்கு இது தேவை, இது தேவையில்லை, தன்னால் எது முடியும், முடியாது என்றுணர்ந்து, உணர்ந்ததை வாழ்க்கையில் கடைப்பிடித்து நிம்மதியாக வாழ்பவன், மிக புத்திசாலி" என்கிறார்!

புத்திசாலித்தனம் என்பது என்ன? அறிவுஜீவித் தனமாக யோசித்துக்கொண்டே இருப்பது மட்டும் புத்திசாலித்தனமல்ல. நடைமுறைக்குத் தேவையான, சாத்தியமான விஷயங்களை இனம் காட்டி வாழ்க்கையை அர்த்தத்தோடு வாழ உதவுவதுதான் புத்திசாலித்தனம்.

முன்பு குறிப்பிட்ட மாதிரி, வாழ்க்கை என்பது ஒரு கூட்டு முயற்சி. முற்றும் துறந்த முனிவர்கூட தன் அடிப்படைத் தேவைகளுக்காக ஒருசிலரின் உதவியை யாவது எதிர்பார்க்கத்தான் வேண்டும்!

நீங்களும் நானும் பல வசதிகளுக்குப் பழக்கமாகிவிட்ட நிலையில் ஆயிரக்கணக் கானோரின் தயவின்றி வாழ்வது எப்படி! ஆகவே, அன்றாட வாழ்வுக்குத் தேவையான புத்திசாலித் தனத்தை ஓரளவுக்காவது வளர்த்துக் கொண்டால் தான் நாமும் சிரமமின்றி, நம்மைச் சேர்ந்தவர் களையும் சிரமப் படுத்தாமல் வாழ முடியும்.

அக அழகு உருவாவதில் இந்த புத்திசாலித் தனத்துக்குப் பெரும் பங்கு இருக்கிறது.

இதைப் புரிந்துக் கொள்ளவோ, உணரவோ, மாற்றவோ 'சுய அலசல்' என்கிற வழிமுறை அவசியமாகிறது என்று நான் நினைக்கிறேன்.

'சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப் படுத்துவது?' புத்தகத்தில் ஏற்கனவே சுய அலசலைப் பற்றி கூறியிருக்கிறேன் என்றாலும், ஆளுமையின் தொடர்பாக மீண்டும் அந்தப் பொருளைத் தொட்டுப் பேசுவது பொருத்தமாக இருக்கும் என்பதாலும், நல்ல விஷயத்தை, அவசியமான விவரத்தை ஒரு தரத்திற்கு பத்து முறைகள் கேட்டு, படித்து தெரிந்து கொள்ளும் போது, சொல்லப்படும் கருத்து மனமண்ணில் வித்துக்களாக விழுகின்றன என்பதாலும் - அடுத்த அத்தியாயத்தில் 'சுய அலசலை' கொஞ்சம் அலசலாம்.

7

'சுய அலசல்' பற்றி நான் எப்போது பேசத் துவங்கினாலும், ஏதோ வேதாந்தப் பேச்சுதான் வரப்போகிறது என்று சிலர் நினைத்து ஆயாசத்துடன் சூள் கொட்டுவது எனக்குத் தெரியும்.

தவறு! 'செல்ஃப் ரியலைசேஷன்' - தன்னைத் தானே உணருவது - இதுதான் வேதாந்தப் பிரிவில் சேர்ந்தது - இதிலிருந்து மிக மாறுபட்டது செல்ஃப் அனாலிஸிஸ் - அதாவது சுய அலசல்.

படித்தவர், படிக்காதவர், பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு இல்லாமல், எவருமே வளர்த்துக் கொண்டு, கையாளக் கூடியதுதான் சுய அலசல். எப்படி என்கிறீர்களா?

ஒருமுறை ஒரு கிராமத்தில் சுய அலசல் பற்றி பேசியதும், அங்கிருந்த பெண்மணி, "நாங்களெல்லாம் கிராமத்து ஜனங்கள். இதெல்லாம் புரியாது. நீங்கள் படித்தவர், சுலபமாகப் புரியும்" என்றார்.

'மதிய விருந்தை நாம் ஒன்றாக சாப்பிட்ட போது வயிற்றில் புண் இருக்கிறது, அதனால் இவனுக்கு காரம் கூடாது, என் கணவருக்கு சர்க்கரை வியாதி

இருப்பதால் இனிப்பு கூடாது, பிள்ளைக்கு வெயிலில் நின்றால் தலைவலி வரும்' என்றெல்லாம் சொன்னீர்களே! உடம்புக்கு எது ஒத்துக்கொள்ளும் எது ஒவ்வாது என்றெல்லாம் புரிந்து எச்சரிக்கையோடு இருக்கத் தெரிந்தவர்களுக்கு, மனதுக்கு எது சரியானது எது உறுத்தலானது என்று யோசித்து அலசிப் பார்ப்பதும் சாத்தியம்தானே!'' என்றேன் பதிலுக்கு மடக்கி!

நிஜமாகத்தான் சொல்கிறேன், எந்த வித பயிற்சியும் இல்லாமல் மிக எளிதாக அத்தனை பேருக்கும் செய்யக்கூடிய ஒரு விஷயம் சுய அலசல். தீவிரமாக முயன்றால் சுலபத்தில் பலனைக் கண்கூடாகப் பார்க்க முடியும், அனுபவிக்க முடியும்.

ஒவ்வொரு தினமும் இரவில் உறங்கச் செல்லும் முன், 'இன்று எவரையாவது நோகச் செய்தேனா? ஏமாற்றினேனா? எதெது என்னை வேதனைப்பட வைத்தது, கோபப்பட வைத்தது? மருக வைத்தது, அவமானப்பட வைத்தது?' என்று இனம் கண்டு பிரித்தோமென்றால் - இவை நம் பலவீனங்கள், மைனஸ் பாயிண்ட்ஸ் என்று புரியும்.

'என்னை சிலிர்க்க வைத்தது எது? சந்தோஷப்பட வைத்தது, ஆஹா, நல்ல காரியம் செய்திருக்கிறேன் என்று மனநிறைவைத் தந்தது?' என்கிற தலைப்பில் இடம் பெறும் விஷயங்கள், பலங்கள்; ப்ளஸ் பாயிண்ட்ஸ்.

உண்மையாக, நேர்மையாக, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் அன்றைய நிகழ்ச்சிகளைப் புரட்டிப் பார்த்து என்னென்ன செய்கிறோம் என்பதை

16856
3288079

அலசிப் பட்டியல் போடுவதற்கு பெரிய படிப்போ, நிபுணத்துவமோ தேவையே இல்லை!

மனதால் வளர வேண்டும், நல்ல ஆரோக்கியமான சிந்தனையும் செயல்பாடும் பெற வேண்டும், என்னை சிறந்த மனிதத்தன்மை உள்ளவனாக உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் போதும்.

நான் அடிக்கடி சொல்வதுண்டு - கையில் புண் இருப்பதைப் பார்த்து யாராவது கேட்டால், 'ஆமாம், துருப்பிடித்த அந்தக் கதவுக் கம்பியில் இடித்துக் கொண்டதில் புண்ணாகிவிட்டது!' என்று ஒப்புக் கொண்டு சிகிச்சைக்குச் செல்வதுதான் புத்திசாலித்தனம். 'என் கையில் புண்ணா? இருக்காதே!' என்று உண்மையை மறைத்து வாதாடுவதால் யாருக்கு லாபம்! மாறாக, காலப் போக்கில் சீழ் கோர்த்துக் கொண்டு கையை இழக்கும் அபாயம் கூட இருப்பதை மறுக்கக் கூடாது.

குறைபாடுகளை இனம் கண்டு மாற்றிக் கொள்ள முயற்சிப்பதுதான் விவேகம்.

சுய அலசல் மூலமாக மனதிலுள்ள ஒட்டடைகளைப் போக்கி, அதை ஆரோக்கியமாக வைப்பதும் நம் கையில் மட்டுமே இருக்கிறது.

சின்ன விஷயமாக இருந்தாலும் உதாரணமாக குறிப்பிடுவதில் தவறு இல்லை - மின்சாரம் நின்று அறையில் காற்று இல்லாமல் புழுக்கமாக இருந்தால் உடனே ஜன்னலைத் திறந்து வைத்து காற்று உள்ளே வீசச் செய்கிறோம். வேண்டாத குணங்களினால் மனம் புழுங்கிப் போகும்போது நல்ல சிந்தனையில் மனதைத்

திருப்பி, ஆரோக்கியமான மனநிலை என்கிற காற்று வீசச் செய்வது அவசியமில்லையா?

ஹெர்மன் ஹெஸ்லே என்ற சிறந்த எழுத்தாளர் 'சித்தார்த்தா' என்ற புத்தகத்தை எழுதியிருப்பதைப் பலரும் படித்திருப்பீர்கள். அதில் நான் ரசித்து, எப்போதும் சிலாகித்துப் பேசும் பகுதி ஒன்று உண்டு.

வேலைக்கான நேர்முகத் தேர்வு ஒன்று நடக்கிறது. "வாழ்க்கையில் வெற்றி பெற தேவையான தகுதிகள் உங்களிடம் இருக்கின்றனவா?" என்பது கேள்வி.

"என்னால் காத்திருக்க முடியும், என்னால் பட்டினி கிடக்க முடியும், என்னால் பிரார்த்தனை செய்ய முடியும்" - I can wait, I can fast and I can pray என்று தயக்கமில்லாமல் பதில் வருகிறது!

'இதெல்லாம் ஒரு பெரிய தகுதியா! இந்த வேலைக்கும் இவற்றுக்கும் என்ன சம்பந்தம்!' என்று எதிர்க்கேள்வி கேட்கப்பட்டதும் தேர்வுக்கு வந்தவர் நிதானமாக விளக்குகிறார்.

"பதறாத காரியம் சிதறாது. நான் எதற்கும் பதட்டமடையாமல், என் முறை வரும் வரை காத்திருந்து, சந்தர்ப்பத்தை சரியானபடி உபயோகித்து பணி செய்வேன். எனவே என் வேலையில் தடுமாற்றமோ, அள்ளித் தெளித்த அவசரக் கோலமோ இருக்காது. இரண்டாவது என்னால் பட்டினி கிடக்க முடியும் என்பதால், கோபமோ ஆத்திரமோ என்னைத் தாக்க வழியில்லை. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்ற சீரழிவு எனக்கு வராது. என்னால்

பொறுமையாக இருந்து எந்த நேரத்திலும் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும்; மூன்றாவது, என் குறைகளை நான் நன்றாக அறிவேன். அதனால் எனக்கும் மேலுள்ள சக்தியான கடவுளிடம் என் குறைகளைக் குறைக்கும்படியும் கூடவே நின்று உதவும் படியும் வேண்டுவேன்!"

எத்தனை அருமையான, உயர்வான விளக்கம்!

சுய அலசல் மூலமாக வரும் விழிப்புணர்வுகள் இப்படித்தான் இருக்க வேண்டும்!

'விரலுக்குத் தகுந்த வீக்கம்' என்பார்களே, அப்படி தன் தகுதி அறிந்து வைத்திருப்பதுதான் விழிப்புணர்வு பெற்று ஆளுமையை வளர்த்துக் கொள்ள நமக்கு இருக்கும் ராஜபாட்டை.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அகம், புறம் என்ற இரண்டைத் தவிர சூழ்நிலைக்கும் ஒரு நபரின் ஆளுமையை தீர்மானிப்பதில் அலாதி பங்கிருக்கிறது என்பதை மறக்கக் கூடாது.

சூழ்நிலையின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசும்போது ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு ராஜா. ரொம்ப நல்லவர். மிக சுத்தமானவர். எதிலும் ஒரு அழகையும் சுச்சிதத்தையும் கட்டுப்பாட்டையும் எதிர்பார்ப்பவர். நாடு, வீடு எல்லாவற்றிலும் இவை இருக்க வேண்டும் என்பார். நகம் முதற்கொண்டு துப்புரவாக வெட்டி பளிச்சென்று

வைத்திருப்பதில் கவனம் செலுத்துபவர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இவர் ஒருமுறை வேட்டையாடக் காட்டுக்குச் சென்றிருந்தபோது மிருகம் என்று நினைத்து ஒரு முனிவர் மீது தவறுதலாக அம்பெய்திவிட்டார். கோபமடைந்த அந்த முனிவர், "என்னை மிருகம் என்று எண்ணிய நீ நாளை காலை பொழுது விடியும்போது பன்றியாகி விடுவாய்!" என்று சாபமிட்டு விடுகிறார்.

ராஜாவுக்கு தாங்க முடியாத வேதனை. சாபம் பெற்றதற்காகக்கூட வருத்தமில்லை. பன்றியாகப் போய் படைக்கிறாரே என்றுதான் துக்கம் தாள முடியவில்லை. பன்றி எத்தனை அசுத்தங்களிலும் சாக்கடையிலும் புரளும் பிராணி! இத்தனை வருஷங்களாய் அமோகமாக வாழ்ந்துவிட்டு பன்றியாக எப்படி சகதியில் முங்குவது என்று அவருக்கு ஒரே கவலை.

அரண்மனைக்குத் திரும்பியதும் தன் மூத்த மகனை அழைத்து விவரத்தைக் கூறி, "நான் பன்றியாக அரண்மனையில் வாழ விரும்பவில்லை. அதனால் இன்று மாலையே மறுபடி காட்டுக்குப் போய் விடுகிறேன். நாளை நான் பன்றியானதும் நீ அங்கு வந்து கண்ணில் படும் பன்றிக் கூட்டத்தின் அருகில் நின்று 'அப்பா' என்று அழைத்தால், உடனே என்னை அடையாளம் காட்டிக் கொள்கிறேன். நீ என்னைக் கொன்றுவிடு! இத்தனை உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்த பிறகு கேவலமாக வாழ எனக்கு இஷ்டமில்லை" என்று பணிக்கிறார். மகனும் வேறு வழியின்றி ஒப்புக்கொள்ள ராஜா மறுபடி காட்டுக்குப் போய்விடுகிறார்.

மறுநாள் சொன்னபடி மகன் காட்டுக்குப் போய் கண்ணில்பட்ட பன்றிக் கூட்டத்திலெல்லாம் தன் தந்தையைத் தேட, எங்குமே அவர் குரல் கேட்கவில்லை. மகனும் சோர்வடையாமல் ஒவ்வொரு நாளும், வாரமும், மாதமும் வந்து தேடியும் பலனில்லை.

கடைசியில் கிட்டத்தட்ட ஆறு மாசம் கழிந்த நிலையில் ஒரு சகதிக் குட்டையில் இரு பெரிய பன்றிகள், அருகே சின்னச்சின்ன குட்டிகளைக் கண்டான். வழக்கம்போல 'அப்பா' என்று அழைக்க, உடனே 'மகனே' என்ற பதில் கேட்கிறது. ஒருவழியாய் தந்தையைக் கண்டுபிடித்தோமே என்கிற நிம்மதியில் மகன் வில்லில் அம்பைப் பூட்டி குறி பார்க்க, "வேண்டாம், அடிக்காதே, நில்!" என்று அப்பாவின் குரல் ஒலிக்கிறது. "மகனே, இது உன் சித்தி, இவை உன் தம்பி தங்கைகள்! இந்தப் பன்றி வாழ்க்கை கூட நன்றாகத்தான் இருக்கிறது! அதனால் என்னை வாழ விட்டுவிடு!" என்கிறார். எப்படி!

சூழ்நிலையின் தாக்கம் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் கிடைக்குமா! எத்தனை உயர்வாக வாழ்ந்த மனிதரைக் கூட சூழ்நிலையும் தேவையும் மாற்றி விட்டன!

வாழ்க்கை என்பது ஒரு பயணம். எங்கு யார் வருவார்கள், யார் பிரிவார்கள் என்று தெரியாத ஒரு பயணம். நேர்மையான, நிம்மதியான பாதையில் போக வேண்டுமென்றால் அந்தப் பயணத்தை எவ்வளவு சுமுகமாக வைத்துக் கொள்கிறோம், உடன் வருபவர்களுடன் முரண்டிக் கொண்டிராமல் எப்படி

ஆரோக்யமான உறவுகளை உருவாக்கிக் கொள்கிறோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

உறவு என்றால் பிறப்பால் வருவதையும், திருமணத்தால் உருவாவதையும் மட்டும் நான் குறிப்பிட வில்லை; சுற்றி இருக்கும் பலருடன் உண்டாகும் பலவித பிணைப்புகள், தொடர்புகள் போன்ற எந்த உறவையும்தான் சொல்கிறேன். செடிக்கு நீரும் உரமும் தேவைப்படுவது போல எந்த உறவுக்கும் அன்பு, அரவணைப்பு, அனுசரணை, விட்டுக் கொடுத்தல் என்ற பலவித போஷாக்கு கிடைப்பது அவசியம். தினம் தினம் எத்தனைக்கெத்தனை பாடுபட்டு வளர்க்கிறோமோ அத்தனை செழித்து வளரும் இந்த உறவுப் பிணைப்பு. செடியில் களை வந்தால் களைகிறோம், பூச்சி வந்தால் மருந்தடிக்கிறோம் - இப்படி உறவிலும் தேவை யில்லாததைக் களைந்து சத்தானதைக் கொடுத்து வளர்த்தால்தான், இருக்கும்வரை அது அர்த்தமுள்ள தாக அமையும். இதமானதாய் வருடிக் கொடுக்கும். இங்கே, ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். சமுதாயம் என்பது ஒரு தோட்டத்துக்குச் சமம். இதில் ஒரு மரத்தில் வேர்ப்பூச்சி வந்துவிட்டால்கூட மண்ணுக்கு அடியில் இருக்கும் பூச்சியைப் பார்க்க இயலாதபோதும், விளைவை மரத்தில் காணலாம். இலை அரித்து, காய் அழுகி, பூ பூக்காமல் மரம் மெது மெதுவாய் பட்டுப்போகும். இலையில் அல்லது கிளையில் கோளாறு என்று பூச்சி மருந்து அடித்தும் பலனில்லை. வேரில் பரவிய விஷத்தைக் கண்டுபிடித்து, மருந்திட்டு, தேவையானால் அந்த மண்ணோடு வேரைப் பிடுங்கி எறிந்தால்தான் மற்ற மரங்களாவது பூச்சி தாக்குதலிலிருந்து தப்பிக்கும்.

இல்லாவிட்டால் சந்தடி செய்யாமல் மண்ணினூடே ஒன்றிலிருந்து மற்றதுக்கு பரவி முழு தோட்டத்தையும் அழித்துவிடும். எனவே எங்கு கோளாறு இருக்கிறதோ, எந்த மனசில் ஒட்டடை, அழுக்கு இருக்கிறதோ அதைக் கவனித்து அங்கு சிகிச்சை செய்ய வேண்டும். இல்லையானால், அந்தப் பழத்தோட்டம் மாதிரியே தனி நபரின் தவறான நடவடிக்கைகளின் விளைவுகள் இங்கும் அங்கும் பரவி, சமுதாயத்தையே ஒட்டு மொத்தமாய் பாதித்து விடும்!

மீண்டும் சொல்கிறேன் - தனி நபர் மனதில் அழுக்கும், ஆங்காரமும், அழுகலும், ஒட்டடையும் நிறைந்திருந்ததென்றால் அந்த மனிதரிடமிருந்து வரும் கதிர்வீச்சுக்கள் சுற்றியிருப்பவர்கள் அத்தனை பேரையுமே எரித்து மண் மேடாக்கிவிடும். நிச்சயம்.

எண்ணம், பேச்சு, நடவடிக்கை, செயல் அனைத்தும் நம்மை மட்டுமல்லாமல் நம்முடன் வாழ்க்கைப் பயணத்தில் பயணிக்கும் எல்லாரையும் பாதிப்பது உண்மை என்பதால் இது சம்பந்தமாய் நாம் செய்ய வேண்டியது என்ன?

மனதில் வேர்ப்பூச்சி என்கிற வேண்டாத குணங்கள் உள்ளனவா என்று அன்றாடம் தேடித் தேடிப் பார்த்து தேவையான சிகிச்சையை செய்து கோளாறை சரிசெய்து விட்டோமா என்கிற விழிப்புணர்ச்சி ஜனித்துவிட்டால், பிறகு எந்த பிரச்னையும் இல்லை.

அகமும், புறமும் அற்புதமாக அமைந்து உன்னத ஆளுமை படைத்த தனி மனிதர்களைக் கொண்ட சமுதாயம் உருவாகிவிட்டால் அந்த சமுதாயத்தாலும் அந்த தனிநபர்களாலும் சாதிக்க முடியாதது ஏதுமில்லை!

8

பிருந்தா எனக்கு வேண்டியவர். சில நாட்களுக்கு முன் அவர் என்னைக் காண வந்தபோது ஏக பதட்டத்தில் இருக்க, என்ன விஷயம் என்று விசாரித்தேன்.

வேதனையும் ஆத்திரமும் ஆளை அலைக் கழிக்க, நடந்ததை விவரிப்பதற்குள் பிருந்தாவின் கண்ணோரங்களில் நீர்பூக்கள் மொட்டு கட்டி விட்டன.

விஷயம் இதுதான் -

முந்தின நாள் மாலை உறவினர்களை எக்மோர் ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு விடுவதற்காக பிருந்தாவே வண்டியை ஓட்டி வந்திருக்கிறார். அடையாறு அருகில் ஒரு முக்கிய பிரமுகர் வரப்போகிறார் என்று சொல்லி சாலைகளை அடைத்துவிட, வண்டியை நிறுத்திவிட்டு, 'ரயிலுக்கு நேரம் இருக்கிறது, பதட்டப்பட வேண்டாம்' என்று பொறுமையுடன் காத்திருந்திருக்கிறார். பத்து நிமிஷங்கள் போவதற்குள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி, கன்னா பின்னாவென்று மூன்று சாரிகளில்

முன்னும் பின்னும், பக்கவாட்டில் வண்டிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், டு வீலர் வாகனங்கள் . . .

மேற்கொண்டு கால் மணி சென்றபோது பின் வண்டியிலிருந்து அழுகுரல் எழுந்ததில் சின்னதாகக் கூட்டம் சேர்ந்து கொள்ள, என்ன ஏது என்று விசாரிக்க பிருந்தா இறங்கிச் சென்றிருக்கிறார். நேர் பின்னால் இருந்த வண்டியில் தலையில் அடிபட்டு ரத்தப்போக்கில் கிடக்கும் பிள்ளையுடன் ஒரு தாய், என்ன செய்வது என்று விளங்காமல் விழிக்கும் ஓட்டுனர். 'சீக்கிரம் போ... எங்காவது இடுக்கு கிடைத்தால் புகுந்துவிடு' என்று அந்தப் பெண்மணி அரற்றிப் புலம்பி என்ன பயன்? சாலை பூராவும் வாகனங்கள் அடைத்துக்கொண்டு நிற்கையில் எங்கேயிருந்து புகுந்து போவது!

மயங்கிக் கிடந்த பிள்ளையின் அவலம் தாளாமல் பிருந்தா முன்னால் நின்ற நாலு வண்டிகளைக் கடந்து நடந்து சென்று ' எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை' என்கிற தினுசில் நின்று கொண்டிருந்த டிராஃபிக் கான்ஸ்டேபிளிடம் விஷயத்தைச் சொல்லி, 'கிட்டத்தட்ட அரைமணியாய் நிற்கிறோம் - ஏன் இன்னும் போக்குவரத்தை விட மறுக்கிறீர்கள்? பின்னால் உள்ள வண்டியில் ஒரு குழந்தை அடிபட்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறான். எங்களுக்கும் ரயிலைப் பிடிக்க வேண்டும். தயவு செய்து போக்குவரத்தை அனுமதியுங்கள்' என்று வாதாடியதை போலீஸ்காரர் காதில் போட்டுக் கொள்ளாமல் நிற்க, சண்டை போடும் குரலில் பிருந்தா மீண்டும் முறையிட, தெருவின் முனையில் நின்றிருந்த ஸார்ஜெண்டை

சுட்டிக்காட்டி, 'அவரிடம் சென்று சொல்லுங்கள்' என்று கான்ஸ்டேபிள் கை கழுவியிருக்கிறார்.

பிருந்தா சளைக்கவில்லை. ஸார்ஜெண்ட் நின்றிருந்த இடத்துக்குச் சென்று நிலைமையை எடுத்துரைக்க, 'ஸாரி மேடம், சாலைகளை அடைக்கச் சொல்லி எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. அதை மீற முடியாது' என்று நிர்தாட்சண்யமாகக் கூறியவரிடம் தொடர்ந்து தர்க்கம் பண்ணிக் கொண்டிருக்கையிலேயே, நல்ல வேளையாக வி.ஐ.பி. வண்டிகளின் வரிசை வந்துவிட, சில நிமிஷங்களில் போக்குவரத்துக்கு அனுமதி கிடைத்து விட்டிருக்கிறது.

இந்த சம்பவத்தை நான் விவரிப்பதைப் படிக்கும் வாசகர்களில் பலர் 'இது என்ன அபூர்வ நடப்பு என்று பெரிசாய் எழுத வந்து விட்டாள்! எல்லாரும் அடிக்கடி அனுபவித்து எரிச்சல்படும் விஷயம்தானே!' என்று இதற்குள் எரிச்சலுடன் முணுமுணுத்திருக்கலாம். அவசரப்பட வேண்டாம் நண்பர்களே - அன்றாடம் அனுபவிக்கும் அனுபவம் தான் என்றாலும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணுவது குறித்து நாம் என்ன செய்து விட்டோம் என்பதை யோசித்துப் பார்க்கவாவது இப்போது உரத்த சிந்தனை செய்வது அவசியமாகிறது அல்லவா! தவிர பிருந்தாவைப் பொறுத்தவரை, நடந்த நிகழ்ச்சி எப்படி அவரைப் பாதித்தது என்பது அவருடைய வார்த்தைகளிலேயே கேளுங்கள்.

"கிட்டத்தட்ட முக்கால் மணி நேரம் விவரமே சொல்லாமல் நூற்றுக்கணக்கில் பொது மக்களைக் காக்க வைத்தது, அவசரமாய் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியவர்களைத் தடுத்தது, எங்களைப் போல

ஸ்டேஷனுக்குச் செல்ல முனைந்தவர்கள் ரயிலைக் கோட்டை விடச் செய்தது எல்லாம் வேறு நாடுகளில் காண முடியாத அநியாயம்தான். ஆனால் அதைவிடக் கொடுமை, தனிப் பெண்மணியாக நான் இங்கு அங்கு ஓடி நிலைமையை சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத் துரைக்க முயன்றபோது என்னோடு சேர்ந்து விரல் அசைக்க யாரும் முன் வரவில்லை என்பதுதான்! ஏராளமான வண்டிகளில் ஆண்களும் பெண்களும் நான் போலீஸ்காரருடன் வாதாடுவதைக் கேட்டுக் கொண்டு வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந் தார்களே, அவர்களுக்கெல்லாம் மனசாட்சி என்பதே கிடையாதா? போக்குவரத்து துவங்கியதும் அவரவர் வண்டியை முன்னால் கிளப்பிக்கொண்டு போக அவசரம் காட்டிய நிமிஷத்தில், எந்த அடிபட்ட பிள்ளைக்காக நான் சண்டை போட்டேனோ அந்த வண்டியின் காரோட்டியே ஸார்ஜெண்டிடம் பேசிவிட்டு நான் திரும்புவதற்கு நாழியாகி விட்டதால் ஹாரனை ஒலித்து, 'என்னம்மா பொறுப்பில்லாமல் வண்டியை நிறுத்தி விட்டு போய் விட்டாய்!' என்று விரட்டியபோது எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று புரிந்து கொள்ள முடிகிறதா? 'பொம்பளை ஓட்டுகிறாள், அதுதான் வண்டி நட்ட நடுவில் நிற்கிறது!' என்று வண்டியில் ஏறி நான் அதைக் கிளப்புவதற்குள் என்னைத் தாண்டிக் கொண்டு போன ஓட்டுனர்கள் திட்டியது போதாது என்பது போல அத்தனையும் கவனித்துக் கொண்டு நின்ற கான்ஸ்டேபிள் உரக்க, 'ஜான்ஸிராணி என்று மனசில் நினைப்பா? போம்மா மளமளவென்று' என்று நையாண்டியாகச் சொன்னதும் சத்தியமாய் நான் உடைந்துதான் போனேன்! என்ன சமுதாயம் இது!

உதவி பண்ண மனசில்லாவிட்டாலும், நியாயத்துக்காகப் போராட முன்வருபவருக்குப் பக்கபலமாக இல்லாவிட்டாலும், கேலி பண்ணாமலாவது இருக்கலாம் அல்லவா!"

பிருந்தாவின் கோபத்தை, ஆதங்கத்தை என்னால் சுலபமாகப் புரிந்து கொள்ள முடிந்தது. ஏனென்றால், பத்து நாட்களுக்கு முன்னால் எனக்கும் இந்த ரீதியில் ஓர் அனுபவம் கிட்டியிருந்தது.

அண்ணா சாலையில் உள்ள ஒரு தியேட்டரில் முற்பகல் காட்சி படம் பார்ப்பதற்காக நாங்கள் ஏழெட்டுப் பெண்கள் முன்கூட்டியே டிக்கெட் எடுத்திருந்தோம்.

படம் காலை பதினொண்ணரைக்குத் துவங்கும் என்று டிக்கெட்டில் குறிக்கப் பட்டிருந்தது. நாங்கள் தியேட்டருக்குச் சென்றபோது மணி சரியாய் பதினொண்ணு இருபது. எக்கச்சக்க கூட்டம். செமை வெயில். வண்டியை எங்கோ பின்னால் கிடைத்த இடத்தில் நிறுத்திவிட்டு வாசலில் சென்று கூட்டத்தோடு கூட்டமாய் நின்றோம்.

பதினொன்றே முக்கால் . . . பன்னிரண்டு . . .

வராந்தாவை ஒட்டியிருந்த கிரில் கதவு திறக்கப்படவேயில்லை. என்ன விஷயம் என்று விசாரிக்கலாம் என்றால் பொறுப்பாகப் பதில் சொல்ல பூட்டிய கேட்டருகில் யாரும் இல்லை.

வெயில், வியர்வை, புழுக்கம், கூட்டம்.

கார் நிறுத்தியிருந்த இடத்துக்குச் சென்று வண்டிக்குள் ஏறி உட்கார்ந்தோம். அப்படி ஒரு கால் மணி. இனி பொறுக்க முடியாது என்று ஆனதும்

என்னோடு வந்திருந்த ஸ்னேகிதிகளில் இருவர் மானேஜரைப் பார்த்துவிட்டு வருகிறோம் என்று போனவர்கள் பத்து நிமிஷங்களில் மூக்கு நுனியில் கோபம் ஏறி உட்கார திரும்பினார்கள்.

"உள்ளே விட மறுத்து விட்டார்கள் - மானேஜரையும் கூப்பிட மாட்டார்களாம். ஏதாவது கேட்டால் மரியாதை இல்லாமல் பேசுகிறார்கள் ..."

பதினொண்ணரைக்கு ஆரம்பிக்க வேண்டிய படம் மணி பன்னிரெண்டே கால் ஆகியும் துவங்குவதற்கு அறிகுறி இல்லை; மண்டையை ஒட்டைபோடும் வெயிலில் காத்திருக்கும் மனிதர்கள் உள்ளே வந்து நிழலாக நிற்க அனுமதி இல்லை, தாமதத்துக்கு என்ன காரணம் என்கிற விளக்கம் கூட இல்லை என்றால், என்ன அநியாயம் இது!

யந்திரக் கோளாறு, அல்லது ப்ரிண்ட் கைக்கு வரவில்லை என்று உண்மையாகவே ஒரு காரணம் இருக்கலாம் - நான் மறுக்கவில்லை. ஆனால், அதையாவது தெரிவிக்கக் கூடாதா? 'தவிர்க்க இயலாத காரணத்தால் காட்சி துவங்க தாமதமாகும்' என்று ஒரு சின்ன அறிவிப்பு செய்து விட்டால், காத்திருந்து படம் பார்க்க விருப்பமுள்ளவர்கள் இருந்து பார்க்கட்டும்; விருப்பம் இல்லாதவர்கள் பணத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு போகட்டும்! அதை விட்டுவிட்டு ஏனிந்த அனாவசிய காத்திருத்தல், கத்தல், விரட்டல்?

காசு கொடுத்து டிக்கெட் வாங்கிய ஜனங்களுக்கு பதில் சொல்ல வேண்டும் என்கிற தார்மீக உணர்வு அந்த தியேட்டர்காரர்களுக்குக் கிடையாதா?

நின்று நிதானித்து யோசித்தால் இப்போதெல்லாம் பல சந்தர்ப்பங்களில், பிரச்னைகளுக்குக் காரணங்களை விளக்கி பதில் கூற வேண்டியவர்கள் கூட, பொறுப்பை உதறிவிட்டு அடாவடியாக நடந்து கொள்வதும், அந்த அலட்சியப் போக்கை வாயைத் திறக்காமல் மக்கள் ஏற்கப் பழகி விட்டதும் நிச்சயம் யாருக்குமே புரியும்.

எதனால் இந்த அவலம்?

பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியவர்களிடம் பரவலாக இப்படியொரு அலட்சிய மனப்பான்மை வளர்ந்து விட்டதற்குக் காரணம் என்ன?

தட்டிக் கேட்க ஆள் இல்லை என்பதா? நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளை நிலை நிறுத்திக் கொள்ள நம்மில் பெரும்பாலோருக்கு தைரியம் இல்லை என்பதா? சமுதாயம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன, நானும் என்னைச் சார்ந்தவர்களும் நன்றாக இருந்தால் போதும் என்கிற சுயநலமா? அதிகாரத்தில் இருப்பவர் என்ன சொன்னாலும் எது செய்தாலும் கைகட்டி வாய் பொத்தி ஏற்கப் பழகிவிட்ட அடிமை புத்தியா?

நாடும் அடுத்தவரும் எப்படி சீரழிந்தாலும் நான் கவலைப்பட மாட்டேன், என் சுகம்தான் எனக்குப் பிரதானம் - என்கிற போக்கில் நம் முன்னோர்கள் இருந்திருந்தால் இன்றைக்கு சுதந்திர இந்தியாவில் நீங்களும் நானும் தலை நிமிர்ந்து வாழ்வது பலித்திருக்குமா?. சிந்திக்க வேண்டும். 'அடிமை வாழ்வு இல்லாமல் எதிர்காலத்தில் எவனோ நன்றாக இருக்க நான் ஏன் என் சொத்து, சுற்றம், பதவி,

வசதியான வாழ்க்கை - எல்லாவற்றையும் தியாகம் பண்ணி சுதந்திர போராட்டத்தில் குதிக்க வேண்டும்?' என்று நம் நாட்டுப் பெரியவர்கள் சுயநலத்தோடு ஒதுங்கி இருந்தால் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரஜைகளாக நீங்களும் நானும் பெருமை கொள்வது நடந்திருக்குமா? யோசிக்க வேண்டும்.

அநீதி, அக்கிரமம், தவறு எங்கு நடந்தாலும், யார் செய்தாலும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு மாபெரும் சக்தியாக உருவெடுத்து அந்தத் தவறை தட்டிக் கேட்கும்போது எந்த பிரச்சனைக்கும் தீர்வு பிறக்கும் - இது வரலாறு நமக்கு உணர்த்திய உண்மை.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சமுதாயப் பிரக்ஞை அவசியம். சமுதாய அக்கறை பற்றின விழிப்புணர்வை ஆழமாக விதைத்துக் கொண்டால்தான் உரிமைகள் மறுக்கப்படும்போது குரல் கொடுத்து அவைகளை நிலைநாட்டிக் கொள்வது சாத்தியமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ், போதை மருந்து பிரச்னை பற்றி குறிப்பிட்டபோது சொன்ன வார்த்தைகள் இப்போது என் நினைப்புக்கு வருகின்றன.

"போதை மருந்துப் பிரச்னை உலகளவில் வளர்ந்துவிட்டதற்கு யார் காரணம்? அதை உற்பத்தி செய்பவன், கடத்துபவன், விற்பவன், உபயோகிப்பவன் - இவர்களோடு பிரச்னையை எதிர்நோக்க மறுத்து முகத்தை திருப்பிக் கொண்டு போகும் நீங்களும் நானும்கூட முக்கிய காரணம்".

உண்மை - நாம் பாதிக்கப்படாத வரை எந்த பிரச்னை யாரைச் சீரழித்தால் நமக்கென்ன என்று ஒதுங்கிப் போவது சுயநலம். கோழைத்தனம்.

வேண்டாம் - புழு பூச்சி போல முதுகெலும்பில்லாத வாழ்க்கை நமக்கு வேண்டாம்.

நாம் ஆறறிவு படைத்த மனிதர்கள். மனித நேயங்கள் நிறைந்த அர்த்தமுள்ள வாழ்க்கை வாழப் பிறந்தவர்கள். இதை மறக்கக் கூடாது.

9

''பல சந்தர்ப்பங்களில் 'தொலைநோக்குப் பார்வை, தொலைநோக்குத் திட்டங்கள்' என்கிற வார்த்தைகளை குறிப்பிடுகிறீர்களே, அவற்றை விளக்க முடியுமா?'' என்று காரைக்குடியிலிருந்து சுதர்ஸன், மங்களம் தம்பதி கடிதம் மூலம் கேட்டிருக்கிறார்கள். முயற்சிக்கிறேன்.

முதலில் ஒரு கதை.

ரொம்பச் சின்ன வயசில் அம்மா பலமுறைகள் சொல்லிக் கேட்டதில், இன்றைக்கும் மனசுக்குள் அழுத்தமாய் படிந்து போன கதை.

ஒரு ஊரில் ஒரு ராஜா. அவருக்கு மூன்று பிள்ளைகள். மூவருமே வயசுக்கு வந்த வாலிபர்கள். நியாயமாகப் பார்த்தால் மூத்தவனுக்குத்தான் பட்டம் கட்ட வேண்டும். ஆனால் அவனுக்கு அத்தனை சமர்த்து போதாது என்று ராஜா கருதியதால் ஒரு போட்டி நடத்தி, தனக்குப்பிறகு ராஜ்ஜியப் பொறுப்பை ஏற்கப் போவது யார் என்று தீர்மானிக்க விரும்பினார். அதன்படி ஒருநாள் பிரதான மந்திரியை கூட வைத்துக் கொண்டு மூன்று மகன்களையும் அழைத்தார். வந்து வணங்கி நின்றவர்களிடம் "எனக்கு

வயதாகிக் கொண்டு வருகிறது. போகிற இடத்துக்கு புண்ணியத்தைத் தேடிக் கொள்ளாமல் காலத்தைக் கழித்து விட்டேன். அதனால் ஆட்சிப் பொறுப்பை தற்காலிகமாக மந்திரியிடம் ஒப்படைத்து விட்டு காசி, ராமேஸ்வரம் போன்ற க்ஷேத்திரங்களுக்கு போய் வரலாம் என்றிருக்கிறேன். நீங்கள் மூவரும் அமைச்சருக்கு உதவியாக இருந்து, பொறுப்புகளை கற்று உணருங்கள். அனேகமாய் மூன்று வருஷங்களில் திரும்பி விடுவேன். வந்த பிறகு உங்களில் யார் சிறப்பாக பொறுப்புடன் நடந்து கொண்டதாக நினைக்கிறேனோ, அவனுக்கே பட்டம் சூட்டுவேன்" என்று கூறி, என்ன, ஏது என்று விளக்காமல் ஆளுக்கு ஒரு பிடி நெல்மணிகளையும் தந்து விட்டு புறப்பட்டுப் போனார்.

தந்தை அந்தப் பக்கம் போனதும் மூத்த மகன் கையிலிருந்த நெல்மணிகளை என்ன செய்யலாம் என்று ஒரு கணம் யோசித்தான்.

'பெரிய பொக்கிஷமா பத்திரப்படுத்தி வைப்பதற்கு? கேவலம் பிடி நெல்மணிகள்! அப்பா மீண்டும் வந்து கேட்கும்போது களஞ்சியத்தில் அடுக்கி வைத்திருக்கும் நெல் மூட்டைகளிலிருந்து ஒரு பிடி எடுத்து வரச் சொன்னால் ஆயிற்று!' என்று எண்ணியவன் கையிலிருந்ததை சாளரத்தின் வழியே வீசிவிட்டு நகர்ந்தான்.

இரண்டாமவன் தன் அறைக்கு வந்து நெல்மணிகளை என்ன செய்வது என்று சிந்தித்தான்.

'அப்பா இந்த நெல்மணிகளைத் தந்துவிட்டு போவதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். மூன்று வருஷங்கள் கழித்து வந்து 'எங்கேடா நான் தந்து

சென்ற மணிகள்?' என்று கேட்டாலும் கேட்கலாம். அதனால் இதைப் பத்திரப்படுத்தி வைப்பதுதான் புத்திசாலித்தனம்' என்று தீர்மானித்து ஒரு துணியில் மணிகளை போட்டு சின்ன மூட்டையாக கட்டி, அலமாரிக்குள் வைத்தான்.

மூன்றாமவன் உடனடியாக எதையும் செய்யாமல் ஒரு நாள் முழுக்க நிதானமாய்ப் புரட்டிப் புரட்டி யோசித்தான்.

எதுவும் கூறாமல் ஒரே ஒரு பிடி நெல் மணிகளை தந்துவிட்டு தந்தையார் வெளியூர் போயிருப்பதால் ஏதோ சூட்சமம் இருக்க வேண்டும். அது என்ன என்று சிந்தித்த போது அரசர் இன்ன காரணத்திற்காகவே இப்படிச் செய்திருக்க வேண்டும் என்று கணிக்க முடிய, அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தான்.

வருஷங்கள் மூன்று ஓடின.

சொன்ன ரீதியில் க்ஷேத்திராடண பயணத்தை முடித்துக் கொண்டு அரசர் நாடு திரும்பினார்.

சிரமப்பரிகாரம் செய்து கொண்டபின் மந்திரி பிரதானிகள் அடங்கிய சபையை கூட்டி, மூன்று மகன்களையும் அழைத்தார். அவர்கள் வந்ததும் ஒவ்வொருவராக அழைத்து 'நான் கொடுத்துச் சென்ற நெல்மணிகள் எங்கே?' என்று கேட்டார்.

மூத்தவன் ஓடிச் சென்று நெல் களஞ்சியத்தில் கொட்டி இருந்ததில் இருந்து ஒரு பிடி அள்ளிக் கொண்டு வந்து "இதோ" என்று நீட்ட, அது புதுசாய் அறுவடை ஆன நெல், தான் தந்து விட்டு போனது

அல்ல என்பது புரிய "பொருளின் அருமை உனக்குத் தெரியவில்லை. எதிலும் ஒரு அலட்சிய, ஆடம்பர மனப்பான்மை உள்ளது. அதனால் உனக்கு தேச பரிபாலனம் செய்யும் தகுதி இல்லை" என்று அரசர் அவனை ஒதுக்கினார்.

இரண்டாவது மகன் அலமாரியில் மூட்டை கட்டி வைத்திருந்ததை எடுத்து வந்து பெருமையுடன் தர, மூட்டையை பிரித்துப் பார்த்து பழுப்பேறியிருந்த காரணத்தால் அது தான் தந்து சென்ற நெல் மணிகள் தாம் என்பதை புரிந்து கொண்டார். "பொருளை பாதுகாக்கும் குணம் உனக்கு உள்ளது. ஆனால் அதை விருத்தி செய்யத் தெரியவில்லை. நாட்டைக் காப்பது மட்டும் போதாது. அது வளரவும் திட்டமிட வேண்டும். அதனால் உனக்கும் முடி சூட்ட மாட்டேன்" என்று அவனிடமும் பொறுப்பைத் தர மறுத்தார்.

கடைசியாய் வந்த மூன்றாவது மகன் வெறுங்கையுடன் அரசரின் எதிரில் வந்து நின்றான்.

"நெல்மணிகள் எங்கே?" என்று கேட்ட போது, "எனக்கு ஒரு வாரம் அவகாசம் வேண்டும்" என்று பணிவுடன் மகன் விண்ணப்பிக்க, அரசருக்கு ஒரு பிடி நெல் மணிகளை கொண்டு வர அத்தனை நாட்கள் எதற்காக என்று ஏக வியப்பு! என்றாலும், எதுவும் கேட்காமல் சம்மதிக்க, அரசகுமாரனும் ஏழாம் நாள் காலை 'கோட்டை வாயிலுக்கு அனைவரும் வருகை தர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான்.

குறிப்பிட்ட நாள் காலையில் கோட்டை வாயிலில் 'ஜே ஜே' என்று கூட்டம்.

"நெல்மணிகள் எங்கே?" என்று அரசர் கேட்டதும், மதில் மேல் ஏறி நின்றுகொண்ட இளவரசன் "அதோ" என்று தூரத்தில் கையை காட்ட, பார்த்தால் தொலைவில் அடுக்கப்பட்ட மூட்டைகளுடன் சாரியாய் மாட்டு வண்டிகள் . . .

அரசகுமாரன் விளயமாக விளக்கினான்.

"மூன்று வருஷங்களுக்கு முன்னால் ஒரு பிடி நெல் மணிகளை நீங்கள் கொடுத்துச் சென்றபோது ஏதோ திட்டத்துடன் செயல்பட்டிருக்கிறீர்கள் என்பதை ஊகிக்க முடிந்தது. அதன்படி நானும் எனக்கு சரி என்று தோன்றிய விதத்தில் காரியத்தில் இறங்கினேன். பிரதம மந்திரியிடம் சொல்லி அனுமதி பெற்ற பிறகு ஊருக்கு வெளியில் தரிசாய் கிடந்த நிலத்தை உழுது, பிடி நெல்லை விதைத்தேன். கூடை நெல் கிடைத்தது. அடுத்த போகத்தில் கூடை நெல்லை விதைத்து பத்துக் கூடைகள் அறுவடை செய்தேன். மறு வருஷம் வேலையில்லாமல் நாட்டில் சோம்பித் திரிந்த இளைஞர்களை ஒன்று திரட்டி விவசாயம் பண்ண ஊக்கப்படுத்தி, கிணறு வெட்டினேன். நிலத்தை உழுது, பத்து கூடை நெல்லை விதைத்து பத்து மூட்டைகளை பெற்றேன். அடுத்த போகத்தில் பத்து மூட்டைகள் நூறாயின. மேற்கொண்டு கிணறுகளை வெட்டி, ஏராளமான நிலத்தை தயாராக்கி இந்த வருஷம் அத்தனையும் விதைத்ததில், ஆயிரக்கணக்கான மூட்டைகள் விளைந்திருக்கிறது. அத்தனையும் அறுவடை செய்து, தொழிலாளிகளுக்கு பங்கு நெல் போக ,பாக்கியை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வருவதற்காகவே ஒருவார அவகாசம் கேட்டேன் ..."

ராஜகுமாரன் பேசப்பேச பரவசப்பட்டுப் போன ராஜா எழுந்து வந்து மகனை அணைத்துக்

கொண்டார். பிறகு சூழ்ந்து நின்ற மந்திரி பிரதானிகளையும், மக்களையும் ஏறிட்டு "எனக்குப் பிறகு இந்த நாட்டை எனது மூன்றாவது மகன் ஆள்வான். ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் நபர் வீரம், புத்திசாலித்தனம், பொறுப்பு, நாட்டு நலனில் அக்கறை இவைகளோடு தொலைநோக்கு பார்வை கொண்டவராகவும் அமைவது முக்கியம். அந்த வகையில் இளவரசன் என் எதிர்பார்ப்புகளையும் மிஞ்சி விட்டான். இனி இந்த நாடு அமோகமான வளர்ச்சியுடன் திகழும் என்பதில் ஐயமில்லை" என்று சந்தோஷத்துடன் அறிவித்தார்.

"அரசர் வாக்கு பலித்து அந்த நாடும், மக்களும் 'ஓஹோ' என்று எல்லாவித சௌபாக்கியங்களும் நிறைந்து, பலகாலம் வாழ்ந்தார்" - என்று அம்மா முடிக்கும் வரையில் குறுக்கே ஒற்றை வார்த்தை பேசாமல் ஸ்வாரஸ்யத்துடன் கதை கேட்டதும், இறுதியில் "மூன்று பிள்ளைகளுமே ராஜ குமாரர்களாக இருந்தும், மூத்தவன் ஊதாரியாகவும், அடுத்தவன் சோம்பேறியாகவும் இருந்ததால் அவர்களுக்கு சிம்மாசனம் கிடைக்கவில்லை. ஆனால் மூன்றாவது மகன் சுறுசுறுப்பு, புத்திசாலித்தனத்தோடு, எதிர் காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்றும் திட்டம் போட்டு செயல்பட்டதில் அவனுக்கு வெற்றி கிடைத்தது. இன்றைய பொழுது நன்றாகப் போக வேண்டும் என்று எண்ணுவ்து மட்டும் போதாது. நாளைக்கு, நாளன்னிக்கு, அடுத்த வருஷம் என்ன செய்யப் போகிறோம் என்றும் புரிந்து செயல்படுவது தான் நிஜமான புத்திசாலித்தனம். மழை காலத்திற்கு வேண்டுமே என்கிற அக்கறையுடன் வெயில் காலத்திலேயே எறும்புகள் உணவு சேர்த்துப் பொந்தில் வைத்துக் கொள்வது போல, மனிதனும் நாளைக்கு

வரப் போகிற சுக, துக்கங்களை மனசில் நினைத்துப் பார்த்து அதற்கேற்றபடி திட்டம் போட்டு நடந்து கொள்ள வேண்டும் - புரிகிறதா?" என்று எதிர்கால பிரக்ஞையின் அவசியத்தைப் பற்றி அம்மா தனக்கே உரிய விதத்தில் கதையோடு கதையாய்ப் பின்னிச் சொன்னதும் இப்போது என் ஞாபகத்திற்கு வருகின்றன -

தொலைநோக்குப் பார்வை, திட்டம் என்றால் என்ன என்பதை விளக்க வேண்டிய அவசியமே இல்லாமல் சுதர்ஸன், மங்களம் தம்பதிக்கு இந்தக் கதை தெளிவாக உணர்த்தி இருக்கும் என்று நம்புகிறேன்.

மேற்சொன்ன கதையில்தான் எத்தனை அரிய கருத்துக்கள், எத்தனை பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் விதமாய் - புதைந்திருக்கின்றன! எதற்கும் பலன் இல்லாமல் தரிசாகக் கிடந்த நிலத்தை, வேலையில்லாமல் திரிந்த இளைஞர்களைக் கொண்டு சீர் செய்து, தண்ணீருக்கு கிணறுகளை வெட்டி, விவசாயம் செய்து, மூன்று வருஷங்களில் அதாவது ஆறு போகங்களில் பிடி நெல்லை, ஆயிரக்கணக்கான மூட்டைகளாக்கி ... ஏ ... அப்பா - இது நடைமுறையில் சாத்தியமா? என்கிற சந்தேகம் எழ, விவசாய நிபுணர்களிடம் இது விஷயமாக பேசினேன். 'வேளாண்மையில் ஒன்று பத்தாவது இயற்கை - சரியான உழைப்பு, கவனிப்பு, பராமரிப்பு, ஊட்டம் எல்லாம் இருந்தால் நிச்சயமாய் முடியும். மூன்று வருஷங்கள் என்பது வேண்டுமானால் கதைக்காக ஓரளவுக்கு மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கலாம்!' என்றார்கள்.

என்னுடைய எத்தனையாவது வயசில் இந்தக் கதையை அம்மா முதன் முதலில் கூறினார் என்பதை

சரியாக புள்ளி குத்தத் தெரியவில்லை. மூன்று, நான்கு? இருக்கலாம். இருப்பினும் அந்த வயசிலேயே இந்த நிமிஷத்தைத் தாண்டிக் கொண்டு எதிர்காலத்தை பார்க்க முனைவதும் அதற்கு ஏற்ப இன்றைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும் அவசியம் என்பது சிறிய அளவிலாவது என்னுள் விதைக்கப் பட்டது நிஜம்.

சேவலம் எறும்பு! அது கூட முன் யோசனையுடன் மழைகாலத்திற்காக உணவை சேகரித்து வைத்துக் கொள்ளும்போது ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் இன்னும் என்னென்ன விஷயங்களில் திட்டமிட்டு எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளலாம்?

யோசிக்க வேண்டும் - நிறைய.

திட்டமிடுதலின் எக்ஸ்டென்ஷன், விரிவுதான் 'தொலைநோக்கு பார்வை' என்பதை யாரும் மறுக்க இயலாது.

ஒரு மனிதனின் தேவைகளை நிபுணர்கள் அடிப்படையில் உடனடி, - அதாவது இன்றைய தேவைகள்; எதிர்கால - அதாவது சில மாசங்கள், சில வருஷங்கள் கழித்து ஏற்படப் போகும் தேவைகள் - என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள்.

அவசரத் தேவைகளை, காரியங்களில் ஓரளவு ஒழுங்கின்மை இருந்தாலும்கூட எப்படியோ தட்டுத் தடுமாறி நிறைவேற்றிக் கொள்ளும் பெரும் பாலானோர் திட்டமிடுவதின் முக்கியத்தை இன்னமும் சரியாக புரிந்து கொள்ளாமல் அலட்சியமாய் இருப்பதில் தொலைநோக்கு பார்வையோடு

திட்டங்களை வகுக்கத் தெரியாததினால் அனுபவிக்கும் சிரமங்கள் ஏராளம்.

நாளைக்கு விருந்தினர் சாப்பிட வருகிறார், தேவையான காய்கறிகளை வாங்க வேண்டும் என்பதிலிருந்து, குழந்தைக்கு இப்போது மூன்று வயசாகிறது. முடிந்த அளவு பணத்தை வங்கியில் இன்றே போட்டு வைத்தால் பதினைந்து வருஷம் கழித்து வட்டியுடன் கிடைக்கும் தொகை மேற்படிப்புக்கு உதவும் என்பது வரை எல்லாமே தொலைநோக்கு பார்வை, திட்டத்தில் அடங்கும்.

புரிகிறதா நண்பர்களே?

10

இரண்டு நாட்களுக்கு முன் ஒரு கூட்டத்தில் 'சமுதாயப் பிரச்னைகள்' என்கிற தலைப்பில் பேசினேன். இறுதியில் வழக்கம் போல கேள்வி பதில் நிகழ்ச்சி இருக்க, ஒரு வாசகர் கேட்டார்: "குடி, போதை மருந்து போன்று எத்தனையோ பிரச்னைகள் குறித்தும், அக, புற வளர்ச்சிக்கு தேவையான தனி நபர் விழிப்புணர்வு குறித்தும் ஆராய்ச்சிகள் செய்து அவற்றை கதைகளாக எழுதி வாசகர்களோடு பகிர்ந்து கொண்டது போல இன்றைக்கு சர்வதேச அளவில் விவாதிக்கப்படும் 'எய்ட்ஸ்' பற்றி நீங்கள் இன்னும் எதுவுமே எழுதவில்லையே! இது ஏன்? பிரச்னை அத்தனை தீவிரமானது அல்ல என்று நினைப்பதாலா, அல்லது உங்களுக்கு இன்னமும் சரியான விவரங்கள் கிடைக்காததாலா? காரணம் என்ன என்று நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?"

அவர் குறிப்பிட்ட இரண்டுமே காரணங்கள் அல்ல. ஏனென்றால் - எய்ட்ஸின் பயங்கர பாதிப்பை அதனால் தாக்கப்பட்ட நோயாளிகளையே நேரில் பார்த்து அதிர்ந்து, தவித்தவன் என்கிற ரீதியில் அந்த நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே உடனடியாகப் பரப்பி, வரும் முன் காக்கும்

நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று அழுத்தமாக நான் நம்புகிறேன். அடுத்து, 1985-ல் முதல் முறையாக எய்ட்ஸ் பற்றின பிரக்ஞை என்னைத் தாக்கியபிறகு, அந்த நோயின் வீரியத்தை முழுமையாய் தெரிந்து கொள்ள தீர்மானித்த பிறகு, அதற்காக நான் சந்தித்துள்ள நபர்கள், திரட்டியுள்ள தகவல்கள் ஏராளம், ஏராளம்.

ஆக, 'எய்ட்ஸ்'ஸை வைத்து இன்னும் கதை எழுதாமல் இருப்பது பிரச்னையின் தீவிரம் புரியாமலோ, தேவையான விவரங்களைச் சேர்க்காததாலோ இல்லை.

பின்னே? உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் கதையை எந்தக் கோணத்திலிருந்து சொல்வது என்று புரியாத தயக்கம்தான் அசலான காரணம்.

எய்ட்ஸ் - பரவுவதற்கான காரணங்களை ஆராய்ந்தால், ஓரே பால் இனத்தைச் சேர்ந்தவர்கள் உடலுறவு கொள்வது (Homosexual) விலைமாதுகளுடன் தொடர்பு இருப்பது, போதை மருந்தை ஊசியினால் ஏற்றுக் கொள்வது, உடல்நலம் கெடும்போது ரத்தம் ஏற்றுவது - போன்றவை தலையாய காரணங்கள் என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

கதை அழுத்தம் திருத்தமாக மனதில் பதிய வேண்டும் என்றால் ஒன்று, முக்கிய கதாபாத்திரம் போதை மருந்துக்கு அடிமையானவர் என்று சித்தரிக்கலாம், அல்லது தவறான உடல் உறவுகளில் நாட்டம் கொண்டவர் என்று உருவாக்கலாம். அல்லது அறுவை சிகிச்சை செய்து கொண்டபோது ஏற்றப்பட்ட ரத்தத்தின் மூலம் வியாதி வருவதாக

விவரித்து எழுதலாம். போதை மருந்தை வைத்து ஏற்கனவே 'அவன்' என்கிற புதினத்தை எழுதிவிட்டேன். அதனால் முதல் பாத்திர அமைப்பு சரிபட்டு வராது. இரண்டாவது ரகத்தை தேர்ந்தெடுத்தால் எய்ட்ஸுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை மறந்து வாசகர்களில் சிலராவது 'ஐயே - இத்தனை ஆபாசமாக எழுத எப்படித் துணிந்தார்?' - என்று முகம் சுளிப்பார்களோ என்று பயமாக இருக்கிறது. மிஞ்சி இருப்பது கடைசி பிரிவு. இது எந்த அளவுக்கு கதை ஆணி அடித்த மாதிரி மனசில் பதிய உதவும்? நிஜமாய் புரியவில்லை.

எத்தனையோ எழுத்தாளர்கள் 'குடி'யின் தீமையைப் பற்றி எனக்கு முன் எழுதாமல் இல்லை. ஆனாலும், வித்தியாசமான கதாபாத்திரங்கள், சிந்தனைகளோடு அமைந்தால்தான் 'ஒரு மனிதனின் கதை' மூலம் 'குடிப் பழக்கம் ஒரு கட்டுப்படுத்த முடியாத வியாதி' என்கிற விழிப்புணர்வை வாசகர்களிடையே உருவாக்க முடிந்தது. எய்ட்ஸ் பற்றி எழுதவும் அப்படி ஒரு அஸ்திவாரம் தேவைப்படுகிறது. அது கிட்டாவிட்டால் கதை அவசர கோலமாகி, வாசகர்களுக்குள் எந்தவித புது சிந்தனையும் ஜனிக்கப் பண்ணாததோடு, எழுதிய எனக்கும் ஆத்ம திருப்தியை தராமல் புஸ்புஸித்து விடும் - நிச்சயம்.

நீண்டதொரு கதையை உடனடியாக எழுதாவிடினும், நான் தெரிந்து கொண்ட சில விவரங்களையாவது உங்களுடன் இந்த அத்தியாயத்தில் பகிர்ந்து கொள்வது அவசியம் என்றே நினைக்கிறேன்.

சென்ற ஆண்டு மார்ச் மாதம் பம்பாயில் உள்ள டாட்டா இன்ஸ்டிட்யூட்டில் நாட்டின் பல

இடங்களிலிருந்து நிபுணர்களை அழைத்து எய்ட்ஸ் குறித்து இரண்டு நாட்கள் கருத்தரங்கு நடத்தினார்கள். அதில் கலந்து கொள்ள அழைப்பு வர, புதுசாய் பல விஷயங்களை அறிந்து கொள்ள வாய்ப்பு என்கிற சந்தோஷத்துடன் நானும் கிளம்பிச் சென்றேன்.

ஆனால், நிர்வாகிகளைச் சந்தித்து கருத்தரங்கு சம்பந்தப்பட்ட விவரங்களைத் தெரிந்து கொண்ட போது, தூக்கி வாரிப்போட்டது. ஏன்? கருத்தரங்கில் கலந்து கொண்ட 24 நபர்களில் என்னைத் தவிர பாக்கி அனைவரும் வைத்தியர்கள், அல்லது எய்ட்ஸ் பற்றி ஆராய்ச்சி செய்து வரும் விஞ்ஞானிகள்! இவர்களுடன் நானா! விஷய ஞானம் உள்ளவர்களுக்கு சமமாய் அமர்ந்து பேச, விவாதிக்க எனக்கு என்ன தகுதி உள்ளது? உறுத்தல் அதிகமாக, நிர்வாகிகளிடம் என் தயக்கத்தை வெளியிட்டேன். நான் கூறியதைக் கேட்டவர்கள் புன்னகைத்தார்கள். பிறகு, "நாங்களெல்லாம் நிபுணர்களாக இருக்கலாம் ஆனாலும் மக்களுக்கு நாங்கள் விரும்பும் விவரங்களை எடுத்துச் செல்வது உங்களுக்குத்தானே சாத்தியமாகிறது? குடி, போதை மருந்து போல 'எய்ட்ஸ்' பற்றியும் தேவையான விழிப்புணர்வை சமுதாயத்தில் உண்டாக்க நீங்கள் சரியானவர் என்பதால் உங்களை அழைத்திருக்கிறோம். தயக்கத்தை உதறிவிட்டு, எல்லா வாதங்களிலும் நீங்களும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்" என்றார்கள்.

வேலூர், ஸிஎம்ஸி ஆஸ்பத்திரியைச் சார்ந்த டாக்டர் ஜேக்கப் கே. ஜான் போன்றோர் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்குப் பணிவோடு நன்றி சொல்லி, இதோ என் பணியை சிறிய அளவிலாவது துவக்குகிறேன் - எய்ட்ஸ் என்பது அக்வயர்ட்

இம்யுனோ டிஃபிஷியன்ஸி ஸிண்ட்ரோம் (Acquirred Immuno Deficiency Syndrome) என்பதின் சுருக்கம் என்கிற விவரத்தை ஒரு சிலராவது நிச்சயம் தெரிந்து வைத்திருப்பீர்கள். அக்வயர்ட் இம்யுனே டிஃபிஷியன்ஸி ஸிண்ட்ரோம் - என்றால்? 'வாங்கிக் கொள்ளப்பட்ட தற்காப்பு குறை' என்று கொள்ளலாமா? இது சரியான மொழி பெயர்ப்பாக இல்லாது போனாலும், அந்த நோயின் தாக்கத்தின் விளைவு மேலே குறிப்பிட்டிருப்பதுதான். சரி - 'வாங்கிக் கொள்ளப்பட்ட தற்காப்பு குறை' - என்றால் என்ன? கூடுமான வரையில் எளிமையாக விளக்க முயற்சிக்கிறேன்.

நம் உடம்பில் ஓடும் ரத்தத்தில் சிகப்பு அணுக்கள் (Red blood carpuscle) வெள்ளை அணுக்கள் (White blood carpuscle) என்று பல விஷயங்கள் இருக்கின்றன, தெரியும் அல்லவா? அவற்றில் வெள்ளை அணுக்களில் (WBC) டி ஃபோர் (T4) கொலையாளி (கில்லர்) செல்ஸ் (Killer cells) என்று இரண்டு வகை செல்கள் உள்ளன. இந்த இரண்டும் நம் உடலைப் பொறுத்தவரை ஒன்று உளவுத் துறை, மற்றது பாதுகாப்புத் துறையை கவனிப்பதாக கொள்ளலாம்.

வெளியிலிருந்து ரத்தத்தின் வழியாக (கவனிக்க - மூச்சு, சாப்பாடு இதர வழியாக அல்ல, ரத்தத்தின் மூலம் மட்டுமே) கிருமிகள் உள்ளே நுழையும் போது டி ஃபோர் செல்கள் அதை மோப்பம் பிடித்து உணர்ந்து, உடனடியாய் அலாரத்தை ஒலித்து கொலையாளி செல்களுக்கு எச்சரிக்கை அனுப்ப, அவை ஆண்டிபாடீஸ் என்று கூறப்படும் சிப்பாய்களை உற்பத்தி செய்ய, உடம்புக்குள்

நுழைந்திருக்கும் கிருமிகளோடு நமது சிப்பாய்கள் சண்டை போட்டு அவற்றை அழித்துவிடும். இதற்குத் தான் தற்காப்பு சக்தி என்று பெயர். இந்த சக்தி நமக்கு இயற்கையாகவே இருப்பதால்தான் நாம் ஆரோக்ய மாக வாழ்ந்து கொண்டிருப்பது சாத்தியமாகிறது.

எய்ட்ஸ் நோயைப் பரப்பும் கிருமிகளுக்கு ஹெச். ஐ. வி. (HIV - Human Immuno-deficiency Virus) என்று பெயர். இது வைரஸ் ரகத்தைச் சேர்ந்தது. சும்மா சொல்லக்கூடாது - இந்த ஹெச்ஐவி இருக்கிறதே, இது பலே கில்லாடி! இதன் உடம்பைச் சுற்றி ஒருவித சர்க்கரை போன்ற பூச்சு இருப்பதில் ரத்தத்தில் கலந்ததும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல நைஸாய், டி ஃபோர் செல்கள் என்ன ஏது என்று உணர்வதற்குள் சாதுர்யமாய் அவற்றுள் புகுந்து சட்டமாக உட்கார்ந்து கொண்டு டி ஃபோர் செல்களின் இயல்பை சுத்தமாக பாதிக்கின்றன. கொலையாளி செல்களுக்கு எச்சரிக்கை செய்யும் சக்தியை டி ஃபோர் செல்கள் இழக்க ... அப்புறம் ... அப்புறம் என்ன? அவ்வளவுதான். சிப்பாய்கள் உறங்கிப் போய் கோட்டையை எதிரிகள் பிடித்துவிட்ட கதைதான்!

'அலாரம் பெல்' ஒலிக்காமல், சண்டை போடும் சிப்பாய்களின் உற்பத்தி நின்று போவதில், ரத்தத்தில் நுழையும் நானாவித கிருமிகளும் ராஜபாட்டையில் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஜாம்ஜாம்மென்று பயணித்து, பரவி, வளர்ந்து, ஆளை பாதிப்பதைத் தடுத்து நிறுத்துவது இனி எப்படி?

ஒரு விஷயம் சொன்னால் உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். எய்ட்ஸ் நோயினால் சாவு

நிச்சயம் என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள், ஆனால் சாவு எயிட்ஸினால் இல்லை என்றால் நம்ப முடிகிறதா? எயிட்ஸ் கிருமிகளால் பாதிக்கப்படும் நபர் தற்காப்பு சக்தியை அடியோடு இழப்பதால் சாதாரண ஜலதோஷத்திலிருந்து, இன்னும் பட்டியலில் அடங்கா அனைத்து வியாதிகளும் எய்ட்ஸ் பீடிக்கப்பட்ட மனிதரை கண்மூடித் திறக்கும் நாழிகையில் வெகு எளிதாக ஆக்ரமிக்கின்றன. ஆக, மரணம் நிகழ்வது பிற்பாடு உண்டாகும் நோய்களால்தானே தவிர, வெறும் எயிட்ஸ் தாக்குதலால் மட்டும் அல்ல! புரிகிறதா நண்பர்களே?

எயிட்ஸ் பற்றி அரைகுறையாக அறிந்தவர்கள் அந்நோய் வந்தவர்களைக் கண்டால் காதத்தூரம் ஓடுவதையும், தூரத்தில் நின்று முகத்தைப் பார்க்கக் கூட அஞ்சுவதையும், அந்த நோயாளியை சேர்த்துக் கொள்ள சில ஆஸ்பத்திரிகள் தயங்குவதையும், சில நர்ஸ்கள் பணிவிடை புரிய மறுப்பதையும் கேள்விப் படும்போது எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. எயிட்ஸ் பயங்கரமான பாதிப்புகளைக் கொடுக்கும் வியாதிதான்; ஆனாலும் எதிரில் நின்று பேசுவதாலோ, தொட்டுப் பழகுவதாலோ ஏன், நீச்சல் குளத்தில் ஒன்றாகக் குளிப்பதாலோ கூட இது பரவுவதில்லை. காற்று வழியாக இக்கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தாவுவதில்லை என்று ஆராய்ச்சி மூலம் சர்வ நிச்சயமாய் கூறுகிறார்கள். பிறகு? ரத்தம், விந்து (Semen) பெண் உறுப்பு சுரப்பு (Vaginal Secretion) மூலமாகத்தான் எய்ட்ஸ் நோய் பரவுகிறது. ரத்தக் கலப்பு காரணமாய் வேகமாகப் பரவக்கூடிய நாலு வழிகளை, துவக்கத்திலேயே குறிப்பிட்டவைகளை, இப்போது மீண்டும் சொல்கிறேன். கவனத்தில்

செதுக்கிக் கொள்ளுங்கள். ஓரின சேர்க்கை, பலரிடம் உடலுறவு கொள்வது, ஊசி மூலம் போதை மருந்து செலுத்துவது, ரத்தம் ஏற்றுவது இவைகள் மூலமாகத்தான் எய்ட்ஸ் நோய் அதிகபட்சம் பரவுவதால் நோயாளிகளை கண்டால் பதறுவதும், ஓடுவதும், பயப்படுவதும், தேவையான சிகிச்சை கொடுக்காமல் ஒதுக்குவதும் அநியாயம். மனிதாபிமானமற்ற செயல்!

எய்ட்ஸ் நோயைப் பற்றின அடிப்படை விவரங்களையும் நோய் கண்டவர்களை பஞ்சமா பாதகங்களை செய்தவர்களாக எண்ணி தவிர்ப்பதும் நியாயமற்ற செயல் என்பதையும் கருத்தில் நன்கு வாங்கிக் கொண்ட பிறகு, இனி, அந்தக் கொடிய நோயால் பாதிக்கப்பட்ட சில நபர்களை, அவர்கள் குடும்பங்களை, சந்திக்கலாமா?

11

இரண்டு எய்ட்ஸ் நோயாளிகளை, ஒருத்தரின் குடும்பத்தை, அவர்கள் வேதனைகளை, இந்த அத்தியாயத்தில் உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன்.

நீங்கள் சந்திக்கப் போகும் மூவருமே மேலை நாட்டைச் சார்ந்தவர்களாக இருப்பதால், என்னமோ எய்ட்ஸ் மேற்கத்திய நாடுகளில்தான் உள்ளது, இந்தியாவில் இல்லை - என்கிற அவசர முடிவுக்கு தயவு செய்து வர வேண்டாம். இந்தியாவில் பெரிய நகரங்களில் ஹெச்ஐவி கிருமிகளுக்காக பரிசோதனை செய்யப்பட்டு 'பாஸிடிவ்', அதாவது எய்ட்ஸ் நோயின் தாக்குதல் தொடங்கிவிட்டது - என்று அறிவிக்கப் பட்ட சிலரை நான் சந்தித்திருக்கிறேன்தான். ஆனாலும், அவர்களின் நோய் ஆரம்ப கால கட்டத்தில் இருப்பதாலும், இன்னமும் அவர்களின் குடும்பத்தாருக்கே விவரம் வெளியிடப்படாமல் இருப்பதாலும் அந்த நோயாளிகளைப் பற்றி எழுதுவதை தற்சமயம் தவிர்க்க விரும்புகிறேன். நான் கொடுக்கும் குறிப்புகளிலிருந்து அவர்கள் யார் என்று அடுத்தவர்களால் ஊகிக்க முடிந்துவிட்டால், சம்பந்தப்பட்டவர்கள் பாடு திண்டாட்டமாகி,

இருக்கும் நிம்மதியும் போய்விடும். இதனாலேயே வெளிநாட்டில் சந்தித்தவர்களை உதாரணங்களாக அறிமுகப்படுத்தத் தீர்மானித்தேன்.

நீங்கள் முதலில் சந்திக்கப் போவது மைக்கேல். பாஸ்டன் நகரைச் சார்ந்த மைக்கேலை 1986ம் ஆண்டு நேரில் பார்த்து பேசும் சந்தர்ப்பம் கிட்டியது. மைக்கேலுக்கு அப்போது வயசு 27. தனது இருபதாம் வயதில் 'கொக்கெய்ன்' என்ற கொடிய போதை மருந்துக்கு அடிமையானவன். மூக்குப் பொடி போடுவது போல துவக்கத்தில் ஆரம்பித்த பழக்கம், நண்பன் ஒருவனின் உற்சாகத் தூண்டுதலால் ஊசி மூலம் மருந்தை உள்ளே செலுத்திக் கொள்ளும் நிலைக்குத் தாவியது. நாள் ஒன்றுக்கு உபயோகித்த ஊசிகளின் எண்ணிக்கை ஏற, ஏற, பணத்தேவையும் அதிகரித்ததை மைக்கேல் லட்சியம் பண்ணவில்லை. வசதியான பெற்றோர், அளவுக்கு மீறிய சுதந்திரம் - அப்புறம் என்ன? கல்லூரிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, போதைக்கு அடிமையான இன்னும் இரண்டு நண்பர்களுடன் ஊர் ஊராக நாடோடியாகத் திரிய முற்பட்டான்.

"அந்த ஒண்ணரை வருஷங்களும் நான் செய்யாத காரியங்கள் இல்லை. பன்றியைவிட கேவலமாக அசுத்த வாழ்க்கை வாழ்ந்தேன். ஊசிகளை புதுசாய் வாங்க பணம் செலவழிக்க மனசு வராது. அந்தக் காசு இருந்தால் இன்னும் கொஞ்சம் மருந்து வாங்கலாமே! வென்னீரில் கொதிக்க வைத்து ஸ்டெரலைஸ் செய்ய பொறுமை இருக்காது. மருந்து ஏற்றிக் கொள்ளும் நேரம் வந்தால், சுற்றம், சூழல் எல்லாம் மறந்து போகும்போது சுத்தமாவது, மண்ணாவது! ஒரே ஊசியை யார் யாரோ

உபயோகித்திருக்கிறோம். கழுவுவது கூடக் கிடையாது. நாட்கணக்கில் இப்படி அசுத்தமாக இருந்தால் வியாதி வராமல் என்ன செய்யும்? எய்ட்ஸ் நோய் என்னைப் பிடித்து விட்டது என்பதை அறிந்தபோது ரொம்பவும் அடிபட்டுப் போனேன். அதற்கு சிகிச்சை கிடையாது என்று டாக்டர் சொன்னதும் கோழை மாதிரி நான்கு நாட்கள் விடாமல் அழுதேன் - பிறகு, மனம் தேறி சரி, வந்தது வந்து விட்டது. இனி இருக்கப் போகும் நாட்களையாவது அர்த்தத்துடன் செலவிடுவோம் என்று தீர்மானித்து இந்த மையத்தில் சேர்ந்து போதை மருந்தை விட்டொழித்தேன். என்னால் இயன்ற நற்பணிகளை செய்து வருகிறேன்"

மைக்கேலை நான் 'Bridge over troubled waters' - என்ற புனர் வாழ்வு மையத்தில்தான் சந்தித்தேன். நிர்வாகிகளின் ஒத்துழைப்போடு சிகிச்சைக்கு வரும் போதை மருந்து அடிமைகளிடம் தன் கதையை மனம் திறந்து கூறி 'என் நிலை உங்களுக்கு வருவதற்குள் மீண்டு விடுங்கள்' என்று வழி காட்டுகிறான். 'மைக்கேலின் கதை பலருக்கு விழிப்புணர்வைத் தர உதவுகிறது' என்று மையத்தின் நிர்வாகி என்னிடம் பெருமைப் பட்டுக் கொண்டாலும், அவனைப் பொறுத்தவரை கண் கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் செய்வதுதானே நிஜம்.

1987ம் ஆண்டு மீண்டும் அமெரிக்காவுக்குப் பாஸ்டனுக்கும் செல்லும் வாய்ப்பு கிட்டிய போது 'ப்ரிட்ஜ் ஓவர் ட்ரபிள்ட் வாட்டர்ஸ்' மையத்தோடு தொடர்பு கொண்டு மைக்கேல் பற்றி விசாரித்தேன். 'நோயின் தீவிரம் அதிகமானதால் பெற்றோரோடு தங்கச் சென்று விட்டான்' என்றார்கள். அப்புறம்

அவனைப் பற்றிய தகவலே இல்லை. இன்று அவன் உயிரோடு இருக்கிறானா? தெரியாது....

அடுத்து — மிஷேல். பிரான்ஸ் நாட்டிலிருந்து குடியுரிமை பெற்று அமெரிக்காவில் குடியேறியவள். நியூயார்க்கின் க்ரீன்விச் வில்லேஜில் ஹிப்பிக்களுடன் 'சுதந்திரப் பறவையாக வாழ்கிறேன்' என்கிற கர்வத்தோடு வாழ்ந்தவள். 'சுதந்திரம்' என்கிற கண்ணோட்டத்தில் செய்யாத, தகாத காரியங்கள் இல்லை. விலைமாதாகப் பல வருஷங்கள் இருந்திருக்கிறாள்.

முப்பத்தைந்து வயதுக்குள் ஆடாத ஆட்டம் ஆடியவளுக்கு கிடைத்த பரிசு - எய்ட்ஸ்!

மிஷேலின் கதையை என்னிடம் கூறிய இந்திய டாக்டர், அவளைச் சந்திக்க ஆர்வம் காட்டவே, மருத்துவமனைக்கு என்னை அழைத்துச் சென்றார்.

நாங்கள் சென்ற போது மிஷேலுக்கு மூச்சுத் திணறல் உண்டாகியிருந்ததில் தீவிர சிகிச்சை பிரிவுக்கு அவள் மாற்றப்பட்டிருந்ததில் தூரத்தில் நின்று கண்ணாடிக் கதவு வழியாக அவளை பார்ப்பது மட்டுமே எனக்கு சாத்தியமாயிற்று. அமெரிக்காவில் நான்கு மாசங்கள் தங்கிவிட்டு, ஜப்பானுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்த நாளில் டாக்டர் நண்பர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, முந்தின நாள் இரவு மிஷேல் இறந்து விட்டதாகத் தெரிவித்தார்.

கடைசியாக உங்களுக்கு நான் அறிமுகப் படுத்தப் போகும் நோயாளியோடு நான் பேசியது இல்லை; ஏன், பார்த்தது கூட இல்லை. அவர் இறந்து மூன்று மாசங்கள் ஆன அளவில் அவருடைய

மனைவியை சந்திக்கும் வாய்ப்பு கிட்ட, எய்ட்ஸ் நோயாளி சார்ந்திருக்கும் குடும்பத்தாரின் உணர்வுகளை என்னால் ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடிந்தது. நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள் ...

கரோல், எய்ட்ஸ் நோய் தாக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு முன் இறந்த ஜெரால்டின் மனைவி. பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் திருமணமான இவர்களுக்கு நாலு குழந்தைகள். திருமணமாகி சுமார் ஆறு ஆண்டுகள் ஆன பிறகு ஜெரால்டின் 'ஹோமோ செக்ஷுவல்' குணம் தெரிய வர கரோல் அதிர்ந்து போயிருக்கிறார். பின்னர் ஜெரால்ட் மேல் தான் கொண்டுள்ள காதலின் தீவிரம் காரணத்தாலும், குழந்தைகளின் நலனை மனசில் நினைத்தும் தொடர்ந்து சேர்ந்து வாழ சம்மதித்திருக்கிறார். அவரோடு நான் பேசின நாழிகையில் வெளியான சில விவரங்கள்:-

நான்: உங்கள் கணவர் ஒரு ஹோமோ ஷெக்ஷுவல்லும் கூட என்பது தெரிந்த பிறகும் தொடர்ந்து அவருடன் எப்படி உங்களால் வாழ முடிந்தது?

கரோல்: முதலில் இடிந்துதான் போனேன். ஆனால் இது ஜெரால்டின் குற்றம் அல்ல, பிறவிக் கோளாறு என்பது புரிந்த பிறகு விவேகத்துடன் இருக்க முயற்சித்தேன்.

நான்: நீங்கள் மதத்தில் ரொம்ப ஈடுபாடு உள்ளவர் என்கிறீர்கள். இந்த உண்மை தெரிந்தபிறகு சர்ச் சார்ந்தவர்களிடம் ஏற்பட்ட பாதிப்பைக் கூறமுடியுமா?

கரோல்: ஆரம்பத்தில் இந்த விவரம் யாருக்கும் தெரியக்கூடாது என்பதில் ரொம்ப கவனமாகத்தான் இருந்தேன். ஆனால் மறைக்கக்கூடிய வியாதியா இது? ஆஸ்பத்திரியில் ஜெரால்ட் சேர்க்கப்பட்டு, உண்மை வெளியே பரவின பிறகு சர்ச் சார்ந்தவர்கள் மட்டுமில்லை, ஒட்டு மொத்தமாக நண்பர்கள், உறவினர் அனைவருமே எங்களை, முக்கியமாய், ஜெரால்டை வெறுக்க, ஒதுக்க முற்பட்டார்கள். ரொம்ப சிரமமான, வேதனையான நாட்கள் அவை... ஆனால், அத்தனை எதிர்ப்பையும் மீறிக் கொண்டு என் கணவரோடு நான் வாழ்ந்ததை நினைத்துப் பார்த்தால் இப்போது எனக்கு நிறைவாக இருக்கிறது.

நான்: உங்கள் குழந்தைகளின் 'ரியாக்ஷன்' எந்த ரீதியில் இருந்தது?

கரோல்: கடவுள் புண்ணியத்தில் என் குழந்தைகள் ஆரோக்கியமான மனசைப் பெற்றிருக்கிறார்கள். 'இது உங்கள் தகப்பனாரின் தவறு இல்லை, இயற்கை அவரை அப்படி படைத்து விட்டது' என்று நான் விளக்கியதை ஏற்று, அவர் மேல் அன்பும், மரியாதையும் கடைசி வரை வைத்திருந்தார்கள்.

நான்: உங்கள் அனுபவம் குறித்து ஏதேனும் விசேஷமாகச் சொல்ல விரும்புகிறீர்களா?

கரோல்: இந்த மாதிரி பிறவிக் கோளாறின் காரணமாக மாறுபட்டு நடக்க முயல்பவர்களை ஏன் இப்படி செய்கிறார்கள் என்று சமுதாயம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். தாங்கள் இப்படி வித்தியாசமாக இருப்பதால் ஏற்கனவே குழம்பி இருப்பவர்கள், மற்றவர்கள் அசிங்கப்பட்டு ஒதுங்கிப் போகும்போது மனசு உடைந்து போகிறார்கள். அவர்களும் மனித பிறவிதான் என்பதை உணர்ந்து சம்பந்தப்பட்டவர்களை மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும். ஹோமோ செக்ஷுவல்கள் தங்கள் பங்குக்கு இந்தப் பழக்கத்திலிருந்து விடுபட முடியுமா என்று மனப்பூர்வமாக முயலவேண்டும்; மீறி எய்ட்ஸ் போன்ற நோய்க்கு உள்ளானால், மற்ற எவருக்கும் இது பரவாத விதத்தில் ஜாக்கிரதையாக நடந்து சமுதாயத்தை காப்பாற்ற வைராக்கியம் பூணவேண்டும்.

அறிமுகங்கள் போதும் என்று நினைக்கிறேன்.

எய்ட்ஸ் ஒரு கில்லர் டிஸிஸ் - killer disease என்பதையும் ஆப்ரிக்காவில் முழு கிராமங்களே இந்த நோயினால் ஒட்டு மொத்தமாக அழிக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் இந்தியா உள்பட 162 நாடுகளில் சுமார் எட்டு கோடிக்கும் அதிகமான மக்களை இந்தக் கொடிய நோய் ஸ்பர்சித்து விட்டதை கவலையுடன் உலக சுகாதார நிறுவனம் WHO தெரிவிப்பதையும் அறியும் போது எதிர்கால சந்ததியினரை நினைத்து அடிவயிற்றில் பயம் காளான்களாக முளைப்பதை உணரமுடிகிறது.

இன்றையத் தேதி வரை மருந்து கண்டு பிடிக்கப்படாத எய்ட்ஸ் குறித்து என்ன செய்யப் போகிறோம்? இந்த விபரீத காட்டுத்தீ பரவாமல் எப்படி தடுக்கப் போகிறோம்? ஆங்காங்கே சிறு சிறு பொறிகளாக கனன்று கொண்டிருப்பதை எப்படிக் கண்டுபிடித்து அறவே ஒழித்து, சமுதாயத்தை அழிவிலிருந்து மீட்கப் போகிறோம்?

அரசாங்கத்தோடு தனிநபர் ஒவ்வொருவரும் முழுமூச்சாக இணைந்து செயல்பட்டால் சரியான விழிப்புணர்வை மக்களிடையே தோற்றுவித்து prevention is better than cure-வரும் முன் காப்பது சிகிச்சையை விட சிறந்தது - என்கிற உண்மையைப் புரிய வைத்து விடலாம்.

செய்யப் போகிறோமா?

செய்ய வேண்டும் - வேறு வழியே இல்லை.

12

இது வரையில் எய்ட்ஸ் பற்றி நாம் அறிந்து கொண்ட சேதிகளைச் சுருக்கி, புள்ளி விவரங்களாக இந்த அத்தியாயத்தில் உங்களுக்குத் தரப் போகிறேன். சட்டென்று நினைவு படுத்திக் கொள்ளவும், ஞாபகப் படுத்திக் கொண்டதை அடுத்தவர்களுக்கு விளக்கிச் சொல்லவும் இந்தக் குறிப்புகள் உங்களுக்கு உதவும் என்பது என் நம்பிக்கை. இந்த அத்தியாயத்தை மட்டும் தனியே கிழித்து அடிக்கடி கண் பார்வை விழும் இடத்தில் எடுக்கும்படி வைத்து, தேவையானபோது உபயோகித்து சமுதாயத்தில் எய்ட்ஸ் பற்றின விழிப்புணர்வைத் தோற்றுவிக்க, ஒவ்வொரு வாசகரும் தன்னால் இயன்ற விதத்தில் பங்கேற்க வேண்டும் என்பது என் மனப்பூர்வமான ஆசை, எதிர்பார்ப்பு.

தற்சமய நிலை

உலக சுகாதார நிறுவனம் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாசம் எடுத்த கணக்குப்படி தற்சமயம் 162 நாடுகளில் 8-விருந்து 10 கோடி மனிதர்கள் ஹெச்ஐவி என்கிற கொடிய கிருமிகளால் பாதிப்புகளுக்குள்ளாகி இருக்கின்றனர். இவர்களில் சுமார் 15 லட்சம்

நபர்களாவது நிலை முற்றி எய்ட்ஸ் நோயாக மாறி மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர எய்ட்ஸ் நோயின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 5 லட்சம்.

இருக்கிற சூழ்நிலையைக் கணக்கெடுத்துக் கொண்டால் இன்னும் எட்டு ஆண்டுகளில் அதாவது 2000-ம் வருஷத்திற்குள் ஹெச்ஐவி தாக்குதல் நாற்பது கோடியாகவும், எய்ட்ஸ் நோய் 1 கோடியாகவும் உயரும் என்பது உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பு.

1991–ல் (உலகளவில்)

ஹெச்ஐவி தாக்குதல்	–	8–10 கோடி
நோய் முற்றி எய்ட்ஸ் நிலையை அடைந்தவர்கள்	–	15 லட்சம்

2000–ல்

ஹெச்ஐவி தாக்குதல்	–	40 கோடி
எய்ட்ஸ்	–	1 கோடி

படிக்கும்போதே உள்ளங்கை வியர்த்து, அடி வயிற்றில் பயக்காளான்கள் முளைத்து, ஹ்ருதயம் உதறிப் போடுகிறதா? இந்த விவரங்கள் தெரியாமலேயே இருந்திருக்கக் கூடாதா, என்கிற பதட்டம் உண்டாகிறதா? 'ஐ'ம் ஸாரி' ... ஆனால் நிஜத்தை எதிர்நோக்குவதைத் தவிர வேறு வழி இல்லை நண்பர்களே –

இப்போது சுருக்கமாகச் சில விவரங்கள், விளக்கங்கள்.

எய்ட்ஸ் வரலாறு

1981 : ஓரினச் சேர்க்கை பழக்கம் கொண்டவர் நடுவில் ஒரு வினோதமான தற்காப்பு குறைவு அமெரிக்காவில் வைத்தியர்களின் கவனத்திற்கு வந்தது.

1984 : ஹெச்ஐவி கிருமிகளும், எய்ட்ஸ் நோயும் முதன் முதலாய் கண்டுபிடிக்கப்பட்டன.

1986 : இந்தியாவில் முதல் கேஸ் - சென்னையில் ஒரு விலைமாது.

1987 : முதல் எய்ட்ஸ் சாவு - பம்பாய் விலைமாது.

1990 : இதுவரை இந்தியாவில் எய்ட்ஸ் நோயால் இறந்ததாய் ரிப்போர்ட் ஆன நபர்கள் மொத்தம் 44. (தெரியாத சாவுகள் எத்தனையோ?)

2. எய்ட்ஸ் என்றால் என்ன ?

அக்வயர்ட் இம்யுனோ டிஃபிஷியன்ஸி ஸின்ட்ரோம் - என்பதின் சுருக்கம்தான் எய்ட்ஸ். மனிதனிடம் இயற்கையாக உள்ள தற்காப்பு சக்தியை இந்த நோய் ஹெச்ஐவி (ஹ்யுமன் இம்யுனோ டிஃபிஸியன்ஸி வைரஸ்) என்ற பயங்கர கிருமிகள் மூலம் அழிந்துவிடுவதால், நோய் பீடிக்கப்பட்டவர் நானாவித வியாதி கிருமிகளின் தாக்குதலிலிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியாமல் இறப்பார்.

3. ஹெச்ஐவி கிருமிகள் தாக்கின அனைவருக்குமே எய்ட்ஸ் நோய் வந்துவிடுமா ?

இல்லை. ஹெச்ஐவி கிருமிகள் உடலில் புகுந்து 6 மாதத்திலிருந்து 10 ஆண்டுகள் வரை எப்போது வேண்டுமானாலும் எய்ட்ஸ் நோயாக மாறலாம். சிலருக்கு அறிகுறிகள் தோன்றலாம், சிலர் நோயின்

எந்த அறிகுறியும் வெளிப்படையாகத் தெரியாமலேயே இருக்கலாம். பலர் எய்ட்ஸ் நிலையை அடையாவிடினும் ஹெச்ஐவி கிருமிகளை மௌனமாக உடம்பில் தாங்கி, அடுத்தவர்களுக்கு கடத்துபவர்களாக (Silent carriers) வாழலாம். ரத்தத்தை பரிசோதிப்பது ஒன்றுதான் ஹெச்ஐவி, எய்ட்ஸ் ஒருவருக்கு இருப்பதை உறுதிபடுத்தும்.

4. எய்ட்ஸ் எப்படி பரவுகிறது ?

- தவறான உடலுறவு (விலைமாதுகள், பல பெண்களிடம் உறவு கொள்பவர், ஹோமோ செக்ஷுவல் இதில் அடக்கம்)
- ஹெச்ஐவி கிருமி கொண்ட ரத்தத்தை சாதாரண நோயாளிகளுக்கு ஏற்றுவது.
- சுத்தம் செய்யப்படாத ஊசிகளை மருந்து, போதை மருந்து செலுத்த உபயோகிப்பது.
- கர்ப்பமாய் இருக்கும்போது தாய் ஹெச்ஐவி கிருமிகளால் தாக்கப்படுவது.

5. எவற்றால் எய்ட்ஸ் பரவுவதில்லை ?

- தொடுதல்
- ஒன்றாக விளையாடுதல்
- சேர்ந்து வாழ்தல்
- காற்று
- தண்ணீர்
- பூச்சிக்கடி

- குளியல் அறை, கக்கூஸ் உபயோகம்
- நீச்சல் குளம்
- சாப்பாடு

6. ஹெச்ஐவி எய்ட்ஸ் யார் யாரைத் தாக்கும் ?

- எல்லாரையும்.

ஆண், பெண், முதியோர், இளைஞர், சிசுக்கள் என்று ஜாதி, மத, ஏழை, பணக்காரர் வித்தியாசம் இன்றி அனைவரையும் பீடிக்கும் வல்லமை படைத்தது ... என்றாலும் விலைமாதுக்கள், போதை மருந்தை ஊசி மூலம் செலுத்திக் கொள்பவர், பணத்திற்கு ரத்தம் விற்பவர், தவறான உடலுறவில் நாட்டம் கொண்டவர் 'ஹைரிஸ்க் க்ரூப்' என்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள்.

7. எய்ட்ஸ் நோய்க்கு மருந்து உண்டா ?

இன்று வரை இல்லை. நோய் கண்டவர் தற்காப்பு சக்தியை முழுமையாக இழப்பதால் உடம்பின் உறுப்புகள் நானாவித நோய் கிருமிகளால் பாதிக்கப்பட்டு இறப்பது உறுதி.

8. எய்ட்ஸ் பிரச்னைக்கு தீர்வுதான் என்ன ?

கண்கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் செய்யாமல், வரும் முன் காப்பது வரும் தலைமுறைக்கு நாம் செய்யும் மகத்தான உதவி. இது நம் தலையாய கடமையும் கூட.

9. எய்ட்ஸ் பரவாமல் இருக்க . . .

- ஒருவனுக்கு ஒருத்தி என்கிற பழக்கம் மிகச் சிறந்தது.

- கூடுமானவரையில் உடலுறவின் போது ஆண் உறை அணிவது நல்லது.
- ஹெச்ஐவி கிருமிக்கு 'பாஸிடிவ்' ஆக இருக்கும் பெண்கள் கர்ப்பம் தரிப்பது கூடாது.
- ஊசிமூலம் ஏற்றும் ரத்தம், மருந்து எதுவானாலும் ஸ்டெரலைஸ் செய்யப் பட்டவைகளை அல்லது ஒருமுறை உபயோகத்திற்கு பிறகு தூக்கி எறிந்துவிடும் 'டிஸ்போஸபிள்' ஊசிகளை உபயோகிக்க வேண்டும்.
- செக்ஸ் நோய் உள்ளவர்கள்மூலம் இன்னும் விரைவாகக் கிருமிகள் பரவும் என்பதால், அந்நோய் கண்டவர்கள் தகுந்த சிகிச்சையை காலதாமதமின்றி எடுத்துக் கொள்ள வேண்டும்.
- முக்கியமாய், எய்ட்ஸ் பற்றின விழிப் புணர்வை மக்களிடையே, உடனடியாய் பரவலாகத் தொலைக்காட்சி, சினிமா, பத்திரிகை, கூட்டங்கள், பள்ளிப் பாடங்கள் மூலம் வளர்ப்பது மிக மிக அவசியம்.

10. எய்ட்ஸ் பற்றிய மற்ற விவரங்கள்

- எச்சில் மூலம் எய்ட்ஸ் பரவாது என்றாலும், வாயில் புண் இருந்து மற்றவர் எச்சில் அந்த புண் வழியாக ரத்தத்தில் கலக்க நேரிடும் போதும், ஜனன உறுப்புகளில் ரணம் இருந்து அதன் வழியாக விந்து, இதர சுரப்பு

ரத்தத்தோடு சங்கமித்தாலும் எய்ட்ஸ் நோய் வர வாய்ப்புண்டு.

கடைசியாக

பயந்து, தவித்து, ஒதுங்க வேண்டியது எய்ட்ஸ் நோயைத் தானே தவிர, எய்ட்ஸ் நோயாளிகளை அல்ல. நோய் கண்டவர்களுக்கு பரிவோடு கலந்து சிகிச்சை, கவனிப்பு தேவை. இதை மறக்கக் கூடாது.

16856
3288079

13

இன்றைய தினசரிகளில் ஒரு விளம்பரம் பார்த்தேன். இன்னும் எட்டு ஆண்டுகளில் சென்னை நகரத்தை எப்படியெல்லாம் அழகு படுத்தப் போகிறோம் என்கிற அறிவிப்புகளுடன் மாநகராட்சி செய்திருக்கும் விளம்பரம்.

அவர்கள் சார்பில் - சாலைகளை செப்பனிட்டு, பாலங்கள் கட்டி, பூங்காக்களும், விளையாட்டுத் திடல்களும் அமைத்து, தெருவிளக்கு களை சீராக்கி, மழை ஜலம் தேங்காதிருக்க வழி செய்து, சுற்றுப்புற சூழலை பாதுகாத்து ... வாக்குறுதிகளை ஒரு தரத்திற்கு இரண்டு தரம் படித்தபோது ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

சொல்வது அத்தனையும் மணலை கயிறாக திரிக்கும் சமாசாரங்கள் இல்லை; தொலைநோக்குடன் அரசு திட்டமிட்டு, வாங்கும் சம்பளத்துக்கு துரோகம் பண்ணாமல் மாநகராட்சி அதிகாரிகள், ஊழியர்கள் சிரத்தையாய் பணிகளை கவனித்தால் எட்டு ஆண்டுகள் கூட தேவையில்லை, ஐந்து வருஷங்களுக்கு உள்ளாகவே சென்னை மாநகரை இந்தியாவின் மற்ற நகரங்களுக்கு முன்னோடியாகவும் உலகத்தின்

அழகான நகரங்களுக்குள் ஒன்றாகவும் மிளிரச் செய்வது கூட சாத்தியம் தான்.

இதற்குச் சரியான திட்டங்கள், நிர்வாகம், தேவையான பணம் இவற்றோடு பொது மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருப்பது மிகமிக அவசியம். இதை உணர்ந்து விளம்பரத்தில் மாநகராட்சிதான் நிறைவேற்றப் போகும் காரியங்களை பட்டியலிடும் அதே சமயத்தில் 'நீங்கள் செய்ய வேண்டியவை' என்கிற தலைப்பில் மக்களின் கடமைகளையும் சுட்டிக் காட்டியிருப்பது வரவேற்கத் தக்கது.

சதாசர்வகாலம் அரசாங்கத்தையும், அடுத்தவர்களையும் குறை சொல்லுவதைத் தவிர்த்து 'என் பங்கு என்ன?' என்று தனி நபர் ஒவ்வொருவரும் எப்போது அக்கறையுடன் கேட்டு, செயலாற்றவும் முனைகிறோமோ அப்போது பலன் நிச்சயம். இரண்டு கை கொட்டினால்தான் சத்தம். இதை மறந்துவிட்டு ஒரு கையை மட்டும் வேகமாய் வீசி வீசி, ஓசை பிறக்கவில்லையே என்று அங்கலாய்ப்பது மடமை.

'சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருங்கள், தண்ணீர்த் தொட்டி, கிணறுகளை மூடிவையுங்கள், வீட்டுக் குப்பைகளை தெருவில் போடாதீர்கள், அனுமதி வாங்கியுள்ளபடி கட்டிடங்களைக் கட்டுங்கள், சொத்து வரிகளை ஒழுங்காக செலுத்துங்கள்' என்று மாநகராட்சி மக்களுக்கு விடுத்திருக்கும் கோரிக்கைகள் வாஸ்தவத்திலேயே ரொம்ப நியாயமானவை. இவற்றோடு 'இது உங்கள் நாடு, உங்கள் ஊர், உங்கள் தெரு இவற்றை நேசிக்க கற்றுக் கொள்ளுங்கள்' என்கிற உணர்ச்சி பூர்வமான

வாசகங்களையும் சேர்த்திருந்தால், பொருத்தமாக இருந்திருக்கும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

மேற்சொன்ன விளம்பரத்தைப் பற்றி எழுதும் போது சமீபத்தில் நாங்கள் நாலைந்து நண்பர்கள் ஒன்றாகக் கூடி ஒரு மாலைப் பொழுதில் பேசிக் கொண்டிருந்த விஷயங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

ஒரு நண்பர் சொன்னார் : "சென்ற வாரம் பங்களூருக்குப் போயிருந்தேன். நகரின் பிரதான சாலை ஒன்றில் பயணித்தபோது முன்பு குப்பையும் கூளமுமாக இருந்த வீதி தற்சமயம் பளிச்சென்று நடைபாதை, வர்ணம்பூசப்பட்ட இரும்பு கிராதிகள், மேடு பள்ளமில்லாமல் வழவழத்த தார் ரோடு, பாதுகாப்பு கூண்டுகளோடு நடப்பட்டிருந்த மரக் கன்றுகள் என்று அலாதி அழகுடன் மிளிர, எந்த 'ஜீபூம்பா பூதத்தின்' வேலை இது! என்று அதிசயித்துப் போனேன். விசாரித்தபோது, அரசாங்கத்திற்கு பல லட்சம் ரூபாய்களை செலுத்தியதோடு நிற்காமல் பராமரிப்புக்காகவும் தாராளமாக செலவு செய்ய ஒரு தனியார் நிறுவனம் முன் வந்திருக்கிறது என்றும், அதற்கு ஈடாக சாலைக்கு அவர்கள் பெயரை வைப்பதற்கும், ஆங்காங்கே கம்பெனியை விளம்பரப் படுத்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது என்றும் தெரியவந்தது. பல லட்சங்கள் செலவழித்து சமுதாயத்துக்கு நன்மை செய்ய விரும்புகிறவர்களுக்கு கொஞ்சம் விளம்பரம் கிடைப்பதில் தவறு என்ன? சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பேர்களை உடையவைகளை மட்டும் மாற்ற அனுமதிக்காமல், இதே வழக்கத்தை மற்ற நகரங்களும் ஏன் பின்பற்றக் கூடாது?" என்று அவர் வாதிட்டதை கூடியிருந்த அனைவரும் மனதார ஏற்றுக் கொண்டோம்.

அந்த மாதிரியான ஏற்பாடு சென்னை நகருக்குக் கொண்டு வரப்பட்டால் எத்தனை அற்புதமான மாற்றம் மலரும் என்ற கற்பனையில் நாங்கள் திளைத்ததை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களோடும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ரியோடிஜெனிரோவுக்கு அடுத்தபடியான அகில உலக அளவில் அழகான நீண்ட மணற்பரப்பை உடைய மெரினா கடற்கரையும், போனஸாகக் கிடைத்திருக்கும் எலியட்ஸ் பீச்சையும் கொஞ்சம் மனக் கண்ணில் கொண்டு வாருங்கள். இவற்றை திட்டமிட்டு அலங்கரித்து, பராமரித்தால் எத்தனை உயர்வான உல்லாச இடங்களாக மாற்றலாம்?

இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள எலியட்ஸ் கடற்கரையை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். அதன் தற்சமய நிலை என்ன? விடிகாலையில், சூர்ய உதயத்தை ரசித்துக் கொண்டே அலை அடித்து ஓயும் மேட்டில் நடக்கலாம் என்று ஆர்வத்துடன் சென்றால், பெரும் பகுதிகளில் கண்டதை மிதித்துவிடாமல் பத்தடி நடப்பது கூட பிரம்ம பிரயத்தனம்தானே? அந்த விஷயத்தில் நமது கடற்கரைகள் காலை வேளைகளில் எங்குமே பார்க்க முடியாத ராட்சஸ பப்ளிக் டாய்லட்டுகள்! சரி, அலை வேண்டாம், மணலில் நடந்தால் கால் தசைகளுக்கு நல்லது என்று வைத்தியர்கள் சொல்வதை மேற்கொள்வோம் என்றால் தடி தடியாய் மாடுகள் கூட்டங்கூட்டமாய்; பெண் நாயை துரத்தும் ஆண் நாய்கள்! இவற்றுக்கு பயந்து நடப்பது போதாது என்று இருட்டின பிறகு வந்து காரிலேயே சிலர் கும்பலாய் உட்கார்ந்து குடிப்பதோடு, பீர் பாட்டில்களை உடைத்துப் போட்டு ஒரு குரூர விளையாட்டின்

விளையாய்ச் சிதறிக் கிடக்கும் கண்ணாடிச் சில்லுகள் பாதங்களைப் பதம் பார்க்காமல் கவனமாய் காலை வைக்க வேண்டிய நிர்பந்தம்.

இந்த அவஸ்தைகளே வேண்டாம் சாலையில் காலை வீசிப் போட்டு நடப்போம் என்று விரும்புவதும் நடக்காமல், அமைதியை நாடும் முதியோர்கள், விளையாட வரும் குழந்தைகளைப் பற்றி துளிக் கவலைப் படாமல் அசுர வேகத்தில் வண்டிகளைச் செலுத்தும் இளவட்டங்கள், காது பறைகளை கிழிக்கும் படியாக அந்த வண்டியிலிருந்து வெளிப்படும் சங்கீதம்! இவை போதாது என்பது போல 'சைலன்ஸர்களை' எடுத்து விட்டதால் சுற்றுப்புறத்தை கிடுகிடுக்க செய்யும் 'மோட்டார்-பைக்'குகளின் அதிர் ஓட்டம்!

எலியட்ஸ் கடற்கரையை சில பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் ஒரு பிரபல கம்பனி சீர்படுத்தி, அலங்கரித்து, காவலாளி, தோட்டக்காரர் போட்டு பராமரிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்த பிறகு, தினமும் காலையிலும், மாலையிலும் குறைந்த பட்சம் நாலு போலீஸ்காரர்களாவது சாலை, மணல், கடல் ஓரம் என்று ரோந்து வந்து, அசுத்தம் செய்து, குப்பை போட்டு, பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளும் பொதுமக்களை கண்டித்து தேவையானால் தண்டித்தால் பலன் இல்லாமலா போகும்? முறையான சட்டத்துக்கு மக்களை பணிய வைக்க பழக்குவதன் மூலம்தான் எதிர்கால சமுதாயத்தில் மாற்றங்களும், ஒழுங்கான கட்டுப்பாடும் கொண்டு வரமுடியும் என்பதால் முதல் நடவடிக்கையாக போலீஸ் விழித்துக் கொண்டு, சரியான கோணத்தி லிருந்து செயல்படுவது அவசியம்.

போலீஸ் கெடுபிடியை ஒரு பக்கத்தில் துவங்கும் அதே சமயத்தில் சாலை, கடற்கரை பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனங்கள் செய்யும் எனில், ஆறே மாசங்களில் எலியட்ஸ் கடற்கரையை ஒரு அழகான இடமாக மாற்றலாம் - இது கதை அல்ல - நனவில் நடக்கக் கூடியதுதான்.

சாலைக்கும், வீடுகளுக்கும் நடுவில் இருக்கும் இடங்கள் இன்று மேடு தட்டி, காய்ந்த புல் படர்ந்து கண்களுக்கு எரிச்சல் தருவதாக இருக்கின்றன. இவைகளை ரம்யமான பூங்காக்களாக, விளையாட்டுத் திடல்களாக மாற்றலாம் அல்லது இந்த இடங்களில் அனுமதி பெற்றவர்கள் ஐஸ் கிரீம் பார்லர்கள் அமைக்க வழி செய்யலாம்.

பம்பாய் சௌபாத்தி, ஜுஹு கடற்கரைப் பகுதிகளில் இரண்டு வரிசைபோல பத்தடிக்கு பத்தடி அளவில் சின்னச் சின்ன உணவு விடுதிகளை கட்டி, நானாவித பதார்த்தங்கள் - பூரி சோலே, பேல் பூரி, பானி பூரி, மசால் தோசை, வடை, சாட், விதவித ஐஸ் க்ரீம்கள், குளிர் பானங்கள் - என்று ஒரு வகைவிடாமல் கிடைக்க வழி பண்ணியிருக்கிறார்கள்!

மெரினாவில் ஒரு ஒழுங்கு இல்லாமல் தின்பண்டங்கள் விற்பவர்கள் சகட்டு மேனிக்கு கடை விரித்திருக்கும் பழக்கம் எலியட்ஸ் பீச்சிலும் தலைதூக்காதிருக்க, இப்போதே கடற்கரையின் தெற்கு பகுதியில் கொஞ்சம் இடத்தை சின்னச் சின்ன இடங்களாகப் பிரித்து, 'கியோஸ்க்' என்று சொல்லக்கூடிய குட்டிக் கட்டிடங்களை கட்டி, பிரபல உணவு விடுதிகளுக்கு வாடகைக்கு விடலாம். கடற்கரைக்கு வருபவர்களுக்கு ஆரோக்கியமான உணவு, அரசுக்கு வருமானம் - ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

'சாப்பாடு கடையாக மாற்றுவது கடற்கரையின் அழகை கெடுத்து விடாதா?' என்று சிலர் சண்டைக்கு வரலாம். உண்மை. கெடுக்கும்தான். ஒப்புக் கொள்கிறேன். என்றாலும் நாளைக்கு காளான்கள் போல கட்டுப்பாடு இல்லாமல் தானே முளைக்கப் போவதை தடுத்து, இன்றே ஒழுங்கு படுத்தலாம் என்கிறேன். அவ்வளவுதான்.

தனியார் நிறுவனங்கள் மட்டும் ஒழுங்காக செயல்பட்டு விடுவார்களா? அனுமதிக்கப்பட்ட விளம்பர சலுகையை பயன்படுத்திக் கொண்டு பராமரிப்பு விஷயத்தில் அலட்சியமாய் இருப்பதை பல 'ரவுண்டானா' திடல்கள் நமக்கு உணர்த்துகின்றனவே!' என்று பலர் வாதிடலாம் - இவர்கள் கூற்றில் நியாயம் இல்லாமல் இல்லை. அத்தகைய தவறு நடக்காமல் மேற்பார்வை உறுதியாய் இருக்க வேண்டும். தவிர இப்படி. தர்க்கம் பண்ணுகிறவர்கள் நம் நகரில் எத்தனையோ இடங்களில் மாநகராட்சியால் கவனிக்கப்படும் சிலைகள் காக்கைகளின் எச்சமும், வாடிய மாலை நாரும், தூசியுமாய் இருக்கையில் தினத்தந்தி நிறுவனம் பராமரிக்கும் ஆதித்தனார் சிலை மட்டும் துளி அழுக்கு இல்லாமல் புது மாலை, அடிக்கடி பூசப்படும் வர்ணம் என்று மதிப்பாய் இருப்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது.

கடற்கரைகளில் துவங்கி, பிரதான சாலைகள், இதர இடங்கள் என்று தனியார் நிறுவனங்களிடம் பராமரிப்பு பொறுப்புகளை ஒப்படைக்கத் துவங்கினால் பெரும்பாலும் இடங்களும் சுத்தமாய் இருக்கும்; அரசும் தன் பணம், கவனத்தை ஆக்கப்பூர்வமாக வேறு எதிலாவது செலவிடலாம்! இதில் சந்தேகமே வேண்டாம்!

14

ஒரு விழாவிற்குச் செல்வதற்காக நாலு நண்பர்களுடன் வண்டியில் போய்க் கொண்டிருந்தேன்.

அடையாறு 'ஆவின்' மில்க் பூத்-தை தாண்டி, பஸ் ஸ்டாப்பைக் கடந்து இடது பக்கம் திரும்ப வேண்டும்.

அந்தத் திருப்பத்தில் எதிரிலிருந்து வண்டிகள் வர முடியாது. அவர்கள் பக்கவாட்டுச் சந்தில் சென்று சற்றுத் தள்ளி மெயின் ரோடைப் பிடிக்க வேண்டும்.

ஆனால், 'நோ என்ட்ரி' என்கிற அறிவிப்பை லட்சியம் செய்யாமல் எதிரில் வேகமாய் ஒரு வண்டி வர, நான் அவசரமாய் ஒதுங்கினேன்.

பிரதான சாலையிலிருந்து திரும்பும் எனக்குதான் அவ்வழியே செல்ல அனுமதி உண்டு; எதிர்பக்கமாய் வரும் அந்த வண்டிக்கு இல்லை! இருப்பினும் 'அ', ஒரு மூலையிலும் 'ஜி' இன்னொரு மூலையிலும் எழுதப்பட்ட நம்பர் பலகையோடு, வேகத்தை கூட மட்டுப்படுத்தாமல் தன்போக்குக்கு அந்த அம்பாஸடர் வண்டி போக, வண்டியில் இருந்த

நண்பர் " என்ன அனியாயம் இது!" என்று கோபப்பட்டார்.

"கவர்மெண்ட் வண்டி! அவர்களே இப்படி சட்டத்தை மதிக்காமல் நடந்து கொண்டால் அப்புறம் மற்றவர்களைத் தட்டி கேட்பது யார்?" என்று அங்கலாய்த்தார் இன்னொரு நண்பர்.

மூன்றாவது நண்பர் மலேஷியாவைச் சார்ந்தவர். பத்திரிகையாளர்.

"ஒரு விஷயம் கேள்விப்பட்டேன், அது உண்மைதானா என்று சொல்ல முடியுமா?"

"என்ன?" என்பது போல ஏறிட்டேன்.

"போன முறை சென்னைக்கு வந்திருந்தபோது பல்லவன் பஸ் ஓட்டுனர்களில் சிலர் அபாயகரமான தவறுகளைச் செய்வதைப் பார்த்து அதிர்ந்தேன். பஸ் ஸ்டாப்பிலிருந்து பத்து, பதினைந்தடிகள் தள்ளி நட்ட நடு சாலைகளில் நிறுத்துகிறார்கள், தலைகால் புரியாத வேகத்தில் ஓட்டுகிறார்கள், அண்ணாசாலையில் இரண்டாவது 'லேனு'க்குள் வண்டியைச் செலுத்தாமல் 'முதல் லேனு'க்கு வந்து இதர கார்களை முந்துகிறார்கள். ஆக மொத்தம், தொலைவில் பல்லவன் வருகிறது என்றாலே இங்கே நமக்கு பயமாக இருக்கிறது என்று சென்னைவாசிகள் வாய்விட்டுப் புலம்பியும் கேட்டேன். இது குறித்து விசாரித்தபோது பல்லவன் ஓட்டுனர்களை மோட்டார் வாகன தடை சட்ட திட்டங்கள் கட்டுப்படுத்தாது என்று ஒரு அரசு அறிக்கை இருப்பதாகக் கூறினார்கள். இது உண்மையா? எதனால் இந்த முரண்பாடு? சட்டம் ஒழுங்கு அனைத்து மக்களுக்கும் பொதுவாகத்தானே இருக்க வேண்டும்?"

நண்பரின் கேள்வியில் விரவி இருந்த திகைப்பை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஏனென்றால், நான் அறிந்த வரையில் உலகநாடுகள் எதிலும் இப்படி ஒரு பாரபட்சமாக அறிக்கையை அரசாங்கமே செய்து கேள்விப்பட்டதே இல்லைதான்!

முதன்முதலாய், சில வருஷங்களுக்கு முன், அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் போக்குவரத்து நிறுவனங்களின் பஸ் ட்ரைவர்கள் தவறு செய்யும் போது கண்டித்து சார்ஜ் ஷீட் கொடுக்க போலீஸுக்கு அதிகாரம் இல்லை என்பதைக் கேள்விப்பட்டபோது அதை நம்ப முடியாமல் அப்போது பதவியிலிருந்த ஒரு மூத்த அதிகாரியிடம் இது பற்றி விளக்கம் கேட்டேன். 'ஆம் உண்மைதான். அடிக்கடி போலீஸுக்கும் அரசாங்க போக்குவரத்து ஓட்டுனர்களுக்கும் மோதல்கள் வருவதை தவிர்க்க இப்படி ஒரு ஜி.ஓ. வை அரசு அனுப்பியுள்ளது. ஒரு ஓட்டுனர் விதிகளை மீறினார் என்றால் அவரைப் பற்றின விவரங்களை அவர் சார்ந்த நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். அதுபற்றி விசாரித்து அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களே ஒழிய, மற்ற வாகன ஓட்டிகளை காவல்துறை தண்டிக்கும் விதத்தில் அரசு போக்குவரத்து ஓட்டுனர்களை நடத்த இயலாது' என்றார்.

விவரத்தை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டதும் எனக்குள் கோபம் பொங்கி வழிந்தது நிஜம். எனக்குத் தெரிந்த ஓரிரு பத்திரிகை ஆசிரியர்கள், அரசியல் வாதிகள் என்று பலரிடம் பேசிப் பார்த்தேன். பலன் ஏதும் இல்லை. அரசையும் போக்குவரத்துக் கழகங் களையும் எதற்காக வீணாகப் பகைத்துக் கொள்ள வேண்டும் என்பது சிலரின் வாதம்.

இதில் பகை எங்கிருந்து வந்தது? எனக்குப் புரியவில்லையே! ஜனநாயக மரபில் ஆட்சி நடைபெறும் நாட்டில், ஒரு குற்றத்தை யார் செய்தாலும் சமமான தண்டனை பெறுவது தானே நியாயம்? அப்போதுதான் சீரான சட்ட ஒழுங்கை நாட்டில் நிலைநாட்டிப் பராமரிக்க முடியும்? அதைத் தவிர்த்து 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்கிற கதையாய் என்ன பாரபட்சம் இது!

'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று ஆணைப்பட்ட ஈஸ்வரனையே பார்த்து புலவர் நக்கீரர் நெஞ்சுரத்துடன் முழங்கிய நாட்டில், மக்கள் அனைவரையும் ஒரே விதமாய் கட்டுப்படுத்தும் சட்டங்கள் இருக்க வேண்டும்; பாரபட்சம் கூடாது என்று சுட்டிக் காட்டுவதற்கு, எடுத்துச் சொல்வதற்கு, படித்த, தகுதியுள்ள நபர்கள் கூடத் தயங்கினால், மன்னிக்க வேண்டும். பயந்தால், பிறகு இந்தச் சமுதாயத்தில் வாழ நமக்கு என்னதான் உரிமை இருக்கிறது?

யோசிக்க வேண்டும்.

போக்குவரத்து விதிகளைப் பற்றி பேசுகையில் நண்பர் சரவணன் ஒருசமயம் சொன்ன அற்புதமான யோசனையை உங்களுக்கும் தெரிவிக்க ஆசைப் படுகிறேன்.

சென்னை நகரின் மோசமான சாலை களையும், அதையும்விட மோசமாக பலர் வாகனங் களை பொறுப்பில்லாமல் ஓட்டுவதையும் குறித்து வேதனைப்பட்டுக் கொண்ட ஒருநாளில் அவர் சொன்னார்:

"அரசாங்கமும், போலீஸ் டிபார்ட்மெண்டுக்கும் இன்னும் சிறப்பாக தம் தம் பணிகளை செய்யலாம்தான்; நான் மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் பளுவைக் குறைக்க பொது ஜனங்களும் சில காரியங்களில் உதவி செய்ய வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். உதாரணத்திற்கு இருபது வருஷங்களாக கார் ஓட்டுவதில் எந்த மோசமான ரிகார்டும் இல்லாத ஆண், பெண்களில் 50 பேர்களை தேர்ந்தெடுத்து 'கௌரவ ட்ராஃபிக் வார்டன்கள்' என்று அழைத்து, அவர்களுக்கு விசேஷ 'பாட்ஜ்' கொடுத்து, தவறு செய்யும் ஓட்டுனர் யாராக இருந்தாலும் அவர்களை இந்த வார்டன்கள் அந்த இடத்திலேயே மடக்கிக் கண்டிக்கும் அல்லது ஃபைன் விதிக்கும் அதிகாரத்தை வழங்கலாம். மேல்நாடுகளில் தவறு செய்யும்போது லைசென்ஸில் கறுப்பு புள்ளி குறித்து, மூன்று புள்ளிகள் வந்ததும் ஆறு மாசத்திற்கு லைசென்ஸை ரத்து செய்து விடுவார்கள். அந்தமாதிரி ஒரு வழக்கத்தை கொண்டுவர 'கௌரவ ட்ராஃபிக் வார்டன்கள்' உதவலாம். நல்ல குடும்பத்தைச் சார்ந்த நேர்மையான நபர்களை நியமிப்பதன் மூலம், 'லஞ்சம் கொடுத்து சமாளிக்கும்' கெட்ட பழக்கத்தை குறைக்கக் கூட வழியுண்டு".

நண்பர் சரவணன் கருத்தை நான் நூற்றுக்கு நூறு ஆமோதிக்கிறேன். 'இது நம் நாடு' என்கிற பற்றுடன் தாமாக, ஒழுங்காக நடக்க முயற்சிக்காதவர்களை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர அழுத்தம் திருத்தமாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை.

இதை எழுதும்போது எனக்கு அமெரிக்காவில் நான் கண்கூடாக பார்த்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது.

பணக்கார நண்பர் ஒருவர் வண்டியோட்ட, சக பயணியாக நான் -

நாலு வீதிகள் சந்திக்கும் சந்திப்பு ஒன்றில் கூட்டம் ஏதும் இல்லாத காரணத்தால் கொஞ்சம் வேகத்தை குறைத்துவிட்டு, நண்பர் மறுபடி ஸ்பீடு எடுத்து ஒரு பர்லாங்கு தூரம் போயிருக்க மாட்டார், பின்னால் சிகப்பு விளக்கு தலையில் சுழல, ஊய்ய்ங் ஊய்ய் என்ற சத்தலோடு போலீஸ் வண்டி வந்து விட்டது.

ஓரம் கட்டச் சொன்னார்கள்.

நண்பர் உடனடியாய் வண்டியை நிறுத்தினார்.

இறங்கி வந்த போலீஸ்காரர் எதுவுமே பேசாமல் கையை நீட்ட, நண்பர் "க்ளவ் கம்பார்ட்மெண்டி'லிருந்து லைசென்ஸ் புத்தகத்தை எடுத்து நீட்டினார்.

"ஜங்ஷனில் நின்று போக வேண்டும். நீங்கள் நிற்காமல் வந்துவிட்டீர்கள். அந்த குற்றத்திற்காக உங்களுக்கு ஒரு கறுப்புப் புள்ளி கொடுக்கிறேன். ஏற்கனவே இரண்டு புள்ளிகள் வேக ஓட்டத்திற்காக வாங்கியிருக்கிறீர்கள். அதனால் நீங்கள் அடுத்த ஆறு மாசத்திற்கு வண்டி ஓட்ட தடை செய்து, லைஸென்ஸை ரத்து செய்கிறேன். இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் நாளையிலிருந்து போக்குவரத்து அலவலகத்திற்கு வந்து 'நாலு வார ஓட்டுனர் பயிற்சி பெறுங்கள்'

வாக்கு வாதம் இல்லை.

கையில் எதையாவது வைக்கும் பழக்கம் இல்லை. ஒன்றும் இல்லை.

போலீஸ்காரர் சென்றதும் நண்பரிடம் கேட்டேன்.

"என்ன செய்யப் போகிறீர்கள்?"

"நாலுவார கிளாஸுக்கு போகப் போறேன். வேறு வழி! அப்படிச் செய்யாமல் லைசன்ஸ் ரத்தானால் வண்டி ஓட்ட முடியாது போகும். வண்டி இல்லாவிட்டால் இங்கே ஒரு காரியம் நடக்காது! தவிர, நான் தவறு செய்தது உண்மைதான். அதற்காக நாலு வாரம் வகுப்பிற்கு செல்வது எனக்கு சரியான தண்டனைதான்!"

நண்பர் துளி வருத்தம் இல்லாமல் பேச, நான் வாய் அடைத்து உட்கார்ந்திருந்தது நிஜம்!

அந்த சட்ட ஒழுங்கு நம் நாட்டுக்கும் வருமா? நாட்டை நேசித்து, சட்டங்களை மதிக்கும் பிரஜைகளாக நாம் மாறுவோமா?

வரும். மாறுவோம். நம்பிக்கையோடு செயல்படுவோம். நம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்க்கை ஏது?

15

சென்ற வாரம், மனசுக்கு நிறைவைத் தந்த, வித்தியாசமான கோணங்களிலிருந்து சிந்திக்க வைத்த, ஒரு அருமையான அனுபவம் கிட்டியது.

சாகித்திய அகாதமி ஸிக்கிம் மாநிலத்தின் தலைநகரான கேங்டாக்-ல் ஏற்பாடு செய்திருந்த 'கிழக்கிந்திய பெண் எழுத்தாளர் சந்திப்பில்' கண்காணிப்பாளராகக் கலந்து கொள்ளவும், இரண்டாம் நாள் நிகழ்ச்சியை நடத்தித் தரவும் அழைப்பு வந்தபோது எனக்குள் மகிழ்ச்சி, தயக்கம் இரண்டும் சம அளவில் தலைதூக்கின.

இதுவரை அதிகம் கேள்விப்பட்டிராத மொழிகளைச் சார்ந்த எழுத்தாளர்களை சந்தித்து, கலந்துரையாடல் மூலம் விஷய ஞானத்தைப் பகிர்ந்து கொள்வது லேசில் கிட்டாத அனுபவம் என்பதால் - சந்தோஷம். 'பெண் எழுத்தாளர்' என்கிற அடைமொழி அடியோடு அகற்றப்பட வேண்டும் என்று தீவிரமாக நம்புகிறவள் 'பெண் எழுத்தாளர்கள் சந்திப்பில் கலந்து கொள்வதா என்கிற கேள்வி எழுந்ததால் - தயக்கம். சிந்தித்தேன். என் கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக வெளியிட அந்த

மேடையை விட ஏற்ற இடம் வேறு இருக்க முடியாது என்பது விளங்க, அழைப்பை ஏற்றேன்.

காங்டாக் ஆளை பரவசத்தில் ஆழ்த்தும் அழகான நகரம்தான் - சந்தேகமே வேண்டாம், ஆனால் சென்னையிலிருந்து விமானம் மூலம் கல்கத்தா சென்று, அங்கிருந்து 13 மணி நேரம் ரயிலில் நியூஜல்பைகுரிக்கு பயணித்து, தொடர்ந்து 5 மணி நேரம் பஸ்ஸில் அதள பாதாள மலைப்பாதையில் போய் ஒரு வழியாய் காங்டாக்கை அடைவதற்குள், முதுகெலும்பில் உள்ள 'வெர்டிப்ராக்கள்' தனித் தனியாய் கழண்டு போய் விடுவது நிஜம்! அப்படி ஒரு நீளமான பயணம். ஆனால், வலி, களைப்பு, அலுப்பு எல்லாவற்றையும் தலையில் தட்டி ஓரமாய் உட்கார செய்துவிடும் சமாசாரங்களும் இல்லாமல் இல்லை - துவக்கத்திலிருந்து நம்மோடு மெய்காப்பாளர் போல கூடவே பாயும் 'திஸ்தா' நதி, அடர்ந்து வளர்ந்த் தேக்கு மரக் காடுகள், சொடுக்கு போட்டு கூப்பிட்டால் ஓடிவரும் நாய்க் குட்டியாய் மேகக் கூட்டங்கள், தொலைவில் பனிக்குல்லாய் அணிந்து கம்பீரமாய் தெரியும் 'காஞ்சன் ஜங்கா' சிகரம்.

நாங்கள் ஸிக்கிம் அரசாங்கத்தின் விருந்தினர்கள் என்பதால் கவனிப்பும், உபசரிப்பும் நன்றாகவே இருந்தன.

எளிமையான விழாவில் கருத்தரங்கை முதலமைச்சர் பண்டாரி துவக்கி வைத்தார். திருமதி பண்டாரியும் ஒரு எம். பி. தாங்கள் இன்னார் என்கிற பிரக்ஞை, பந்தா எதுவும் இல்லாமல் சர்வ சகஜமாய் எங்களோடு முற்பகல் முழுவதையும் பேசி, தேநீர் குடித்து, அவ்விருவரும் கழித்தது வந்திருந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அலாதி திருப்தியைத் தந்தது.

இரண்டு நாள் நடந்த கருத்தரங்கில் பங்கு கொள்ள அஸ்ஸாம், மணிப்பூர், ஸிக்கிம், மேற்கு வங்காளம், பீஹார், ஒரிஸா - மாநிலங்களிலிருந்து அழைக்கப்பட்டிருந்த முன்னணி எழுத்தாளர்களின் எண்ணிக்கை 21. இவர்களைத் தவிர சிறப்பு அழைப்பு பேரில் வந்தவர்கள், சாகித்திய அகாதமியின் கிழக்கிந்திய அலுவலக செயலர் நிர்மல் பட்டசார்ஜி, சந்தனு, ஆகியோர். கூட்டம் என்று பார்த்தால் ரொம்ப சின்னதுதான். ஆனாலும் அங்கு பேசி, படித்து, சிந்தனை செய்யப்பட்ட விஷயங்கள் ஏராளம்.

பங்கெடுத்தவர்களில் சிலரையாவது அறிமுகப் படுத்திக் கொள்ளலாமா?

முதலில் மகா ஸ்வேதா தேவி, வயது 67. தீதி (அக்கா) என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுவார். மேற்கு வங்காளத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். வாளாக, வேலாக, தணலாக, வெட்டி, குத்தி, தகிக்கும் இவரது எழுத்துக்கள் பாமரனிலிருந்து, மெத்தப்படித்தவர் வரை எல்லாரையும் சிந்திக்க வைப்பதும், கடந்த 20 வருஷங்களுக்கும் மேலாக ஒற்றையடிப் பாதை கூட இல்லாத கிராமங்களுக்கு ஒண்டியாய் நடந்து சென்று பழங்குடி மக்களின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கைத் தரம், பிரச்சனைகளை அடிமட்டத்திலிருந்து ஆராய்ந்து எழுதிய எழுத்துக்களால் உண்டாக்கிய விழிப்புணர்வும் சீர்திருத்தங்களும் ஒவ்வொருவரும் மனசில் கட்டாயம் குறித்துக் கொள்ள வேண்டிய சாதனைகள்.

டாக்டர் நிர்மல் பிரபா பர்தோலை - அஸ்ஸாமின் உன்னதமான கவிஞர்களில் ஒருவர்.

பெண், சமுதாயப் பிரச்னைகள் குறித்து கவிதைகள் மூலம் ஆணி அடித்த மாதிரி கேள்விகள் எழுப்புகிறவர். கௌஹாத்தி யுனிவர்ஸிடியில் பேராசிரியராக இருக்கிறவர். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு காயங்களைப் பெற்றவர். இருப்பினும் துளி கசப்புணர்வு இல்லாமல் சமுதாயத்தை நேசிப்பதும், அடுத்தவர்களை மனப்பூர்வமாகப் பாராட்டுவதும் இவருடைய இயல்புகளாக இருக்கின்றன.

டாக்டர் பினாபாணி மொஹந்தி ஓரிய மொழி எழுத்தாளர். கட்டாக் சர்வகலாசாலையில் பேராசிரியர். திருமண பந்தம் வேண்டாம் என்று தீர்மானித்து கல்வி, எழுத்து துறைகளில் முழு கவனத்தையும் செலுத்தி வருபவர்.

மேற்சொன்ன மூவருமே சாகித்திய அகாதமியின் விருது பெற்றவர்கள். இவர்களைத் தவிர 'மைதிலி' மொழியிலிருந்து டாக்டர் இலா ராணி சிஸ், நீத்தா ஜா, 'ஏக் கஹானி' தொடர் மூலம் பிரபலமாயுள்ள டாக்டர் பிரதிபா ராய் - என்ற பங்கு பெற்ற ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்த முற்பட்டால் இன்னும் இரண்டு அத்தியாயங்கள் தேவைப்படும்.

அஸாமிலிருந்து வந்திருந்த ஸுபோதினி என்கிற எழுத்தாளர் பேசியபோது 'திருமணம் எழுத்துக்கு விரோதி. அஸ்ஸாமில் பிரபலமாகியிருக்கும் எழுத்தாளர்களில் ஒருவர் விதவை, மற்றவர் விவாகரத்து பெற்றவர், இன்னும் ஒருவர் கல்யாணமே செய்து கொள்ளாதவர்' என்கிற கருத்தை வெளியிட, இது தொடர்ந்து முளைத்த வாதங்களுக்கு சரியான விதையாயிற்று.

எழுதுவதற்கு திருமணமோ, கணவனோ தடை அல்ல என்று பெரும்பாலோர் அபிப்ராயம் தெரிவிக்க, 'இதற்கு நானே ஒரு எடுத்துக்காட்டு' என்றார் பிரதிபா ராய் வெளிப்படையாக. என்னை பேச அழைத்த போது 'எழுத, பாட, ஆட கூடாது என்று மகளை திருமணத்திற்கு முன்பே தடுத்து விட்ட பல பெற்றோர்களை எனக்குத் தெரியும். முட்டுக்கட்டை போடுவதும், வளர்ச்சிக்கு உதவுவதும் தனி நபர்களின் மனோபாவம், ரஸனைகளைப் பொறுத்திருக்கிறது. அதனால் இப்படி சகட்டு மேனிக்கு குற்றச்சாட்டுகளை வீசுவதில் எனக்கு உடன்பாடு இல்லை' என்று திட்டவட்டமாக மறுத்தேன்.

இரண்டாம் நாள் கருத்தரங்கை நடத்தி வைத்த தருணத்தில் 'பெண் எழுத்தாளர்' என்று பிரித்துப் பார்ப்பதை நான் ஏன் விரும்புவதில்லை என்பதை விளக்கும்படி நிர்மல் பட்டசார்ஜி கேட்டுக்கொள்ள நான் விளக்கினேன்.

25 வருஷங்களுக்கு முன் நான் எழுதத் துவங்கிய காலத்தில் அரசாங்க உத்தியோகத்தில் இருந்த சில எழுத்தாளர்கள் மனைவி பேரில் எழுதும் வழக்கம் இருந்தது. இதனாலோ என்னமோ என் கணவர் அரசு ஊழியராகப் பணிபுரிந்ததை மட்டும் கணக்கில் ஏற்றுக் கொண்டு 'சந்திரசேகரன்தான் சிவசங்கரி என்ற பெயரில் எழுதுகிறார்' என்று சிலர் தாங்களாக தீர்மானம் பண்ணிக் கொண்டதும் அல்லாமல் ஒரு ஆசிரியர் தன் கூற்றை நிரூபிக்க வேண்டி திரும்பத் திரும்ப என் கணவரை சந்தித்து பேசிவிட்டு, இறுதியாய் லேசான ஏமாற்றத்துடன் 'நிஜமாகவே நீங்கள்தான் எழுதுகிறீர்களா?' என்று

வியந்தபோது முதன் முறையாக ரணப்பட்டேன். 'பெண் இப்படி எழுதலாமா?' என்றும், 'சோரம் போனதைப் பற்றி எழுதும் பெண்ணும் கெட்டுப் போனவளாகத்தான் இருக்க வேண்டும்' என்றும் சிலர் கண்டனக்குரல் எழுப்பியது இரண்டாவது காயம். 'எழுத்தில் ஆண் என்ன பெண் என்ன - எதற்காக இந்த பேதம்?' என்று நான் வருந்தி, வேதனைப்பட்ட ஆரம்ப கால நாட்கள் எக்கச்சக்கம். இந்த அவஸ்தைக்கு முற்றுப்புள்ளி வைத்த சம்பவம் 1972-ம் ஆண்டு நடந்தது. திருமதி இந்திரா காந்தியை ஒரு பேட்டிக்காக சந்தித்த நாளில் 'ஒரு பெண் பிரதமர் என்ற ரீதியில் ...' என்று நான் கேள்வியை துவக்கியபோதே, குறுக்கே வெட்டி 'பிரதமர் என்கிற வகையில் கேளுங்கள். பெண் என்பதையும் செய்யும் தொழிலையும் அனாவசியமாய் சம்பந்தப்படுத்த வேண்டாம்' என்று கூறியதும் பளிச்சென்று எனக்குள்ளும் தெளிவு உண்டாயிற்று. இனி 'பெண் எழுத்தாளர்' என்கிற பிரிவினையை ஏற்றக் கூடாது. அதற்கு அவசியமே இல்லை என்கிற எண்ணம் உறுதிப்பட்டதும் அதற்குப் பிறகுதான் ..."

பேசிமுடித்து உட்கார்ந்த பிறகு தொடர்ந்து உரை ஆற்றிய எழுத்தாளர்கள் ஒருவர் விடாமல் என் கருத்தை ஆமோதிக்க, முடிவுரையில் நிர்மல் பட்டசார்ஜியும் முழு மனதோடு எங்கள் எண்ணங்களை ஆதரித்தார்.

அன்று மாலை அனைவரும் ஒன்றாக அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த நாழிகையில் 'பெண் எழுத்தாளர்கள்' என்று குறிப்பிடும் வழக்கத்தைப் பற்றி மறுபடியும் பேச்சு எழுந்தது.

"ஆண்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்திய துறைகள் என்று கருதப்பட்ட தொழில்களில் பெண்கள்

பிரவேசிக்க முற்பட்டதும், 'அத்துறைக்கு அவர்கள் புதுசாய் இருந்த காரணத்தால் பெண் டாக்டர், பெண் வக்கீல், பெண் வைத்தியர், பெண் போலீஸ், பெண் எழுத்தாளர் என்று அடையாளத்திற்காக அடைமொழி சேர்த்து குறிப்பிட ஆரம்பித்தார்கள்.. ஆனால் நாளடைவில் அடையாளம் அளவுகோலாக மாறின போது - அதாவது எழுத்தை அதன் பரிணாமத்திற்காக விமர்சிப்பதற்கு பதிலாய் புடவையை நினைவில் வைத்துக்கொண்டு 'பெண் இந்த விஷயங்களை பற்றி எழுதலாமா?' என்று சிலர் சிந்திக்கத் தொடங்கியதால்தான் பிரச்னையே கிளம்பியது ..." என்று ஒரு நண்பர் கூறியபோது அந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே எனக்குத் தோன்றியது.

எந்தத் துறையானாலும் அடையாளம் காட்டுவதில் தவறே இல்லை, ஆனால் பெண்மையை அளவுகோல் ஆக்குவது நியாயமற்ற செயல் மட்டும் அல்ல, கேவலமும் கூட என்பதுதான் என் வாதமும்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், வாசகர்களே?

16

நங்கநல்லூரில் வசிக்கும் பார்வதி அம்மாள் என்கிற வாசகரிடமிருந்து இன்று ஒரு வித்தியாசமான வேண்டுகோளுடன் கடிதம் வந்திருக்கிறது.

கடிதத்தின் ஒரு பகுதியைத் தருகிறேன். நீங்களும் விவரத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

"உரத்த சிந்தனை கட்டுரைத் தொடரில் பல விஷயங்களை ஆராய்ந்து எழுதுகிறீர்கள். புதுசுபுதுசாய் யோசிக்க வைக்கிறீர்கள். சந்தோஷமாக இருக்கிறது. தமிழ் படிக்கத் தெரியாத என் மருமகளுக்கும் பேரனுக்கும் வாரா வாரம் படித்துக் காட்டுவதை முக்கிய வேலையாகச் செய்கிறேன். ஆனாலும், எனக்கு ஒரு குறை. எப்போதும் கனமான விஷயங்களைப் பற்றியே எழுதுகிறீர்களே, இது ஏன்? உரக்க சிந்தனை செய்ய வேண்டியது ஸீரியஸான விவரங்களைப் பற்றித்தானா? அன்றாட வாழ்க்கையில் நாம் சந்திக்கும் எத்தனையோ சின்னச்சின்ன விஷயங் களைக் குறித்து, எழுதக் கூடாதா? 'இதற்கு விடிவு வருமா?' என்கிற கனம் மனசை அழுந்த வைக்காமல், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி நகைச்சுவை

யோடு சில விஷயங்களைப் பற்றி சிந்திக்க முனையக் கூடாதா?"

நல்ல கேள்வி. அவசியமானதும் கூட.

இந்த அத்தியாயத்திலேயே முயற்சிக்கிறேன்.

காங்டாக்கிலிருந்து திரும்புகிற வழியில் கல்கத்தாவில் நான்கு நாட்கள் தங்கினேன். எப்போது, அந்த மாநகரத்திற்குச் சென்றாலும் அட! இது என்ன அபூர்வமான கலவை! என்று எனக்குள் தோன்றும் வியப்பை இந்த முறையும் நன்றாகவே உணர முடிந்ததை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவின் பழைமையான, ஜனசந்தடி மிகுந்த. அழுக்கான நகரங்களில் கல்கத்தாவுக்கு சிறப்பிடம் உண்டு என்கிற அதே தருணத்தில் பாரம்பரியம், மொழிப் பற்று, கலாசாரம் ஆகிய அரிய குணங்களைக் காப்பாற்றி வருவதிலும் கல்கத்தா முதல் இடம் வகிக்கிறது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

கல்கத்தா தெருக்களில் நடமாடுவதும், வண்டியில் பயணிப்பதும் ஒரு வினோத பயங்கர அனுபவம்.

ஒழுங்கே இல்லாத போக்குவரத்தை மிகுந்த ஒழுங்குடன் கடைபிடிக்கும் நகரம் அது! ஒரே சமயத்தில் நாலு பக்கங்களிலிருந்து வண்டிகள் திரும்பும், நடுவில் இரண்டு சைக்கிளிஸ்ட். தடதடவென்று வரும் ட்ராம், நாலு ஸ்கூட்டர் ஆசாமிகள், இருபது பாதசாரிகளாவது கட்டாயம் இருப்பார்கள். ஆனால், யாரும் யாரையும்

ஸ்பர்சிக்காமல் கடைசி நொடியில் சட்டென்று ஒடித்து, திரும்ப, மயிரிழை இடுக்கில் நகர்ந்து விடுவார்கள்.

வேகமாய் வரும் வண்டிகள் முன்னால் கண்மூடி திறக்கும் நாழிகையில் பாதசாரிகள் கடந்து போகும்போது, நமக்கு குடல் வாய்க்கு வந்து விடுகிறது.

சென்னையில் ஒரு ஆள் சாலை நடுவில் எசகுபிசகாய் தாண்டிவிட்டால் என்ன நடக்கும் என்பதை வண்டி ஓட்டுநர் வசதியானவராய் இருந்தால் கிடைக்கும் வசவு 'பாஸ்டர்டு'. சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட ட்ரைவராக இருந்தால் 'மூளை இருக்காய்யா உனக்கு வண்டி வர்றது கண் தெரியலை?' ஆட்டோ, லாரி ஓட்டுபவராக இருக்கும் பட்சத்தில் 'கஸ்மாலம் - சாவு கிராக்கி - வூட்டுல சொல்லிகினு வந்திட்டியா?' கற்பனை பண்ணிப் பார்த்தால் கல்கத்தாவின் போக்கு நமக்கு நம்ப முடியாமல்தான் இருக்கிறது.

பல வருஷங்களாகவே போக்குவரத்து நெரிசல் எக்கச்சக்கம் . என்பதால், ஊருக்கு கிளம்புகிறவர்கள் 2 அல்லது 3 மணி நேரம் முன்னாலேயே புறப்பட்டு விடுகிறார்கள். உடம்பு சரியில்லாத நோயாளிகளை ஏற்றிக் கொண்டு செல்லும் வாடகை வண்டிகள் ஒரு சிகப்புத் துணியை ஜன்னலுக்கு வெளியே தொங்கவிட்டு ஆட்டிக் கொண்டே சென்றால் நிலைமை புரிந்து இதர வண்டி ஓட்டிகள் நகர்ந்து கொடுக்க முயற்சிக்கிறார்கள். அப்படியும் நெரிசல் காரணமாய் ஆஸ்பத்திரியை அடைவதற்குள் நோயாளி இறந்து போனால் 'என்ன செய்வது' கல்கத்தா ட்ராஃபிக் அப்படி' என்றும்

இன்றைக்கு வெயில் அதிகம் என்கிற வகையில் இயல்பாக பதில் சொல்லிவிட்டு மக்கள் நகர்கிறார்கள்.

இந்த கல்கத்தாவாசிகளுக்கு ஆனால் பொறுமை அதிகம்தான்! சித்தரஞ்சன் அவென்யு என்ற சாலையில் பத்தடிக்கு ஒருதரம் நின்று, உன்பாடு என்பாடு என்று ஒருவழியாய் பயணித்து வந்த பிறகு நண்பர் ஒருவரிடம் ''சாலையை கடக்க ஐம்பது நிமிஷங்கள் ஆயின' என்று புகார் சொன்னதும் நிஜமான ஆச்சர்யத்துடன் அவ்வளவு தானா? என்று கேட்டது அவர்களின் பொறுமைக்கு ஒரு உதாரணம்.

'கோட் ஷெட்டிங்' என்ற பெயரில் பல வருஷங்களாய் தினமும் நாலு மணி நேரமாவது மின்சாரம் நின்று போவதை நினைத்து அலட்டிக் கொள்ளாமல் அது இயற்கையாய் நடக்கும் சமாசாரம் என்கிற மனப்பான்மையுடன் பலரும் இருப்பது வியப்பைத் தருகிறது.

இந்தச் சலிப்பு, பொறுமை, நிதானம் எதையும் தாங்கும் மன உறுதி தந்த விவேகத்திலா அல்லது எது எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்கிற அலட்சியத்திலா? புரியவில்லை.

பல விஷயங்களிலும் முரண்பாடான அபிப்பிராயங்களை எழுப்பி, பெங்காலிகள் நம்மை திகைக்க வைக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

நகரத்தில் பெருவாரியான பகுதிகள் அழுக்கில் முங்கி குளிப்பதை பார்த்துவிட்டு கல்கத்தா வாசிகளுக்கு சுத்தம் என்றால் என்ன என்று தெரியாது என்கிற முடிவுக்கு வருபவர்கள் பூமிக்கடியில் ஓடும் 'மெட்ரோ' ரயில்களைப் பார்த்ததும் வாயடைத்துப் போய் கருத்தை மாற்றிக் கொள்வார்கள். அத்தனை

பளபள சுத்தம். சிங்கப்பூர் 'மெட்ரோ'வுக்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடிய பராமரிப்பு.

இதேபோல ரசகுல்லாவையும், மிஷ்ட்டி தொஹி (தித்திப்பு தயிர்) யையும் வயிரார உண்டுவிட்டு, ஜர்தா பீடாவை போட்டுக் கொண்டு அக்கடா வென்று உட்கார்ந்துவிடும் வங்காளிகள் ஒரு பக்கம் என்றால், விடியற்காலை ஐந்து மணிக்கு கொட்டும் மழையை லட்சியம்பண்ணாமல் கால்பந்து பயிற்சியில் ஈடுபடும் மனிதர்களும் ஏராளம்!

தங்களது மொழி, இலக்கியம், நாடகம், கலாசாரம் இவைகளில் வங்காளிகள் கொண்டிருக்கும் பெருமையை விசேஷமாய் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது.

இரண்டு வங்காளிகள் சந்தித்துக் கொண்டால், அவர்கள் எத்தனை பெரிய ஆளாக இருந்தாலும், தாய் மொழியில்தான் பேசிக் கொள்கிறார்கள். நூற்றுக்குத் தொண்ணூறு பெண்கள் அலுவலகம், கடைவீதி, நாடகம், திருமணம் என்று எங்கு சென்றாலும் பெங்கால் காட்டன் புடவை களையே அணிகிறார்கள். நைலான், அது, இது, இத்யாதிகள்? ம்ஹூம். இல்லவே இல்லை. 'எங்கள் புடவைகளின் அழகு அவற்றில் இல்லையே?' என்பது தான் ஒருவர் தப்பாமல் நான் விசாரித்த போது சொன்ன பதில். வெறித்தன்மையை தூண்டும் பற்று ஆபத்தானது. ஒப்புக் கொள்கிறேன். ஆனால் வங்காளிகளிடம் காணப்படுவது ஆரோக்யமான தற்பெருமை கெடுதல் விளைவிக்காத திடகாத்திரமான கர்வம்!

வங்காள நாடகங்கள் உலகப் பிரசித்தம் என்பதால் இந்த முறையும் ஒரு நாடகம் பார்த்தேன்.

பிபாஷ் சக்கரவர்த்தி என்ற புகழ் பெற்ற இயக்குனரின் 'அன்யா நாடக குழு' வின் 'ஷ்வெக் கேலோ ஹத்தே' என்ற நாடகத்தை பிர்லா ஆடிடோரியத்தில் காணும் வாய்ப்புக் கிட்டியது.

ப்ரெக்ஸ் என்ற மேலை நாட்டு ஆசிரியர் எழுதிய 'குட் ஸோல்ஜர் ஷ்வெக்' என்ற நாடகத்தின் வங்காள பிரதிபலிப்பு. 1942 ஆண்டு 'பராக்'ல் நடக்கும் கதை. ஹிட்லரின் அட்டூழியங்கள், மக்களின் பசி, பட்டினி, கோப, தாப இயலாமைகளை விளக்குகிறது. 200-வது முறையாக அரங்கேறுகிறதாம். கதை, உத்தி, நடிப்பு, இயக்கம், இசை எல்லாம் ஒவ்வொன்றிலும் நாடகம் சிறந்து விளங்கியதென்றாலும் அந்நிய நாட்டு அரசியல், கனமான சம்பாஷணைகள், எப்போதோ நடந்து முடிந்த சம்பவங்கள் என்றிருந்த நாடகத்தையும், அதைத் திரளாக காண வந்திருந்த ஜனங்களையும் பார்த்த போது தமிழ் நாட்டில் இம்மாதிரியான நாடகங்களுக்கு இருக்கும் வரவேற்பு நினைவுக்கு வர அசந்துதான் போனேன்.

கல்கத்தாவிலும், அதன் சுற்றுவட்டாரங் களிலும் 2000 த்துக்கும் அதிகமான நாடக குழுக்கள் இருக்கின்றன. வருஷம் பூராவும் பயணித்து நாடகம் நடத்தும் 'யாத்ரா' தெரு முனைகளில் எந்த வித முஸ்தீபும் இல்லாமல் நாடகம் போடும் பாதல் சர்க்கார் விவரங்கள் தெரியத் தெரிய பிரமிப்பும் கூடிக் கொண்டே போகிறது!

ரவிந்திரர் பிறந்து, வாழ்ந்து, மடிந்த 'டாகு பாரி' கட்டிடத்தை, கோவிலைப் போன்று பயபக்தியுடன் பராமரிப்பதும், ராஜா மல்லிக்கு சொந்தமாயிருந்த சலவைக்கல் அரண்மனையில்

காணப்படும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஓவியங்களும் சிலைகளும் விசேஷ பாதுகாப்பு வசதியின்றி, எல்லோரும் சர்வசகஜமாய் கண்டு களிக்கும்படி இருப்பதும் வங்காளிகள் வித்தியாச மானவர்கள் என்பதற்கு இன்னும் சில எடுத்துக்காட்டுகள்.

மொத்தத்தில் வங்காளிகள், கல்கத்தாவிட மிருந்து கற்க வேண்டாதவை சில, அவசியம் தெரிந்து கடைப்பிடிக்க வேண்டிய குணங்கள், பழக்க வழக்கங்கள் பல.

17

இதற்குமுன் பலமுறைகள் கோயமுத்தூருக்குச் சென்று வந்திருந்த போதிலும் இந்தத் தடவைதான், காஞ்சி முனிவர்களின் ஆசியுடன் தொடங்கப்பட்டு, வெகு செம்மையாக சமுதாயத்திற்குப் பலவிதங் களிலும் தொண்டாற்றி வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி மெடிகல் ட்ரஸ்டின் நடராஜா ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யவும், அவர்கள் நடத்தும் சங்கரா கண் வங்கி பற்றி பூரணமாய் அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிட்டியது.

ட்ரஸ்டில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் டாக்டர் ஆர். வி. ரமணி உடன் வந்து ஆஸ்பத்திரியின் செயல்பாடுகளை விளக்கிய பொழுதில் நான் நெகிழ்ந்து, பரவசப்பட்டு, அசந்து போனது நிஜம்.

கோயமுத்தூரின் பரபரப்பான சூழ்நிலையி லிருந்து தள்ளி, ஊருக்கு வெளியில், மரங்கள் ரம்யமாய் குடைபிடிக்க, அமைதியாய் இயங்கும் நடராஜா ஆஸ்பத்திரியின் நுழைவாயிலை ஒட்டி சுதர்ஸன விநாயகர் கோவில். கையில் எப்போதும் வைத்திருக்கும் கொழுக்கட்டை மோதகத்திற்கு பதிலாக ஒரு கண்ணை ஏந்தியிருக்கும் பிள்ளையார்

கண் தானத்திற்கு முக்கியத்துவம் தந்து, அதன் அவசியத்தை நமக்கும் உணர்த்துகிறார்.

1977–ஆம் ஆண்டு காஞ்சி பெரியவர்களின் விருப்பம், ஆசீர்வாதங்களுடன் துவக்கப்பட்ட ஸ்ரீ காஞ்சி காமகோடி மெடிகல் ட்ரஸ்ட் ஆர்ப்பாட்டமின்றி இதுவரை செய்து வந்திருக்கும் சாதனைகளின் பட்டியலை தெரிந்துகொள்ளும் போது 'ஆஹா' என்கிற சிலிர்ப்பு முதுகுத்தண்டில் ஜனிக்கிறது.

வைத்தியத்துறையின் பல பிரிவுகளைச் சார்ந்த 75 நிபுணர்களின் உதவியோடு அவர்கள் செய்து முடித்திருக்கும் காரியங்களில் சிலவற்றையாவது நீங்களும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

15 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு இலவச சிகிச்சை; 60,000 குழந்தைகளுக்கு தடுப்பூசிகள்; செய்திருக்கும் அறுவை சிகிச்சைகள் 2000–த்துக்கும் மேலேயே; 40,000 பள்ளி குழந்தைகளுக்கு கண் பரிசோதனை; கண்களை தானமாய் பெற்று பார்வை மீட்கப்பட்டவர்கள் 610; கிராமங்களில் நடத்தியுள்ள ஆரோக்கிய விழிப்புணர்வு முகாம்கள் 400–க்கும் மேல், இன்னும் ...

எப்படி? மூக்கில் விரலை வைக்கத் தோன்றுகிறது அல்லவா!

ட்ரஸ்ட் ஆற்றிவரும் முக்கியமான பணிகளில் மற்றுமொன்று, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் இலவச சிகிச்சை அளிப்பது.

1987–ம் ஆண்டு சுதந்திர தினத்தை ஆக்கபூர்வமாகக் கொண்டாட நினைத்த ட்ரஸ்ட் ஒரு அழகான அட்டையில் 'அன்புடையீர் சுதந்திர இந்தியாவுக்காக போராடியதன் மூலம் நீங்களும் இந்திய வரலாற்றில் இடம் பெற்று விட்டீர்கள். உங்களை, உங்கள் சேவையை இந்த நாடும், மக்களும் மறக்கவில்லை என்பதை அன்போடு உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். தேசத்திற்காக உழைத்த உங்களுக்கு 'இலவச வைத்திய சிகிச்சை' அளிப்பதன்மூலம் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். உங்களுக்குத் தொண்டாற்ற எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்' என்று அச்சிட்டு, விலாசம் கிடைத்த வரையில் அனைத்து தியாகிகளுக்கும் அனுப்ப, கண்ணில் நீர்மல்க, நெகிழ்ந்துபோய், தள்ளாமையுடன் சிகிச்சைக்கு வந்த சுதந்திர வீரர்கள் ஏராளம் ...

கிராமம் கிராமமாகச் சென்று முகாம்கள் நடத்தியபோது பார்வையிழந்து தவிப்பவர்களின் அவலம் நெஞ்சை முட்ட, ஆறு வருஷங்களுக்கு முன் 'சங்கரா ஐ சொஸைடி' துவங்கப்பட்டது. வெகு சாதாரணமாக காணப்படும் 'காட்ராக்ட்' நோயையும், இன்ன பல கண் உபாதைகளுக்கும் சிகிச்சை அளித்து குணப்படுத்தினாலும், பெரிய நகரங்களில் உள்ள 'கண் வங்கி' களால் கூட சாதிக்கமுடியாத எண்ணிக்கையில் 'கார்னியல் ட்ரான்ஸ்பிளாண்ட்' அறுவை சிகிச்சைகளை செய்து, பார்வை இழந்த 600–க்கும் மேற்பட்ட நபர்களின் கண்களுக்கு இவர்கள் ஒளியூட்டி இருப்பது ஒரு இமாலய சாதனை என்றே நான் நினைக்கிறேன்.

'கார்னியல் ட்ரான்ஸ்பிளாண்ட்' பற்றி குறிப்பிடும்போது சில விவரங்களை உங்களுக்குச் சொல்வது அவசியமாகிறது.

தற்சமயம் இந்தியாவில் இருக்கும் பார்வை குறைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே, இருபது லட்சத்திற்கும் மேலேயே - (இந்தியா எதில் முன்னணியில் நிற்கிறது என்று பெருமைப் படுகிறோமோ இல்லையோ, பார்வை இழந்தவர்கள் உலகிலேயே இங்குதான் அதிகம் என்பதற்கு வேண்டுமானால் மார்தட்டிக் கொள்ளலாம்!) இவர்களில் குறைந்த பட்சம் 10 சதவிகிதத் தினருக்காவது, அதாவது 12 லட்சம் நபர்களுக்காவது, ஒரு சின்ன அறுவை சிகிச்சை மூலம் பார்வையை மீட்டுத் தருவது சாத்தியம்.

எப்படி என்று புருவத்தை உயர்த்துகிறீர்களா? சொல்கிறேன்.

கார்னியா என்பது பாப்பாவுக்கு மேல் பளபள வென்று இருக்கும் வட்டமான தெளிந்த பகுதி. கைக்கடிகாரத்தை மேல் கண்ணாடி எப்படி கௌவிக் கொண்டிருக்கிறதோ, அப்படியே இந்த கார்னியாவும் பாப்பாவுக்கு மேல் படர்ந்திருக்கிறது. ட்ரகோமா, பெரியம்மை, விளையாட்டு அம்மை, கண்வலி போன்ற வியாதிகளுக்கு இந்த கார்னியாவை தாக்கும் சக்தி உள்ளது. தாக்கப்பட்ட கார்னியா தன் பளபளப்பையும் தெளிந்த தன்மையையும் இழந்து பூத்துப் போவதில் பார்வை மட்டுப் பட்டு அடியோடு மறைந்து விடுகிறது. நம் நாட்டு குருடர்களில் பதினெட்டிலிருந்து இருபது லட்சம் வரை இந்தக் கார்னியா பாதிப்பால் பார்வை இழந்தவர்கள்தாம்.

கண்தானம் செய்வதை மட்டும் நாம் பழக்கமாகக் கொண்டு விட்டால் இத்தனை குருடர்களுக்கும் புது வாழ்வு கிடைத்துவிடும்.

உண்மை ... உண்மை தவிர வேறில்லை.

12 லட்சம் சிறுவர், சிறுமியர், இளைஞர் களுக்கு புது வாழ்வு கொடுப்பது மக்களான நம் கையில். நம் கையில் மட்டுமே இருக்கிறது என்பதை கேள்விப்படும்போது எப்படி இருக்கிறது வாசகர்களே? நம் குடும்பத்தில் ஒருவர் இறந்த பிறகு, ஏன், நாமே மரித்ததும், சடலத்தை புதைத்தோ, எரித்தோ செய்வதற்குமுன் கண்களை தானமாகத் தருவதன் மூலம் மேற்சொன்ன 12 லட்சம் மனிதர்களுக்கும் பார்வை தர முடியும் என்பதை நாம் இன்னமும் தெரிந்து கொள்ளவோ, காரியத்தில் இறங்கவோ முனையவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்.

சின்னதாய் ஒரு காரியம் செய்ய முன் வருவதன் மூலம் இருண்டு கிடக்கும் ஒருவர் வாழ்க்கையில் வெளிச்சம் போடும் மகத்தான புண்ணியம் நமக்குக் கிடைக்கும் என்பதை உணர்ந்திருக்கிறோமோ?

ம்ஹூம் இல்லை. நிச்சயமாய் இல்லை.

உணர்ந்திருந்தால் செய்கையில் காட்டி இருக்க மாட்டோமா?

ஒருவேளை கண் தானம் என்பது ரொம்பக் கஷ்டமான காரியமோ?

இறந்தவரை அவலட்சணப்படுத்திப் பின்ன மாக்கும் காரியமோ?

என் கவலையை வெளிப்படுத்த, வைத்தியர் விளக்கினார்.

"கண் தானத்தில் கஷ்டமும் இல்லை. அசிங்கமும் இல்லை. பயங்கரமும் இல்லை. ஒருவர் இறந்து ஆறு மணி நேரத்திற்குள் எங்களுக்குத் தகவல் சொல்லி விட்டால் உடனே நாங்கள் அங்கு சென்று பத்து நிமிஷங்களில் இறந்தவரது கண்களை எடுத்து விடுவோம். இமைகளுக்கு அடியில் பஞ்சு வைத்து மூடி சன்னமாகத் தையல் போட்டு விடுவதால் இறந்தவர் தூங்குகிற மாதிரிதான் தோன்றும். சடலம் பின்னப்பட்டு விடும், கண் குழியாய் பார்க்கப் பயமாக இருக்கும் என்பதெல்லாம் தவறான அபிப்ராயங்கள்..."

"நீங்கள் சொல்வது உண்மை என்றால் ஏன் மக்கள் அதிக அளவில் கண் தானம் செய்ய முன் வருவதில்லை டாக்டர்?"

"அறியாமையைத் தவிர வேறு எதுவும் காரணமாக இருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. படித்தவர்களுக்கு அறியாமை, பொறுப்பின்மை. படிக்காதவர்களுக்கு விவரம் புரியாததால் என்னமோ ஏதோ என்ற பயம் – சமுதாய பிரக்ஞையுடைய ஒரு சிலர் தாங்கள் இறந்தபின் கண்களைத் தானம் செய்ய முன் வருவதுண்டு; ஆனால் இங்கும் அவர் மறைவுக்குப் பின் பந்துக்கள் கண்களை எடுக்கக் கூடாது என்று சொல்லி விடுகிறார்கள். ரொம்பவும் நெருங்கின உறவினர்கள் தவிர மற்ற உறவினர்கள் இறந்தவரின் சடலத்தின் மேல் உரிமை கொண்டாடக்கூடாது என்று அரசாங்கம் சட்டத்தை மாற்றி அமைத்தால், கண் தானங்கள் நிச்சயம் அதிகமாகும். அனாதையாக

ஆஸ்பத்திரிகளில் இறப்பவர்களின் கண்களை எடுத்து உபயோகிக்கலாம் என்பதிலும் சங்கடம் இருக்கிறது. அனாதை என்று முத்திரை குத்த குறைந்த பட்சம் இருபத்திநாலு மணி நேரங்கள் தேவை என்று சட்டம் சொல்கிறது; இதற்குள் கண்கள் வீணாகி விடுகின்றன. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும்போதே அனாதை என்று பதிவு செய்யப்படுகிறவர்களின் கண்களை இறந்தபின் எடுக்கலாம் என்று சட்டத்தை மாற்றினால், அநியாயமாகக் கண்கள் வீணாவதைத் தடுக்கலாம்..."

அரசாங்கம் சட்டத்தை மாற்ற வேண்டும் என்பதற்காக காத்துக் கொண்டிருக்காமல் சரியான விழிப்புணர்வு பிரசாரங்கள் மூலம் எவ்வளவோ சாதிக்கலாம் என்பதற்கு 'சங்கரா கண் வங்கி' ஒரு எடுத்துக்காட்டாகவே விளங்குகிறது.

கோயமுத்தூரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பிரசாரங்கள் மூலம் மட்டுமே சென்ற சில வருஷங்களில் 600-க்கும் மேற்பட்ட கண்களை இறந்தவர்களிடமிருந்து தானமாகப் பெற்று பார்வை இழந்தவர்களுக்குப் பொருத்தி வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பது சாதாரண சாதனையா? கிராமம், சிற்றூர், நகரம் என்று ஒரு இடம் விடாமல் சென்று கண்தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி, மக்களை சம்மதிக்க வைத்து, அவர்கள் பெயர்களை பதிவு செய்து கொள்கிறார்கள். பதிவு செய்து கொண்டதை விடாமல் நினைவூட்ட வேண்டி, அந்தந்த நபர்களுக்கு 'நான் கண்களை தானமாக கொடுக்க விரும்புகிறேன்' என்கிற அழகான அட்டையை கொடுத்து 'இதை தயவு செய்து பிரேம் செய்து உங்கள் வீடு அல்லது அலுவலகத்தில் கண்ணில் படும்படி மாட்டிக் கொள்ளுங்கள்' என்று

சொல்லித் தருகிறார்கள். இதோடு விஸிடிங் கார்ட் அளவில் பர்ஸில் வைத்துக் கொள்ள இன்னொரு அட்டை - எங்கயாவது போன இடத்தில் மரணம் சம்பவித்தாலும், கண்களை தானமாகத் தருவது தடைபட்டு விடக்கூடாது என்பதை உணர்த்த 'நான் கண்களை தானம் செய்ய விரும்புகிறேன். தாமதம் செய்யாமல் அருகாமையில் உள்ள கண் வங்கிக்கு தெரியப்படுத்துங்கள்' என்கிற வாசகங்களுடன் ...

விழிப்புணர்வு, நினைவூட்டுதலோடு 'சங்கரா கண் வங்கி' நின்றுவிடுவதில்லை. யார் வீட்டிலாவது சாவு நிகழ்ந்து விட்டது என்று கேள்விபட்டால், அவர்கள் முன்பின் அறிமுகம் இல்லாதவராய் இருப்பினும்கூட உடனே அங்கு சென்று சம்பந்தப் பட்டவர்களிடம் பக்குவமாய் பேசி, கண் தானத்திற்கு சம்மதிக்க வைக்கவும் முனைகிறார்கள். ஒப்புதல் கிடைத்துவிட்டால் வெகு கச்சிதமாய் பத்தே நிமிஷங்களில் இறந்தவரின் கண்களை அகற்றி, பதிலுக்கு கண்ணாடி செயற்கை கண்களை பொருத்தி, முகம் பழையபடியே காட்சி அளிக்க வைத்து விடுகிறார்கள். தொடர்ந்து, 'இன்னார் கண்களை தானமாகத் தந்து இருவரின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தவர். இவரையும் இவர் குடும்பத்தையும் நினைத்து நாங்கள் பெருமைபடுகிறோம்' என்று மனதார பாராட்டும் பத்திரம் ஒன்றை சட்டமிட்டுத் தந்து தானம் தந்தவரை கௌரவப் படுத்துகிறார்கள்.

மொத்தத்தில் சங்கரா கண் வங்கியின் அக்கறையும், ஆர்வமும் அலாதியாகத்தான் இருக்கின்றன. அவர்களின் வெற்றிக்கு இந்த குணங்கள் அஸ்திவாரமாகின்றன, சந்தேகமே இல்லை.

கண் தானத்தைப் பற்றி மேலும் சில விவரங்களை இங்கு தருவது உபயோகமாக இருக்கும் என்றே நினைக்கிறேன். தயவு செய்து மனசில் அழுத்தமாக எழுதி வைத்துக் கொள்ளுகிறீர்களா?

1. கண்தானம் கொடுக்க விரும்புகிறவர்களின் / கொடுப்பவர்களின் வயதோ, ஆண், பெண் பேதமோ எதுவும் இல்லை.

2. கண்தானம் கொடுக்க மதம் தடையில்லை. மதத் தலைவர்களின் பூரண ஒத்துழைப்பும் ஒப்புதலும் உண்டு.

3. கண் நோயால் அவதிப்பட்டவரின் கண்ணையும் பயன்படுத்த முடியும். அதனால் எந்தத் தொல்லையும் இல்லை. கண்ணாடி அணிந்தவர்கள், காட்ராக்ட் புரை உள்ளவர்கள் போன்ற எல்லோரும் கண்தானம் செய்யலாம்.

4. தானமாகப் பெறப்படும் கண்கள் அவர்களின் வாழ்நாளுக்குப் பின்னர்தான் எடுத்துக் கொள்ளப்படும்.

5. தானம் கொடுப்பவரின் ஆயுள் முடிந்து 6 மணி நேரத்திற்குள் கண்கள் எடுக்கப்பட வேண்டியுள்ள தால் உடனே டாக்டரிடம் தெரியப்படுத்த வேண்டும்.

6. கண்களை எடுக்க எந்தவிதமான தனி அறையோ தனி இடமோ தேவையில்லை.

7. வைத்தியர் வரும் வரையில் கண்கள் தூசியற்றதாகவும், தூய்மையாகவும் இருக்க

கண்களை மூடி ஈரப்பஞ்சு வைத்து கட்டி வைப்பது அவசியம்.

8. கண்கள் எடுக்கும் பணிக்கு 10 நிமிட நேரமே போதுமானது.

9. செயற்கைக் கண்கள் அப்போதே பொருத்தப் பட்டு விடுவதால் கண்களை எடுத்தபிறகு முகத்தில் எந்தவித குறையோ, மாற்றமோ இருக்காது.

சரி புரிந்து விட்டது, மேற்கொண்டு?

1. கண்தானம் கொடுப்பவர்களின் நெருங்கிய உறவினர் அவரின் இறுதிக்காலத்தில் டாக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம்தான் வாழ்ந்தவரின் விழி வாழ்பவருக்கு ஒளிகாட்ட உதவமுடியும்.

2. கூடிய வரையில் நம் உறவிலோ அல்லது சுற்றுப்புறத்தில் வாழ்கின்ற வயதில் முதிர்ந்த பெரியவர்களிடம், கண்தானத்தின் மேன்மையை எடுத்துக்கூறி, அவர்கள் கண்தானம் செய்ய பூரண சம்மதம் அளிக்கும்படி செய்யலாம்.

3. கண்தானம் கொடுக்க விரும்புகின்றவர்கள் இறந்துவிட்டால் துக்கத்தில் இருக்கும் அக்குடும்பத்தாரிடம் கண்தானத்தை விளக்கி அவர்களைச் சம்மதிக்கச் செய்ய முனைய வேண்டும். அக்குடும்பத்தினர் இறந்த ஆத்மாவிற்குச் செய்யும் மிகப் பெரிய தொண்டு அதுதான் என்பதை புரிய வைக்க வேண்டும்.

அவ்வளவுதான் வாசகர்களே – மேற்சொன்ன விவரங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதோடு, தக்க தருணத்தில் செயல்படும் நல்ல பொறுப்புள்ள மனிதர்களாய் நாம் நடந்து கொண்டால், அடுத்த பத்து வருஷங்களில் புது நூற்றாண்டு பிறப்பதற்குள் இந்தியாவின் பார்வை இழந்தோர் எண்ணிக்கை கணிசமாய் குறையும், நிச்சயம்.

கோயமுத்தூரினால் சாதிக்க முடிந்தது தமிழ்நாட்டில், பாரதத்தின் இதர பகுதிகளாலும் சாதிக்க முடியாதா என்ன? முடியும் ... முடிய வேண்டும் ...

18

'தினமணி' நாளிதழின் 27.7.92 தேதி பதிப்பில் 'படிப்பறிவு இல்லாத மக்களின் அறிவுக் கண்களைத் திறந்திடும் பணியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் முதலிடம் வகிக்கிறது' என்கிற விவரத்தை அறிந்துகொண்டபோது இந்த நாட்டுப் பிரஜை என்கிற ரீதியில் மட்டுமல்லாது, சென்ற மாதம் அந்த மாவட்டம் நடத்திய அறிவொளி இயக்க நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்றவள் என்கிற வகையிலும் இந்த சேதி எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும் மனநிறைவையும் அளிக்கிறது.

அறிவொளி இயக்கம் –

பத்திரிகை, தினசரி படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் இந்த இயக்கத்தைப் பற்றி ஓரளவேனும் அறிந்திருப்பீர்கள். இருப்பினும், தெரியாதவர்களுக்காக சில விவரங்களை விளக்க ஆசைப்படுகிறேன்.

திரு. ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது 1995-ம் ஆண்டுக்குள் நாட்டில் உள்ள அனைவரும் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற வேண்டும் என்கிற எண்ணத்தில் மத்திய, மாநில அரசுகளின் ஆதரவுடன்

துவங்கப்பட்டதுதான் 'நாஷனல் லிட்டிரஸி மிஷன்' அதாவது 'தேசிய எழுத்தறிவு இயக்கம்'.

கேரளத்தில் முதன்முதலாக எர்ணாகுளம் மாவட்டத்தில் சோதனை முயற்சியாக நடத்தப்பட்டபோது மக்களின் ஈடுபாடும் பலனும் அமோகமாய் இருக்க, கேரள மாநிலத்திலும், பின்னர் பாண்டிச்சேரியிலும் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 'அறிவொளி இயக்கம்' தமிழ்நாட்டில் பசும்பொன், காமராஜர், புதுக்கோட்டை மாவட்டங்களில் மும்முரமாகச் செயல்படத் துவங்கியது.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் 15 முதல் 35 வயதுடைய லட்சத்து ஏழாயிரம் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குச் சரியாக ஒரு வருஷம் பூர்த்தி ஆவதற்குள் அடிப்படைக் கல்வி அறிவு புகட்ட வேண்டும் என்கிற குறிக்கோளோடு சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த இயக்கம் செயல்பட ஆரம்பித்தது.

பசும்பொன் மாவட்டத்தின் ஆட்சித் தலைவரான திருமதி குத்சியா காந்தி இந்த இயக்கத்தில் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்த முன்வந்ததோடு, ஒவ்வொரு கூட்டத்திலும் தானே முன்நின்று அத்தனை செயல்பாடுகளையும் கவனித்ததில், புள்ளி பிசகாமல் போட்ட அழகான கோலம் போல எண்ணி பன்னிரெண்டு மாசங்கள் முடிவதற்குள் திட்டமிட்ட வகையில் மாவட்டத்தின் லட்சத்து சொச்சம் எழுத்தறிவு இல்லாத மக்களுக்கும் எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்து, தமிழ் நாட்டிலேயே 'கல்லாதவர் இல்லாத முதல் மாவட்டம்' என்கிற

சிறப்பைத் தட்டிச் செல்வது அவர்களுக்கு சாத்தியமாகியிருக்கிறது. ஆட்சித் தலைவருக்கும் அறிவொளி இயக்கத்தோடு சம்பந்தப் பட்ட ஒவ்வொருவருக்கும் நமது பாராட்டுக்கள்.

ஒரே வருஷத்தில் லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு அறிவூட்டுவது லேசுபட்ட காரியமா? என்று உங்களில் சிலர் வியப்பது எனக்குப் புரிகிறது. விளக்குகிறேன்.

முதல் நான்கு மாச காலம் பிரசாரம், கலை நிகழ்ச்சிகள், ஊர்வலங்கள், கூட்டங்கள் மூலம் எழுதப் படிக்க ஏன் அறிய வேண்டும் என்பதை கிராம மக்களுக்கு புரியவைத்து, அடுத்து வரும் ஆறு மாதங்களில் வழக்கமாய் எழுத்துக்களைச் சொல்லிக் கொடுத்து வார்த்தைகளை எழுத வைக்கும் முறையைத் தவிர்த்து, அவர்கள் அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்கும் வார்த்தைகளை முதலில் எழுத, படிக்கக் கற்றுத் தருகிறார்கள். இவற்றோடு எளிமையான கணக்குகள், பயிற்சிகளும் சொல்லித் தரப்படுகின்றன. கடைசி இரண்டு மாசங்களில் அதுவரை கற்ற விஷயங்களை மதிப்பிட்டு (assessment) புரியவைப்பதன் மூலம், எண்ணி பன்னிரெண்டு மாசங்களில், அதாவது ஒரே வருஷத்தில், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான எழுத்தறிவைப் பெறுவது கூடி வந்திருக்கிறது.

பத்துப் பேருக்கு ஒரு ஆசிரியர் என்கிற கணக்கில் முன் வந்த பத்தாயிரம் தொண்டர்கள் எழுத்தறிவிப்பதை ஒரு கடமையாக மட்டும் கொள்ளாமல், கிராம மக்களின் மனம், சூழ்நிலை அறிந்து மனோதத்துவ ரீதியில் செயல்பட்டதும்,

'அறிவொளி இயக்கம்' பசும்பொன் மாவட்டத்தில் மாபெரும் வெற்றி பெற மற்றொரு காரணம் என்று தயங்காமல் கூறலாம்.

'கல்வி அறிவு பெறுவதனால் அறியாமை, தாழ்வு மனப்பான்மை, பயம் நீங்கும். தன்னம்பிக்கை, சரியான தேவையான விழிப்புணர்வு தோன்றும். திறமையும் வாழ்க்கை வளமும் அதிகரிப்பதனால், சமுதாயத்தில் மதிப்பு உண்டாகும். சுற்றி நடப்பவைகளை அறிவதனால் அறிவு வளர்ந்து தனித்து செயல்பட தைரியம் பிறக்கும்...' இப்படிப் பல விவரங்களை கிராம மக்களுக்குப் புரியும்படி கலைநிகழ்ச்சிகள், பேச்சுக்கள் மூலம் எடுத்துச் சொல்லி, அவர்களின் கூச்சம், தயக்கத்தைப் போக்குகிறார்கள். பின்னர் உற்சாகத்தோடு படிக்கத் தூண்டுகிறார்கள்.

எழுதப்படிக்கக் கற்றுத்தரும் அதே சமயத்தில், குட்டிக் கணக்குகள், சாலைக் குறியீடுகள், பேருந்துத் தட எண்கள், கடைவீதியில் உள்ள பெயர்ப் பலகைகள் போன்ற அவசியமான விஷயங்களைச் சொல்லித் தந்து கல்வியறிவு பிறரைச் சார்ந்திருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக செயல்பட உதவுகிறது என்று துல்யமாகப் புரியவைப்பதையும், முக்கியமாய் 'ஒரு வருஷம் பாடம் நடத்தி எப்படியோ அடிப்படைக் கல்வியைத் தந்து விட்டோம்' என்கிற நினைப்போடு கையைத் தட்டிக்கொண்டு நகராமல் ஒவ்வொரு கிராமத்திலும் வாசக சாலை அமைத்து, கற்றதை மறந்து விடாமல் இருக்க அவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு, அவ்வப்போது படித்ததை நினைவூட்டவும் 'அறிவொளி இயக்கம்' தீர்மானித்துச் செயல்படுவதையும் மனப்பூர்வமாகப் பாராட்டியே தீர வேண்டும்.

படிக்க வருபவர்கள் கிராம மக்கள் என்பதால் அவர்கள் கவனத்தைக் கவர்ந்திருக்கும் விதத்தில் எளிமையாய், புரியும்படி பாடல்களை எழுதி, உணர்வுகளை விழிக்கச் செய்கிறார்கள்.

அவற்றில் ஓரிரண்டை நீங்களும் கேளுங்களேன்.

வண்டி மாடு ரெண்டு
காராம் பசு ஒண்ணு
வேட்டவலம் சந்தையில
வாங்குனோம் மாமோய்
வட்டிக்கு வாங்குனோம்
கடனா வாங்குனோம்
வாங்குன காகல வண்டியும் வாங்குனோம்
வண்டிக்கு வேலையில்ல
மாட்டுக்கும் உழவில்லே
வட்டிக்கு வட்டி போட்டுச்சி – குட்டி
வந்தானே வசூலுக்கு கடங்காரன் மாமோய்
எத்தையோ காட்டினான்
என்னவோ எழுதினான்
வாயெல்லாம் பல்லா
என்னென்னமோ பேசினான்

எழுதவும் தெரியாம படிக்கவும் அறியாம
கேட்ட இடத்துல கைநாட்டு வச்சதால
ஏச்சுட்டான் எங்களை கடங்காரன் மாமோய்

இப்போ வண்டியும் போச்சு
மாடும் போச்சு
பொங்கலும் அதுவுமா புலம்புறதாச்சு

பயிர் வச்சநில மெல்லாம் போச்சே!
பாச்சலுக்கு வழியில்லாமே ஆச்சே
தாயிக்கு படைக்க ஒரு வகையில்லாம போச்சே
எல்லாமே போச்சே

அழுது புலம்பினா காரியம் ஆவாது
இதுக்கான காரணம் தேடணும் மாமோய்

எழுதவும் தெரியாம படிக்கவும் அறியாம
எதையுமே மாத்திட முடியாது மாமோய்

இதை யெல்லாம் மாத்தணும்
அதுக்காக படிக்கணும் ஊரெல்லாம்
ஒண்ணாக் கூப்பிடு மாமோய்

தையத்தக தையத்தக தையத்தக தாரோ
தித்தரிகிட தித்தையோம் தத்தரிகிட தாரோ

இன்னும் ஒன்றைக் கேளுங்கள்.

அந்த நாளுல சின்ன வயசுல
பள்ளிக்கூடம் நானும் போகல
அப்பாவும் படிக்கல ஆத்தாளும் படிக்கல
படிப்பின் அவசியம் தெரியல ...
வெவரஞ் சொல்ல ஒரு ஆளுமில்ல
வெளையாட்டா காலமும் போயிருச்சே ...

கழனிக்காட்டுல கால் பதியும் சேத்துல
களையெடுப்பா எங்க ஆத்தா
கருவக் காட்டுல காலில் தச்ச முள்ளோட
வெறகு பெறக்கும் இந்த பாப்பா ...

கம்மங் கருதறுக்க கக்கத்துல கடாப்பெட்டி
காடு மேடுலயும் ஆத்தா ...

அழுகிற தங்கச்சி ஆராரோ பாடிக்கிட்டு
தூக்கிச் சொமப்பா இந்தப் பாப்பா ...

சிட்டுக்குருவி போல சின்னஞ் சிறுசெல்லாம்
பள்ளிக்கூடம் போறதப் பாப்பா ...
தெருவோரத் திண்ணையில கால் மடக்கி ஒக்காந்து
தீக்குச்சி அடுக்கும் இந்தப் பாப்பா ...
பள்ளிக்கூட மணியடிக்கப் படபடன்னு மனசடிக்கக்
கன்னத்துல கண்ணீரு சரியும் – அவ
கவுனுத் துணி கூட நனையும் ...

இப்படி இருந்தவள என்னப் போல பல பேர
எழுதப்படிக்க வச்ச இயக்கம்
இப்ப ஏகப்பட்ட பேருக்கு ஏற்பட்டுப் போச்சு
அறிவொளி என்னும் ஒரு மயக்கம்

ஒறவும் புதுசாச்சு ஒலகம் புதுசாச்சு
ஒவ்வொரு பொருளுமே புதுசாச்சு
மனசுல மத்தாப்பு மொகத்துல கொந்தளிப்பு – கட்டிச்
சோளக் கருதப் போல ஒரு வெறப்பு.

அடிபட்டு நொந்து கிடக்கும் மனங்களை வருடிக் கொடுத்து புது வாழ்க்கை கற்றுக் கொடுப்பதோடு, சுயமரியாதை, பெண் விடுதலை பற்றியும் இப்பாடல்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றன. மாதிரிக்கு ஒன்றைக் கேளுங்கள் –

சைக்கிள் ஓட்டக் கத்துக்கணும் தங்கச்சி – வாழ்க்கை
சக்கரத்தை சுத்திவிடு தங்கச்சி!
அங்கேபாரு சின்னத்தம்பி அழகழகா ஓட்டி வாரான்
அவனுக்கு நீ இளைச்சவளா தங்கச்சி – அந்த
சின்னத்தம்பி ஓட்டும்போது சிங்காரமா நீயும் ஓட்ட
சீக்கிரமா கத்துக்கணும் தங்கச்சி
காரு கப்பல் விமானத்தை கன்னிப்பொண்ணுக ஓட்டுறாக
ஊருக்குள்ள வந்துபாரு தங்கச்சி – இந்தக்
காலத்தோட நீயும் சேர்ந்து கலந்து வளர வேணுமுன்னா
வேகமா நீ சைக்கிள் கத்துக்க தங்கச்சி!
புருஷன் ஓட்டிப்போக பின்னால் பொண்ணுகளெல்லாம்
உட்கார்ந்திருக்க
போனதெல்லாம் பழைய கதை தங்கச்சி – இப்ப
பொண்ணுகளெல்லாம் சைக்கிள் ஓட்ட புருஷன்காரன்
பின்னாலிருக்க
புதியகதையை நீ நடத்து தங்கச்சி.

எப்படி? கேட்கவே ஆனந்தமாக இல்லை?

இந்த ரீதியில் மக்களை உசுப்பி விட்டால் தமிழ் நாட்டிலிருந்து கல்லாமை துப்புரவாய் மறைந்து விடுவதோடு, மக்கள் பல விஷயங்களைக் குறித்துத் தேவையான விழிப்புணர்ச்சியை கண்டிப்பாய்ப் பெறுவார்கள் என்கிற நினைப்பு மனசுக்குள் சந்தோஷ நீரூற்றுகளைக் கூத்தாடச் செய்கிறது.

ஆனால், நண்பர்களே, முழுமையான சமுதாய மறுமலர்ச்சி வேண்டுமென்றால், அதற்கு அரசாங்கம் மட்டும் பாடுபட்டால் போதுமா? ம்ஹூம் போதாது. சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் நீங்களும் நானும் நம்மால் முடிந்ததைச் செய்ய முன் வருவது அரசாங்கத்தின் வேலை பளுவைக் குறைக்கும். நிச்சயம்.

சரி, புரிகிறது. ஆனாலும், புகழோ, அதிகாரமோ இல்லாத என்னால் என்ன செய்ய முடியும் என்று அவசரப்பட்டு உதட்டைப் பிதுக்கி, அவநம்பிக்கையுடன் பேசாதீர்கள். முடியும். நம் ஒவ்வொருவராலும் நிச்சயம் சிறிய அளவிலேனும் பங்காற்ற முடியும். அறிவொளி இயக்கத்தைச் சார்ந்தவர்கள், பத்து மனிதர்களின் அறிவுக் கண்களைத் திறக்க உதவ முடியும் என்றால், நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கு எழுத, படிக்கக் கற்றுத் தருவதன்மூலம் கல்வியறிவு வளர வழி பண்ண முடியாதா? முடியும். முடிய வேண்டும். நம் வீட்டில் வேலை செய்பவரின் மகள், தெருவில் வண்டி நிறுத்தி இஸ்திரி பண்ணித் தருவோரின் பிள்ளை, வழக்கமாய் காய்கறி விற்பவரின் குழந்தை – இப்படி எத்தனை குழந்தைகள் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள்! இவர்களில் ஒரு குழந்தைக்கு, வாரம் மூன்று நாட்களில் அரை மணி ஒதுக்கி ஆறு மாசங்களில் கல்வியறிவு தருவது கஷ்டமா? பிரம்மபிரயத்தனமா? ஆளை அசர அடிக்கும் செலவா? இல்லை, எதுவும் இல்லை. மனம், ஆர்வம் – இவை மட்டும் இருந்தால் தமிழ்நாட்டை எங்கோ உச்சாணியில் கொண்டு வைக்க நம்மால் முடியும் – சத்தியமாய்.

19

அப்போலோ மருத்துவமனைகளின் உதவி தலைவர் திருமதி ரேகா ஷெட்டியுடன் பேசிக் கொண்டிருந்த போது நீங்களும் நானும் தெரிந்து கொண்டு, அது குறித்துத் தீவிரமாய் சிந்தித்து தீர்வு காண வேண்டிய ஒரு பிரச்னையைத் தொட்டு காட்டினார்.

"மக்களிடையே உடல் ஆரோக்கியத்தை பற்றின விழிப்புணர்வை உண்டாக்கும் நோக்கில் வரிசையாய் சில விளம்பரங்களை பெரிய அளவில் வெளியிட்டோம். முதல் விளம்பரத்தில் நாற்பது வயது பெண்ணின் புகைப்படத்தோடு, 'அதிக செலவில்லாத பரிசோதனைகள் மூலம் (அப்போலோ 'வெல் வுமன் செக்அப்' திட்டத்தின் கீழ், ரத்த, மூத்திர, மார்பு, கர்ப்பபை புற்று நோய் பரிசோதனைகளும், மார்பு எக்ஸ்ரே, சாப்பாடு, உடற்பயிற்சி குறித்து ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. கட்டணம் ரூபாய் 300) நீங்கள் ஆரோக்யமாக இருக்கிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ளலாம், வாருங்கள்' என்கிற வாசகங்களோடு பெண்களை சுலபமாக தாக்கக்கூடிய நோய்களை விவரித்து பிரபல தினசரிகளில் பிரசுரித்த போது அதற்கு பலன்

ரொம்பக் குறைவாக இருந்தது. நாளொன்றுக்கு ஒன்று அல்லது அதிக பட்சம் இரண்டு பெண்கள் மட்டுமே ஆஸ்பத்திரிக்கு வந்து 'செக் அப்' செய்து கொண்டார்கள். ஆனால், இன்னொரு விளம்பரத்தில் ஒரு நாற்பது வயது ஆணின் படம் போட்டு, 'உங்கள் கணவரின் இருதயம் சரியாக இயங்குகிறதா? தேகப்பயிற்சி இல்லாமல், உணவு வழக்கங்களும் முறையாக இன்றி, வேலைப் பளு அதிகரிக்கும்போது அது நேரடியாய் உங்கள் கணவரின் இருதயத்தை தாக்கக்கூடும் என்பதை உணர்ந்திருக்கிறீர்களா? எங்களிடம் வாருங்கள். எளிமையான பரிசோதனை மூலம் உங்கள் கணவரின் உடல்நிலை என்ன என்பதை தெரிவிக்கிறோம்' என்று எழுதி வெளியிட்டபோது நம்ப வேண்டும், ஒரு நாளுக்கு சுமார் 50-க்கும் மேற்பட்ட மனைவிமார் அவரவர் கணவர்களை 'செக் அப்'புக்கு அழைத்து வந்தனர் ..."

நான் குறுக்கிட்டேன்.

"நீங்கள் சொல்வதைக் கேட்கும்போது கணவனைக் கவனித்துக் கொள்ள மனைவி எடுக்கும் அக்கறையை அவளைக் கவனிக்க தாலி கட்டியவர் எடுப்பதில்லை என்கிற அபிப்ராயம் எனக்கு உருவாகிறது - அது சரிதானா?"

ரேகா ஷெட்டி தலை அசைத்து ஆமோதித்தார்.

"அது மட்டுமல்ல - இயற்கையாகவே நம் நாட்டுப் பெண்களுக்கு தன்னை கவனித்துக் கொள்ளும் வழக்கம் பெருமளவுக்கு இருப்பதில்லை. புருஷன், குழந்தை குட்டிகளைப் பராமரிக்க அவள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை, தனக்கென்று

வரும்போது மேற்கொள்வது இல்லை. இந்த மனோபாவம் புரிந்த பிறகு விளம்பர உத்தியை மாற்றினோம். பலன் நிச்சயம் கூடுதலாக கிடைத்தது".

"என்ன மாற்றம் செய்தீர்கள்?"

"கண்ணீர் கன்னத்தில் கோடு போட்டுக் கொண்டு இறங்க, பரிதாபமாய் காட்சி அளிக்கும் ஒரு குழந்தையின் படத்தைப் போட்டு "அம்மா எப்போது உடல் நலம் சரியாகி வருவாள்?" என்று கேட்கிற மாதிரி விளம்பரம் செய்தோம். இதோடு - 'உடல்நலம் குன்றினால் அதனால் பாதிக்கப்பட்டு திண்டாடப் போவது நீங்கள் மட்டும் அல்ல, உங்கள் வீடு, குடும்பம், முக்கியமாய் குழந்தைகள். அதை நினைவில் வைத்துக் கொண்டு, உடனடியாய் பரிசோதனைக்கு வாருங்கள்' என்றும் எழுதி இருந்தோம் - 'ஐயோ - நாம் படுத்து விட்டால் குழந்தைகள் அவஸ்தைப்படுவார்களே' என்கிற பயம் முதல் முதலாய் தோன்ற, நாளொன்றுக்கு 20-25 பெண்கள் 'செக்அப்'பிற்கு இன்னமும் வருகிறார்கள் என்றால், அது நாங்கள் கொடுத்த விழிப்புணர்ச்சியால்தானே?"

சந்தேகமில்லாமல் –

ஆண்டாண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக, தான் ஒரு நபர், தனக்கும் விருப்பு வெறுப்புகள் உள்ளன, தன் உடல் மனசுக்கும் ஓய்வு, கவனிப்பு தேவைப் படுகின்றன - போன்ற அடிப்படை பிரக்ஞைகூடப் பெருமளவுக்கு இல்லாத நிலை, மனோபாவம் குறித்து பெண்களுக்கு வேண்டிய விழிப்புணர்வு எக்கச்சக்கம். ஆனால், இது பெண்களுக்குள் மட்டும் ஜனித்தால் போதாது, முக்கியமாய் ஆண்களாலும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் பூரண பலன் கிட்டும் ..."

பெண் என்பவள் தாய்மையின், தியாகத்தின், உழைப்பின், பொறுமையின், இருப்பிடம், அது, இது என்று ஏகத்துக்கு பல நூற்றாண்டுகளால் பேசி வருவதில் தன்னை உருக்கி அல்லது ஒதுக்கிக் கொண்டாவது குடும்ப நலனைப் பேணுவது தன் தலையாய கடமை என்கிற எண்ணம் பல பெண்களுக்கு ரத்தத்திலேயே கலந்திருப்பது உண்மை. தன்னலமற்று வாழ்வது நல்லது தான் என்றாலும், எதற்கும் ஒரு எல்லை வேண்டாமா? சுவர் இருந்தால்தானே சித்திரம்? சுவரை நாசம் பண்ணிவிட்டால் எத்தனை உயர்வாக சித்திரம் இருப்பினும் அதனால் என்ன பயன்?

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் கணவன் (கேசவன்) மனைவி (கஸ்தூரி) இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். போனவருஷம் சாப்பிடமுடியாமல் கேசவன் வயிற்று வலியால் அவஸ்தைபட்ட போது கஸ்தூரி அவனை நல்ல வைத்தியரிடம் காட்டி, வயிற்றில் புண் இருப்பதை 'எண்டோஸ்கோபி' மூலம் தெரிந்து கொண்டு, எப்படியோ கடனை வாங்கியாவது அறுவை சிகிச்சையை கையோடு செய்தாள். அப்புறம் கேசவனுக்கு எந்த தொந்தரவும் இல்லை. ஆனால் கஸ்தூரிக்கு ஆறு மாசமாய் ஓயாத உதரப் போக்கு. ஆள் இளைத்துப்போய், சோகை விழுந்து, வீட்டு காரியம் கூட செய்ய முடியாமல் தளர்ந்து போய் விட்டவளைப் பார்த்து அதிர்ந்து போன நான், அன்று மாலையே கேசவனை சந்தித்து கோபமாக கேட்டேன்.

"உனக்கு ஒன்று வந்தபோது அவன் துடித்துப் போய், உடனடியாய் வைத்தியரைப் பார்த்து ஆவன செய்யவில்லையா? அந்த அக்கறை உனக்கு இருக்க வேண்டாமா? அவள் ஆரோக்கியம் கெடும்போது அந்தக் கவனிப்பை நீயும் அவளுக்குத் தர வேண்டாமா?"

கேசவன் சங்கடத்தில் நெளிந்தான்.

"தவறு என் மேல் இல்லை. 'வா டாக்டரிடம் போகலாம்' என்று இரண்டு தரம் கூப்பிட்டு விட்டேன். 'இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்' என்று கஸ்தூரிதான் மறுத்து விட்டாள். வேண்டுமானால் அவளிடமே கேட்டுப் பாருங்கள். அவள் என்ன குழந்தையா? குண்டு கட்டாக தூக்கியா எடுத்துப் போக முடியும்?"

கேசவன் கூற்றில் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. நான் மறுக்கவில்லை. என்றாலும்?

ஏற்கனவே குறிப்பிட்ட வகையில், பரம்பரை யாக 'நல்ல பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று சிந்தனை பதப்பட்டிருப்பதில் தனக்கு என்று எண்ணுவதே சுயநலமாகி விடுமோ என்கிற தயக்கம் பெண்களுக்குள்ளும் வேர் விட்டிருப்பதால் முதலில் அந்தக் கருத்தை மாற்ற முனைவது கட்டாயமாகிறது.

அவரவர் குடும்பங்களையே உதாரணங் களாக எடுத்துக் கொள்ளலாம். நம் அம்மா அல்லது மனைவி, வீட்டில் இருப்பவரோ, அல்லது வேலைக்குச் செல்லுபவரோ, என்னவாக இருந்தாலும் சின்னச் சின்ன விஷயங்களில் கூட அவர் தேவைகள் என்ன

என்பது புரிந்து நம்மில் எத்தனை பேர்கள் செயல்படுகிறோம்?

சாப்பிடும் போது மனைவிக்கு குழம்போ, மோரோ மிச்சம் இருக்கிறதா என்கிற அக்கறையில் எத்தனை கணவன்மார் சட்டியில் இருப்பதை அவளுக்காக ஒதுக்கி வைக்கிறார்கள்?

'அம்மா நீ டிபன் சாப்பிட்டியா?' என்றோ, 'காலையில் தலைவலி என்றாயே, தேவலையாம்மா?' என்றோ எத்தனை குழந்தைகள், கல்லூரிபோகும் வயதிலிருப்பவர்கள்கூட, அருமையாய் அம்மாவை கேட்கிறார்கள்?

ம்ஹூம் விதிவிலக்காக இங்கொன்றும் அங்கொன்றுமாய் இருப்பதை விட்டுவிட்டால், தாய், மனைவி மேல் நிஜமான அக்கறையுடன் (அன்பையும், அக்கறையும் தயவு செய்து குழப்பிக் கொள்ள வேண்டாம்) இருக்கும் ஆடவர், குழந்தைகள் ரொம்பக் குறைவு என்பது புரியும்.

We take them for granted - 'அவர்கள் அப்படித் தான்' என்று நாமே தீர்மானிப்பதுடன் அதையே கடைப்பிடித்தும் விடுகிறோம். இதுதானே நிஜம்?

இந்த நிலை மாற வேண்டும் நண்பர்களே. பெண்களை, சொந்த விருப்பு வெறுப்பு, தனிப்பட்ட ரசனைகள் கொண்ட நபராக பார்க்க, பழக, ஏற்க, முக்கியமாய் மரியாதை கொடுக்க சமுதாயம் முன் வர வேண்டும். இது ஒன்றுதான் பெண்களின் ஆக்கப் பூர்வமான வளர்ச்சிக்கு வித்திடும்.

பெண்ணும் 'நான் இப்படித்தான் இருக்க வேண்டும்' போன்ற தேவையற்ற விலங்குகளை

தனக்குத் தானே பூட்டிக் கொள்வதை நிறுத்த வேண்டும். 'எனக்கும் சாக்லெட் பிடிக்கும்' என்று குழந்தைகளுக்கு கொடுக்கும் போதும், 'கூட்டு கொஞ்சமாக இருக்கிறது. எனக்கு ஒரு கரண்டி வைத்து விட்டுச் சாப்பிடுங்கள்' என்று உணவு பரிமாறும் போதும் தனக்காக ஒதுக்கிக் கொள்வதில் தவறு ஏதும் இல்லை என்று அவள் உணர வேண்டும். குழந்தை, கணவரின் உடல் நலத்தில் கவனம் செலுத்துவது போலவே தன் ஆரோக்கியத்தையும் எச்சரிக்கையுடன் கவனித்துக் கொள்வது சுயநலமான செய்கை அல்ல என்பதையும் அவள் புரிந்து கொள்ள வேண்டும்.

புரிந்து கொள்ளாத பெண்கள், தங்களை, தங்கள் தேவைகளை சரிவரப் புரிந்து கொள்ள மற்றவர், முக்கியமாய் ஆண்கள் அவளுக்கு உதவுவது மிகமிக அவசியம்.

எதற்காகத் திரும்பத் திரும்ப இந்தக் கருத்தை வலியுறுத்துகிறேன் என்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

அப்போலோ வெளியிட்ட மூன்றாவது விளம்பரத்தைப் பார்த்து விட்டு தனக்காக இல்லா விடினும் 'குழந்தைகள் பொருட்டாவது நான் ஆரோக்யமாக இருக்க வேண்டும்' என்கிற உந்துதலில் பரிசோதனைக்கு வந்த பெண்களில் நூற்றுக்கு எண்பத்தைந்து பேர்களிடம் ரத்த அழுத்தம், (BP) சர்க்கரை வியாதி, ரத்த சோகை, கர்ப்ப பை, மார்பக புற்று நோய் போன்ற வியாதிகள் கண்டுபிடிக்கப் பட்டன. ஆரம்ப நிலையில் இருந்தவர்கள் சரியான கவனிப்பின் காரணமாய் சிகிச்சை எடுத்ததில் நோயிலிருந்து அறவே விடுபட முடிந்தது. மாறாக, பல

அறிகுறிகள் இருந்தும் கவனிக்கப் படாமல் நோய் முற்றிப் போய் விஷயத்தை புரிந்து கொண்டவர்களும் அந்த பட்டியலில் இல்லாமல் இல்லை. சரியான விழிப்புணர்வு மூலம் அவஸ்தை, வலியை தவிர்க்கலாம். அதை விட்டுவிட்டு கண் கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் பண்ணுவதனால் யாருக்கு என்ன பலன்?

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும்தான் ...

16856
3288079

20

பொதுவாக நம் மக்களுக்கு அதிலும் முக்கியமாய் பெரும்பாலான பெண்களுக்கு 'ஹெல்த் அவேர்னஸ்', உடல் நலம் குறித்த விழிப்புணர்வு கம்மி என்பதை வலியுறுத்த நூற்றுக்கணக்கான உதாரணங்களை எடுத்துச் சொல்லலாம் என்றாலும் இப்போது உங்களுக்கு இருவரை மட்டுமே அறிமுகம் செய்யப் போகிறேன்.

இந்த இருவருமே - அம்மா, அத்தை, அக்கா, அண்ணியாகவோ, அல்லது நண்பர் வீட்டு பெண்மணியாகவோ உங்களில் பலருக்கு ஏற்கனவே பரிச்சயமாகி இருப்பார்கள் என்றே நான் நம்புகிறேன்.

முதலில் - குமாரி. பெயரைப் பார்த்து விட்டு சின்னஞ்சிறுசு என்று கற்பனை பண்ண வேண்டாம். குமாரிக்கு தற்சமய வயசு 48. சென்னையில் பிறந்து, மதுரையை புகுந்த வீடாகக் கொண்டு வாழ்பவர். பள்ளி படிப்பை முடித்த ஒரு வருஷத்திற்கெல்லாம் குமாரி திருமதியாகி விட்டார். இருபது வயசுக்குள் அடுத்தடுத்து இரண்டு குழந்தைகளும் பிறந்துவிட, சீக்கிரமே சம்சாரியாகிப் போனார்.

வயசுக்கு வந்த நாளிலிருந்தே குமாரியை மாதவிலக்கு படுத்தி வந்திருக்கிறது. குறித்த நாளில் வராது; ஒரு தரம் ஒன்றுமே இருக்காது, இன்னொரு முறை ஆறு, ஏழு நாட்களுக்கு போக்கு இருக்கும். திருமணமாகுமுன் ஓரிரு முறைகள் அம்மாவிடம் இப்பிரச்னை சம்பந்தமாய் பேசியபோது அம்மா "எனக்கும் அப்படித்தான் இருந்தது. கல்யாணமானால் சரியாகிவிடும்' என்று கூற, மேற்கொண்டு யாரும் எதுவும் செய்ய முனையவில்லை.

திருமணமாகி, குழந்தைகள் பிறந்ததும், மாதவிலக்கு பிரச்னையில் மாற்றம் ஏதும் இல்லாது போனதோடு, உதிர போக்கு ஏகமாய் இருக்க முற்பட, புருஷன் மாமியார், அம்மாவிடம் தயக்கத்துடன் குமாரி விவரத்தை வெளியிட்டதுண்டு.

அப்போதெல்லாம் "இது பெண்கள் விவகாரம். என்னிடம் ஏன் சொல்கிறாய்?' என்று கணவனும், 'பெண்ணாகப் பிறந்தாலே இந்த ரோதனைதான். என்ன செய்வது? உங்கள் பரம்பரையில் இந்தக் கோளாறு உண்டா என்று அம்மாவிடம் கேள்' என்று மாமியாரும், 'ஐயோ - என்னைக் கொள்ளாமல், உன் அத்தையை கொண்டு விட்டாயே! அவளுக்கு இப்படித்தான் ஓயாமல் போகும். 'அவலக்குணத்துக்கு அத்தை' என்று சொல்வது உன் விஷயத்தில் சரியாகப் போயிற்று போ' என்று அம்மாவும் கூற, 'சரி, இது என் தலைவிதி' என்று குமாரியும் நிலைமையை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டார்.

குமரிக்கு நாற்பது வயசாகையில் ஒருதரம் ரொம்பவும் உதிரப் போக்கு அதிகமாகி, மயங்கி விழும்

நிலைக்கு வந்ததும் பயந்து போய் பெண் வைத்தியரிடம் போனால், அவர் 'கர்ப்பப்பையில் கட்டி வளர்ந்திருக்கிறது. இத்தனை வருஷங்களாக என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ஏன் முன்னரே கவனிக்கவில்லை?" என்று திட்டி விட்டு, அறுவை சிகிச்சை மூலம் பப்பளிமாஸ் அளவில் ஒரு கட்டியை வெளியே எடுத்துப் போட்டார்.

இதற்குப் பிறகு குமாரியின் குணம் ரொம்பத்தான் மாறிப் போயிற்று. 20 வருஷங்களாக தான் அவஸ்தைப்பட்டபோது குடும்பத்தார் அக்கறையாய் கவனிக்கவில்லை என்கிற குறை துளி துளியாய் வளர்ந்து 'இந்தக் குடும்பம் சுயநலமானது. இவர்களுக்காக நான் உழைத்து ஓடானேனே தவிர, பதிலுக்கு அன்போ, கரிசனமோ கிட்டவில்லை' என்கிற எண்ணம் ஆழமாகப் பதிந்து போக, இன்றைக்கு குமாரி ஒரு மனநோயாளியாகவே மாறிவிட்டார்.

புருஷனும், பிள்ளைகளும் அவர் தும்மினாலும், இருமினாலும் கூட, 'ஏன் என்ன?' என்று பதறிக் கொண்டு கேட்க வேண்டும், கவனிப்புத் தர வேண்டும். இல்லாவிட்டால் வீடு இரண்டுபட்டு விடும். எந்நேரமும் முக்கல் முனகலோடு படுக்கைதான். கேட்டால் 'என் துன்பம் உங்களுக்கு என்ன தெரியும்?' என்பார் காட்டமாய். சின்ன விஷயத்தையும் ஒதுக்கித் தள்ளாமல் பெரிய சண்டையில் கொண்டு நிறுத்துவார். மொத்தத்தில் முன்பு சிரித்த முகம், சுறுசுறுப்பு, அன்பான குணம் என்றிருந்த குமாரி இன்று சுத்தமாய் காணாமல் போய் விட்டார் என்பது வருந்தத் தக்கது.

அடுத்து, யசோதா. எனக்கு ஜூனியராக கல்லூரியில் படித்தபோது அறிமுகம் ஆனாள். துருதுருவென்று இருப்பாள். அதிபுத்திசாலி. வசதியில்லாத குடும்பத்தைச் சார்ந்தவள். டிகிரி முடித்ததும் தனியார் கம்பெனியில் வேலை தேடிக் கொண்டு விட்டாள். வயசான அம்மா, தம்பிகளை காப்பாற்ற வேண்டும் என்கிற கடமையுணர்வில் திருமணம் கூடச் செய்து கொள்ளவில்லை.

யசோதாவின் அப்பா பரம்பரையில் 'சர்க்கரை நோய்' தாக்குதல் நிறையவே உண்டு. இது என் ஸ்னேகிதிக்கும் தெரியும்தான் என்றாலும் அது விஷயமாய் அவள் அதிகம் அலட்டிக் கொண்டதில்லை. நல்ல குண்டு. ஆனாலும் எதையும் பொருட்படுத்தாமல் நிறைய இனிப்பு சாப்பிடுவாள். "நாற்பது வயசாகிவிட்டால் சாப்பாட்டில் கட்டுப்பாடு வேண்டும் என்பார்கள். நீ கவலைப்படாமல் இருக்கிறாயே!' என்றால், அலட்சியமாய்ச் சிரிப்பாள். "குச்சிமாதிரி இருப்பவர்கள் கூட சடும்மென்று நினைத்த நினைப்பில்லாமல் மாரடைப்பில் போய்விடுகிறார்கள். வாழ்க்கையை அனுபவிக்காவிட்டால் எப்படி? எனக்கு ஒன்றும் வராது" என்பாள் நம்பிக்கையுடன்.

யசோதாவின் இந்தப் போக்கை அவள் தம்பிகளோ, அல்லது வேறு எவருமோ கூட மாற்ற முயற்சிக்காததுதான் ஒரு துரதிருஷ்டம். 'அவள் அப்படித்தான்' என்று மற்றவர்களும், 'செக்அப் செய்ய வைத்தியரிடம் போறதா? நானா? அதற்கெல்லாம் அவசியம் இல்லை' என்று பிடிவாதமாய் யசோதாவும் ஒருவித அலட்சியபோக்கை கடைப்பிடித்ததில் கடைசியில் பெரிசாய் அடிபட்டது அவள்தான்.

அப்பாவின் சொத்தாக உள்ளே புகுந்த சர்க்கரை வியாதி மளமளவென்று வேர் விட்டு உடம்பைப் பாதித்ததில் ஆணி குத்தி புரை ஓடிய ரணம் சரியான முறையில் கவனிக்கப்படாமல் போனபோது இறுதியில் வலது காலையே எடுக்கும்படி அல்லவா ஆயிற்று! என்ன கொடுமை, வேதனை இது!

நாற்பத்தி நாலு வயசில் கக்கத்தில் கட்டையை இடுக்கிக் கொண்டு யசோதா வேலைக்குப் போய் வருகிறாள். இப்போதெல்லாம் மாவு, இனிப்புப் பதார்த்தங்களை விரலால் கூட தொடுவதில்லை. 'புத்தி வந்து விட்டது' என்கிறாள், வேதனைச் சிரிப்புடன்.

ஒரு விஷயத்தை தெரிந்து கொள்வதற்காக செலவழிக்கும் பணத்தை, பெரியவர்கள் 'புத்தி கொள்முதல்' என்பார்கள். தவறு செய்து அந்த அனுபவத்தின் மூலம் விழிப்புணர்வு பெறுவதைக் கூட விஷயம் அறிந்தவர்கள் 'புத்தி கொள்முதல்' என்று குறிப்பிடுவதுண்டு.

யசோதாவுக்கு இப்போது 'புத்தி' வந்து விட்டது. ஆனாலும்? காலை விலை கொடுத்தா இந்த அறிவைப் பெற வேண்டும்? யோசிக்க வேண்டும், நண்பர்களே.

துவக்கத்திலேயே பிரச்னை இனம் கண்டு கொள்ளப்பட்டு, தகுந்த சிகிச்சை அளிக்கப் பட்டிருந்தால் மேலே சொன்ன இரண்டையும் முளையிலேயே கிள்ளி இருக்க முடியும். தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கும் கதையாய் முதல் அறிகுறிகள் தென்பட்ட உடனேயே சம்பந்தப்பட்டவர்களும், அவர்களைச் சுற்றி இருந்தவர்களும் தேவையான அக்கறையுடன் கவனித்திருந்தால்,

இன்றைக்கு பூதாகாரமாக அந்தந்த பெண்கள், ஏன், அவர்கள் குடும்பங்கள் கூட பாதிக்கப்பட்டிருப்பதை தவிர்த்திருக்கலாம்.

இங்கே ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். எல்லோருக்கும், முக்கியமாய் பெண்களுக்கு உடல்நலம் குறித்த விழிப்புணர்வு தேவை என்று சொல்லும் அதே நேரத்தில் அனாவசிய பிகு, சீராடல் (fussing and pampering) கூடவே கூடாது என்றும் அழுத்தம் திருத்தமாக நான் கூறுவதை யாரும் மறந்து விடக் கூடாது. சாதாரண ஜலதோஷ, தலைவலிக்குக் கூட 'ஊரைக் கூட்டி ஆர்பாட்டம்' செய்யும் நபர்களையும் நான் அறிவேன். இது தவறு.

ஆரோக்கியமாய் வாழ, சரியான விழிப் புணர்வு, தொடர்ந்து தேவையான நடவடிக்கைகள் இரண்டும் உதவுகின்றன என்பது நிபுணர்களின் கணிப்பு.

மீண்டும் சொல்கிறேன் - 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும்தான்!

21

ஆகஸ்ட் 20. மறைந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜிவ் காந்தியின் பிறந்த நாள். இன்றைய பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களால் 'சத் பாவனா திவஸ்' என்று அறிவிக்கப்பட்டு நாடு முழுவதும் 'நல்லுணர்வு' தினமாகக் கொண்டாடப்படும் நாள்.

இன்று காலை சென்னை 'மதிய தோல் ஆராய்ச்சி நிலைய (CLRI) கொண்டாட்டத்தில் பங்கேற்று சிறப்புரை ஆற்ற நிர்வாகிகள் அழைத்திருந்ததன் காரணமாய் அங்கு சென்றிருந்தேன்.

'நாட்டின் ஒற்றுமையைப் பேணிக் காப்போம், ஜாதி, மத பேதங்களற்ற சமுதாயத்தை உருவாக்குவோம், வன்முறையை பூண்டோடு ஒழிப்போம்' என்கிற சபதங்களை கூடியிருந்தோர் ஏற்ற பிறகு 'தேச ஒற்றுமை' பற்றி பேசினேன்.

பின்னர் CLRIன் நிர்வாக இயக்குநர் டாக்டர் தியாகராஜனுடன் பேசிக் கொண்டிருந்த போது சென்ற மார்ச் மாசம், அதாவது சரியாக ஐந்து மாதங்களுக்கு முன் அவருக்கும், அவரது துணைவியார் திருமதி சியாமளாவுக்கும் நேர்ந்த ஓர் பயங்கர அனுபவத்தை அவர் விவரிக்க நான்

அதிர்ந்தேன். நடுங்கினேன். கலங்கி, உடைந்து போனேன்.

நீங்களும் அந்தக் கோர சம்பவம் என்ன என்று தெரிந்த கொள்ளுங்கள்.

டாக்டர் தியாகராஜனும் அவர் மனைவி சியாமளாவும் அடையாறில், CLRI காம்பௌண்டுக்குள்ளேயே டைரக்டருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பங்களாவில் வசிக்கிறார்கள். ஆறு வருஷங்களுக்கு முன் ரவி என்கிற பதினெட்டு வயது இளைஞனை தோட்ட, வீட்டு வேலைக்காக அமர்த்தியிருக்கிறார்கள். வேலைக்காரனைப் போல ரவியை நடத்தாமல், குடும்பத்தில் ஒருவனாக அவர்கள் கருதி அவன்பால் அன்பு செலுத்தி வந்திருக்கிறார்கள். நடுவில் சுமார் ஒண்ணரை வருஷங்களுக்கு இங்கிலாந்துக்குச் செல்ல வேண்டியிருந்த போது 1500 ரூபாயில் ஒரு ஃபிளாட் எடுத்து ரவியும், தங்கள் வளர்ப்புச் செல்வங்களான இரண்டு நாய்களும் வசதியாக இருக்க ஏற்பாடு பண்ணிவிட்டுச் சென்றார்கள் என்பதிலிருந்து அந்த பையனிடம் இவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும், அன்பையும் நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

இங்கிலாந்திலிருந்து திரும்பி CLRI பங்களாவில் வாசம் செய்ய துவங்கிய போது ரவி முன் போல இல்லை என்பதை தியாகராஜன் தம்பதியரால் உணர முடிந்தது. பழைய அன்பு, அடக்கம், நிதானம்? ம்ஹூம். ஒன்று இல்லை. கண்களிலும், முகபாவத்திலும் சதா ஒரு வெறுமை (dazed look) சுதந்திரம் கிடைத்து தனியாக இருந்த நாட்களில் சகவாச தோஷம் சரியாக இல்லாமல் போய், போதை மருந்து, சாராயம் உட்கொள்ளும் பழக்கம் வந்து விட்டதா? விசாரித்த வரையில் தெளிவாக ஒன்றும் புரியவில்லை.

ரவிக்கு வீட்டு வேலை செய்ய பிடிக்கவில்லை என்பதை ஊகிக்க முடிய வேறு எதற்காவது பயிற்சி கொடுத்து நல்ல சம்பளம் வரக்கூடிய வேலை ஒன்றை வாங்கித் தந்தால் மாற்றம் வரலாம் என்கிற நம்பிக்கையில் கார் ஓட்ட கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் ரவி தேறவில்லை. மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று டாக்டர் தியாகராஜன் யோசித்துக் கொண்டிருக்கயிலேயே ரவி தான் திருமணம் செய்து கொள்ளத் திட்டம் போட்டான்.

ரவிக்கு ஒரு தங்கை உண்டு. மற்றொரு குடும்பத்தில் இவர்களைப்போலவே அண்ணன் தங்கையாய் இருந்தவர்களோடு சம்பந்தம் பேசி முடித்த பிறகு சற்றும் எதிர்பாராத விதமாய் அந்த அண்ணன் ஒரு விபத்தில் இறந்து போனான். அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்த கம்பனியிலிருந்து நஷ்ட ஈடாக மூன்று லட்ச ரூபாய் தங்கைக்கு வந்து சேர, திடீர் பணக்காரியாகிவிட்ட அவள் ரவியை மணக்க மறுத்து விட்டாள்.

சென்ற மார்ச் மாசத்தில் ஒரு நாள் மாலை ஆறே முக்கால் மணிக்கு டாக்டர் தம்பதி 'நல்லவன்' என்கிற படத்தை வீடியோவில் பார்த்துக் கொண்டிருந்த போது, அதில் ஒரு பெண் கத்தியால் குத்தப்படும் காட்சி முடிந்த நொடியில் பின்னாலிருந்து டாக்டர் தியாகராஜன் மேல் திடீர் என்று ரவி பாய்ந்திருக்கிறான். கையில் புல் வெட்டும் பட்டாக்கத்தி!

கண் மூடி திறப்பதற்குள் முதல் வெட்டு டாக்டரின் மண்டையில் ஓங்கி விழுந்திருக்கிறது.

மண்டை வெட்டப்பட்டு ரத்தம் பிரவாகமாய் வெளிப்பட, டாக்டர் என்ன ஏது என்று புரிந்து சுதாரித்துக் கொள்வதற்குள் சரமாரியாய் கை, தோள் என்று வெட்டுகள். பதறிக் கொண்டு தடுக்க வந்த சியாமளாவை இளநீர் சீவுவது போல வெட்டியதில் இரண்டு பக்கம் கன்னங்களும் அறுந்து, தாடை எலும்பு உடைந்து போயிற்று.

அந்த ஒரு சில நிமிஷங்களில் டாக்டர் தம்பதி வாங்கியது பதினெட்டுக் கத்திக் குத்து, வெட்டு களுக்கும் மேலேயே...

கொட்டும் ரத்தம், பீறிடும் வலியை பொருட்படுத்தாமல் எப்படியோ தப்பித்து டாக்டர் வெளியே ஓடிவந்து, கேட்டில் நின்ற காவலாளிக்கு குரல் கொடுக்க, ஓடிய ரவியை காவலாளிகள் துரத்திச் சென்று, எதிரில் உள்ள வி.எச்.எஸ். ஆஸ்பத்திரிக்கருகில் பிடித்து விட்டார்கள்.

டாக்டர் மாதங்கி ராமகிருஷ்ணன் உடனடியாய்த் தேவையான அறுவை சிகிச்சைகளைச் செய்து, பின்னர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு நிபுணர்களால் தக்க விதத்தில் கவனிக்கப்பட்டு, எப்படியோ உயிர் பிழைத்து, இன்று பழைய அளவுக்கு இல்லாவிடினும், ஓரளவுக்கு நடமாடி, புனர் வாழ்வு வாழ முயற்சிக்கும் டாக்டர் தம்பதியை நேரில் பார்த்த போது எனக்கு அடிவயிற்றில் குபீர்ரென்று 'தீ' பற்றி எரிந்தது.

முன், மேல், பின் மண்டை, கழுத்து, கன்னம், பூராவும் தையல் கோலங்கள். சியாமளாவின் கையில் ஒரு விரல் இல்லை. டாக்டரின் வலது கை இன்னமும் பூரண உபயோகத்திற்கு வரவில்லை!

என்ன அநியாயம் இது!

பிள்ளை போல வேலைக்காரனை வளர்த்ததற்கு இப்படி ஒரு பரிசா?

வீட்டையும், வாழ வைப்பவர்களையும் காப்பதற்கு பதிலாய் வேலியே பயிரை மேய்ந்த கதையாய் என்ன அக்கிரமம் இது!

இப்போது சகஜமாக அந்த சம்பவம் குறித்து டாக்டர் தம்பதி பேசினாலும் 'It was a nightmarish experience -' என்றார் டாக்டர் தியாகராஜன்.

'வன்முறையைப் பூண்டோடு ஒழிப்போம்' என்கிற சபதத்தை ஏற்ற நாளில் நம்பமுடியாத அந்த வன்முறை நிகழ்ச்சியைக் கேட்ட அதிர்ச்சியில் உடம்பும் மனசும் உதறிப் போட, "இந்த சம்பவம் பற்றி எழுத அனுமதிப்பீர்களா? பெயர், மற்ற விவரம் ஏதும் குறிப்பிடாமல் எழுதுகிறேன்" என்றேன்.

துளி தயக்கமின்றி பதில் உடனே வந்தது.

"எதற்காகப் பெயரை குறிப்பிடாமல் இருக்க வேண்டும்? இன்னாருக்கு, இப்படி நடந்தது என்று அத்தனையும் ஒன்று விடாமல் எழுதுங்கள். எங்களுக்கு நேர்ந்த பயங்கர அனுபவத்தை ஆயிரக்கணக்கானவர் தெரிந்து கொள்வதன் மூலம் சமுதாயத்திற்கு இந்த நிகழ்ச்சி ஒரு பாடமாக, விழிப்புணர்வு தரும் பாடமாக, இருக்கட்டும்"

எப்பேர்ப்பட்ட பாடம்!

தகுதிக்கு மீறிய அன்பும், அரவணைப்பும் காட்டியபோதும் ரவியை இப்படி நடக்கத் தூண்டியது எது?

ஒவ்வொரு மனிதனுள்ளும் இருக்கும் வன்முறை குணத்தை தூண்டிவிடக் கூடிய அளவில் சமுதாயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளா? திரைப் படங்களா? எழுத்துக்களா?

என்ன?

சிறையில் இருக்கும் ரவியைக் கேட்டால் "எனக்கு CLRIல் டாக்டர் வேலை வாங்கித் தரவில்லை என்ற ஏமாற்றத்தோடு வேறு இருவர் மேல் கோபம் இருந்ததை அவர்களிடம் வெளிப்படுத்த வாய்ப்பு இல்லை. அதனால் டாக்டர் தம்பதியிடம் வெளிப்படுத்தினேன்" என்று சொல்லுகிறான்.

யாரை நினைத்து, யாரைத் தாக்குவது?

'ரவிக்கு பெரிய அளவில் 'மெண்டல் டிப்ரஷன்' மனச்சோர்வு உண்டாயிருந்திருக்கலாம், அதோடு சகவாச தோஷம், கெட்ட பழக்கங்கள், இதர தூண்டுதல்கள் சேர்ந்து கொண்டிருக்கலாம்' - என்பதும், 'திருமணம் பேசி முடித்த பெண் பணக்காரி ஆகிவிட்டதுடன், பணம் இல்லை என்பதற்காக மறுத்ததும் ஒரு காரணமாகி, எஜமானர்களைக் கொலை செய்து விட்டு பணத்துடன் தப்பிக்க ரவி எண்ணியது காரணமாக இருக்கலாம்' என்பதும் நிபுணர்கள், போலீஸ் ஊகங்கள்.

ஏதோ ஒன்றோ, அல்லது அத்தனையும் சேர்ந்ததோ - மொத்தத்தில் சோறு போட்டு வளர்த்து சொந்த மகன் போல பேணியவர்களையே கொலை செய்ய ஒரு நபரைத் தூண்டும் அளவுக்கு மனித மதிப்புகள், நேர்மை, நாணயம், தர்மம் குறைந்து நாட்டில் வன்முறை தலை விரித்தாடத் துவங்கி

விட்டதை டாக்டர் தியாகராஜன் தம்பதிக்கு ஏற்பட்ட அனுபவம் சமுதாயத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பதுதானே நிஜம்?

இந்த அபாய நிலையை தடுத்து நிறுத்த, அடியோடு வெட்டி வீழ்த்த, அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? சமுதாயத்தின் அங்கமான நீங்களும் நானும் என்ன செய்யப்போகிறோம்?

காரணம் எது அல்லது எவைகளாக இருப்பினும் நமக்காக இல்லாவிடினும் நம் வருங்கால சந்ததியினரின் நிம்மதியான வாழ்க்கைக்காகவாவது தீர்வு முயற்சிகளை, போர்க் கால நடவடிக்கை போல இப்போதே, இந்த நிமிஷத்திலிருந்தே நாம் சிந்திக்க, தொடர்ந்து செயலிலும் காட்ட, தருணம் வந்து விட்டதல்லாவா?

22

மனோதத்துவ நிபுணர் டாக்டர் வி. ராமசந்திரனோடு பேசிக் கொண்டிருந்தபோது வன்முறை குறித்து அவர் வெளியிட்ட ஒரு கருத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

"வன்முறை, வக்ரம், அடுத்தவர் வேதனையில் மகிழ்ச்சி காண்பது (Violence, perversion, saddism) போன்ற தேவையற்ற குணங்களும், இதர நல்ல குணங்களோடு ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் இயற்கையாகவே இருக்கின்றன. கூடிய வரையில் 'நெகடிவ் தாட்ஸ்' என்று சொல்லக்கூடிய கீழ்த்தரமான உணர்வுகளை அதிகமாக்கும் வகையில் 'மாஸ் மீடியா' அதாவது திரைப்படம், தொலைக்காட்சி, பத்திரிகைகள், செயல்படாமல் இருப்பது வளரும் சமுதாயத்திற்கு நல்லது செய்யும். இளவயது பிராயம் துடிப்பு நிறைந்த பருவம். பல சந்தர்ப்பங்களில் சட்டென்று உணர்ச்சி வசப்பட்டுப்போகக்கூடிய, நல்லது கெட்டதை ஆராய்ந்து நிதானமாய் செயல்பட வேண்டிய அவசியத்தை உணர முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்லும்போது அது அவர்களை ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்க

தூண்டுகிறதாக இருக்கிறதா, என்கிற கட்டுப் பாட்டுடன் 'மாஸ் மீடியா'வைச் சார்ந்தவர்கள் யோசிப்பது மிக அவசியம். வக்ரத்திலும், வன்முறை யிலும் ஒரு த்ரில், பரவசம் இருக்கிறது. மறுக்கவில்லை. என்றாலும், விளைவுகள் ஆரோக்யமாக இருந்தால் தானே நாளைய தலைமுறையினர் நல்லவிதமாக வாழ்வது சாத்தியமாகும்!"

டாக்டரின் கருத்தை நானும் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

வக்ரம், காழ்ப்புணர்ச்சி, கேவலமான சிந்தனைகள் எப்போதும் இல்லாவிடினும், அவ்வப்போதாவது உள்ளுக்குள் தலை காட்டாத மனிதர் அபூர்வம். தெருவில் செல்லும்போது யாரோ போடும் சண்டையை நின்று பார்ப்பதும், விபத்து நடந்துவிட்டது என்று கேள்விப்பட்டால் ஆள் தெரியாவிடினும் 'என்ன ஆயிற்று?' என்கிற ஆர்வத்துடன் நின்று கவனிப்பதும் நாம் எல்லோருமே செய்யும் காரியங்கள்தாமே? அதுவும் வன்முறையை ரசிப்பது பலருக்கு ஒரு குணமாகி விட்டதாகவே நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் ரத்தம் பெருகும் குத்துச் சண்டைகளும், முதுகில் ஒவ்வொரு கத்தியாக செருகப்பட்டு துளித்துளியாக மாடு மடியும் ஸ்பானிஷ் மாட்டுச் சண்டைகளும் (Bull fight) கோழியின் சண்டையும், மஞ்சிவிரட்டு விளையாட்டும் பல ஆயிரம் மக்களால் ரசிக்கப்படுவது எங்ஙனம்?

1986ல் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது அங்கு எனக்குண்டான அனுபவத்தை 'புதிய சுவடுகள்' என்கிற பயணக் கட்டுரையில் எழுதியிருந்ததை இந்த சந்தர்ப்பத்தில் மீண்டுமொரு முறை ஞாபகப்படுத்து கிறேன்.

'பதினோரு மாடி அளவுள்ள திரையில் விசேஷ புரொஜெக்டர்கள் கொண்டு, எப்காட் செண்டருக்கென ப்ரத்யேகமாய் தயாரிக்கப் பட்டிருக்கும் மைக்கேல் ஜாக்ஸனின் 'காப்டன் ஈ க்யூ' என்கிற படத்தைக் காட்டினார்கள்.

ஜோடனை, பாடல், ஆட்டம் எல்லாம் மிகப் பிரமாதமாக இருந்தபோதும், பிணங்ச:- ஒன்று கூடி ஆடுவதாக சித்தரிக்கப்படும் அந்திட படத்தை பார்த்துவிட்டு வந்து வெகு நேரமாகியும் மனதை வேதனை காரணமில்லாமல் ஆக்ரமித்தது நிஜம்.

வர வர மேலை நாடுகளில் கொலை, கொள்ளை, மூர்க்கத்தனம், பயங்கரம் நிறைந்த வீடியோ நாடாக்கள், மிகவும் புகழ்பெற்றவர்களால் தயாரிக்கப்பட்டு, மக்களிடையே, குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே வேகமாக பிரபலமாகி வருவது எல்லோரும் அறிந்த சமாசாரம்தான் - ஆனால் இது வளர்ச்சியா? இத்தகைய ரசனை மாற்றம் தேவையா? சிந்திக்க வேண்டும்!

ஆரோக்யமான எண்ணங்களை, நல்ல அணுகுமுறையில் குழந்தைகளிடையே வளர்ப்பதை தவிர்த்து, ஆட்டம், பாடல் என்கிற சாக்கில் பேய்கள் நடனம், பிசாசுகளின் பாடல், சமாதிகளிலிருந்து அரை குறையாக அழுகிய நிலையில் எழுந்து ஆடும் பிணங்கள் - என்று பலவிதங்களிலும் பயங்கரத்தை, மூர்க்கத்தனத்தை தூண்டிவிடும் விதத்தில் தயாரிக்கப்படும் இத்தகைய வீடியோ டேப்புகள், படங்கள் அவசியம்தானா?

இதுகுறித்து சில குழந்தைகளிடம் பேசிய போது 'இந்தப் பிணங்கள் ஆடுவது பயத்தைத்

தரவில்லை. ஆனால் ஒருவித வெறியை மனகள் கிளப்பி விடுவது உண்மைதான்' என்று அவர்கள் ஒத்துக்கொண்டதும் என் கலக்கம் அதிகமானது.

இதெல்லாம் விஷப்பரீட்சைகள்... ஒரு அடி ஏறினால் ஒன்பது அடி சறுக்க வைப்பவை...

ஆக்கபூர்வமான சிந்தனைகளை இளைய தலைமுறையினரிடம் உருவாக்க வேண்டிய தருணத்தில், வியாபாரம் ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு பலர் இயங்கி எதிர்காலத்தில் பிரகாசமாக வாழ வேண்டியவர்களை மூர்க்கத் தனத்துக்கும், வேண்டாத வெறிகளுக்கும் ஆளாக்குகிறார்களே - இதைத் தடுத்து நிறுத்த வேண்டாமா?

சம்பந்தப்பட்டவர்களும், அரசாங்கமும் நிலைமையின் தீவிரம் புரிந்து இந்த ஆரோக்யமற்ற வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும், கிள்ளி எறியும், செயலில் இறங்கினால் சந்தோஷப்படுவேன்...

சுமார் ஆறு வருஷங்களுக்கு முன் நான் ஆசைப்பட்ட விதத்தில் அந்த உணர்வுகளை முளையிலேயே கிள்ளி எறியும் எந்த முயற்சியிலும் நாம் இறங்கவில்லை என்பதோடு, அந்த விஷவித்து இன்று சமுதாயத்தை, முக்கியமாய் இளைய தலைமுறை யினரை சிரழிக்கும் ஒரு ஆலகால ராட்சஸ மரமாக வளரவும் இடம் கொடுத்துவிட்டோம், என்பதுதானே நிஜம்?

திரைப்பட, எழுத்துத் துறையைச் சார்ந்த பலரிடம் இது விஷயமாய் சமீபத்தில் பேசியபோது 'வன்முறை கலாசாரம் பயங்கரமாய் பரவிவிட்டது. இது நிச்சயம் நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதில்லை. பெரிய அளவில் ஏதாவது செய்து இனியும் இத்தீமை

வளராமல், பரவாமல் தடுக்க அரசாங்கத்தோடு சேர்ந்து நாமும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது' என்று ஒட்டு மொத்தமாக கருத்து தெரிவித்தார்கள்.

'அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்' என்று கேட்டபோது பலரும் கூறிய யோசனைகளில் சிலவற்றை இங்கே தருகிறேன்.

1. சென்சார் போர்டின் கொள்கைகளும், செயல்பாடுகளும் கடுமையாக்கப்பட வேண்டும்.

2. தெலுங்கு, இந்தி, ஆங்கிலப் படங்களில் வன்முறை இல்லையா? எதற்கு தமிழை மட்டும் சாடுகிறீர்கள்? என்கிற சாக்குப் போக்குகளை சொல்ல வழியில்லாமல் அனைத்து திரைப்படங் களுக்கும் ஒரே மாதிரியான கட்டுப்பாடான சென்ஸார் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

3. பத்து வருஷங்களில் ஏற்கனவே வெளியான அனைத்து மொழி திரைப்படங்களையும் (ஆங்கிலத்தையும் சேர்த்து) மீண்டும் தணிக்கை செய்ய வேண்டும். அளவுக்கு மீறின வன்முறை, பாலுணர்வு காட்சிகள் இடம் பெறும் படங்களை முழுமையாகத் தடை செய்வது நல்லது.

4. கீழ்த்தரமான எழுத்துக்களை தாங்கி வரும் மாத நாவல்கள், பத்திரிக்கைகள் தடை செய்யப்பட வேண்டும்.

மேலே சொன்னவைகளைப் படித்துவிட்டு, 'இது நடக்கிற காரியமா?' என்று சிலர் மலைக்கலாம், ஏன், 'வெறும் பகல் கனவு' என்று பழிக்கக் கூட

செய்யலாம். 100 கோடிக்கும் மேல் ஜனத்தொகை கொண்ட சீனாவில் நாலு வருஷங்களுக்கு முன் 'யாரும் பொது இடங்களில் எச்சில் துப்பக் கூடாது' என்கிற சட்டத்தைக் கொண்டு வந்து, இரண்டே வருஷங்களில் நினைத்ததை சாதித்திருக்கிறார்கள். ஆக, முடியும் என்றால் முடியும். முடியாது என்றால் முடியாது.

மத்திய, மாநில அரசுகள் மனசு வைத்தால் எதையும் நிறைவேற்ற முடியும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

23

வாழ்க்கைப் பயணத்தில் முட்டுக்கட்டை போடும் பிரச்னைகளைக் கண்டு கலங்காமல் எதிர் நீச்சல் போடுபவர்களையும், மனித நேயங்களை இழக்காமல் சாதனை புரிந்திருப்பவர்களையும் இரு கைகூப்பி வணங்க, அவர்களிடமிருந்து புத்துணர்ச்சி என்கிற டானிக்கைப் பெற, நான் தயங்கியதே இல்லை.

அந்த வரிசையில், சமீபத்தில் பார்த்து, பேசி, நான் ஆன்ம பலம் பெற்ற ஒரு தம்பதியை இந்த அத்தியாயத்தில் உங்களுக்கு அறிமுகம் செய்யப் போகிறேன்.

மஹிமா - மனோகர். (நடந்ததை ஒளிவு மறைவு இன்றி சொல்லுவதோடு, சொந்தப் பெயரிலேயே வாசகர்களுக்கு அடையாளம் காட்ட, அனுமதி பெற்று விட்டதால் பெயரைக் கூட மாற்றாமல் அப்படியே தருகிறேன்) சரியாக 20 வருஷங்களுக்கு முன், 1972ல் தாய் நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்கிற தாகத்தோடு, வளமான வாழ்க்கையை உதறிவிட்டு அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த சமயம்.

மதுரைக்குச் சொந்த வேலையாய் சென்றவர்கள் காரிலேயே சென்னைக்குத் திரும்ப உத்தேசித்து, கிளம்பினார்கள். ஹெரால்ட் வண்டி ஓட்டுனராக மஹிமா. பக்கத்தில் மனோகர் - பின் இருக்கையில் மனோகரின் தாய், குழந்தை சுஜாதா.

உளுந்தூர்பேட்டையைத் தாண்டிய போது பின்னோடு வந்த லாரிகாரருக்கு, பெண் ஒருத்தி வண்டி ஓட்டுவது அதுவும் நெடுஞ்சாலையில், சீண்டும் மனோபாவத்தைத் தூண்டியிருக்க வேண்டும். அடுத்த அரைமணி நேரமும் வேண்டுமென்றே உரசுகிற மாதிரி வந்து பயமுறுத்துவது. முந்த இடம் விட்டுவிட்டு திடுமென மறிப்பது. தானும் வேகமாய் செல்லாமல், மஹிமாவையும் போக விடாமல் சீண்டுவது - என்கிற ரீதியில் கழிந்தது.

பொறுமை இழந்து ஒரு சந்தர்ப்பத்தில் கிடைத்த இடைவெளியில் முந்த முயற்சிக்க, லாரிக்காரர் அநியாயத்திற்கு நெருக்க, சாலை விளிம்புக்குச் சென்றுவிட்ட வண்டி முந்தின நாள் பெய்து தேங்கி இருந்த சகதி நீரில் சிக்கி, கட்டுப்பாட்டை இழக்க, கண்மூடித் திறக்கும் நாழிகையில் கார் நாலு தரம் உருண்டு, பள்ளத்தில் விழுந்தது.

விழுந்த வேகத்தில் கதவு திறந்து மஹிமா வெளியே தூக்கி எறியப்பட்டாலும் தலைகுப்புற கிடந்த வண்டியிலிருந்து மற்ற மூவரும் சின்ன சிராய்ப்பு கூட இல்லாமல் தப்பியது நம்ப முடியாத ஆச்சர்யம்!

ஆனால், மஹிமா தலையில் மட்டும் பாழும் விதி பயங்கரமாய் இடித்து விட்டது. தூக்கி

எறியப்பட்ட வேகத்தில் பின் கழுத்து நரம்பு அதிர்ச்சிக்குள்ளானதில், அந்த நொடியிலிருந்தே கழுத்துக்கு கீழ் சுத்தமாய் ஸ்வாதீனம் போய்விட்டது.

நாலு ஆட்களின் உதவியுடன் மஹிமாவை நெடுஞ்சாலைக்குத் தூக்கி வந்து, வழியோடு சென்ற வண்டியில் ஏற்றி, பாண்டிச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று, உடனடியாய் சிகிச்சை அளித்திருக்கிறார்கள். அங்கு 5 மாசங்கள், பின்னர் வேலூர் ஆஸ்பத்திரியில் 6 மாசங்கள் படாத பாடு பட்டும், பலன் எதுவும் இல்லாமல் போக, ஆயுசு முழுவதும் சின்ன விஷயத்துக்குக் கூட அடுத்தவர் உதவியை நாடிய வண்ணம் சக்கர நாற்காலியில் கழிக்கப் போவதைப் புரிந்து, ஏற்றுக் கொள்ள வேண்டியதன் கட்டாயத்தை மஹிமாவும், மனோகரும் துல்யமாக உணர்ந்தார்கள்.

கனவிலும் கற்பனை பண்ணியிராத அளவில் வாழ்க்கை தலைகுப்புற மாறி விட்டதை புலம்பல், அழுகை, வெறுப்பு, கசப்பு, விரக்தி என்கிற எந்த குணங்களின் நிழல் கூட விழாமல் ஏற்றுக் கொண்டு 20 வருஷங்களாக புன்னகை மாறாத முகங்களுடன் அத் தம்பதி வாழ்ந்து வருவதை நினைக்கையில் உடம்பும், மனசும் சிலிர்த்துதான் போகின்றன.

பட்ட காலிலே படும் என்கிற பழமொழியை நிரூபிப்பது போல, விதி மஹிமாவை தாக்கியதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. மனோகருக்கு விழித் திரையில் கோளாறு உண்டாகியுள்ளது. இதனால் துளிதுளியாய் பார்வை மங்கி வருகிறது. தற்சமயம் ஒரு கண்ணுக்கு அடியோடு பார்க்கும் சக்தி போய் விட்டது. மறு கண்ணில் 30 சதவிகித பார்வை மட்டுமே

இருக்கிறது. ஓரிரு வருஷங்களில் இதுவும் பாதிக்கப் படலாம்.

"வருங்காலத்தை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டால், கணவனும் மனைவியும் வாய்விட்டு சிரிக்கிறார்கள். பிறகு 'இத்தனை வருஷங்களாக வழி காட்டிய தெய்வம் தொடர்ந்து பாதையில் வெளிச்சம் காட்டாமலா போய்விடும்?" என்று அழுத்தம் திருத்தமாய் எதிர் கேள்வி கேட்கிறார்கள்.

'ஐயோ எங்களுக்கு மட்டும் ஏன் மேன்மேலும் கஷ்டங்களாக வந்து கொண்டே இருக்கின்றன?' என்று சுயபச்சாதாபத்தில் இடிந்து போகாதது ஒரு பக்கம்; தங்களை சாதாரண ஆரோக்கியம் உள்ளவர்களாகவே கருதிக் கொண்டு சகஜமாய் வெளியில், வாசலில் போய் வந்து, சமுதாய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வாழ்ந்து கொண்டிருப்பது இன்னொரு பக்கம்.

பிறர் உதவியின்றி எதையும் செய்ய முடியாதே என்ற எண்ணத்தில் சோர்ந்து உட்காராமல், தன்னையும் வீட்டையும், கச்சிதமாய் அலங்கரித்துக் கொள்வதிலிருந்து, தோட்ட பராமரிப்பு, மாலையில் சில மாணவர்களுக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுப்பது வரை மஹிமா செய்யும் காரியங்கள் ஏராளம் என்றால், கால்வாசி பார்வையை வைத்துக் கொண்டு மனோகர் கம்பெனி ஒன்றில் ஆலோசகராக வேலை பார்க்கிறார். அற்புதமாய் ஓவியம் தீட்டுகிறார், சக்கர நாற்காலியை மாடிப்படிகளில் கூட ஏற்றி விரும்பும் இசைக் கச்சேரிகளை மஹிமா நேரில் கேட்க வழி பண்ணுகிறார். இரவும் பகலும் மனைவியை கண்ணுக்குள் வைத்து கைக் குழந்தையாய் பராமரிக்கிறார்!

பட்டியல் போதுமா?

"உங்களுக்கு சுஜாதா ஒரே மகள். அவள் அமெரிக்கரை மணந்து, வெளிநாட்டில் தங்க எப்படி அனுமதித்தீர்கள்? கூடவே இருந்தால் உதவியாக இருக்காதா?" என்று என் சந்தேகத்தை வெளிப் படுத்திய போது புன்னகையோடு விளக்கம் கிடைத்தது.

"எங்கள் மாப்பிள்ளை தங்கமான மனிதர். அந்த மாதிரி மருமகன் எங்களுக்கும் கணவர் சுஜாதாவிற்கும் கிடைப்பது அபூர்வம். கிட்டத்தில் இருந்து கவனித்துக் கொண்டால்தான் அன்பா? எங்கள் சுமைகளை நாங்கள்தான் சுமக்க வேண்டும். பெற்று விட்டதற்காக குழந்தைகளை சுமக்க வைப்பது தவறு. சுஜாதாவின் வாழ்க்கை நல்ல விதமாக அமைந்து விட்ட நிம்மதி, சந்தோஷம் தான் எங்களுக்கு இருக்கிறதே தவிர, எந்தக் குறையும் நிச்சயமாய் இல்லை..."

சின்ன பிரச்னைகளை கூட சமாளிக்க முடியாமல் 'Why me?' என்று சதா சர்வகாலம் புலம்பி, பொருமி ஆர்ப்பாட்டம் பண்ணி தன்னையும், அடுத்தவரையும் வருத்திக் கொள்ளும் பெரும் பான்மை மனிதர்களிடையே 'Why not me?' என்று நெஞ்சுரத்தோடு கேட்டு, யதார்த்தத்தை வருத்தமோ, கசப்போ இல்லாமல் ஏற்றுக் கொள்ளும் மஹிமா, மனோகர் போன்றவர்களை - புதுக் கோணத்திலிருந்து சிந்திக்க வைக்கும், குறைகளைப் பெரிசு பண்ணாமல் வாழ வழி காட்டும் விழிப்புணர்வை தோற்றுவிக்கும் ஆசான்களாகவே நான் பார்க்கிறேன்.

துவக்கத்தில் குறிப்பிட்டது போல மஹிமா, மனோகர் போன்ற 'பாஸிடிவ்' மனிதர்களை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் கொஞ்சமாவது வளர்வது நிஜம். My batteries get charged every time I meet such persons. இதுவும் நிஜம். நிஜம் தவிர வேறில்லை.

24

காம்ப்ளர்ஸ் அனானிமிமஸ் - Gamblers Anonymous – அனாமதேய சூதாடிகள் சங்கம்.

கேள்விப்பட்டிருக்கிறீர்களா? படாதவர்களுக்காக ஓர் அறிமுகம்.

சூதாட்டத்தினால் மானம், மரியாதை, குடும்பம், பணம், கௌரவம், உடல் நலம், நிம்மதி போன்ற பல விஷயங்களும் பாதிக்கப்பட்டு, Compulsive Gamblers அதாவது கட்டாய சூதாடிகளாக மாறி, அல்லுற்று, தவித்து, பரிதவித்த பிறகு எப்படியோ விழிப்புணர்வு பெற்று, சூதாட்ட அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட பல லட்சக்கணக்கான நபர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு அமைப்பின் பெயர்தான் அனாமதேய சூதாடிகளின் சங்கம்.

அனாமதேய குடிகாரர்கள் - Alcoholics Anonymous

அனாமதேய போதைமருந்து அடிமைகள் - Narcotics Anonymous போல அனாமதேய சூதாடிகள் சங்கமும், புனர்வாழ்வு பெற்ற சூதாடிகளால், இன்னும்

விடாமல் சூதாடிக் கொண்டிருக்கும் நபர்களுக்கு உதவி செய்யவென துவக்கப்பட்ட அமைப்புதான்.

இந்த சங்கத்திற்கு வித்தூன்றியவர் பெயர் ஜிம். டபிள்யூ.

இவரது கதையை முதலில் கேளுங்கள்.

1912ம் ஆண்டு தென் ஆப்ரிக்காவில் பிறந்த ஜிம், ஆறு வயசாகும் போது ஒரு நாள் 'வானவில் முடியும் இடத்தில் ஏராளமான புதையல் புதைக்கப்பட்டிருக்கும்' என்கிற கதையை கேட்க நேர்ந்தது. அதிலிருந்து அவருக்குள் ஒரு நமைச்சல். ஏக்கம். கனவு. என்றாவது ஒரு நாள் தான் வானவில்லின் அடிவாரத்தைக் கண்டுபிடித்து அந்த புதையலுக்குச் சொந்தக்காரனாகி விடவேண்டும் என்கிற ஆசை வெறியாக மாறியதில், ஒரு சமயம் கொட்டுகிற மழையையும் லட்சியம் பண்ணாமல் புதையலைத் தேடி வானவில்லை துரத்திக் கொண்டு போனதில், நிமோனியா காய்ச்சல் வந்து பிழைத்து எழுந்ததே பெரும்பாடாயிற்று.

ஜிம்முக்கு பத்து வயசாகையில் அப்பா அகாலமாய் மரணமடைய, தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போன தைரியத்தில் ஜிம் சீட்டு விளையாடுவதில் தீவிரமாய் ஈடுபட ஆரம்பித்தார். குடும்பத்துக்கு வருவாய் ஈட்டும் நபர் என்கிற பொறுப்பு சூதாட்டத்தையும் அதன் மூலம் கிடைத்த பணத்தையும் குற்ற உணர்வு எதுவும் இல்லாமல் ஏற்றுக் கொள்ள ஒரு நொண்டிச் சாக்காக, விரைவிலேயே ஜிம் மூன்று சீட்டில் நிபுணரானார்.

பள்ளிப் படிப்பை எப்படியோ முடித்த பிறகு ஒரு வேலையில் அமர்ந்த போது சூதாட்டம் என்கிற யானைப் பசிக்கு வெறும் சீட்டாட்டம் சோளப் பொறியாக பற்றாமல் இருக்க, குதிரைப் பந்தயங்களில் கவனத்தை செலுத்தினார்.

வெற்றி தேவதை அணைக்கிற மாதிரி 'பாவ்லா' காட்டுவது ஒரு தரம் என்றால், தோல்வி மண்டையில் அடித்தது பத்து முறைகள்! இருப்பினும் விட்டதைப் பிடித்து விடலாம் என்கிற குருட்டு நம்பிக்கையில் மேன்மேலும் சூதாட்டத்தில் ஜிம் மூழ்கியதில் கம்பெனி பணத்தை கையாட நேர்ந்து, வேலை பறிபோனது. தொடர்ந்து பல வேலைகள், பல திருட்டுகள். பல அவமானங்கள்.

'கட்டாய சூதாடியாக' (Compulsive Gambler) மாறிவிட்ட ஜிம் இதனடுவில் ராணுவத்தில் சேர வாய்ப்பு கிட்டிய போது அங்கே 'குடி'க்கும் அடிமையானார். பட்டுவிட்ட கடனைத் தீர்க்க சூதாட்டம். அதில் ஏற்பட்ட நஷ்டம் உண்டாக்கிய வேதனையை மறக்க குடி.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்த கையோடு ராணுவத்திலிருந்து வெளியேறிய ஜிம்முக்கு 'காஸினோ மெஷின்கள் சீட்டு, குதிரை பந்தயங்களை விட அதிகமாக பணம் ஈட்டித் தரும், என்று யாரோ வழி காட்ட, அதை உடும்பென பிடித்துக் கொண்டார்.

'ஸ்லாட் மெஷின்கள்' என்கிற பணம் கொட்டும் யந்திரங்களை வைத்து நடத்தப்பட்ட காஸினோக்களில் இரவும், பகலும், பழி கிடக்க முற்பட்டார். உணவு, உறக்கம், ஓய்வு என்று எதைப்பற்றின அக்கறையும் இல்லாமல், பணம், பணம் என்று ஜிம் வெறிபிடித்து அலைந்த நாட்கள் அவை.

மானம், மரியாதை, நிம்மதி - எல்லாம் சுத்தமாய் பறி போனதோடு, குடிப் பழக்கமும் மிக அதிகமாகி, பைத்தியம் பிடித்து விடும் நிலையை அடைந்த போது ஏதோ ஒரு பயம் பீடிக்க 'அல்கஹாலிக்ஸ் அனானிமஸ் (ஏ.ஏ.)' பற்றி கேள்விபட்டு அங்கு சென்று வெகுவாக முயன்று ஒருவழியாய் குடி நோயை கட்டுப்படுத்தினார்.

அவரது நல்ல காலம், அந்தக் கால கட்டத்தில் ஏ.ஏ.ல் பொதுப்பணி அதிகாரியாக இருந்த ஸ்பில் என்கிற பெண்ணுடன் காதல் மலர, 1951ல் அவரை மணந்தார்.

குடிப்பழக்கம் அடியோடு கட்டுப்படுத்தப் பட்டுவிட்டாலும், அடிப்படை நோயான சூதாட்ட வெறியைக் கண்டித்து வைக்காததில் மீண்டும் பழையபடியே சூதாட்டத்தில் மனம் ஈடுபட, மறுபடியும் கோளாறுகள் தலை தூக்க ஆரம்பிக்க, இந்த அவலத்திற்கு தீர்வு கட்டியே தீருவது என்கிற உறுதியுடன் மனைவி பக்கபலமாய் நிற்க ஜிம் தனது பிரச்னையை அடி முதல் நுனி வரை புது கோணத்திலிருந்து அலசினார்.

சர்வ அவமானங்களுக்கும், கீழ்த்தரமான நடத்தைகளுக்கும் குடிபழக்கம்தான் காரணம் என்றால் அதை கட்டுப்படுத்தியவுடன் நிலைமை மாறியிருக்க வேண்டும். இல்லை. ஆக, வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும். அது என்ன? கண்ணுக்குத் தெரியாமல், மண்ணுக்குள் மறைந்து வேரைத் தாக்கி, மரத்தை அடியோடு அழிக்கும் வேர்ப்பூச்சி போல வெளியே தென்படாமல்

உள்ளுக்குள் சிந்தனையை முழுக்க முழுக்க ஆக்ரமித்து, ஆளை ஒரேடியாய் நசுக்குவது ஏது?

சூதாட்ட வெறி!

பிரச்னையின் வேர் பிடிபட்ட பிறகு, குடிப்பழக்கத்தைப் போல, கட்டாயமாய் சூதாடுவதும் ஒரு வியாதி என்பது புரிந்த பிறகு, ஜிம் தெளிந்தார். எப்பாடு பட்டேனும் சூதாட்ட அடிமைத்தன நோயிலிருந்து மீள உறுதி பூண்டார். துளித் துளியாய் மீண்டார்.

தான் பெற்ற இன்பத்தை இவ் வையகமும் பெறுக என்கிற நல்லெணத்தோடு 1957ம் ஆண்டு செப்டம்பர் மாசம் 13ம் தேதி காம்ப்ளர்ஸ் அனானிமஸ் - அனாமதேய சூதாடிகளின் சங்கத்தை நிறுவினார்.

இன்றைக்கு பல நாடுகளில், கிளைகளுடன் வளர்ந்திருக்கும் ஜி.ஏ.ல் தங்களை இணைத்துக் கொண்டு, கட்டாய சூதாட்டம் என்கிற நோயிலிருந்து தங்களை மீட்டுக் கொண்டவர்கள் ஏராளம்.

குடி, போதை மருந்தைப் போலவே கட்டாய சூதாட்டப் பழக்கமும் ஒரு தீராத நோய். எப்போது, யாருக்கு, எங்கே, எப்படி பீடிக்கும் என்பதை திட்டவட்டமாய் சொல்ல முடியாத ஒரு பயங்கர நோய். படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், மூத்தவர், இளையவர், ஆண், பெண் என்ற பாகுபாடின்றி, இஷ்டத்துக்கு நினைத்த மாத்திரத்தில் யாரையும் தன் வயப்படுத்தும் அபூர்வ சக்தி இந்நோய்க்கு உண்டு.

இந்த நோயை கட்டுப்படுத்தலாமே ஒழிய, பூரணமாய் குணப்படுத்த இயலாது. தவிர, குடி, போதை மருந்து போல இதன் அறிகுறிகள் - வாசனை, கண் சிகப்பு, நடத்தையில் தடுமாற்றம் போன்று வெளியே தெரிய வாய்ப்பே இல்லை என்பதால், நோய் யாரைப் பிடித்திருக்கிறது என்பதை லேசில் அறிய முடியாது.

ஒன்றை சாப்பிட்டோ, ஊசி மூலம் ஏற்றிக் கொண்டோ, புகையிலை பிடித்தோ செய்யாமலேயே, எந்த சமாசாரத்தின் தூண்டுதலும் இல்லாமலேயே, உள்ளுக்குள்ளேயே இயற்கையாக ஜனிக்கும் இந்த கட்டாய சூதாட்ட வியாதியால் அழிந்த நபர்கள், குடும்பங்கள் அனேகம். ஒருவர் சூதாடினாலும் சுற்றி இருக்கும் அனைவரையும் இப்பழக்கம் பாதிப்பதால் இதையும் குடும்ப நோய் — Family disease என்றே நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இந்த நோயின் தீவிரத் தன்மையை நீங்கள் சரிவரப் புரிந்து கொள்ள, சில உதாரணங்களை அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கிறேன்.

25

திருமலையின் குடும்பம் வசதியானது கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தாலும், அத்தனை ஆண் மக்களும் அந்தக் காலத்திலேயே, அதாவது சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னரே உயர்ந்த படிப்பு படித்து, நல்ல வேலையில் இருந்தார்கள். அன்புக்கோ, பண்புக்கோ பஞ்சமில்லை. தெய்வபக்தி வேறு அதிகம். இத்தனை விஷயங்கள் அரண்களாக கட்டிக் காத்தும் அத்தனையும் மீறிக் கொண்டு 'கட்டாய சூதாட்ட நோய்'க்கு திருமலை பலியானது வேதனைக்குரியது.

சின்ன வயசிலிருந்தே திருமலைக்கு ஒரு பழக்கம். அவனுடைய கருத்துக்கு நேர்மாறாக யாரேனும் பேசினால், உடனே தடுத்து நிறுத்துவான். 'நீ சொல்வது தவறு, நான் சொல்வதுதான் சரி. நிரூபிக்கட்டுமா?' என்று சவால் விடுபவன். அத்துடன் நின்றிருந்தால் பிரச்னையே முளை விட்டிருக்காது. ஆனால், தொடர்ந்து 'என்ன பெட்?' என்பான் பாருங்கள், அதுதான் அந்தப் பந்தயம் வைக்கும் குணம்தான் பிற்காலத்தில் கட்டாய சூதாட்டக் காரனாக அவன் மாறப்போவதற்கு அன்றைக்கே கட்டியம் கூறியது என்று. இன்று திருமலையின்

நோயை அலசும் மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அந்தச் சின்ன வயசில் திருமலைக்கு ரொம்பப் பிடித்த விளையாட்டு தூரத்தில் வரும் வண்டியின் நம்பர் பிளேட்டில் உள்ள எண்களை கூட்டினால் வருவது ஒற்றைப்படையா, அல்லது இரட்டைப் படையா என்று நண்பர்களுடன் பந்தயம் கட்டுவது.

காலையில் உறக்கம் கலைந்து தெருவுக்குப் போனால், பள்ளிக்குச் செல்லும் வரை இதே விளையாட்டுதான். இது மாலையிலும் தொடரும். போகப் போக விளையாட்டின் தீவிரம் அதிகரித்த பிறகு பள்ளிக்கு மட்டம் போட்டுவிட்டு 'தூரத்தில் வரும் வண்டியின் எண் என்ன?' 'வண்டிக்குள் இருப்பவர் எத்தனை பேர்?' 'தெருவில் அடுத்து திரும்பும் வண்டியின் நிறம் என்ன?' 'சக மாணவி இன்று ஒற்றை ஜடையா, இரட்டை ஜடையா?' இப்படி இன்ன விஷயம்தான் என்று இல்லாமல் சர்வத்துக்கும் பந்தயம் கட்டி விளையாடுவது பழக்கமாயிற்று. பல மாணவர்களிடம் கையில் பணம் இருக்காது என்பதால் பலப்பம், புத்தகம், மதிய சாப்பாடு, பள்ளி விட்டு திரும்பும் போது புத்தகங்களை சுமந்து வருவது - போன்றவை பந்தயப் பரிசுகளாக மாறியதையும் தாண்டிக் கொண்டு சில சந்தர்ப்பங்களில் அரையணா, ஓரணா என்று 'பெட்' கட்டி, தோற்க நேரிடும் போது தயங்காமல் அப்பாவின் சட்டைப் பையிலிருந்து காசைத் திருடி ஜெயித்தவனிடம் கொடுத்ததும் உண்டு.

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த போதிலும் இப்படியொரு தீய பழக்கம் பிள்ளைக்கு உண்டாகும்

என்று பெரியவர்கள் கற்பனை கூட பண்ணிப் பார்க்காததாலோ என்னமோ பள்ளி இறுதி ஆண்டை முடிப்பதற்குள்ளேயே எதற்கும் பந்தயம் கட்டுவதும் காசு வைத்து சீட்டு விளையாடுவதும் திருமலையின் நிரந்தர பொழுது போக்குகளானது.

கல்லூரியில் சேர்ந்த போது இருபத்தி நாலு மணிநேரமும் திறந்திருக்கும் சீட்டாட்ட கிளப்புகள் திருமலைக்கு அறிமுகம் ஆயின. (உலகின் சூதாட்ட நகரம் என்று அழைக்கப்படும் 'லாஸ் வேகாஸில்' அங்கு ஆட வரும் நபர்களை கவர்ந்திழுக்க இலவச 'குடி', உணவு, இதர வசதிகள் செய்து தருவதைப் போலவே, இந்த விடுதிகளிலும் தரக் குறைச்சலாக இருந்தாலும் படுக்க, உண்ண இலவச வசதிகள் உண்டாம்!)

'கல்லூரியில் ஸ்பெஷல் வகுப்பு, பாட சம்பந்தமாய் டூர் அழைத்துப் போகிறார்கள்' என்று சொல்லி நாள் கணக்கில் வீட்டுக்கு வராமல் இருக்கவும், 'விசேஷ சம்பளம்', 'முக்கியமான புத்தகம் வாங்க வேண்டும்' என்று சொல்லி அப்பாவி பெரியவர்களிடம் பணம் கறக்கவும் திருமலை கற்றது அப்போதுதான்.

மொத்தத்தில், கல்லூரி படிப்பு முடிவதற்குள் கட்டாய சூதாடியாக மாறியதும் அல்லாமல், பொய் சொல்லி, திருடி, பிறரை சுலபமாய் ஏமாற்றுவதிலும் திருமலை கெட்டிக்காரனானான்.

ஆந்திர மாநிலத்தில் தங்கின நாட்களில் அங்கு பிரபலமாயுள்ள 'அம்பு அடிக்கும்' (arrow) சூதாட்ட பைத்தியம் பற்றிக் கொண்டதில் கம்பெனி பணத்தை கையாடல் செய்யும் வரை போய், போலீஸ் கேஸ் பதிவாக, திருமலை தலைமறைவானார்.

இந்த மாதிரி ஏகப்பட்ட அனுபவங்கள். ஒவ்வொரு முறையும் அப்பாவோ, வேறு உறவினரோ வந்து பணத்தைக் கட்டி மீட்கும் போது 'இனிமேல் சூதாட மாட்டேன்' என்று திருமலையிடமிருந்து சத்தியம் வாங்கிக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் அந்தப் பக்கம் திரும்புவதற்குள் இந்த பக்கம் சத்தியத்தை காற்றில் பறக்க விட்டுவிட்டு சூதாட்ட விடுதியை நோக்கி ஓடுவதுதான் தொடர்ந்தது.

அதுவும் ஒரு சந்தர்ப்பத்தில் என்ன நடந்தது தெரியுமா? திருமலையின் வாய் வார்த்தைகளாகவே அதைக் கேளுங்கள்.

"என் மனைவிக்கு பிரசவகாலம். நிறை மாச கர்ப்பிணியைக்கூட கவனிக்காமல் நான் என்போக்குக்கு கிளப்பில் உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தேன். குழந்தை இறந்து பிறந்தது. (Stillborn) அதைப் புதைக்க தகப்பனான நான் வரவேண்டும் என்பதால் என்னை வலுக்கட்டாயமாக அழைத்துப் போனார்கள். உயிரற்ற குழந்தையை என் முன்னே நீட்டி 'இந்த சடலத்தின் சாட்சியாய் இனி சூதாட மாட்டேன் என்று சத்தியம் பண்ணு' என்றார்கள். துளி யோசிக்கவில்லை. செய்து கொடுத்தேன். ஆனால் காரியங்கள் முடிந்த பிறகு செய்த சத்தியத்தை மறந்துவிட்டு மதியமே மீண்டும் கிளப்புக்கு சீட்டாட வந்துவிட்டேன்."

பேசிக் கொண்டே போன திருமலை உணர்ச்சி வசப்பட்டு கொஞ்சம் நிறுத்தினார். உதடுகள் துடிக்க, கண்களிலிருந்து நீர்த்துளிகள் கன்னத்தில் கோடு போட்டுக் கொண்டு இறங்க "மனுஷனாம்மா நான்? செத்த குழந்தைமேல் சத்தியம் பண்ணியதை மீறிய எனக்கு விமோசனம் உண்டா? மிருகத்தை விட

கேவலமாய் நடந்து கொண்டுவிட்டேன். சூதாட்ட வெறி எந்த அளவுக்கு மனிதனை சீரழிக்கும் என்பதற்கு என்னைவிட சிறந்த உதாரணம் இருக்க முடியுமா?" என்று குரல் உடைய வினவிய போது, அடிவயிற்றில் வேதனை முடிச்சுக்களை என்னால் உணர முடிந்தது.

இன்றைக்கு திருமலை மனிதனாகி விட்டார். 'காம்ப்ளர்ஸ் அனானிமஸ்' சங்கத்தின் உதவியோடு தன்னைப் பிடித்திருந்த பயங்கர நோயிலிருந்து விடுபட்டு விட்டதும் அல்லாமல், ஜி.ஏ. சென்னை கிளையின் முக்கிய தூணாக நின்று, 'கட்டாய சூதாடிகளாக' மானம், மரியாதை, நிம்மதி, பணம் என்று பலவற்றையும் இழந்து தவிக்கும் நபர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் பணியிலும் ஈடுபட்டிருப்பது பாராட்டுக்குரியது.

திருமலை மாதிரி சூதாட்ட அரக்கனின் பிடியிலிருந்து ஒரு சிலர் மீண்டு வந்திருப்பது சந்தோஷத்தைத் தந்தாலும், நோயின் தீவிரம் புரியாமல் தங்களை, தங்கள் குடும்பத்தை நாசமாக்கி கொண்டிருக்கும் பலரை நினைக்கும்போது கவலையில் உடம்பும், மனசும் உதறித்தான் போகின்றன.

குதிரைப் பந்தய மோகத்தில் வீடு, வாசல், நிலம் அத்தனையும் வாரிவிட்டுவிட்டு இன்று நடுத்தெருவில் நிற்கும் சாமிநாதன்,

சூதாட பணம் தேவைப்படும் போதெல்லாம் தாலிகட்டின மனைவியையே கூட்டிக் கொடுத்து சம்பாதிக்கும் பீட்டர்,

தம்பிகளுக்கு கல்லூரி சம்பளம் கட்டவென அம்மா தந்த தாலிசரட்டை விற்று, ஆறுநாட்கள் தொடர்ந்து வெறும் டீயை குடித்து, புகைப் பிடித்துக்

கொண்டு கண் விழித்து சீட்டாடி அத்தனையும் தொலைத்து தம்பிகளின் எதிர்காலத்தை நாசம் செய்த குமரேசன்,

தினமும் வீட்டில் கைக் குழந்தையை பூட்டி வைத்துவிட்டு லேடீஸ் கிளப்பில் 'தம்போலா' எனப்படும் நம்பர் சூதாட்டம் ஆடுவது கணவனுக்கு தெரிய வர, இன்று விவாகரத்தாகிய நிலையிலும், சூதாட்டத்தை விட முடியாமல் தவிக்கும் மகேஸ்வரி,

சூதாட தேவையான பணத்திற்காக வரம்பு மீறி ரத்தத்தை விற்கும் பாபு,

குழந்தைப் பேறு இல்லாத போதும், மனைவிக்குத் தெரியாமல் குடும்பக்கட்டுப்பாடு ('வாஸக்டமி') ஆபரேஷன் செய்து, அந்தப் பணத்தை வைத்து சூதாடிய செந்தில்,

இன்னும், இன்னும்,

கடவுளே, யாரைச் சொல்ல, யாரை விட?

இவர்களெல்லாம் தாங்கள் 'கட்டாய சூதாட்ட நோயாளிகள்' என்ற உண்மையை உணர்ந்து, 'உதவி' என்று வலிய கரத்தை நீட்டினால்தான் விமோசன விடிவெள்ளி இவர்கள் வாழ்க்கையில் தோன்றும். இல்லாவிட்டால் ஒரேயடியாக சூதாட்ட புதைகுழியில் அழுந்தி, மூச்சு முட்டி போகப் போவது நிச்சயம்.

விளையாட்டு வேறு, சூதாட்டம் வேறு. அது எங்கே முடிகிறது, இது எங்கே துவங்குகிறது என்கிற விழிப்புணர்வு இல்லாவிட்டால் வாழ்க்கை நரகமாகிவிடும்.

இனி, 'கட்டாய சூதாட்டத்தைப்பற்றி இறுதியாய் சில விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்....

26

'காம்ப்ளர் அனானிமஸ்' பற்றி எழுதி வருவதைப் படிக்கும் நண்பர் ஒருவர் நேற்று என்னை சந்தித்த போது 'சூதாட்டம் என்பதற்கு சரியான விளக்கம் (Definition) இருக்கிறதா?' என்று கேட்டார்.

இருக்கிறது.

'தனக்காகவோ, அல்லது மற்றவருக் காகவோ, பணத்திற்காகவோ அல்லது வேறு பரிசுக்காகவோ முடிவு நிச்சயமில்லாமல் அதிருஷ்டத்தை நம்பி ஈடுபடும் ஒரு விளையாட்டுக்கு பெயர் சூதாட்டம்!'

ஆக, சாதாரண விளையாட்டுகளிலிருந்து சூதாட்டம் நிச்சயம் மாறுபடுகிறது என்பது புரிகிறதா நண்பர்களே?

சூதாட்ட நோயையும், கட்டாய சூதாடிகளையும் இன்னும் சரியாக புரிந்து கொள்ள உதவியாய் 'காம்ப்ளர் அனானிமஸ்' கையேட்டில் காணப்படும் சில கேள்வி பதில்களை இங்கே தருகிறேன்.

நிர்ப்பந்தமான முறையில் சூதாடுதல் என்றால் என்ன?

நிர்ப்பந்தமான முறையில் சூதாடுதலைப் பற்றி பல வித்தியாசமான விளக்கங்கள் தரப்படுகின்றன. ஆனால் G.A. என்ற இயக்கத்தைப் பொருத்தவரை நிர்ப்பந்தமான முறையில் சூதாடுவது காலம் செல்லச் செல்ல வளர்ந்து மோசமாகும் ஒரு நோய் என்ற விளக்கம்தான் ஏற்றுக்கொள்ளும் படியாக இருக்கிறது. இந்த நோயைக் குணப்படுத்த முடியாது. ஆனால் ஒரு நிலையில் கட்டுப்படுத்தலாம்.

ஒருவர் நிர்ப்பந்தமான முறையில் சூதாடுபவரா இல்லையா என்பதை எப்படி அறியமுடியும்?

சம்பந்தப்பட்ட நபர்தான் அந்த முடிவைச் செய்யமுடியும். பல நண்பர்கள் சூதாட்டத்தை கட்டுப்படுத்த முயற்சிசெய்து தோற்றுவிட்டோம் என்று ஒப்புக்கொள்ள விருப்பம் வரும்பொழுது G.A. என்ற இயக்கத்தை நாடுகிறார்கள். எந்த ஒரு நபருக்கு சூதாடுவது அவர்களின் மானம், மரியாதை, பணம், உறவுகள், உடல், மன ஆரோக்கியம் போன்ற விஷயங்களில் தொடர்ந்து வளர்ந்து கொண்டே போகும் பிரச்சினைகளை உருவாக்கினால், அவர்கள் நிர்பந்தத்தின்மேல் சூதாடுபவர்கள் என அழைக்கப் படுகிறார்கள்.

பல G.A. உறுப்பினர்கள் பயங்கரமான அனுபவங்களை சந்தித்த பின்னரே உதவி தேவை என ஒப்புக்கொண்டனர். மற்றவர்கள் மெதுவாக மறைமுகமான பலவித அழிவுகளை அனுபவித்த பின்னரே தோல்வியை ஒப்புக்கொள்ளும் நிலைக்கு வந்தார்கள்.

கட்டாயமாய் சூதாடுபவர்களுக்கென தனி குணங்கள் உண்டா?

நிச்சயமாய். உண்மையை ஒப்புக்கொள்ள அல்லது எதிர்நோக்க இயலாமை, அடிப்படையில் ஓர் அச்ச உணர்ச்சி, மன முதிர்ச்சி இல்லாமை - இப்படி பல குணங்களை தொட்டுக்காட்டலாம்.

நிர்ப்பந்த சூதாடிகள் அனேகமாய் கனவுலகில் வாழ்பவர்கள் என்பது உண்மையா?

உண்மை... உண்மை தவிர வேறில்லை.

இந்தக் கனவுலகம் இவ்விதம் சூதாடுபவர்களின் மற்றொரு குணாதிசயமாகும். தாங்கள் ஒரு பெரிய தொகையை ஜெயித்தவுடன் செய்யப் போகும் அற்புதமான செயல்களைப் பற்றி கனவு காண்பதில் அதிக நேரம் செலவாகிறது. அவர்கள் தங்களை மிகவும் தர்மசிந்தனை உள்ளவர்களாகவும் மற்றவர்களைக் கவரும் தன்மையுடையவர்களாகவும் கருதுவார்கள். பல குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் பலவிதமான ஆடம்பரப்பொருட்களை வாங்கிக் கொடுப்பதாக கனவு காண்பார்கள். கட்டாயப் படுத்தப்பட்டுள்ள சூதாடிகள் மிகவும் வசதிகள் நிறைந்த வாழ்க்கை வாழ்வதாகவும் இந்த வாழும் முறை அவர்கள் நன்றாக பயிற்சி செய்து வைத்துள்ள சூதாடும் திறமையினால் கிடைக்கக்கூடிய செல்வத்தைக் கொண்டு அடையமுடியும் என்றும் மனக்கோட்டை கட்டுகிறார்கள். வேலைக்காரர்கள், ஆடம்பரமான வீடுகள், அழகான துணிகள், கார் முதலிய சௌகரியங்கள், உலகப் பயணம் ஆகியவை ஒருமுறை பெரும் தொகையை சூதில் கிடைத்து விட்டால் அடையலாமென எண்ணுகிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக இது ஒரு சின்னஞ்சிறு கனவைக்கூட நிறைவாக்குவதில்லை. கட்டாயமாக சூதாடுபவர்கள் ஜெயிக்கும் சமயங்களில் அவர்களின் கனவுகள் அதிகரிக்கின்றன. தோற்கும் பொழுதும் அவர்கள் எச்சரிக்கையின்றி வெறிபிடித்தவர்களைப் போல சூதாடுகிறார்கள். அவர்களின் கனவுலகம் சரிந்துவிழும் போது தவிடுபொடியாகி அவர்கள் அடையும் துயரத்தின் ஆழம் விவரிக்கமுடியாத ஒன்றாகும். வருந்தவேண்டிய விஷயம் என்ன வென்றால் அவர்கள் மீண்டும் ஜெயிக்க ஆரம்பிக்கும் பொழுது முன்போலவே நம்ப முடியாத கனவுகளைக் காண ஆரம்பிக்கிறார்கள். எந்த மனிதனாலும் இந்த கனவுகள் எல்லாம் ஒருநாளும் பலிக்கப்போவதில்லை என உணர முடிவதில்லை. அவர்களைப் பொருத்தவரை அவர்கள் என்றாவது ஒருநாள் பெரிய அளவில் ஜெயிப்பார்கள் என்ற எண்ணம் மனதில் தீவிரமாக வேரூன்றி உள்ளது.

கட்டாய நிலையில் சூதாடுபவர்கள் எப்பொழுதாவது பொழுதுபோக்கிற்காக சூதாட முடியுமா?

முடியாது. எப்படியொரு குடிநோயாளியை முதல்கோப்பை மது மோசம் செய்யுமோ அப்படியே சூதாடுபவர்களின் முதல் சூதாட்டம் ஒரு கட்டாய நிலையில் சூதாடுபவரை தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் நிலைக்கு கொண்டு தள்ளிவிடும்.

பொழுது போக்கிற்காக சூதாடுபவர் களுக்கும் கட்டாய முறையில் சூதாடுபவர்களுக்கும் இடையே உள்ள எல்லைக்கோட்டை ஒருமுறை தாண்டி விட்டால் மீண்டும் அவர்களால் கட்டுப்படுத்தும்

தன்மையை அடையமுடிவ தில்லை. சில மாதங்கள் சூதாடாமல் இருந்துவிட்டு மீண்டும் சிறியமுறையில் சூதாட முயன்றவர்கள் கூட மிகவும் மோசமான முடிவுகளையே சந்தித்தார்கள்.

அப்படியானால் நிர்ப்பந்த சூதாடி ஒரு பரிசுச் சீட்டுகூட வாங்கக்கூடாது என்று அர்த்தமா?

ஆம், அதுதான் உண்மை. எந்த நிலையிலும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நாம் இனி சூதாடுவதில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும். G.A. உறுப்பினர்கள் முதல் பந்தயம், அது பூவா தலையா என்று பார்ப்பதாக இருந்தால்கூட நமக்கு ஒத்து வராது என்பதை மறக்கக் கூடாது.

மேலே கூறியுள்ள விவரங்கள் இதுநாள் வரை சூதாட்டத்தைப் பற்றி தெரியாத விவரங்களை நமக்கு தெரிவித்தாலும், ஒருவர் நிர்பந்த சூதாட்டக்காரரா இல்லையா என்பதை துல்யமாய் அறிந்து கொள்ள வென, சில கேள்விகளை இப்போது தரப் போகிறேன்.

1. சூதாடுவதற்காக எப்போதாவது நீங்கள் அலுவலகத்திற்கு போகாது இருக்கிறீர்களா?
2. சூதாடுவது உங்கள் குடும்ப வாழ்க்கையை பாதித்து இருக்கிறதா?
3. சூதாடுவது உங்கள் மதிப்பை பாதித்து இருக்கிறதா?
4. சூதாடியபின் உங்களுக்கு மனவருத்தம் வந்ததுண்டா?
5. கடனை அடைப்பதற்காகவோ மற்ற பிரச்னை களை தீர்ப்பதற்காகவோ நீங்கள் சூதாடி இருக்கிறீர்களா?

6. சூதாடுவது வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற விருப்பத்தையோ, வேலைத் திறமையையோ பாதித்து உள்ளதா?

7. தோற்றபின் மீண்டும் சூதாடி இழந்தவற்றை மீட்கவேண்டுமென்ற உணர்வு தோன்றி யுள்ளதா?

8. ஜெயித்தபின் மீண்டும் சூதாடி அதிகமாக ஜெயிக்க வேண்டுமென்ற ஆசை தோன்றி யுள்ளதா?

9. கடைசி காசு தீரும்வரை நீங்கள் சூதாடி உள்ளீர்களா?

10. நீங்கள் சூதாடுவதற்காக எப்பொழுதாவது கடன் வாங்கியிருக்கிறீர்களா?

11. சூதாடுவதற்காக நீங்கள் எப்பொழுதாவது எதையாவது விற்று இருக்கிறீர்களா?

12. சூதாடியதால் கிடைத்த பணத்தை மற்ற தேவையான செலவிற்காக பயன்படுத்த தயங்கியதுண்டா?

13. சூதாடுவது உங்களின் நலனிலோ குடும்பத்தின் நலனிலோ அக்கறை இழக்கச் செய்துள்ளதா?

14. நீங்கள் திட்டமிட்டதற்கு மாறாக அதிக நேரம் சூதாடி இருக்கிறீர்களா?

15. நீங்கள் எப்பொழுதாவது பிரச்னைகளி லிருந்தோ கவலைகளிலிருந்தோ தப்புவதற்காக சூதாடி இருக்கிறீர்களா?

16. எப்பொழுதாவது நீங்கள் சூதாடுவதற்காக சட்டவிரோதமான செயல்களைச் செய்து இருக்கிறீர்களா? அல்லது செய்ய நினைத்திருக் கிறீர்களா?

17. சூதாடுவது உங்கள் உறக்கத்திற்கு இடையூறாக இருந்திருக்கிறதா?

18. விவாதங்கள், ஏமாற்றங்கள் அல்லது நம்மால் ஒன்றும் செய்யமுடியாத நிலமைகள் போன்றவை களினால் சூதாடும் ஆசை தோன்றியுள்ளதா?

19. எப்போதாவது உங்கள் அதிர்ஷ்டத்தைக் கொண்டாடச் சூதாட விரும்பியது உண்டா?

20. நாம் சூதாடுவது நம்மை நாமே அழித்துக் கொள்ளும் செயல் என நீங்கள் கருதியது உண்டா?

இந்த 20 கேள்விகளில், குறைந்தபட்சம் 7க்கு ஒருவர் 'ஆமாம்' என்று சொல்லி இருந்தால் அவர் நிரந்தர சூதாடியாக மாறுவது நிச்சயம் என்று ஜி.ஏ. கையேடு கூறுகிறது.

தனியாய் அமர்ந்து, சுயஅலசல் மூலம் நம் பலம், பலவீனங்களை உணர்ந்து, பலத்தை வளர்க்கவும், பலவீனங்களை குறைக்கவும் ஆவன செய்வது அவரவர் வளர்ச்சிக்கு உதவும்.

சூதாட்ட ஆசையை விட்டொழிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் பிரதி ஞாயிறு, ஹோலி கிராஸ் சர்ச், போக் ரோடு, தி.நகரில் காலை 10.30 மணிக்கு ஜி.ஏ. அங்கத்தினர்களை சந்தித்து உதவி பெறலாம், அல்லது 8256868 என்ற தொலைபேசி எண்ணோடு காலை 8லிருந்து இரவு 8 வரை தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம்.

Best of Luck.

27

'Knit India through Literature'

'இலக்கியத்தின் மூலம் இந்திய இணைப்பு'—

இந்தத் தலைப்பில் ஒரு நூதன இலக்கியப் பணியை நான் துவக்கியிருப்பதையும், அதன் துவக்க விழாவிற்கு இந்தியாவின் பிரபலமான எழுத்தாளர்கள் — தெற்கிலிருந்து எம்.டி. வாசுதேவன் நாயர், கிழக்கிலிருந்து குசும் கெமானி, வடக்கிலிருந்து குஷ்வந்த் சிங், மேற்கிலிருந்து அசோக் மஹாதேவன் — நான்கு திசைகளிலிருந்தும் பிரதிநிதிகளாக வருகை தந்து என் முயற்சிக்கு வாழ்த்துக்கள் வழங்கியதையும் தினசரிகள் மூலம் தெரிந்து கொள்ள முடிந்த பல வாசகர்கள் 'இலக்கியத்தின் மூலம் இந்திய இணைப்பு என்பதை விளக்க முடியுமா?' என்று வெளியூரிலிருந்து கடிதங்கள் எழுதி கேட்டிருக்கிறார்கள்.

சொல்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன், பாபா ஆம்தே என்னும் பெரியவர், சீரிய சமூக சேவகர், 'Knit India' என்ற பயணத்தை மேற்கொண்டு இந்திய நாட்டின் பல மாநிலத்து மக்களை சந்தித்து 'நாம் இந்தியர்' என்கிற

தேசப்பற்று உணர்வை உசுப்பி விட முயன்றது உங்களில் சிலருக்காவது ஞாபகத்தில் இருக்கும்.

அந்தச் செய்தியை பத்திரிகைகள் வாயிலாக தெரிந்து கொண்டபோது 'ஆஹா! எத்தனை உயர்வான நோக்கம்' என்று நெகிழ்ந்துபோன பலரில் நானும் ஒருத்தி. தாரக மந்திரம் போல அடி நெஞ்சுக்குள் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் 'நான் இந்தியன் என்பதில் பெருமை கொள்கிறேன்' என்கிற முணுமுணுப்பை பாபா ஆம்தேயின் இந்தப் பயணம் தூண்டிவிட, ராமர் சேதுபாலம் கட்ட அணிலும் சின்னஞ்சிறு கற்களை தூக்கிப் போட்டு உதவியது போல இந்தியரிடையே ஒற்றுமையை வளர்க்க என் பங்குக்கு நானும் ஏதாவது செய்ய வேண்டுமே - என்று மனசு ஆர்ப்பரிக்க ஆரம்பித்தது.

என்ன?

எப்படி?

எந்த விதத்தில்?

யோசித்தேன். நாட்கணக்கில், மாசக் கணக்கில்...

இதனடுவில் எழுத்தாளராகவும், சமூக பிரச்னைகள் குறித்தான விழிப்புணர்வுக்கு குரல் கொடுப்பவளாகவும் இதர மாநில கூட்டங்களில் பேச அழைப்புகள் வந்ததை ஏற்று ஆங்காங்கே பயணங்களை மேற்கொண்ட போதெல்லாம் தொடர்ந்து ஒரே அனுபவத்தை திரும்பத் திரும்ப பெற முடிந்தது. அஸ்ஸாமிலும், பீஹாரிலும் இருக்கும் இந்தியர்களுக்கு தமிழ்நாட்டின் இட்லி, வடை தெரிந்திருக்கின்றன. நல்லி, ராதா கடைகள்

அறிமுகமாயிருந்தன. மீனாக்ஷி கோயிலும், கன்னியாகுமரியும் பரிச்சியமாயிருந்தன. அப்புறம்? அவ்வளவுதான். அதற்கு மேல் தமிழரின் பழக்க வழக்கங்கள்? இலக்கியங்கள்? ம்ஹூம் - ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. கொஞ்சம் படித்தவரிடையே மிஞ்சிபோனால் பாரதியார் எட்டிப்பார்த்தார். மற்றபடி பெருமளவுக்கு - சுதந்திர வீரர்களாகட்டும், சிந்தனாவாதிகள் ஆகட்டும், இலக்கிய கர்த்தாக்களாகட்டும் எல்லாருமே - அன்னியர்கள்தாம்.

மீண்டும் மீண்டும் இதே ரீதியில் அனுபவங்கள் கிட்ட, இதை இன்னொரு கோணத்திலிருந்தும் சிந்தித்துப் பார்க்க முற்பட்டேன். நம்மை அவர்கள் அறிந்திருக்க வில்லை என்று வருந்துகிறேனே, அவர்களை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோமோ? மணிப்பூர், ராஜஸ்தான், அருணாசல், ஹிமாச்சல பிரதேசம் என்று கிழக்கு, மேற்கு கோடியிலிருக்கும் மாநிலங்களை கண்முன் நிறுத்தி யோசித்தபோது, பிரபலமான ஒரு சில விஷயங்களைத் தவிர்த்து ஊடுருவி, அவர்களை, அந்தந்த மாநிலங்களை, பார்க்க நாமும் பழகவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாக உணர முடிய, இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறோமே தவிர, அண்டை அடுத்த மாநிலங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ள நாம் எடுத்திருக்கும் முயற்சிகள் என்ன? - என்கிற கேள்வி உறுத்திக் கொண்டு எழுந்தது.

இது குறித்து சிறிய அளவிலேனும் நமக்கு நன்கு பரிச்சயமாயுள்ள இலக்கியம் மூலம் ஏதாவது செய்ய முடியுமா?

நின்று நிதானித்து யோசித்தபோது 'முடியும்' என்று தோன்ற, அதன் தொடர்ச்சியாக 'இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு' என்கிற திட்டம் ஜனித்தது.

இந்தப் பணியின் குறிக்கோள் என்ன?

சுருங்கச் சொல்லின் - 'இந்தியாவை இந்தியாவுக்கும், இந்தியர்களை இந்தியர்களுக்கும் அறிமுகப்படுத்துவது.'

அப்படியென்றால்?

இந்திய அரசியல் அமைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 18 மொழிகளில் ஒவ்வொன்றிலும் நான்கு தலைசிறந்த, மூத்த, இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்களைச் சந்தித்து, முடிந்தால் அவர்களோடு தங்கி, அந்தந்த மொழிகளைச் சார்ந்த இலக்கியத்தின் நூறு வருஷ வரலாற்றை, முக்கியமாய் சுதந்திரத்திற்குப் பின் எழுதப்பட்ட எழுத்துக்களை அறிவதும், இலக்கியங்கள் மூலம் அந்த மாநிலத்தின் தற்கால கலாசார, பழக்க வழக்கங்களை உணர்வதும் என்னுடைய முதல் நடவடிக்கையாக இருக்கும். இவற்றுடன், இலக்கிய கர்த்தாக்களின் வாழ்க்கைக் குறிப்பு, சிறந்த புதினங்களின் சுருக்கம் போன்ற அனைத்தையும் திரட்டி சுமார் 150 பக்கங்களில் தருவதன் மூலம் அந்த மொழியை, மாநிலத்தை, இதர மாநிலத்தவருக்கு அறிமுகப்படுத்துவதுதான் என் தலையாய குறிக்கோள்.

வசதிக்காக இந்தியாவை தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு என்று பிரித்து, அந்தந்த பிராந்தியங்களில் உள்ள மொழிகளைத் தொகுத்து, மொத்தம் நான்கு வால்யூம்களாக, தொகுதிகளாக

வெளிக்கொணர வேண்டும் என்பது இப்போதைய திட்டம்.

'150 பக்கங்களில் ஒரு மொழியின் இலக்கியத்தை, அல்லது அந்த மாநிலத்தை பூரணமாய் அடுத்தவருக்கு அறிமுகம் செய்வது சாத்தியமா?' என்கிற கேள்வி சிலருக்காவது எழும். நிச்சயம். சாத்தியம் இல்லை. ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும், சிறிய அளவில் அறிமுகமாவது செய்ய முடிந்து அடுத்தவரின் இலக்கியம் பற்றி இன்னும் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற உந்துதலை எழுப்ப முனைந்தால்கூட போதும் என்றே நான் நினைக்கிறேன்.

இதற்கான முஸ்தீபு வேலைகளை ஏற்கனவே துவங்கி விட்டாலும், மும்முரமாய் நேர்காணலில் இறங்கப் போவது நவம்பர் மாதத்திலிருந்துதான். கேரளாவின் மாபெரும் எழுத்தாளர்களான தகழி சிவசங்கரன் பிள்ளை, எம்.டி. வாசுதேவன் நாயர், வைக்கம் முகமது பஷீர், கமலாதாஸ், சுகத குமாரி போன்றவர்கள் என்னைச் சந்திக்கவும், இலக்கியம் மற்றும் பல விஷயங்கள் குறித்துப் பேசவும் ஒப்புக் கொண்டிருப்பதால் பிள்ளையார் சுழி மலையாள மொழியுடன் ஆரம்பிக்கப் போகிறது.

இந்தத் திட்டத்திற்கு எனக்குத் தேவைப்படும் அவகாசம் குறைந்தபட்சம் 3 வருஷங்கள், அதிக பட்சம் நான்கு ஆண்டுகள். பணம் - சில லட்சங்கள்!

இந்தியாவில் குறுக்கும் நெடுக்குமாக பயணித்து, எங்கெங்கோ வாழ்ந்து கொண்டிருக்கும் நூறு இலக்கிய கர்த்தாக்களோடு கருத்துப் பரிமாற்றல் செய்து, அறிவை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவும், தெரிந்து கொண்டதை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் ஒரு அபூர்வ வாய்ப்பு கிட்டியிருப்பதை எண்ணிப் பார்க்கையில் உடம்பும் மனசும் சிலிர்த்துதான் போகின்றன.

இன்று பிரும்மாண்டமாகக் காட்சி யளிக்கும் பெரிய ஆலமரம்கூட, ஒரு காலத்தில் சிறு விதையாகத்தான் ஊன்றப்பட்டிருக்கிறது.

எதிர்கால சமுதாயத்திற்கு அற்புதமான பலன்களை அளிக்கக்கூடிய மரம் ஒன்றிற்கு வித்திட்டு பேண வேண்டும் என்பது என் லட்சியம். என்றாலும், இது தனி நபரால் மட்டுமே ஆகக்கூடிய காரியம் அல்ல, கூட்டு முயற்சி இருந்தால்தான் வெற்றி அமோகமாய் இருக்கும் என்பதையும் மறக்காமல் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட அனைவரின் ஊக்கம், உற்சாகம், ஒத்துழைப்புடன் விதை முளைவிட்டு ஆரோக்கியமாய் வளரும் என்றால் அந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணை எதுவுமே இருக்காது என்று நினைக்கிறேன்.

16856
3288079

28

நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்று பிரேமாவைச் சந்திக்க நேர்ந்தது. ரொம்பக் கோபமாக இருந்தவர், பொது இடம் என்கிற தயக்கம் இல்லாமல் பொரிந்து தள்ளி விட்டார்.

"உங்களைப் பார்க்க வீட்டுக்கே வர வேண்டும் என்றிருந்தேன். நல்ல வேளையா இங்கேயே சந்தித்து விட்டேன். தங்கையின் புருஷன் விபத்தில் அகாலமாய் இறந்துவிட்ட சேதி கிடைத்து 15 நாட்களுக்கு முன் கிராமத்திற்குப் போயிருந்தவள் நேற்று இரவுதான் ஊர் திரும்பினேன். ஏன் போனோம், ஏன் உடனடியாய் புறப்பட்டு வராமல் இத்தனை நாட்கள் அங்கே தங்கினோம் என்று வெறுப்பாகக்கூட இருக்கிறது"

கோபத்தையும் மீறிக் கொண்டு கண்களில் நீர் முத்துக்கள் திரள, எட்டி அவர் கரத்தைப் பற்றி "என்ன விஷயம் பிரேமா - தெளிவாகச் சொன்னால்தானே புரியும்?" என்றேன்.

சொன்னார்.

அவருடைய தங்கைக்கு வயசு முப்பத்தி ஆறு. திருமணமாகி மதுரைக்கு அருகில் உள்ள கிராமத்தில்

வசிக்கிறாள். பணம், ஆள், செளகர்யம் என்று எதற்கும் குறைச்சல் இல்லை. ஏர்காடு கான்வென்டில் பிள்ளைகள் படிக்கிறார்கள்.

"கிராமத்தில் வாழ்ந்தாலும் காலத்தை ஒட்டின மாற்றங்களை ஏற்றுக்கொண்டு முற்போக்கு சிந்தனைகளுடன் இருக்கிறார்கள் என்று நம்பியிருந்தேன். ஆனால் தங்கை கணவர் சாவிற்குப் போனபோது என் நம்பிக்கை தரை மட்டமாகி விட்டது. பரம்பரையாய் செய்யும் காரியங்களை ஒன்றுவிடாமல் 16 நாட்கள் செய்து, என் தங்கை அணிந்திருந்த அத்தனை நகைகளையும் கழட்டி, வெள்ளைப் புடவையை உடுத்தச் செய்து, அவளை அலங்கோலமாக்கி, ஒரு வருஷத்திற்கு வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்று சொல்லி... ச்சீ.. மனிதர்களா அவர்கள்? பங்காளிகள், சொந்தக்காரர்கள் என்று நூற்றுக்கணக்கில் வந்தவர்களில் ஒருத்தர் கூட வாயைத் திறந்து 'இந்தக் காலத்தில் என்ன அக்கிரமம் இது!' என்று கேட்கவில்லை தெரியுமா! 'இது கூடாது' என்று நான் குரல் கொடுத்ததையும் 'அதிகப் பிரசங்கிதனமாய் பேசாதே - இது எங்கள் குடும்ப விஷயம்' என்று அதட்டி அடக்கிவிட்டார்கள்! எது அவர்கள் குடும்ப விஷயம்? என் தங்கையை அலங்கோலப் படுத்துவதா? பிள்ளைகளை கான்வென்டில் படிக்க வைத்தால் ஆயிற்றா? ஒரு பெண்ணின் உணர்வுகளுக்கு மரியாதை கொடுத்து நடத்தத் தெரியாத இவர்களெல்லாம் மனிதர்களா? சாட்டையால் அடிக்கிற மாதிரி இதைப் பற்றி விலாவாரியாக எழுதிப் படிக்கிறவர்களிடையே ஒரு விழிப்புணர்வை உண்டாக்குங்கள் சிவசங்கரி - ப்ளீஸ்"

வேதனை தாளாமல் பிரேமா சத்தமில்லாமல் விசும்ப முற்பட, அந்த அவஸ்தை என்னையும் தொற்றிக் கொண்டது.

எத்தனை வீடுகளில், எத்தனை முறைகள் இந்த அனுபவத்தைப் பெற்றுவிட்டோம்!

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்றிருக்கும் நிலை என்று முழுமையாக மாறி, பெண்ணை ரத்தமும், சதையும், உணர்வும், ஏக்கமும் கொண்ட ஒரு மனுஷியாக என்று இந்த சமுதாயம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப் போகிறது?

மனைவியை இழந்த ஆணை குறிக்க 'விதவன்' என்ற சொல் வழக்கில் இல்லாத போது 'விதவை' என்கிற அடையாளச் சொல் மட்டும் எதற்கு?

தோற்றத்தைக் கொண்டு ஒரு ஆணின் மனைவி உயிருடன் இருக்கிறாளா இல்லையா என்று தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டாத சமூகம், எதற்காக தோற்றத்தின் மூலம் கணவன் இருக்கிறானா, இறந்துவிட்டானா என்று ஒரு பெண் தெரியப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டும்?

கண்ணான கணவனை இழந்து, பாதுகாப்பு தகர்ந்து, பிரிவில் துடிக்கும் ஒரு பெண்ணை ஆதரவுடன் அணுகி இதமாய் நடந்து கொள்ள வேண்டிய தருணத்தில் 'இதைச் செய்யாதே, அப்படி உடுக்காதே, இங்கே வராதே' என்று வேண்டாத சங்கிலிகளைப் பிணைத்து அவளை மேம்மேலும் வருத்துவதில் இந்த சமுதாயம் என்ன சாதிக்கிறது?

இது பண்பாடு என்கிற பெயரில் நடத்தப்படும் பழிவாங்கலா?

பாரம்பரிய பழக்கத்தைக் காப்பாற்று கிறேன் என்கிற அசட்டுத்தனமா?

அல்லது தெரியாத்தனமா?

ஏதோ ஒன்றோ, அல்லது எல்லாமோ தானோ, எதுவாக இருப்பினும் இந்தத் தேவையற்ற பழக்க வழக்கங்கள் உடனடியாய் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதானே நிஜம்?

முன்பிருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இன்றைக்கு கட்டாய விதவைக் கோலம் குறைந்திருக்கிறது; நான் மறுக்கவில்லை. என்றாலும், இந்த மாற்றம் நகரங்களில்தான் மலர்ந்திருக்கிறது. சின்ன ஊர்களில், கிராமங்களில் இன்னமும் வேர் ஆழமாகத்தான் செல்கிறது.

பசி, தூக்கம், வலி, வருத்தம் போன்ற அனைத்து உணர்வுகளும் பொதுவாக இருக்க, ஒருவரை வெண்ணையாகவும், மற்றவரை சுண்ணாம்பாகவும் நடத்துவதன் அவசியம், காரணம்தான் என்ன? யோசிக்க வேண்டாமா?

துணையை இழந்து தவிக்கும் எவருக்குமே அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அந்த துன்பமான நாட்களில் அடுத்தவர்களிடமிருந்து அன்பு, கரிசனம், இதம், புரிந்து கொள்ளுதல் போன்றவை கட்டாயமாகத் தேவைப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர் நிம்மதியாய் வாழ உதவாவிடினும் அவரை மேலும் குத்தி புண்ணாக்கி துன்புறுத்துவது மனித நேயம் கொண்ட செயல்தானா?

உடுப்பதும், உறங்குவதும், உண்ணுவதும், அலங்கரித்துக் கொள்வதும், மீண்டும் துணை தேடுவதும் தனிநபரின் விருப்பு, வெறுப்புகளை

பொறுத்தது. பசித்தவர் சாப்பிடட்டும், துணைக்கு ஏங்குபவர் மறுமணம் செய்து கொள்ளட்டும், விரும்புகிறவர் 'பளிச்' சென்று அலங்கரித்துக் கொள்ளட்டும். எதுவானாலும், அது அவரவர் விருப்பம். தலையிட யாருக்கும், அது பெற்றவரானாலும், பெற்ற பிள்ளையானாலும் உரிமை இல்லை.

பல பெண்கள் (என்னையும் சேர்த்துதான்) கணவரை இழந்த பின்பும் பழைய தோற்றத்துடனே இருப்பதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

"இது என் வாழ்க்கை. என் தோற்றம். அதை எப்படி வேண்டுமானாலும் வெளிப்படுத்துவேன். அது என் இஷ்டம்."

"தாலி, பூ, மெட்டி, பொட்டு இத்யாதிகளுடன் இருக்கும்போது கணவருடன் வாழ்ந்த வாழ்க்கை தொடருவது போல எனக்கு கொஞ்சம் நிம்மதியாய் இருக்கிறது".

"பொது, வேலை பார்க்கும் இடங்களில் 'ஓ! இவள் மணமானவள், கணவன் இருக்கிறான்' என்ற எண்ணத்தில் சிலரையாவது என்னிடமிருந்து ஒதுங்க வைத்து, பாதுகாப்பு தருகிறது"

"தோற்றத்தின் மூலம் என் இழப்பை குப்பன், சுப்பனுக்கும் டமாரம் அடித்து தெரிவித்து, அவர்களின் வேண்டாத பச்சாதாபத்தை நான் பெற விரும்பவில்லை"

"இழப்பு எனக்கு மட்டுமே! அதை நான் ஏன் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்?"

புரிகிறதா வாசகர்களே?

அவர்களுக்குத் தேவை, இதம், புரிந்து கொள்ளுதல் இவற்றோடு முக்கியமாய் மரியாதை 'ஐயோ பாவம்' என்கிற பரிதாபம் அல்ல.

புருஷனை இழந்து விடுவதால் ஒரு பெண் அமங்கலியாகி, எல்லாவிதத்திலும் அமங்கலமாகவும் ஆகிவிடுவதும், இதன் காரணமாய் பத்து மாசம் சுமந்து பெற்ற மகனின் திருமணத்தைக் கூட அவள் யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொண்டு காண வேண்டும் என்கிற கட்டுப்பாட்டை ஆண்டாண்டு காலமாய் சமூகம் விதித்திருப்பதும் என்னைப் பொறுத்தவரை காட்டுமிராண்டித்தனமான செயல்களே!

பெண் உடம்பிலும் ஆணைப் போலவே சிகப்பு ரத்தம்தான் ஓடுகிறது. அவள் ஸ்வாசிப்பதும் நாசியால்தான், சாப்பிடுவதும் வாயால்தான். அவளுக்கும் ஹ்ருதயம், மூளை, சிந்தனைகள், ஆசாபாசங்கள் எல்லாம் இருக்கின்றன.

அரசாங்கம் மூலமும், தொண்டு நிறுவனங்கள் மூலமும் சமுதாய பிரச்னைகளுக்கு தீர்வு காண துடிக்கும் பலரும், கொஞ்சம் நிதானித்து தன் வீட்டிலேயே சுற்றிப் பார்க்க முற்பட்டால் கணவனை இழந்த அம்மா, அக்கா, சித்தி, அத்தை என்று எத்தனையோ பெண்கள் இருப்பது புரியும். Charity begins at home. அருகில் சென்று, மனப்பூர்வமான அக்கறை, மரியாதையுடன் 'இது உங்கள் வாழ்க்கை. உங்களுக்கு எது விருப்பமோ, செய்யுங்கள். நான் துணை இருப்பேன்' என்று ஒவ்வொரு வீட்டிலும் ஆண்கள் என்றைக்கு சொல்லத் துணிகிறார்களோ, அன்றுதான் பெண் விடுதலைக்கு முழுமையாய் அர்த்தம் கிட்டும்... சத்தியமாய்....

29

சமீபகாலமாய் பட்டி தொட்டிகளிலும், நகரங்களிலும், கிராமங்களிலும், படித்தவர்களிடையேயும், படிக்காதவர்களிடையேயும் கூட பரவலாக பேசப்படும் - ஏன், விவாதிக்கப்படும் என்றும் சொல்லலாம் - வரும் விஷயம் பெண் சிசுக்கள் பிறந்த உடனேயே கொலை செய்யப்படும் கொடுமை! அதுவும் தமிழக அரசு 'உங்களால் வளர்க்க முடியாத பெண் குழந்தைகளை குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்கும் தொட்டில்களில் போட்டு விட்டால், அவர்களை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை அரசு ஏற்கும்' என்று அறிவித்ததிலிருந்து 'இது சரியான நடவடிக்கை' என்கிற பாராட்டு ஒரு பக்கமும், 'இல்லை இல்லை... பெற்றவர்கள் இந்த மாதிரி பொறுப்பை தட்டிக் கழிக்க வழி பண்ணிக் கொடுப்பது பிரச்னையை தீர்க்க உதவாது' என்கிற கண்டனம் இன்னொரு பக்கமும் எழுந்திருக்கிறது.

சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன், முதன்முதலாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியைச் சுற்றி பெண் குழந்தைகளை பிறந்த உடனேயே கொல்லும் அக்கிரமம் நடக்கிறது என்பதை கேள்விப்பட்ட உடனேயே அதிர்ந்து போய் அங்கு

சென்று, அப்படி நடந்த கொடூர சம்பவம் ஒன்றில் பங்கு கொண்ட நபரை சந்திக்க முயன்றேன். 'இங்கு அப்படி எல்லாம் நடக்கவில்லை, யாரோ கதை விட்டிருக்கிறார்கள்' என்று ஊர் பெரியவர்கள் மறுத்தும் விடாப்பிடியாக இங்கு அங்கு துருவி, கடைசியில் கோவில் பூசாரி மூலம் ஒரு இளம் தாயை சந்தித்தேன்.

அந்தப் பெண்ணுக்கு இருபத்தி இரண்டு அல்லது இருபத்திமூன்று வயசிருந்தால் அதிகம். இடுப்பில் சுமார் இரண்டு வயசு மதிக்கத்தக்க பிள்ளை ஒன்றை அமர்த்தியவாறு எதிரில் வந்து நின்றாள்.

கையோடு கொண்டு போயிருந்த பிஸ்கட் பொட்டலத்தை நீட்டினேன். தயங்கினாள்.

''வாங்கிக்க'' என்று பூசாரி சொன்னதும் பெற்றுக் கொண்டாள்.

"இது உன் மகனா?"

"ஆம்" என்று தலை அசைத்தாள்.

"உனக்கு மொத்தம் எத்தனை பசங்க?"

"ரெண்டு"

"ரெண்டுமே ஆம்பளை பசங்கதானா?"

"இல்ல.. மூத்தது பொட்டபுள்ள..."

அரை நிமிஷ மௌனத்திற்கு பின் மெதுவாக வினவினேன்.

"போன மாசம் உனக்கு மூணாவதா ஒரு பொம்பளை குழந்தை பிறந்து, செத்துருச்சுனு கேள்விப்பட்டேன்... அது எப்படி செத்தது?"

கேள்வி காதில் விழாத மாதிரி அவள் பிஸ்கட்டை மகனுக்கு பிரித்து கொடுப்பதில் முனைந்திருக்க, மறுபடி கேட்டேன்.

பதில் இல்லை.

இப்போது பூசாரி குறுக்கிட்டார்.

"பரவாயில்லை.. பயப்படாம சொல்லு..."

அவள் நிமிராமலேயே பேசினாள்.

"தானா சாகலை.. நாங்கதான் கொதிக்கற கோழிக் கொழும்ப வாயில ஊத்தி கொன்னுட்டம்"

"நாங்க-னா?"

"எம் மாமியார் கிழவியும், நானும்..."

'குப்பையைப் பெருக்கி, அள்ளிக் கொட்டினேன்' என்கிற மாதிரி விட்டேத்தியாய் அவள் பதில் கூற, நான் லேசாய் குரல் உயர பதைத்தேன்.

"பத்து மாசம் சுமந்து பெத்த குழந்தையை உன் கையாலேயே கொல்ல உனக்கு எப்படி மனசு வந்தது? அந்த பச்சை மண் சாகறத்துக்குள்ள என்னமா துடிச்சிருக்கும்? அது உன்ன பதற வைக்கல?"

அவள் 'சரக்'கென்று நிமிர்ந்தாள். பார்வை என்னையும் தாண்டி எங்கோ நிலை குத்தி நிற்க, நிதானமாய், ஆனால் தயங்காமல் பதில் கூறினாள்.

"அது ஆளாகி வளர்ந்தப்புறமும், அப்பால புருஷன் வீட்டுலயும், படப்போற கஷ்டத்த நினைச்சு பாக்குறப்போ, இப்ப அனுபவிச்ச வேதனை ஒண்ணும் பெரிசா தெரியல..!"

இதுதான் அடிப்படை காரணம்.

பெண் ஜன்மம் என்றாலே வேதனைகள்.. அவளால் பெற்றவர்களுக்கு எந்த ஆதாயமும் இல்லை. ஆதியிலிருந்து கடைசி வரை செலவுதான். கல்யாணம் பண்ணி கொடுத்த பிறகும் அவளுக்கும், பிறருக்கும் உண்டாகும் பிரச்னைகள் குறைவதேயில்லை.. இத்யாதி எண்ணங்கள் பல நூற்றாண்டுகளாய் சமுதாயத்தில் வேரோடிப் போனதில் பெற்ற தாயே, நாளைக்கு அவள் தானும் அனுபவித்து, தன் குடும்பத்தையும் அனுபவிக்கச் செய்யும் வேதனைகளைவிட, இன்றைக்கு பத்து நிமிஷங்கள் துடித்து விட்டு இறப்பது மேல் என்று மனப்பூர்வமாக நம்பும் அளவுக்கு மூளைச் சலவை செய்யப்பட்டிருப்பதுதான் இன்றைய, அப்பட்ட நிலை.

'அரசாங்கம் தொட்டில்களை வைத்து வேண்டாத பெண் குழந்தைகளை அவற்றில் போட வைத்து, அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்பதன் மூலம் இதற்கு தீர்வு காண முடியுமா?' என்று அக்கறையுடன் சிலர் கவலைக்குரல் எழுப்பி இருப்பதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால், இப்படி கேள்வி கேட்பவர்கள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது என்றே நான் நினைக்கிறேன்.

எந்த ஒரு பிரச்னைக்கும் தீர்வு காண வேண்டுமென்றால் அதை அவசியம் இரண்டு கோணங்களிலிருந்து சிந்திக்க வேண்டும் என்பது நிபுணர்களின் கருத்து. ஒன்று உடனடி நிவாரணம் (short term solution) மற்றது தொலைநோக்கு நிவாரணம் (long term solution)

அதாவது, ஒருவருக்கு வயிற்றை வலிக்கிறது என்றால் முதலில் வலிக்கு மருந்து கொடுப்போம்,

அப்படியும் சரியாகவில்லை என்றால் வலிக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து தேவைப்பட்டால் அறுவை சிகிச்சை வரைக்கும் சென்று பூரண குணத்திற்கு வழி செய்வோம் - அல்லவா? முதலில் வலிக்கு மருந்து கொடுப்பது தற்காலிக சிகிச்சை; அதாவது உடனடி நிவாரணம்; பரிசோதனைகள் செய்து அறுவை சிகிச்சை அளிப்பது நிரந்தர தீர்வு; அதாவது - தொலைநோக்கு நிவாரணம்.

தற்சமயம் நாட்டில் நிலவி வரும் பெண் சிசுக்கள் கொலை என்கிற பிரச்னைக்கும் இப்படி இரண்டு கோணங்களிலிருந்தும் சிந்தித்து ஒரே சமயத்தில் நடவடிக்கைகளில் இறங்கினால் 5 - 10 வருஷங்களுக்குள் கண்டிப்பாய் மாற்றம் உண்டாகும் என்பது என் நம்பிக்கை.

'பசித்தவனுக்கு மீனைத் தின்ன கொடுப்பதை விட, அதை பிடிக்க கற்றுத் தருவது சிறந்த தீர்வு' என்கிற பழமொழி எல்லோரும் கேள்விப்பட்டதுதான். இலவசமாய் சோறு கொடுப்பதைக் காட்டிலும், உழைத்து அந்த உணவை தொடர்ந்து சம்பாதிக்க வழி சொல்லிக் கொடுப்பது உத்தமமான காரியம்; என்றாலும் பலன் இன்னும் சிறப்பாக அமைய, மேற்சொன்ன பழமொழியில் ஒரு சின்ன மாற்றத்தை செய்ய நான் விரும்புகிறேன்.

பசியோடு இருப்பவனிடம் போய் "வா, உனக்கு மீன் பிடிக்கச் சொல்லித் தருகிறேன். உன் எதிர் காலத்திற்கு அது நல்லது" என்று எத்தனை எடுத்துச் சொன்னாலும், பசி குடலைச் சுண்டி இழுக்கும் போது அதை அவன் முழுமையாக கற்பதும், ஏற்பதும் சாத்தியமில்லாமல் போகலாம். அதனால், முதலில் அவனுடைய பசிக்கு, அந்த வேளைக்கு மட்டும் மீன் கொடுத்து, பிரச்னையை தாற்காலிகமாய் தீர்த்து விட்டு, பிறகு அவனுக்கு மீன் பிடிக்க கற்றுத் தந்தால், பசி அடங்கிய சந்தோஷத்தில் கவனமாய் கேட்பது மட்டுமல்லாமல், 'நம் பசி உணர்ந்து மீன் கொடுத்தவர் அக்கறையோடு சொல்கிறார், கேட்பது அவசியம்' என்கிற பொறுப்போடும் கற்பிப்பதை ஏற்பான். இது என் அனுபவத்தின் மூலம் நான் உணர்ந்த உண்மை!

ஒரு வேளை சாப்பாடு கொடுப்பது தற்காலிக நிவாரணம். தொடர்ந்து தானே சம்பாதிக்க வழி சொல்லித் தருவது நிரந்தர நிவாரணம்.

இதைப் போலவே - வேண்டாததாகக் கருதப்படும் பெண் குழந்தைகள் கொல்லப் படுவதை தடுக்க, அரசாங்கம் தானே வளர்க்க முன் வந்திருப்பது, தற்காலிக, உடனடி shortterm தீர்வு; மக்களுக்கு சரியான விதத்தில் படிப்பு, மீடியா (பத்திரிகை, படம், தொலைக்காட்சி மூலம்) விழிப்புணர்வு கொடுத்து குழந்தைகளில் ஆண், பெண் இரண்டும் ஒன்றுதான் என்கிற நம்பிக்கையை படிப்படியாய் வளர்த்து, பத்தாண்டு காலத்தில் இந்தக் கொடிய வழக்கத்தை அடியோடு ஒழிப்பது நிரந்தர, long term தீர்வு.

ஆக, இரண்டுமே அவசியம் என்பது புரிகிறதா நண்பர்களே?

30

GlobalHungerProject – உலகளவில் 'பசி பட்டினி என்கிற கொடுமை இருக்கக்கூடாது; பசியினால் சாவு என்பது ஒழிய வேண்டும். அதற்கான முயற்சிகளுக்காக எனது பணம், சிந்தனை, உழைப்பு இவைகளை முடிந்த வரையில் தருவேன்' என்று பிரதிக்ஞை செய்து கொண்டு சுமார் 152 நாடுகளில் வாழும் 62 லட்சம் ஜனங்கள் இனம், மொழி, மதங்களைக் கடந்து ஒன்றிணைந்து பாடுபட்டு வரும் இயக்கத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இந்தியாவில் மட்டும் நாள் ஒன்றுக்கு (கவனிக்கவும், ஆண்டொன்றுக்கு அல்ல) 11,000 குழந்தைகள், பெண்கள், ஆண்கள் நிரந்தரப் பட்டினியால் பாதிக்கப்பட்டு சாகிறார்கள் என்பதை உணர்ந்து, இந்த அநியாயத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்கிற உந்துதலில் 1984ம் ஆண்டு 'உலக பசி இயக்கத்தின்' கிளையாக பம்பாயில் HungerProject–India துவக்கப்பட்டது.

இதன் இயக்குனர்களில் ஒருவரான 'விவசாய விஞ்ஞானி' என்று போற்றப்படும் டாக்டர் எம்.எஸ்.

ஸ்வாமிநாதன் மூலம் இந்த ஸ்தாபனம் எனக்கு அறிமுகமாயிற்று.

வளரும் எந்த ஒரு நாட்டிலும் நிரந்தர பட்டினி இருக்கக்கூடாது என்றால் அதற்கு முதல் நடவடிக்கையாய் பெண்களுக்கு ஆரோக்கியம், படிப்பு, சம்பாத்தியம், குடும்பக் கட்டுப்பாடு, சுற்றுப்புறச் சூழல், தன்னம்பிக்கை ஆகிய விஷயங்கள் குறித்து சரியான விழிப்புணர்வு தருவது அவசியம் என்பது இந்த இயக்கத்தின் அழுத்தமான நம்பிக்கை. 'பொதுவாக, ஒரு ஆணிடம் 100 ரூபாயைத் தந்தால் அது எந்த அளவுக்கு அவனுடைய குடும்பத்தைச் சென்று அடையும் என்பதைக் கூற முடியாது. ஆனால் ஒரு பெண்ணுக்கு அளிக்கப்படும் பணம் கிட்டத்தட்ட முழுவதுமே அவள் குடும்பத்துக்காக செலவிடப்படும் என்பதை உறுதியாகச் சொல்லலாம். அதனால் மூன்றாவது உலக நாடுகளில் உடனடியாய் பெண்களின் கல்வித் தரத்தையும் சம்பாதிக்கும் திறனையும் உயர்த்துவது மிகமிக அவசியம் என்னும் இவ்வியக்கத்தின் வாதமும், 'சமுதாயம் மேம்பட வேண்டுமென்றால், குடும்பங்கள் தன்னிறைவு பெற வேண்டும். குடும்பம் வளமடைய வேண்டுமென்றால், பெண் முழுமையான வளர்ச்சி பெற வேண்டும்' என்ற நோக்கமும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியது தானே.

தமிழ்நாடு கவுன்ஸில் – என்கிற பிரிவின் கீழ் ஹங்கர் ப்ராஜக்ட் – இந்தியா – பெண்கள் மேம்பாட்டுக்காக திட்டங்கள் தீட்டி அமுல்படுத்தும் குழுவில் நானும் இடம் பெற்றிருப்பதால் கவுன்ஸிலின் சில நடவடிக்கைகளை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

'2000-வது ஆண்டுக்குள் தமிழ்நாட்டிலுள்ள அனைவரையும் ஆரோக்கியமுள்ளவர்களாக்கி பொருளாதாரத்திலும் தன்னிறைவு பெற்றவர்களாக மாற்ற வேண்டும்' என்கிற உயர்ந்த லட்சியத்துடன் செயல்படும் கவுன்ஸில், குறிப்பிட்ட லட்சியத்தை அடைய பெண்களின் பூரண வளர்ச்சி அஸ்திவாரமாக அமைகிறது என்பதால் தேவையான விழிப்புணர்வுக்கும், பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும் பாடுபடுகிறது. கூடவே, அரசுடன் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசாங்கம் அல்லாத சங்கங்களையும் (NGO) ஒருங்கிணைத்து வலுவுள்ள ஒரு இயக்கமாக்கி மேற்சொன்ன விஷயங்களை அமுலாக்குவதிலும் முனைந்திருக்கிறது.

'அன்பு' (ANBU – Awareness Needed for Betterment of unpriviledged) என்கிற விழிப்புணர்வு இயக்கத்திற்கு என்னைத் தலைவராக நியமித்த பிறகு, சென்ற வருஷம் பொதுஜன தொடர்பு சாதனங்களோடு சம்பந்தமுள்ள சுமார் 100 முக்கிய புள்ளிகளுக்கு அழைப்பு விடுத்து 'பெண் குழந்தைகள் மேம்பாடு' குறித்த விழிப்புணர்வு மக்களிடையே தோன்ற என்னென்ன செய்யலாம் என்று அவர்களோடு அலசினேன். தொடர்ந்து கல்விப் பணியில் சிறந்தவர்களுடன் இது சம்பந்தமாய் கலந்துரையாடல் நடந்தது. இக் கூட்டங்களில் கிடைத்த கருத்துக்களை ஏற்று, முதலில் தொலைக்காட்சி, திரைப்படங்கள், ரேடியோ மூலம் 'குழந்தைகளில் ஆண், பெண் என்ற பேதம் தேவை இல்லை. எந்த சந்தர்ப்பத்திலும் குடும்பத்தையும், சமுதாயத்தையும் காக்கும், வளர்க்கும் நபராகப் பெண்ணால் இயங்க முடியும்' என்கிற விழிப்புணர்வை தோற்றுவிக்க முயல வேண்டும் என்பது தீர்மானமாயிற்று.

'ஸ்பாட்' எனப்படும் தேவையான விளம்பரப் படங்களை, பாடலை எடுக்கும் பணியில் ஏவி.எம். நிறுவனத்தார், திரு. வைரமுத்து, திரு. ஸ்ரீராம் போன்றவர்கள் எங்களோடு சந்தோஷத்தோடு இணைந்து கொண்டார்கள்.

'ஆணுக்குப் பெண் எதிரி அல்ல; ஜனத்தொகையில் சமபங்கு வகிக்கும் பெண்களை, மதிக்கவும், மரியாதை கொடுக்கவும் சமுதாயம் முன் வரவேண்டும். ஆணும், பெண்ணும் இணைந்து பொறுப்புகளை சுமந்தால், அற்புதங்களை செய்து காட்டலாம்' என்கிற ரீதியில் பாடல் அமைய வேண்டும் என்று நான் விரும்பியதற்கும் மேலேயே கவியரசு வைரமுத்து எழுதித் தந்த பாடல் இதுதான்.

எத்தனை யுகங்கள், எத்தனை யுகங்கள்,
எங்கே போயின எங்கள் முகங்கள்.

முகமும் அற்று, முகவரி அற்று,
முடிந்து போயின ஆயிரம் யுகங்கள்

இல்லம் அலுவல் இரண்டிலும் நொந்து
இரட்டைச் சுமைக்கு ஆளானோம்.

எத்தனை யுகங்கள் எத்தனை யுகங்கள்

ஆணின் தேவை தீர்த்து வைக்கவே அடிக்கடி
நாங்கள் தாயானோம்.

எத்தனை யுகங்கள் எத்தனை யுகங்கள்.

எத்தனைக் காலம் உறங்கிவிட்டோம்
இப்போதாவது சிறை உடைப்போம்
பெண்கள் ஜாதி உலகில் பாதி என்பதை
உணர்த்த குரல் கொடுப்போம்

நாணம் சுமந்த பெண்கள் எழுந்து
வானம் சுமக்கும் காலமிது
ஆடை நகைகள் அணிந்தது போக
ஆயுதம் அணியும் காலமிது
சிவனும் பாதி பார்வதி பாதி
கற்பனை பாடிய கானம் அது
ஆணும் பெண்ணும் எதிலும் பாதி
அறிவியல் சொல்லிய வேதமிது

பெண்களின் சிறகை பறியாதிருந்தால்
வானம் அவர்களின் எல்லையன்றோ ?
துதித்திடும் வழக்கம் வேண்டாம் இங்கே
மதித்திடும் வழக்கம் வேண்டுமன்றோ ?
ஆணும் பெண்ணும் ஆணையிட்டழைத்தால்
வானம் பூமியில் வந்து வணங்காதோ

எத்தனை யுகங்கள் எத்தனை யுகங்கள்
இன்றே தோன்றின எங்கள் முகங்கள்.

தாயன்பன் இசையில் வாணி ஜெயராமும் எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் பாட, பரிச்சயமான கலைஞர்கள் மூலம் சொல்லப்படும் செய்திகளை மக்கள் ஆர்வத்துடன் கவனிக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிய முழுக்க முழுக்க பிரபலமன நடிகர், நடிகைகளைக் கொண்டே தயாரிக்கப்பட்ட பாடல், ஸ்பாட்களை சென்னை தொலைகாட்சி நிலையம் வாரம் ஒரு தரமாவது ஒலிபரப்ப முன்வர... இன்றைக்கு 'குழந்தைகளில் ஆண் என்ன? பெண் என்ன?' என்கிற விளம்பரப் படங்களும், 'எத்தனை யுகங்கள்' பாடலும் மக்களிடையே குறிப்பாக கிராமங்களில் கூட, அமோக வரவேற்பை பெற்றிருப்பதை நீங்களே அறிவீர்கள். இது முதல் அடிதான். ஆனால் 3000 மைல்கள் போக வேண்டிய

நீண்ட பயணம் கூட சின்னதாய் முதலில் எடுத்து வைக்கும் அடியிலிருந்துதான் துவங்குகிறது என்பது நினைவுக்கு வர சரியான திசை நோக்கி, சரியான விதத்தில் முதல் அடியை எடுத்து வைத்திருக்கிறோம் என்று சந்தோஷமாய் இருக்கிறது.

நிலத்தை உழுது மண்ணைத் தயார் செய்வது தான் முடிந்திருக்கிறது. இன்னும் விதைகளை நடவேண்டும், தண்ணீர் பாய்ச்ச வேண்டும், உரம் இட வேண்டும், களை எடுக்க வேண்டும், பூச்சி மருந்து அடிக்க வேண்டும்.... அப்புறம் ... ப்பா... செய்ய வேண்டிய வேலைகளை நினைக்கும் போது மலைப்பாக இருந்தாலும் எங்களோடு கை கோர்த்து பணியாற்ற பல நல்லிதயங்கள் தயாராக இருப்பது அடுத்த அடியை எடுத்து வைக்க பலம் தருவது நிஜம்.

"சரி, இதுவரை செய்ததற்கு இன்னென்ன பலன் கிட்டியிருக்கிறது என்று குறிப்பிட முடியுமா? இந்த மாதிரி படங்கள் காட்டுவதிலும், தெரு முனை நாடகங்கள் போடுவதிலும், பத்திரிகைகளில் எழுதுவதாலும் மக்கள் மனதை முழுசுமாய் மாற்ற முடியும் என்று நினைக்கிறீர்களா?" - என்கிற ரீதியில் என்னிடம் கேள்விகள் - ஒரு சவாலாகவே - கேட்கப்படும் போதெல்லாம் நான் சொல்லும் பதில் - "இல்லை எதுவும் திட்டவட்டமாய் சொல்ல முடியாது" என்பதுதான்.

ஆம் - இது கணக்கு இல்லை; 'இரண்டும் இரண்டும் நாலு' - என்று கூட்டி சொல்வதற்கு. இது மனசு சம்பந்தப்பட்டது; உணர்ச்சிகளோடு கலந்தது; ஆயிரம் வருஷங்களாய் கலாசாரம், பாரம்பரியம் என்கிற பெயரில் புத்தியில் ஊறிப் போனது. இது -

பாறையை தகர்த்து அடியிலுள்ள மண்ணை உழுது, தயாராக்கும் பணி- இதை துளித்துளியாய் சிந்தனை, செயல், சொல் என்று மூன்று பக்கங்களிலிருந்து தாக்கி மெதுமெதுவாய் தகர்க்க முடியுமே தவிரவும், மந்திரக் கோலை கையில் வைத்துக்கொண்டு 'சூ மந்திரக்காளி, மாறி விடு' என்று மாற்ற முடியாது.

சாதாரணக் கீரையை விதைத்தால் கூட நாற்பது நாட்கள் காத்திருக்க வேண்டும். என் கையில், எதிர் காலத்தில் பிரும்மாண்டமான ஆலமரம் வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கு தொலைநோக்கு பார்வை, திட்டம், செயல்களோடு, அலாதி பொறுமையும் தேவை. அத்தனையும் எங்களுக்கு இருக்கிறது, என்பது என் நம்பிக்கை. தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது பிரார்த்தனை.

31

'ஹங்கர் ப்ராஜக்ட்' இயக்கத்தினர் சென்ற அக்டோபர் மாதம் 26-ம் தேதியிலிருந்து 31-ம் தேதி வரை ஸ்விட்ஜர்லாந்தில் இருக்கும் ஜுரிச் நகரில், உலகளவில் நடத்திய கருத்தரங்கில், ஆசியாவின் ஒரே பிரதிநிதியாக கலந்து கொண்டது, புதிய கோணங்களிலிருந்து பல விஷயங்களை பார்க்கவும், சிந்திக்கவும் எனக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது என்றே நினைக்கிறேன்.

'பட்டினிக் கொடுமையை ஒழிக்க முற்படும் அதே தருணத்தில் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து தொலைநோக்கு பார்வையுடன் திட்டமிடுவது எப்படி?' என்கிற குறிக்கோளுடன் நடந்த முதல் நாள் கூட்டத்தில், கானா நாட்டைச் சார்ந்த டாக்டர் எஸ்தர் ஆக்லோ, அம்பாஸடர் வின்சென்ட் சான்செஸ், ஸ்விஸ் நாட்டு மந்திரி டாக்டர் யக்கர் ஆகிய பிரமுகர்களுடன் நானும் முக்கிய விருந்தினராக பங்கேற்றேன்.

இதைத் தொடர்ந்து டாக்டர் எஸ்தர் ஆக்லோவும் நானும் மாணவர்களுக்காகவும், பெண்களுக்காகவும் என்று தனித்தனியாய்

நடத்தப்பட்ட கூட்டங்களிலும், கடைசியாய் 'உலக பிரஜை தினத்திலும்' கலந்து கொண்டு உரையாற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டது அற்புதமான அனுபவங்கள்.

இங்கே டாக்டர் ஆக்லோவைப் பற்றி கொஞ்சம் தனியாகச் சொல்ல வேண்டும்.

'எஸ்தர் அத்தை' (aunt Esther) என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் டாக்டர் ஆக்லோவுக்கு வயது 70. ஆப்பிரிக்காவிலுள்ள கானா நாட்டில் சாதாரண விவசாயிக்கு மகளாகப் பிறந்தவர். வசதியில்லாத குடும்பத்திலிருந்து வந்தும் படிப்பு மீது கொள்ளை ஆசை. அத்தனை கஷ்டங்களிலும் பிடிவாதமாய் படித்து, பட்டம் பெற்ற பிறகு 1942-ம் ஆண்டு, உறவினர் ஒருவர் அன்பளிப்பாகக் கொடுத்த 10 ஷில்லிங் பணத்தில் சில ஆரஞ்சுப் பழங்களை வாங்கி, 12 பாட்டில்கள் மார்மலேட் என்னும் ஜாம் வகையைச் செய்து விற்க முனைந்தது அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. நாட்டின் பொருளாதாரம் மேம்பட வேண்டும் என்றால் பெண்களின் சிரிய உழைப்பு அவசியமாகிறது என்பதை புரிந்து கொள்ள முடிய அதற்கான நடவடிக்கைகளில் இறங்கினார். நிலங்களில் பாடுபடும் பெண்களின் அறிவு, உழைப்பை ஒழுங்குபடுத்துவது தனிப்பட்ட நபர்களின் வறுமையை ஒழித்து, சமுதாய முன்னேற்றத்துக்கும் உதவும் என்ற தாரக மந்திரத்தோடு அவர் துவக்கிய சிறு நிறுவனம், இன்றைக்கு 'குவினு இன்டஸ்ட்ரிஸ் லிமிடட்' என்னும் பெயரில் கானா நாட்டில் விளையும் பழ, காய்கறிகளைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. இது தவிர, பெண்கள் முன்னேற்றத்திற்கான,

கைத்தொழில் விற்பனை விஸ்தரிப்பு, சுயமாக தொழில் செய்ய கடனுதவி பெற 'உலகப் பெண்கள் வங்கி' துவக்கம் என்று பலவிதங்களிலும் 'எஸ்தர் அத்தை' பாடுபடுவதை பாராட்டி 'ஆப்ரிக்கா ப்ரைஸ்' எனப்படும் உயர்ந்த விருது (பத்திரமும், 50000 அமெரிக்க டாலர்களும்) 1990-ம் ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஆக்லோ, கூட்டங்களிலும், பின்னர் தனித்து நாங்கள் இருந்த சமயங்களிலும் தன் அனுபவங்களை, கருத்துக்களை, ஆப்பிரிக்கா பெண்களின் நிலையை, நாட்டில் நிலவி வரும் சீர்கேடுகளை அழுத்தம் திருத்தமாக வெளியிட்டது. ஆப்ரிக்காவை, அதன் மக்களை புதிய கண்ணோட்டத்திலிருந்து எனக்கு அறிமுகப்படுத்தியது நிஜம்.

ஹங்கர் ப்ராஜக்ட் ஸ்விட்ஸர்லாந்து முன்நின்று நடத்திய பல நாட்டவர் கலந்து கொண்ட கருத்தரங்கு தொடரின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் 250-லிருந்து 300-க்கு குறையாமல் பொது மக்கள் வந்திருந்து, இறுதியில் ஆர்வத்தோடு கேள்வி பதில் நிகழ்ச்சிகளில் பங்கேற்றது மனசுக்கு சந்தோஷத்தைத் தருவதாக இருந்தது. அதுவும் மாணவர்கள் அதிகமாய் வந்த இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் டாக்டர் ஆக்லோவும், நானும் பேசிய பிறகு, ஸ்விஸ் அரசாங்கத்தின் சார்பில் வந்திருந்த டாக்டர் யக்கரை 'வளரும் நாடுகளுக்கு ஸ்விஸ் நாடு எந்தெந்த விதங்களில் உதவத் திட்டம் தீட்டியிருக்கிறது?' என்பது போன்ற கேள்விகளைக் கேட்டதும் அல்லாமல் 'பொதுப்படையான பதில்கள் வேண்டாம்; திட்டவட்டமாய் சொல்லுங்கள்' என்றும் நிர்பந்தித்தது, மூன்றாம் உலக நாடுகள்பால் மாணவ சமுதாயம் கொண்டிருந்த அக்கறையை நன்றாகவே உணர்த்தியது.

மூன்று கூட்டங்களில் 'எத்தனை யுகங்கள்' வீடியோ டேப்பை போட்டு காட்டி, இந்தப் பாடலையும் இதர ஸ்பாட்டுகளையும் எடுத்ததன் குறிக்கோளை விளக்கினேன். ஒரு சந்தர்ப்பத்தில் ஷெரான் என்ற பெண்மணி எழுந்து நின்று "பொருளாதாரம், இயற்கை வளம், வாழ்க்கைத்தரம் ஆகிய அனைத்திலும் மிக உயர்ந்த ஸ்தானத்தை உலக அளவில் ஸ்விட்ஸர்லாண்ட் வகிக்கிறது. அதனால் இங்கு வசிக்கும் எங்களுக்கு வறுமை என்றால் என்ன, பட்டினிச் சாவு என்றால் என்ன — பெண் சிசுக்கள் வரதட்சணை இதர காரணங்களுக்காக கொலை செய்யப்படுவது - என்றால் என்ன - என்பது போன்ற விவரங்கள் தினசரிகளில் வெளியாகும் பல செய்திகளில் ஒன்றாகத்தான் இது நாள் வரை இருந்து வந்தன. ஆனால் சிவசங்கிரியின் விளக்க உரையைக் கேட்டு, படங்களைப் பார்த்த பிறகு முதல் முறையாக உணர்ச்சி பூர்வமாக அந்தப் பிரச்னைகளை உணர முடிந்திருக்கிறது. இப்படிப்பட்ட விழிப்புணர்ச்சியை எங்களுக்குள் உண்டாக்கியதற்கு நன்றி" என்றபோது என்னுடைய பயணத்திற்கு அர்த்தம் கிடைத்துவிட்ட நிறைவு எனக்குள் தோன்றியது.

கடைசி நாள் 'உலக பிரஜைகள் தினமாக' கொண்டாடப்பட, அதிலும் பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

ஹங்கர் ப்ராஜெக்ட் - நியூயார்க் அலுவலகத்தைச் சார்ந்த ஹீகொ கார்டோனாவும் தாமஸ் ஸ்லீஃபிலும் காலை பகல் நடப்புகளைத் தொகுத்து வழங்கினார்கள். ஒரு கட்டத்தில் "அடுத்துவரும் அரைமணி 'சுய அலசலில்' நாம் ஒவ்வொருவரும் இறங்கப் போகிறோம்" என்று அறிவித்த தாமஸ் கூட்டத்தினரை இரண்டு இரண்டு நபர்களாக ஜதை சேர்த்தார். பின், 'நான் பசியை உணர்ந்திருக்கிறேனா?' 'எனக்கு எந்தெந்த பொருட்களின் மேல் பற்று உள்ளது?' 'அடுத்த வாரம் நான் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறேன்?', உலகப் பிரஜையாக என்னை உணர்கிறேனா?'- போன்ற கேள்விகளை ஒவ்வொன்றாகக் கேட்டு, சில நிமிஷங்களுக்கு முதலாம் நபரும், தொடர்ந்து இரண்டாமவரும், ஒருவரிடம் மற்றவர் வேஷம் போடாமல் மனம்விட்டு பதில் கூறும்படி பணித்தார். அதாவது, டாக்டர் ஆக்லோவும் நானும் ஜோடி பார்ட்னர்கள் என்றால், முதலில் அவர் சுய அலசலில் ஈடுபட்டு அதை என்னுடன் உரக்கப் பகிர்ந்து கொள்வார். பிறகு நான் –

இது என்ன குழந்தைத்தனமான விளையாட்டு என்று யாரும் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வர வேண்டாம்; ஆத்மார்த்த முனைப்புடன் மேலே குறிப்பிட்டுள்ள கேள்விகளை மனசில் வாங்கிக் கொண்டு, நீங்கள் மதிக்கும் ஒருவரை எதிரில் உட்கார வைத்து பதில்களை கூற முயற்சித்துப் பாருங்கள். அப்போது புரியும் எத்தனை குறுகிய வட்டத்தில், 'நான், என் வீடு, என் உடமைகள், என் குடும்பம்' என்கிற கிணற்றுத் தவளையாய் வாழ்ந்து வருவதும், சமுதாயத்தை, நாட்டை, உலகைப் பற்றின சிந்தனையே எழாமல் சுயநலவாதிகளாக நாம் இருந்து வருகிறோம் என்பதும்!

தாமஸ் கேள்விகளைக் கேட்டு, அதற்கான பதில்களை மூடி மறைக்காமல் டாக்டர் ஆக்லோ என்னிடமும் நான் அவரிடமும் பகிர்ந்து கொண்ட போது நாங்கள் பெற்ற 'சுய தரிசனம்' இருவரையுமே லேசாக கூசத்தான் வைத்ததும் உணர்ந்ததும் பகிர்ந்து கொள்வதும் போதாது என்பதைப் புரிந்து கொள்ள வைத்ததும் உண்மை.

எங்களை மட்டுமல்ல, பங்கு பெற்ற அனைவரையுமே அந்த சுய அலசல் பயிற்சி தூக்கிவாரிப் போட வைத்ததை புரிந்து கொள்ள முடிந்தது.

கருத்தரங்கின் இறுதி கட்டமாய் மூன்றாம் உலக நாடுகளின் எதிர்கால வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி திரட்டிய போது, அரைமணியில் வந்திருந்தவர் களிடமிருந்து இரண்டு லட்சம் டாலர் (60 லட்சம் ரூபாய்) வசூலாயிற்று.

லிஸா என்ற 40 வயது குடும்பப் பெண்மணி "பல நாடுகளில் மக்கள் உண்ண போதுமான உணவு இல்லாமல் தவிக்கும் பிரச்னையைத் தீர்க்கும் முயற்சியில் என்னால் இயன்ற விதத்தில் நானும் பங்கு கொள்ள விரும்புகிறேன். இப்போது என்னிடம் அதிக பணம் இல்லை என்றாலும், ஹங்கர் ப்ராஜெக்டின் தேவைக்காக உபரியாய் உழைத்து இன்றைக்கு சம்பாதிப்பதை விட ஒரு வருஷ காலத்தில் லட்சம் ஃப்ராங்குகளை சம்பாதித்து அதை மூன்றாம் உலக நாட்டு மக்களின் வளர்ச்சிக்கு கொடுக்க சபதம் எடுக்கிறேன்" என்று கூறி, நிதி விண்ணப்பத் தாளில் கையெழுத்திட்டு தந்தபோது நான் அசந்துதான் போனேன்.

வங்கியில் அதிகமாய் இருப்பதை எடுத்துக் கொடுக்கவே மனசில்லாமல் 'நாளைக்கு ஒரு கஷ்டம் வந்தால் என்ன செய்வது?' என்கிற பயத்தில் பத்திரப்படுத்தி வைக்க முனையும் மனிதர்களிடையே, தானம் கொடுக்கவெனவே கூடுதலாய் உழைத்துச் சம்பாதிப்பேன் என்று சூளுரைத்து செயலாற்றும் லிஸா போன்றவர்களா?

32

நான் மிகவும் நேசிக்கும், மதிக்கும் நண்பர் ஒருவர் இருக்கிறார். இவர் சிரிக்கச் சிரிக்கப் பேசி, வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல கனமான விஷயங்களை பேச்சினூடே கொண்டு வந்து, நம் சிந்தனையை நமக்குத் தெரியாமலேயே நிமிண்டி விட்டு போவதில் மன்னன்! மாலைப் பொழுது மகிழ்ச்சியில் கழிந்தது என்கிற நிறைவுடன் மனிதருக்கு விடை கொடுத்துவிட்டு படிக்கவோ, படுக்கவோ உட்கார்ந்தால் உள்ளுக்குள் நிமிண்டி விடப்பட்ட சிந்தனை வலிக்கிறது என்று முனகுவது புரியும். சின்னப் பொறியாக ஜனிப்பது தபதபவென்று பெருந்தீயாக வளர்ந்து ஜ்வாலை விடுவது போல நண்பர் மிக சாமர்த்தியமாக ஊன்றிவிட்டு போன விதை மன மண்ணில் முளைவிட்டு, செடியாகப் படர்ந்து 'என்னை கவனி' என்று அதட்டுவது விளங்கும்.

நண்பர் சொல்லி நான் ஏற்றுக் கொண்டு, அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயலும் பழக்கங்கள் ஏராளம். அத்தனை முயற்சிகளிலும் வெற்றி கண்டு விட்டேன் என்று கூற முடியாது. சில வெற்றிகள், சில தோல்விகள். இருப்பினும் விடா

முயற்சி வெற்றி பெறும் என்கிற பழமொழியை நினைவில் கொண்டு சோர்ந்து விடாமல் இருப்பதே அலாதி நிறைவைத் தருகிறது.

'கூடுமானவரையில் நீ யாரையும் காயப்படுத் தாதே; உன்னையும் யாரும் காயப்படுத்த இடம் கொடாதே' என்பதும் 'எதிர்பார்ப்புகள் இல்லாமல் இருக்க பழக்கிக் கொள்; அதன்மூலம் ஏமாற்றத்தையும், வலியையும் குறைக்கலாம்' என்பதும் நண்பரிடமிருந்து நான் கற்றிருக்கும் பாடங்களில் முக்கியமானவை.

இதை ஒருதரம் நான் கூறக்கேட்ட என் அண்ணா மகள் மீரா 'நாம் வேண்டுமானால் பிறரைப் புண்படுத்தி பேசி, நடந்து கொள்வதை தவிர்க்கலாம். ஆனால் அத்தை, வலிய வந்து சிலர் நம்மை ரணப்படுத்திவிட்டுப் போகிறார்களே அதை எப்படித் தடுப்பது?' என்று புருவங்கள் முடிச்சுப்போட, ஒரு கேள்வி கேட்க நான் நிதானமாய் பதில் கூறினேன்.

"நியாயமான சந்தேகம்தான் மீரா, ஆனால் இதற்கும் பதில் இருக்கிறது. நம்மையே உதாரணங் களாக வைத்துக் கொண்டு விளக்குகிறேன். ஒரு சமயம் உனக்குப் பிடிக்காததை நான் சொல்லி, நீ புண்பட்டுப் போய், எந்த வேலையிலும் கவனம் செலுத்த முடியாமல் செய்துவிட்டது என்று வைத்துக் கொள். அப்போது சாதாரணமாய் நீ என்ன சொல்லுவாய்? 'அத்தை ஏதோ சொன்னாள், அது என்னை அப்ஸெட் ஆக்கியதில் நாள் பூராவும் வேலையே ஓடவில்லை' என்றுதானே? ஆனால் 'அத்தை ஏதோ சொன்னாள், அது என்னைக் காயப்படுத்த நான் இடம் கொடுத்தேன்' என்பதுதான் சரியான கூற்று என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்! 'மனதளவில்

நம்மை அடுத்தவர் ரணப்படுத்த அனுமதிப்பதும், அனுமதிக்காததும் நம் கையில் மட்டுமே இருக்கிறது என்கிறார் டாக்டர் டயர், புரிகிறதா?"

மேற்சொன்ன கருத்தை இன்னும் துல்யமாக விளக்குவதற்காக நான் ஏற்கனவே மூன்றாவது அத்தியாயத்தில் எழுதிவிட்ட புத்தர் கதையை இப்போது மீண்டும், உயர்ந்த கருத்துக்களை திரும்பத் திரும்பப் படிப்பது நல்லது என்பதால், சொல்லப் போகிறேன்.

புத்தரைப்பற்றி அருமையான சிறுகதை ஒன்றை சொல்லுவார்கள். புத்தர் தினமும் யாசகத்திற்குச் சென்று பிச்சை கேட்டு வாங்கி உண்ணுவது வழக்கம். அப்படி இருக்கும்போது ஒருநாள் ஒருவர் "என்ன இது, ராஜ குடும்பத்தில் பிறந்து பிச்சையெடுக்கிறாயே, வெட்கமாக இல்லையா?'' என்று ஆரம்பித்து கொஞ்சம் கேவலமாகவே திட்ட, புத்தர் எதற்கும் பதில் கூறாமல் சிரித்துக் கொண்டே இருந்தாராம். புத்தர் கூடவந்த சிஷ்யர்களுக்கு தாங்கவில்லை. திட்டின ஆள் நகர்ந்த பிறகு 'ஐயா, அவர் திட்டியதற்கு பதிலுக்கு அடிக்க வேண்டாம், திட்ட வேண்டாம். ஆனால், சிரிக்காமலாவது இருந்திருக்கலாம் இல்லையா' என்று கேட்டபோது புத்தர் இன்னும் அதிகமாக சிரித்தவாறு "அப்பனே, நீ ஒரு பொருளைக் கொடுத்து அதை நான் வாங்கிக் கொண்டால்தான் என்னுடையது, வாங்காத வரை உன்னுடையதுதான். அதைப் போலவே அந்த ஆள் சொன்ன வார்த்தைகளை நான் வாங்கவே யில்லை. அவை அனைத்தும் அவனிடத்திலேயே இருக்கின்றன'' என்று சொன்னாராம். ஆக,

அடிபடுவதும், அல்லாடுவதும் நிம்மதியாய் இருப்பதும் அவரவர் சிந்தனையைப் பொறுத்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

'காயப்படுவதும், எதிர்பார்ப்புகளுடனும் வாழ்வதும் மனிதப் பிறவியின் இயல்புகள் அல்லவா? இயல்புகளை மாற்றிக் கொள்வது கடினமான செயலாயிற்றே!' என்று எத்தனையோ சந்தர்ப்பங்களில் என்னிடம் பலர் வாதித்திருக்கிறார்கள். ஏன், நான் கூட மனசில் வலுக் குன்றிய தருணங்களில் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்று பொருமியது உண்டுதான். அறிவுரை சொல்வது சுலபம். வாழ்ந்து காட்டுவது கடினம். ஒப்புக் கொள்கிறேன். என்றாலும் வாழ்க்கையில் நிம்மதி வேண்டுமென்றால் சில பயிற்சிகளைக் கஷ்டப்பட்டாவது பயிலுவது அவசியம். 'மனித இயல்பு', 'இயற்கையாக எழும் உணர்வு' என்று சொல்லுவதெல்லாம் நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் நொண்டி சமாதானங்கள். முடியும் என்றால் முடியும். சந்தர்ப்பம், சூழ்நிலை, தேவை பொறுத்த அடிப்படை குணத்தை மாற்றிக் கொண்ட நபர்களை நான் அறிவேன். இருவரை உங்களுக்கும் அறிமுகம் படுத்திவைக்கட்டுமா?

ராஜசேகரை அறிந்தவர்கள் அவனுக்கு வைத்திருந்த மறுபெயர் 'துர்வாசர்'. அத்தனை முன்கோபி. சின்ன வயசிலிருந்தே அப்படித்தான். நின்றால், தும்மினால் கூட கோபம் மூக்கில் ஏறி உட்கார்ந்து விடும். வசதியான குடும்பத்து ஒரே பிள்ளை என்பதால் தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் அவனோடு கோபமும் வளர்ந்தது. பி.காம். முடித்து விட்டு அப்பாவின் கம்பெனியில் முக்கிய பொறுப்பு

எடுத்துக் கொண்டு திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனான பிறகு கூட இன்னதிருந்தான் என்றில்லாமல் ருத்ரதாண்டவம் ஆடுவான் - போன இரண்டாம் வருஷம் இவன் மனைவி சாலை விபத்தில் சற்றும் எதிர்பாராமல் சிக்கி இறந்ததும், அம்மா வியாதியில் படுத்ததும் தொடர்ந்த நாட்களும் சோதனையானவை. நடுவில் சில மாசங்கள் அவனை சந்திக்காமல் இருந்துவிட்டு, சமீபத்தில் பார்த்தபோது அது ராஜசேகர்தானா என்கிற சந்தேகம் எனக்கு உண்டாயிற்று. அப்படியொரு பொறுமை, நிதானம். பேசும்போது குரல் கூட உயரவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

'மாறுவதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை மேடம். முன்பு இடிதாங்கிகளாக என்னைச் சுற்றி மனைவி, அம்மா இருந்த வரையில் பிரச்னையை உணரவில்லை. அவள் இறந்து, அம்மா படுத்த படுக்கையான பிறகு என் கோபத்தை சமாளிக்க முடியாமல் ஆட்கள் நின்று போய், உறவுக்காரர்கள் கூட நெருங்க பயந்து, வீடும், குழந்தைகளும், சீரழிந்த போது 'கோபத்தை விட்டாலொழிய வேறு வழியில்லை' என்ற உண்மையை உணர்ந்தேன். முதலில் ரொம்ப சிரமமாக இருந்தது. பிறகு மெதுமெதுவாக குணத்தை வழிக்கு கொண்டு வந்தேன். ஏழெட்டு மாசங்களில் ஒரு புது மனுஷனாக நான் மாறிவிட்டது எனக்கே புரிகிறது".

அடுத்து நிம்மி, என்கிற நிர்மலா. இவள் சரியான கலகலப்பு பேர்வழி. யாரையும் எளிதில் நண்பர்களாக்கிக் கொள்ளும் ஸ்வபாவம். கூச்சம், வெட்கம் எல்லாம் கிடையாது. இவளது நாற்பதாவது

வயசில் கணவனின் நண்பர் ஒருவர் தவறாக நடந்து கொள்ள முற்பட்ட 'நீங்களா இப்படி?' என்று நிம்மி பதைத்த போது 'நீ சகஜமாய் என்னிடம் பழகி, பேசியதுதான் இப்படி நடக்கத் தூண்டியது' என்று அவர் பழியை இவள் மேல் போட, நிம்மி அதிர்ந்து போயிருக்கிறாள். "அந்த நண்பரின் பேச்சு எனக்கு போதி மரமாக அமைந்தது சிவசங்கரி. இனியொரு தடவை இப்படி நடக்காமல் இருக்க வேண்டும் என்றால் என் ஸ்வபாவத்தை மாற்றிக் கொள்வது முக்கியம் என்பது புரிந்தது. இப்போது நிஜமாக எந்த வம்பு தும்பும் இல்லாமல் நிம்மதியாய் இருக்கிறேன்' என்று கூறும் நிம்மி, இன்றைக்கு வார்த்தைகளை அளந்து பேசும் அளவுக்கு மாறியிருப்பது ஆச்சர்யத்தில் ஆச்சர்யம்!

இதைப்போலத்தான் எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்ளும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்வது என்பது என் நண்பரின் கருத்து! 'எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களைத் தருவதாலும், ஏமாற்றம் வெறுப்பை, கோபத்தை, கசப்பை எழுப்புவதினாலும் நெருங்கிய நட்பு, உறவுகள் கூட முறிந்து போவதை சர்வ சாதாரணமாய் பார்க்கலாம். எப்பேர்ப்பட்ட உயர்ந்த மனிதனாலும் கூட எப்போதும் அடுத்தவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுத்து நடந்து கொள்ள முடியாது. அதனால் கூடுமானவரையில் எதிர்பார்ப்புகள் இல்லாமல் இருக்க நம்மை நாம் பழக்கிக் கொள்வது, யாருக்கு இல்லாவிடினும் நமக்கு நிச்சயம் நல்லது செய்யும்' என்பது நண்பரின் வாதம்!

யோசித்துப் பார்த்து ஏற்றுக் கொள்வதும், தள்ளுவதும் அவரவர் இஷ்டம்.

33

நவம்பர் மாத ரீடர்ஸ் டைஜஸ்டில் ஒரு கட்டுரை படித்தேன். தாயின் தவறான பழக்கங்களால் பிறக்கும் போதே போதை மருந்துக்கு அடிமையாகிப் பிறந்து, யாருடனும் பேச, பழகாமல் உணர்ச்சிகளற்று இருந்த ஒரு சிறுவனை மனோதத்துவ நிபுணர், தன் நாயின் மூலமாக, அது அவனிடம் காட்டிய அன்பின் மூலமாக அணுகி, சிகிச்சைக்கு உட்படுத்தி, நல்ல பலன்களைக் கண்டார் என்னும் விவரத்தைக் கூறுவதோடு, வீட்டில் செல்லமாக வளர்க்கப்படும் பிராணி களால் மனிதர்களுக்கு கிட்டும் பல அற்புதமான லாபங்களையும் கட்டுரை பட்டியல் போடுகிறது. சிறு பிராணிகளிடம் அன்பு செலுத்துகையில், இதயத்துடிப்பு நிதானப்படுகிறதாம். ரத்த அழுத்தம் குறைகிறதாம். மனநிலை சரியில்லாதவர்களுக்கு நிம்மதி கிட்டுகிறதாம்! இன்னும் ... 'மொத்தத்தில் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களிடையே இருதய நோய் குறைந்து காணப்படுவது உண்மை' என்று ஒரு வருஷ ஆராய்ச்சிக்குப் பிறகு பேராசிரியர் எரிகா ஃபரிட்மேன் கூறி இருப்பது, என் போன்ற நாய் பிரியர்களுக்கு 'நம்

கட்சிக்கு ஆள் சேருகிறார்கள்' என்கிற மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகிறது.

நினைவு தெரிந்த நாளிலிருந்தே செல்லப் பிராணிகளின் ஆழமான அன்பை உணரும் வாய்ப்புக் கிட்டியிருப்பது ஒரு பக்கம் என்றால், நிபந்தனை இல்லாத அன்பு unconditional love பற்றி நாங்கள் வளர்த்த நாய்களிடமிருந்து நான் முழுமையாகப் பாடம் கற்றது இன்னொரு பக்கம். 'அன்பு செலுத்துவது என்பதை போயும் போயும் நாயிடமிருந்தா கற்றாய்?' என்று உதட்டைப் பிதுக்கி ஏளனமாய் சிரிக்க முற்படுபவர்களைப் பற்றி கவலைப் படாமல் மேற்சொன்ன கூற்றை ஒப்புக் கொள்வதில் எனக்கு எந்தவித தயக்கமோ, கூச்சமோ இல்லை. பூனை, பறவை இதர பிராணிகளை செல்லங்களாக நான் அதிகம் வளர்த்ததில்லை. ஆனால் சிறு பிராயத்திலிருந்து இன்று வரை கூடவே நிழலாக நாய்கள் எப்போதும் இருந்து வருவதால், அவைகளின் குணாதிசயங்களில் முக்கியமான ஒன்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

விளையாடி, குறும்பு செய்து, சொன்னபடி கேட்கும் தன்மைகளை விட்டுவிட்டு தன்னலமற்ற அன்பை செலுத்தும் அந்த ஒரு குணத்தை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

அடித்தாலும், விரட்டினாலும் பட்டினி போட்டாலும் அதை எல்லாம் மறந்துவிட்டு எஜமானின் ஒரு அன்பான பார்வைக்காக, தட்டிக் கொடுத்தலுக்காக அவர் பின்னாலேயே ஏக்கத்துடன் சுற்றுவதும், எப்போது எஜமானர் கூப்பிட்டாலும் 'நீ ஏன் அடித்தாய், அல்லது சோறு போட மறந்தாய்? வர

மாட்டேன் போ' என்று முரண்டு பண்ணாமல் ஓடி வந்து அன்பைச் செலுத்துவதும் நாய்களுக்கு இயற்கையாய் அமைந்த குணம். இதைத்தான் 'நிபந்தனையற்று அன்பைச் செலுத்துதல் unconditional love என்று நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை நாங்கள் வளர்த்த நாய்கள் எனக்களித்திருக்கும் சந்தோஷம், இதம் அளவில்லாதது. அதுவும் என் வாழ்க்கையில் மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டு விட்ட கடந்த எட்டு வருஷங்களில் எங்கள் நாய் ஸ்யாமா ஒரு தோழியாக, குழந்தையாக, மெய்க்காப்பாளராக தேவைக்கேற்று மாறி நடந்து கொண்டு வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத பரவசத்தை எனக்கு தந்து வருவது நிஜம்.

வெளியூருக்குப் போய்விட்டு விமானம் தாமதமாகி அர்த்த ஜாமத்தில் வீடு திரும்பினாலும் கம்பி கேட்டருகில் படுத்திருந்து, கார் விளக்கு வெளிச்சம் கண்டதும் எழுந்து கண்கள் பளபளக்க, பிரிவுக்கு முடிவு வந்துவிட்ட சந்தோஷத்துடன் தலைகால் புரியாமல் குதித்து வரவேற்கும் ஸ்யாமா அழுதால் பரிதவித்துக் கொண்டு கண்களை துடைக்கும் பாவனையில் கண்ணீரை நக்கும் ஸ்யாமா, யாரையாவது அதட்டினால் கூட நின்று தன் பங்குக்கு கண்டிக்கிற மாதிரி கத்தும் ஸ்யாமா, வேண்டியவர்களோடு குரல் உயர்த்தி தர்க்கம் பண்ணுகையில் என்ன அசட்டுத்தனம் இது! உங்களுக்குள் எதற்கு வாக்குவாதம்?' என்று கண்டிப்பு கலந்த குரைப்பு மூலம் நம்மைத் தடுத்து நிறுத்திவிடும் ஸ்யாமா –

முறையான பயிற்சி எதையும் பெறாத ஸ்யாமாவாலேயே இத்தனை இதமளிக்க முடியும்

என்றால், தன்னலமற்ற அன்பை வாரி வழங்கும் குணத்தை இயற்கையாகவே கொண்ட நாய்களுக்கு அந்த விசுவாசத்தை சரியான விதத்தில் வெளியிட கற்றுக் கொடுப்பது பல அற்புதமான காரியங்களை சாதிக்க வழி பண்ணுகிறது.

தடம் புரண்டுவிட்ட வாழ்க்கையை நாய்களின் உதவியோடு நேர்படுத்திக் கொண்ட பலரை எனக்குத் தெரியும். அவர்களில் ஒருவரை நீங்களும் சந்தியுங்கள்.

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது லாண்டியாகோ நகரில் எனக்கென ஒதுக்கப் பட்டிருந்த ஹோட்டல் ரெஸ்ட்டாரெண்டில் அமர்ந்து காலை சிற்றுண்டியை சாப்பிட்டுக் கொண்டிருந்த நிமிஷத்தில் திடுதிடுவென்று இரண்டரை அடி உயரத்தில் அழகான அல்சேஷன் நாயும், அதை தோல் வாரில் பிடித்துக் கொண்டிருந்த வாட்ட சாட்டமான ஆணும், என்னைக் கடந்து போக ... நாயா? ஹோட்டலுக்குள்ளா? என்று திகைத்தேன். ஆனால் அந்தத் திகைப்பு சரியாய்ப் பத்து நொடிகளுக்குத்தான் - அந்த ஆண் பார்வை இழந்தவர், அந்த நாய் அவருடைய வழிகாட்டி என்பதைப் புரிந்து கொள்ள முடிய, எழுந்து போய் அவரிடம் வலிய அறிமுகம் செய்து கொண்ட பிறகு ரிச்சர்ட் எனக்கு பரிச்சயம் ஆகி, நண்பரானார்.

விமான ஓட்டியாக வேலை பார்த்து வந்த ரிச்சர்ட் ஒரு விபத்தில் பார்வையை இழந்தவர். பார்வை அற்றவருடன் வாழ முடியாது என்று மனைவி விவாகரத்து வாங்கிக் கொண்டு சென்ற பிறகு லீஸர் - அந்த அல்சேஷன் நாய்தான் அவருக்கு உறவு, நண்பன் .எல்லாம்.

ஆறு வருஷங்களுக்கு முன் தனக்கு வழிகாட்டியாக லீஸரை ரிச்சர்ட் தேர்ந்தெடுத்தாராம். இந்த மாதிரி நாய்களை அங்கு "Seeing eye dog" என்று அழைக்கிறார்கள். இந்த நாய்கள் ஹோட்டல், தியேட்டர், அரசாங்க அலுவலகங்கள் என்று எங்கும் செல்ல அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. 'நாய்' என்று எந்த இடத்திலாவது அனுமதி மறுக்கப் பட்டாலோ அல்லது டாக்ஸி ட்ரைவர் வண்டியில் ஏற்ற மறுத்தாலோ அது சட்டப்படி குற்றமாகக் கருதப்படுகிறது.

அந்த லீஸர்தான் மனிதர்களைவிட எத்தனை நேர்த்தியாய், புத்திசாலியாய் நடந்து கொண்டு ரிச்சர்டுக்கு வழி காட்டியாய் விளங்கினான்!

'வார்' அணிவித்து விட்டால் ட்யூட்டியில் இருப்பது புரிந்து, மிகவும் சுறுசுறுப்பாகி விடுவான். எஜமானருக்கு ஓரடி முன்னால் சென்று, அவர் தங்கு தடையின்றி நடக்க வழி பண்ணினான். லிஃப்ட் பட்டன் அருகே தலை வைத்து நின்று, பட்டன் இருக்கும் இடத்தை எஜமானருக்கு உணர்த்தினான். படி, பள்ளம் ஏதேனும் குறுக்கிட்டால் நடப்பதை நிறுத்தி எஜமானருக்கு நிலைமையைப் புரிய வைத்தான். எதிர்பாராமல் அன்னியர் கிட்டத்தில் வந்தால் லேசாக உறுமி 'ஜாக்கிரதை' என்று எச்சரித்தான். தெரிந்தவர், தெரியாதவர்களுக்கு தனித்தனியாய் குரல் கொடுத்து எஜமானருக்கு வருவது யார் என்று தெளிவாக்கினான். மொத்தத்தில் எஜமானருக்குக் கண் தெரியாது, அதனால் அவரைக் காப்பதுடன் அவருக்கு வழிகாட்டி, நண்பனாகவும் இருக்க வேண்டும் என்பது புரிந்து நடந்து கொண்டான்.

நான் சந்தித்தபோது பார்வை இழந்தவர்களுக்கான அமைப்பு ஒன்றைத் துவக்கி அதற்கு ரிச்சர்டு தலைவராக செயல்பட்டு வந்தார். இந்த மாதிரி 'Seeing eye dog' நாய்களுக்கு பயிற்சி தந்து மற்றவர்களுக்கு அனுப்புவதோடு, குறைந்த விலையில் ப்ரெயில் கடிகாரம், நடக்க உதவும் குச்சி, ஆகியவற்றைத் தயாரித்து விநியோகிக்கவும், முக்கியமாய் ஆங்காங்கு சென்று பார்வை அற்றவர்கள் சுதந்திரமாய் தன்னம்பிக்கையுடன் வாழ்வது எப்படி என்று பயிற்சி அளிப்பதையும் செய்தார்.

ஊனத்தைப் பெரிசு பண்ணி, சுயபச்சாதாபத்தில் கரைந்து போகாமல் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்ள ரிச்சர்டுக்கு வீலர் செய்துவரும் உதவி போலவே இங்கும் அங்கும் நடக்கும் பல சம்பவங்களையும் தெரிந்து கொண்டு, அது சம்பந்தமாய் சிந்திக்கத் துவங்கிய பிறகு 'சீ-நாயே' என்று யாரையாவது யாராவது திட்டுவது கூட என்னைப் போலவே உங்களுக்கும் கோபத்தை மூட்ட வேண்டும் என்பது என் விருப்பம்!

34

சென்ற அத்தியாயத்தில் பார்வை இழந்த ரிச்சர்டுக்கு வழிகாட்டியாக அவரது வீலர் இருப்பதைக் குறிப்பிட்டு நான் எழுதியிருப்பதைப் படித்த வாசகர் நளினி எனக்கொரு வீடியோ டேப்பை 'வெறும் வழிகாட்டியாக மட்டும் அல்ல, ஒருவரின் உயிர் நாடியாகவே நாய் திகழ்வதை பாருங்கள்' என்ற கடிதத்துடன் அனுப்ப, பார்த்தேன், சிலிர்த்துதான் போனேன்!

தாமஸ் அவனுடைய பெற்றோருக்கு ஒற்றைப் பிள்ளை. பிறவியில் 'ஸ்பாஸ்டிக் சைல்ட்'. அதாவது பிறக்கும்போதே தசை, கை, கால்களின் இயக்கம் சரியாக வளர்ச்சி பெறாமல், இயங்காமல் அமைந்து விடுவதில், மூளை அபாரமாக செயல்பட்டாலும் அதை சொல், செயல் மூலம் எல்லோரையும் போல வெளியிடவோ, சாதாரணமாக இயங்கவோ முடியாத ஒரு நிலை. உலகம் முழுவதும் இருக்கும் லட்சக் கணக்கான ஸ்பாஸ்டிக் குழந்தைகளில் ஒருவனாக தங்கள் மகனும் இருக்கக் கூடாது என்கிற உந்துதலில் தாமஸின் பெற்றோர் என்னென்னவோ செய்து பார்த்தும் எதற்கும் அதிக பலன் இல்லை. தாமஸுக்கு பதினைந்து வயசாகையில், கை, கால்கள் முடங்கிப்

போன இயலாமை காரணமாய் என்னேரமும் கத்தல், கோபதாபம், அழுகை என்று இருந்தவனுக்கு ஒரு பயிற்சி பெற்ற நாயை பரிசாகக் கொடுத்தால் என்ன என்று வைத்தியருக்குத் தோன்ற, உடனடியாக அதை நிறைவேற்றியதும் அல்லாமல், நாய் வந்த நாளாய் தாமஸை அவர் எடுத்திருந்த வீடியோ படத்தின் தொகுப்பைத்தான் நான் பார்த்தேன்.

துவக்கத்தில் முரட்டு பிடிவாதத்தோடு ஏனோதானோ என்றிருந்த தாமஸை, எண்ணி ஒரு மாசம் போவதற்குள் அடியோடு மாற்றுவது அந்த வாயில்லா ஜீவனுக்கு சாத்தியமானதை கண்ணால் பார்த்தபோது அசந்து போனேன். சுமார் மூன்று வருஷ நடவடிக்கைகளைக் கொண்ட அந்தப் படம், தற்சமயம் தாமஸ் கல்லூரியில் படிப்பதோடு முடிவு பெறுகிறது.

இந்த மூன்று வருஷங்களில் லீஸா, அதுதான் அந்தப் பெண் நாயின் பெயர், தாமஸுக்கு தாயாக, தோழியாக, பணியாளாக, வழிகாட்டியாக என்னவெல்லாம் செய்திருக்கிறது!

அவனோடு பள்ளி, கல்லூரிக்குப் போகிறது. வகுப்பு நடக்கையில் சமர்த்தாய் காலடியில் படுக்கிறது; சக்கர நாற்காலியில் தாமஸ் பயணிக்கும்போது கூடவே காவலாய் வருகிறது; படிக்க உதவியாய் 'ம்' என்று சிக்னல் கொடுத்ததும் புத்தகத்தின் பக்கத்தை திருப்பித் தருகிறது; பேனாவை எடுத்து தாமஸ் கையோடு இணைக்கப்பட்டிருக்கும் கருவியில் கச்சிதமாய் பொருத்தி, எழுத உதவுகிறது. பந்து விளையாடி அவனை சந்தோஷப்படுத்துகிறது. இரவு விளக்கை அணைத்து விட்டு அவனோடு படுக்கையில்

சேர்ந்து உறங்குகிறது. மொத்தத்தில் கண் விழிப்பதிலிருந்து, இரவு தூங்கப் போகும்வரை தாமஸுக்கு சகலுமுமாய் இயங்கி அவனை வாழ்க்கையில் நாட்டமுள்ள ஒரு உற்சாகமான இளைஞனாக மாற்றி இருக்கிறது!

நினைவு தெரிந்த நாளாய், நாய்களுடன் பழகி, வாழ்ந்து வந்திருப்பினும், மனிதர்களிடம் காணப் படாத ஒரு விசுவாசத்தோடு, இருண்டு போன நபரின் வாழ்வில் ஒளி விளக்கை இந்த ரீதியில் ஏற்றி வைப்பது கூட நாய்களுக்கு சாத்தியம் என்கிற அறிவை எனக்கு தந்ததற்காக வாசகர் நளினிக்கு என் மனப்பூர்வமான நன்றியை இக்கட்டுரை மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாய்களைப் பற்றி எழுதும் இத்தருணத்தில் சென்னையில் இயங்கும் 'ப்ளூ க்ராஸ்' என்கிற அமைப்பைப் பற்றின சில விவரங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

பிராணிகளின் நலனுக்காக இயங்கும் 'ப்ளூ க்ராஸ்' சங்கம், காப்டன் சுந்தரம் என்பவரால் 1964ம் வருஷம் துவக்கப்பட்டு, தற்சமயம் அடையாறில், தியசாஃபிகல் சொஸைடிக்கு சொந்தமான இடத்தில் அமைதியாய் செயல்பட்டு வருகிறது.

அனாதரவாக விடப்பட்டவை, விபத்தில் சிக்கியவை என்று சாலைகளில் யாருடைய கவனிப்பும் இன்றி தவிக்கும் பிராணிகளுக்கு ஒரு அற்புதமான அடைக்கல இல்லமாக ப்ளூ க்ராஸ் திகழ்கிறது.

, மரங்கள் சூழ்ந்த குளுமையான இடத்தில், நிஜமான அன்பு, அக்கறையுடன் கவனிக்கும் டாக்டர்கள், பணியாட்களுடன் இயங்கும் ப்ளூ

க்ராஸை சென்று, பார்த்து விட்டு வருவது கூட ஒரு நிறைவைத் தரும் அனுபவம்தான்!

மத்திய, மாநில அரசுகள் வழங்கும் மானியத்தோடு, பிராணிகளை நேசிப்பவர்கள் அன்பளிப்பாக கொடுக்கும் பணத்தில் ப்ளூ கிராஸ் நடத்தப்படுகிறது. தற்சமயம் 76 நாய்கள், 18 பூனைகள், 65 மாடுகள், 12 ஆடுகள், 7 கழுதைகள், ஒரு காக்கை, ஒரு மான் என்று இங்கு இருக்கும் பிராணிகளின் பட்டியல் நீளுகிறது.

சிகிச்சைக்கு வருவது என்னுடைய ஸ்யாமாவாக இருந்தாலும் சரி, சேரியில் வசிக்கும் பையனின் நாய்க்குட்டியாக இருந்தாலும் சரி, குழந்தைகளிடம் பழகுவது போல அதனோடு பேசிக் கொண்டே டாக்டர் வீரசுப்ரமணியத்தி லிருந்து, உதவியாளர் வரை அலாதி பரிவுடன் கவனிப்பது ஆச்சர்யமான குணம்!

மானேஜர் மார்டின் வில்ஸனின் அறையில் எந்நேரமும் நாய்களும், பூனைகளும் சர்வ சுதந்திரத்தோடு வளைய வருகின்றன. ப்ளூ க்ராஸ் பற்றின விவரங்களை என்னிடம் அவர் விளக்கிய நாழிகையில் சுமித்ரா என்னும் பூனை அவர் மடியிலேயே படுத்திருந்தது! காலடியில் தாரா, கிங், கறுப்பன் என்ற பெயர்களைக் கொண்ட நாய்கள்!

"காலையில் நான் வரும்போது கேட்டிலேயே காத்திருப்பதோடு, மாலையில் பஸ் ஸ்டாண்ட் வரை யாராவது ஒருவர் கூடவே வருவான்!" என்று நாயை 'அது' என்று குறிப்பிடாமல் 'அவன்' என்று சொல்லும் மார்டின் 'சந்துரு' என்று குரல் கொடுத்தால் தோட்டத்தில் எட்டி எங்கோ இருக்கும் கழுதை ஒன்று ஓடிவந்து 'என்ன' என்பது போல அருகில் நிற்கிறது.

இந்த சந்துரு ப்ளூ க்ராஸுக்கு வந்தது ஒரு கதை. திருவொற்றியூர் சாலையில் லாரி ஒன்றில் அடிபட்டு அம்மாக்காரி இறந்தபோது, மூன்று நாட்கள் ஆனபிறகும் அகற்றப்படாத சடலத்தின் கூட இருந்த குட்டி சோறு தண்ணீர் இல்லாமல் பரிதவித்ததைப் பொறுக்க முடியாமல் யாரோ ஒரு புண்ணியவான் ப்ளூ க்ராஸுக்கு போன் செய்து, உடனே அம்புலன்ஸை அனுப்பி எடுத்து வரப்பட்ட குட்டிதான் இன்று சந்துருவாக ஆரோக்யமாக வளைய வருகிறது!

கிணற்றில் விழுந்த பூனை, கூட்டிலிருந்து விழுந்து விட்ட பறவை குஞ்சு, விபத்தில் சிக்கி கால் ஒடிந்த மாடு, வளர்ப்பவர்கள் வீட்டை காலி பண்ணிக் கொண்டு போனதில் அனாதராவாய் தவித்த நாய், தாரில் விழுந்து மீட்கப்பட்ட ஆடு என்று ப்ளூ க்ராஸில் இருக்கும் ஒவ்வொரு பிராணி பின்னாலும் ஒரு சோதனைக் கதை இருக்கிறது.

இங்கு அடைக்கலம் புகும் பிராணிகளுக்கு, முக்கியமாய் நாய், பூனைக்கு, கருத்தடை சிகிச்சை செய்து வருவதால், வேண்டாத தொல்லைகள் எதுவும் இன்றி அவை நிம்மதியாய் வாழ்கின்றன. 'நாங்கள் நன்றாக கவனித்துக் கொள்வோம்' என்கிற உறுதி மொழியைத் தந்து, நிஜமான ஆர்வத்துடன் வருகிறவர்களுக்கு பூனை, நாய் குட்டிகளை செல்லப் பிராணிகளாக தத்து எடுக்க அனுமதி வழங்கப்படுகிறது. முயல், பறவைகள், மான் இத்யாதிகள் ஆரோக்கியமாக இருந்தால் கிண்டி பூங்காவில் சுதந்திரமாய் வாழ விட்டு விடுகிறார்கள்.

தங்களிடம் வந்து சேருவதைத் தவிர, ஆங்காங்கு சிரமத்தில் இருக்கும் பிராணிகளைப் பற்றி

தகவல் கொடுத்தாலும் தேவைக்கேற்ப தங்களிடம் இருக்கும் மூன்று அம்புலன்ஸ் வண்டிகளில் ஒன்றை அனுப்பி ப்ளூ கிராஸுக்கு எடுத்து வந்து ஆவன செய்து பராமரிக்கிறார்கள்.

இங்கு வசிக்கும் நாய், பூனைகளுக்கு இரண்டு வேளை ராகி, பயிறு, கொண்டைக் கடலை, கோதுமை, அரிசி கலந்த கூழோடு, பால் ரொட்டி சேர்த்து தருகிறார்கள். தேவையானால் முட்டையும் உண்டு. கழுதை, ஆடு, மாடுகளுக்கும் சத்தான தீவனம் கொடுக்கப்படுகிறது!

அனாதை இல்லங்களில் இருக்கும் பழக்கத்தைப் போலவே ப்ளூ கிராஸில் ஒரு அருமையான வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு 250 ரூபாய் கட்டணம் செலுத்தினால் அன்றைக்கு பிராணிகளுக்கு சாப்பாடு போடும் புண்ணியத்தை நாம் கட்டிக் கொள்ளலாம். வசதி படைத்தவர்கள், குழந்தைகளின் பிறந்த நாள், மற்ற விசேஷ நாட்களில் இத் தொகை கட்டிவிட்டு, ப்ளூ க்ராஸுக்கு வந்து சாப்பாடு போடுவதைப் பார்க்க வைப்பது குழந்தைகளுக்கு வாயில்லா ஜீவன் மேல் அன்பையும், பரிவையும் பிறப்பித்து மனித நேயங்களோடு வாழ, வளர வழி பண்ணும் என்ற ப்ளூ க்ராஸ் சங்கத்தாரின் அசைக்க முடியாத நம்பிக்கையை நானும் மனப்பூர்வமாக ஏற்கிறேன்.

இக்கட்டுரையைப் படிக்கும் உங்களில் சிலராவது இக்கருத்தை ஆமோதித்து அதை செயலில் காட்டவும் முன் வரலாமோ என்கிற நப்பாசையும் எனக்கு நிறையவே இருப்பதால் - தேவைப்படுபவர்களுக்காக விலாசம்:

ப்ளூ க்ராஸ், அடையாறு, சென்னை – 600 020
தொலைபேசி எண் : 413270

35

பதினைந்து நாட்களுக்கு முன் திருப்பதிக்குச் சென்று ஏழுமலையானை தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் சேர்மன் திரு பி.ஸி. ரெட்டிக்கு அறுபது வயசு பூர்த்தி ஆவதைக் குறித்து ஆண்டவனுக்கு நடத்தப்பட்ட சில விசேஷ பூஜைகளில் கலந்து கொண்டது என்னைப் பொறுத்தவரையில் ஒரு அற்புதமான அனுபவம்.

நினைவு தெரிந்த நாளாய் பெற்றவர்களுடனும் பிற்பாடு கணவருடனும் பல முறைகள் திருப்பதிக்குச் சென்று, நானாவித அபிஷேக, அர்ச்சனைகளைக் கண்டு களித்தது உண்டுதான் என்றாலும், இந்த முறை மூன்று நாட்கள் மலையில் தங்கி, நடந்த வைபவங்களை ஒன்று விடாமல் ஊன்றி கவனித்த போது, வெங்கடாசலபதி கோவில் நிர்வாகத்தையும், நகர பராமரிப்பையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்து. ஆஹா! என்கிற ஆச்சர்யம் என்னுள் தோன்றியிருப்பது நிஜம்.

அன்றாடம் கோவிலுக்கு வரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பற்றியும், உண்டியலில் செலுத்தப்படும் லட்சங்கள் பற்றியும், தர்ம தரிசனத்திற்காக

காத்திருக்கும் கிலோ மீட்டர் நீள க்யூ வரிசை மக்களின் வசதிக்காக ஆங்காங்கு இருக்கும் வாட்டர் கூலர்கள், டாய்லட்கள், மின்விசிறிகள் பற்றியும், சாதாரண சத்திரங்களி லிருந்து ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை மிஞ்சும் தங்குமிடங்கள் பற்றியும், பத்திரிகைகள் வாயிலாகவும், சென்று வந்தவர்களின் அனுபவம் மூலமும் வேண்டிய அளவுக்குத் தெரிந்து வைத்திருக் கிறோம்; இருப்பினும் இந்த முறை நின்று நிதானமாய் மடப்பள்ளிகளைச் சுற்றி வந்து நான் அறிந்து கொண்ட சில மூக்கில் விரலை வைக்கும் விவரங்களை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம்.

ஏழுமலையானின் திருக்கோவிலில் பிரதான மாய் இருப்பவை இரண்டு மடப்பள்ளிகள் - அதாவது சமையல் கட்டுகள். ஒன்று அன்னப் பிரசாதம் செய்ய, மற்றது பணியாரங்கள் எனப்படும் பட்சணங்களைத் தயாரிக்க.

பரம்பரையாக வரும் 'மிராசு' குடும்பங்கள் இந்த மடப்பள்ளி நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. அர்ச்சகர், ஜமேதார், பெரிய ஜீயர், சின்ன ஜீயர் - ஆகியோர் இந்த 'மிராசு' குடும்பங்களில் அடக்கம். இவர்கள் 'ஏஜண்ட்ஸ்' என்னும் நபர்கள் மூலம் மடப்பள்ளி வேலைகளைத் திறம்பட கவனித்து விடுகிறார்கள்.

230 ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி, மூன்று ஷிஃப்டுகளில் மடப்பள்ளி வேலைகள் செம்மையாகச் செய்கிறார்கள். ஒவ்வொரு ஷிஃப்ட் முடிந்ததும் மூன்று மணித்துளிகள் ஓய்வு என்று பெயர். ஆனால் இந்தத் தருணத்தில் தான் வெந்நீர் ஊற்றி இடங்களைக் கழுவுவதும், இடத்தின் சுத்த பராமரிப்பும் மேற்கொள்ளப் படுகின்றன.

விசேஷம் எதுவும் இல்லாத சாதாரண தினத்தில் இங்கு நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லட்டுகள் தயாராகின்றன. 20 மூட்டை அரிசி பலவகை சாதங்களாக சமைக்கப்பட்டு பக்தர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப் படுகிறது! இந்த அன்றாட பிரசாதங்களுக்கு என்னென்ன மூலப் பொருட்கள் எவ்வளவு தேவைப்படுகின்றன என்கிற பட்டியலைப் பார்க்கும்போது தலையைச் சுற்றுகிறது.

லட்டுகளுக்கு மட்டும் -

கடலை மாவு 44 மூட்டை, சர்க்கரை 80 மூட்டை, நெய் 220 டின், முந்திரி 6 மூட்டை, திராட்சை 6 மூட்டை, ஏலக்காய் 2 மூட்டை! கல்யாண உற்சவத்திற்குத் தேவையான பெரிய லட்டுக்களை பிடிக்க வேண்டும் என்றால், 50 லட்டுகளுக்கு 1 கிலோ பாதாம் பருப்பு வீதம் சேர்த்துக் கொள்வார்கள்.

நித்தியப்படி அன்னப் பிரசாதத்திற்கு 20 மூட்டை அரிசி, புளி 2 மூட்டை, எண்ணெய் 3 டப்பா, முந்திரி வகையறா 1 மூட்டை.

மடப்பள்ளிகளுக்கு என்னை அழைத்துச் சென்ற நிர்வாகி பட்டியல் போட்டதும் நான் 'ஏ. அப்பா!' என்று வியக்க, அவர் மென்மையாய் சிரித்தார். பிறகு "இதெல்லாம் அன்றாடம் ஸ்வாமி நைவேதனத்திற்காக செய்யப்பட்டு, பக்தர்களுக்கு விநியோகிக்கப்படும் பிரசாதங்களின் அளவு மட்டும்தான்; இவை தவிர தினமும் 35 லிருந்து 70 வரை கல்யாண உற்சவங்களும், இதர வழிபாடுகளும் நடக்கும். அதற்கும் சேர்த்துத்தான் பிரசாதங்களை தயாரிப்போம். 30 கல்யாண உற்சவ பிரசாதங்களுக்கு சுமார் 10 மூட்டை அரிசி, மற்ற பொருட்கள்

தேவைப்படும். இவை அல்லாமல் வடை, அப்பம், தோசை, ஜிலேபி, தேன்குழல் வகையறாக்களை பலகார மடப்பள்ளியிலும், சீரா, சக்கரபாத், மொத்தை, மாத்திரை பிரசாதங்களை அன்னப் பிரசாத மடப்பள்ளியிலும் தயாரிக்கிறோம்!" என்றார் அவர்.

ஆதி நாட்களில் இறைவனுக்கு 'மொத்தை' எனப்படும் வெறும் சாதத்தை பிரசாதமாகவும், விடிகாலை முதல் நைவேத்தியமாக மாத்திரை பிரசாதத்தையும் (வெண்ணெய் சாதம்) படைக்கும் வழக்கம்தான் இருந்து வந்ததாம். காலப் போக்கில் பலவித உணவு வகைகளை தயாரிக்கத் துவங்கியதும் இன்றைக்கு இத்தனை திறுசுகள் செய்வதில் வந்து நிற்கிறது!

தினமும் லட்சம் லட்டுகளை செய்தாலும், வருஷப் பிறப்பு போன்ற விசேஷ நாட்களில் ஒன்னரையிலிருந்து, ஒன்றே முக்கால் லட்ச லட்டுகள் கூட விற்பனை ஆவது சகஜமாம்.

பிரசாதங்கள் தாயாரானதும் முதலில் மடப் பள்ளியிலேயே இருக்கும் 'பொட்டுத் தாயார்' என்கிற அம்மனின் முன் அவற்றை வைத்து நைவேத்தியம் செய்த பிறகே ஸ்வாமிக்கு அர்ப்பணிக்கப்படுகின்றன.

பொட்டு அம்மன் சிலைக்கெதிராக ஒரு அலமாரி இருக்கிறது. இதில் வரிசையாய் லட்டுகள். ஒவ்வொன்றின் அடியிலும் சில விவரங்கள் குறிக்கப்பட்ட தாள். நிர்வாகி அலமாரியைத் திறந்து விஷயத்தை விளக்கினார்.

"அன்றாடம் பிரசாதங்கள் தயாரானதும், பக்தர்களில் ஒரு சிலரை அழைத்து ஒரு லட்டுவை

கொடுத்து ருசி பார்க்க வைத்த பின், அந்த நபரின் பேர், விலாசம், அந்த 'பாட்ச்' லட்டு தயாரித்தவர் பேர், தேதி என்று அனைத்து விவரங்களையும் ஒரு தாளில் எழுதி லட்டுவின் அடியில் வைத்து விடுவோம். நாலு நாட்கள், ஒரு வாரம், பதினைந்து நாட்கள் என்கிற இடைவெளியில் இப்படி வைத்த லட்டுக்களை எடுத்து பரிசோதித்து பார்ப்போம். எத்தனை நாட்கள் ஒரு லட்டு கெடாமல் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, பெயர் தந்து விட்டுப் போன பக்தருக்கு கடிதம் மூலம் தெரிவிப்போம். இப்படி எல்லா பிரசாதங்களுக்குமே பக்தர் மூலம் ஒரு 'தரக் கட்டுப்பாடு' முறையைக் கையாள்கிறோம். இது தவிர, தினமும் ஸி.எப்.டி.ஆர்.ஐ (CFTRI-Central Food Technology Research Institute) நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் பிரசாதங்களில் தரத்தை பரிசோதிப்பதும் உண்டு.

"நீங்கள் இத்தனை கவனமாகச் செயல்பட்டும் 'திருப்பதி லட்டு முன்போல் இல்லை. தரம் குறைந்து விட்டது. சீக்கிரமே கெட்டுப் போய்விடுகிறது' என்று சிலர் குறைப்பட்டுக் கொள்கிறார்களே இது ஏன்?"

"இன்று நாங்கள் செய்யும் பதார்த்தங்கள் எடை, தரம் ஆகிய பரிசோதனைகள் ஆனதும் கோடவுனுக்கு அனுப்பப்பட்டு, மக்களின் தேவைக் கேற்ப விநியோகிக்கப்படுகின்றன. பிரசாதங்களை முக்கியமாய் லட்டுக்களை வாங்கும் பக்தர்கள் தெரியாத்தனத்தில் அவைகளை காற்று புகாமல் இறுக்கமாய் மூடி வைத்து விடுகிறார்கள் அல்லது தண்ணீர் படும்படி கவனக்குறைச்சலாய் இருக் கிறார்கள். காற்றோட்டமாய் வைத்து ஈரம் இல்லாமல் பார்த்துக் கொண்டால் 15 நாட்கள் வரை லட்டுகள்

கெடவே கெடாது. நீங்களே இந்த அலமாரியில் பாருங்கள், பூஞ்சை காளான் பூக்காமல் லட்டுகள் நன்றாகத்தானே இருக்கின்றன?"

இருந்தன.

"கூடுமானவரையில் கைப்படாமல் சுத்தமாய் தயாரிக்கிறீர்கள். சரி. ஆனால் தினமும் ஒரே தரத்தோடு செய்வது எப்படி சாத்தியமாகிறது?" தயாரித்த உடன் அவ்வப்போது 'டேஸ்ட்' பார்ப்பது உண்டா?"

நிர்வாகி மறுபடியும் தலை அசைத்து சிரித்தார்.

"இது தெய்வப் பிரசாதம். வாயில் போட்டு ருசி பார்ப்பது தவறு. தப்பித்தவறி யாரேனும் பச்சை முந்திரியை வாயில் போட்டுக் கொண்டதாக தெரிய வந்தாலும், உடனே உண்டியலில் நூறு ரூபாய் அபராதமாக போட வைத்து விடுவோம். வெங்கடாசலபதி கண்கண்ட தெய்வம். அவரை நாம் ஏமாற்ற முடியாது"

மடப்பள்ளியை விட்டு வெளியே வந்தவள் வெளி பிரகார மண்டபத்தில் உட்கார்ந்து அலைமோதும் பக்தர் கூட்டம் தொன்னையில் பிரசாத சாதங்களை வாங்கி அனுபவித்து உண்டு மகிழ்ந்ததை ரொம்ப நேரத்திற்குப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்றாடம் லட்சக்கணக்கான மக்களுக்கு தெய்வ தரிசனம் மூலம் நிம்மதி வருகிறது ஒரு பக்கம் என்றால், பசி உணராமல் அவர்கள் வயிறு நிரம்புவதும் ஒரு ஆனந்த அனுபவம் அல்லவா! இதே

போல, கர்நாடக மாநிலத்திலுள்ள 'தர்மஸ்தலா'வில் வருஷம் பூராவும் வரும் பக்தர்களுக்கெல்லாம் இலை போட்டு அன்னதானம் செய்வதையும் பார்த்து பரவசப் பட்டிருக்கிறேன். என்ன அற்புதமான வழக்கம் இது!

ஒரு சமயம் வெளிநாட்டிலிருந்து வந்த நண்பர் ஒருவர் இப்படி ஆண்டு முழுவதும், ஒரு நாள் விடாமல் அன்னதானம் செய்வதைப் பற்றி பேசுகையில் 'இந்த மாதிரியான செய்கை வேறு எந்த நாட்டிலும் நிகழ்வதாக நான் கேள்விப்பட்டதில்லை. பாரத மண்ணுக்கே உரிய விசேஷமா இது!' என்று நெகிழ்ந்து போய் கூறின மாதிரி, இந்தக் கட்டுரையை எழுதும் நிமிஷத்தில் என் நாட்டையும், அதன் உயர்வான கலாசாரத்தின் பல பழக்க வழக்கங்களையும் எண்ணிப் பார்த்து நானும் ஒருமுறை பிரமிப்பில் ஆழ்ந்திருப்பது புரிகிறது!

36

'ஆரம்பம் என்று ஒன்று இருந்தால், முடிவும் நிச்சயம்' என்பது நடைமுறைப் பாடம். ஆனால், முடிவு என்பது அறுதியான ஒன்றாக, முற்றுப்புள்ளியாக இல்லாமல், செமிகோலன், கமா போல கொஞ்சம் நின்று நிதானிக்கச் செய்வதாக இருந்து, மறுபடியும் புது உற்சாகத்தோடு எழுந்து செயல்படுவதற்குத் தூண்டும் டானிக்காக அமைய வேண்டும் என்பதே என் விருப்பம். பகலெல்லாம் ஓடி ஆடி உழைத்து களைத்துப் போன பின் நிச்சிந்தையாய் உறங்கி எழுந்தால்தான் மறு நாளின் செயல்பாடு களுக்கு நாம் தயாராவது இயலும். ஓய்வு ஒழிச்சல் இன்றி அல்லாடிக் கொண்டே இருந்தால், ஒருசில நாட்கள் தாக்குப் பிடித்துவிட்டு, அப்புறம் உடல் நலம் சீர் கெட்டு ஒரேயடியாகப் படுத்துவிடும் அபாயம் உள்ளது என்பதை மறக்கக் கூடாது.

சுவர் உறுதியாக இருந்தால்தான் சித்திரம் வரைவதோ அல்லது ஏற்கனவே எழுதப்பட்ட படத்தை மாட்டுவதோ சாத்தியமாகும் என்று பெரியவர்கள் காலம் காலமாகச் சொல்லி வருவதில் அர்த்தம் இல்லாமல் போகவில்லை.

சுவர் என்று அவர்கள் குறிப்பிட்டது மறைமுகமாக ஒருவரது உடல், மனம், ஆன்மாவைத் தான் என்பதை, விவரம் அறிந்து எவராலும் புரிந்து கொள்ள முடியும்.

ஆரோக்யம் என்பது உடலுக்கு எத்தனை அவசியமோ அத்தனை முக்கியம் ஆன்மாவுக்கும், மனசுக்கும் கூடத்தான் என்று நான் சொல்லும்போது ஆரோக்கியமா? மனம் ஆன்மாவுக்கா? என்று அவசரப்பட்டு யாரேனும் நையாண்டி பண்ண முயன்றால் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நல்ல திசையில் ஆன்மீக வளர்ச்சி பெறுவதும், மனசை ஒட்டடை, அழுக்கு, அசிங்கம் இல்லாமல் காற்றோட்டமாய், வெளிச்சத்துடன் விசாலமாய் வளரப் பேணுவதும் ஆரோக்யம் இல்லாமல் வேறு என்ன?

உடல், மனம், ஆன்மா மட்டுமல்லாது மொத்தத்தில் ஒருவரது வாழ்க்கையே ஆரோக்யமாக இருக்கவும், வளரவும் வெகுவாக உதவுவது முதலில் நான் குறிப்பிட்ட 'நின்று நிதானித்தல்' தான். எப்படி என்கிறீர்கள்? உதாரணங்கள் மூலம் விளக்குகிறேன்.

மணிமாறன் ஒரு தொழில் அதிபர். துடிப்பும், உற்சாகமும் நிறைந்தவர். மேலை நாடுகளில் பயிற்சி பெற்று வந்த பின்னர் தன்னுடைய தொழிற்சாலையில் நூதனமான வாஷிங் மெஷின் செய்து வீட்டு காரியங்களில் பெண்களுக்கு உதவுவதில் ஒரு புரட்சி பண்ணும் திட்டத்தோடு தயாரிப்பில் இறங்கினார். மார்கெட்டுக்கு கருவிகள் வந்தும் விற்பனை எதிர்பார்த்த விதத்தில் சூடு பிடிக்காமல் இருக்க, ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியோடு பிரச்னை என்ன

என்பதை அறிய முயன்றார். கடைசியில் இந்திய நாட்டின் சீதோஷ்ண நிலை, மெஷின் சரியாக இயங்க அனுமதிப்பதில்லை என்கிற உண்மை புரிந்து, தயாரிப்பில் மாற்றம் செய்து அதிக வெப்பத்தை தாங்கும் படி பாகங்களை சீர் செய்ததும், இன்று எந்தப் பிரச்னையும் இல்லாமல் அவரது தயாரிப்புகள் விற்பனை ஆகின்றன.

அடுத்து, ஒரு முன்னணி டாக்டர். அவரது ஹாஸ்பிடலும் அதன் செயல்பாடுகளும் மக்களிடையே எந்த மாதிரியான அபிப்ராயத்தை உண்டு பண்ணியிருக்கின்றன என்பதை அறிய அவர் முனையாததோடு, யாராவது குறைகளைச் சொல்ல வந்தாலும் அதை காதில் வாங்காமல் அலட்சியமாய் இருந்ததில் படிப்படியாக நல்ல பெயரை இழந்து, இன்றைக்கு ஹாஸ்பிடல் கைமாறி அந்தக் கட்டிடத்தில் ஒரு ஹோட்டல் நடக்கிறது!

மேலே சொன்ன சம்பவங்களில் 'நின்று நிதானித்தல்' என்கிற தற்காலிக ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு சுய அலசல் மூலம் உண்மை நிலையை அறிந்ததனால் ஒருவரின் வியாபாரம் செழித்தது. 'எனக்கு எந்த 'ஃபீட் பாக்' (Feedback) க்கும் வேண்டாம். நான் சர்வமும் அறிந்தவன்' என்கிற திமிரோடு நின்று நிதானித்து சிந்திப்பதை மற்றவர் தவிர்த்ததில் தொழில் நொடித்துப் போயிற்று. இதைப் போலவே உடல் நலம் சரியாக உள்ளதாக, மனசு கோணிப் போகாமல் இருக்கிறதா, ஆன்மீக வளர்ச்சி ஆரோக்கியமாய் படுகிறதா என்று நம்மை நாமே அலசி, குறைகளைக் களைந்து, நிறைகளை வளர்த்து, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளவும் அவ்வப்போது கொஞ்சம் நின்று, நிதானித்து

யோசிக்கும் பழக்கம் பெருமளவில் தனி நபருக்கு உதவி செய்கிறது.

எதற்காக 'தாற்காலிக ஓய்வு' அல்லது 'நின்று நிதானித்து யோசிப்பது' என்பதைப் பற்றி இத்தனை விரிவாக எழுத முற்படுகிறேன் என்பதை இதற்குள் கண்டிப்பாக உங்களில் பலர் ஊகித்திருப்பார்கள். ஆம், நண்பர்களே 'உரத்த சிந்தனை'க்கும் ஒரு தாற்காலிக ஓய்வு தேவைப்படுகிறது என்றே நான் நினைக்கிறேன்.

கிராமங்களில் அல்லது புல்வெளிகள் நிறைந்த இடத்திற்குச் செல்லும் வழக்கம் உள்ளவர்கள் அங்கு ஒரு காட்சியை சர்வசாதாரணமாய் பார்த்திருப்பார்கள். மேய்ச்சலுக்கு வந்திருக்கும் மாடுகள் தலையைத் தூக்காமல் கிடைக்கும் புற்களை மேய்ந்து விட்டு, பின்னர் அவகாசம் கிட்டும் போது மேய்ந்து விழுங்கியுள்ள புற்களை கொஞ்சம் கொஞ்சமாய் வாய்க்கு மறுபடியும் கொணர்ந்து, செம்மையாய் அசைபோட்டு, கடித்து, கூழாக்கி, ஜீரணிக்க ஏதுவாய் மீண்டும் விழுங்குவது போல 'அசை' போட வேண்டிய நிலையில் நாமெல்லோரும் இருப்பதாகவே நான் உணருகிறேன்.

கிட்டத்தட்ட ஒன்னரை வருஷங்களாக பல விஷயங்களைக் குறித்து சமுதாயம், நாடு, தனி நபர் என்று பல்வேறு தலைப்புகளில் பல கோணங்களி லிருந்து சிந்திக்க முயன்றிருக்கிறோம். சந்தோஷம் ஆனால் இந்த சிந்தனைகள் ஆக்கபூர்வமாக எதையேனும் சாதித்திருக்கிறதா, உடல், மனம், ஆன்மா இவைகள் ஒரு அங்குலமாவது வளர உதவியிருக் கிறதா? ஒருவரின் வாழ்க்கைத் தரம் மேம்பட வழிகாட்டியிருக்கிறதா? என்பது குறித்து சின்னதாய்

ஒரு சுய அலசல் செய்து கொள்ள வேண்டிய அவசியம் இப்போது எழுந்திருக்கிறது என்று நான் சொன்னால் அதை மறுக்க மாட்டீர்கள் அல்லவா?

மாற்றம் இருந்தால்தான் வளர்ச்சி. இல்லாவிட்டால் எதுவும் தேங்கி நிற்கும் குட்டையாக பாசி படர்ந்து, கொசுக்கள் மொய்க்கும் அசுத்தமாக மாறி விடும். மீண்டும் சொல்கிறேன் நண்பர்களே - வளர்ச்சி வேண்டுவோர் மாற்றத்துக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். 'நான் எக்காலத்திலும் மாறவே மாட்டேன்' என்று சொல்வதில் உயர்வு எதுவும் இல்லை. எதில் மாற்றம் வருகிறது, எப்படி வருகிறது என்பது முக்கியம். மாற்றம் வளர்ச்சிக்கு துணை புரிகிறதாக இருக்க வேண்டுமே ஒழிய வீழ்ச்சிக்கு அடிகோலுவதாக அமையக் கூடாது.

எந்த ஒரு மாற்றத்துக்கும் சரியான விழிப்புணர்வு தேவை. அந்த விழிப்புணர்வுக்கு அழுத்தமான சிந்தனைகள் அஸ்திவாரம்.

சம்பகாலமாகத் தொடர்ந்து செய்து வந்த உரத்த சிந்தனை எந்த மாதிரியான விழிப்புணர்வை நம்முள் தோற்றுவித்திருக்கிறது என்பதை நாம் உணர நமக்கு தற்சமயம் 'தாற்காலிக ஓய்வு' வேண்டும்.

நம்முடைய சிந்தனைகள் ஆரோக்யமாய் முளைவிட்டிருக்கின்றனவா, அவைகளுக்கு எதிர் காலத்தில் தேவையான உரம், தண்ணீரை தயாராக வைத்திருக்கிறோமா, ஆடு, மாடுகள் மேயாமல், பூச்சி அடிக்காமல் சிந்தனைச் செடிகள் திடமாய் வளர பாதுகாக்கும் ஏற்பாடுகளைச் செய்து விட்டோமா, எங்காவது ஏதாவது தவறாகப் போயிருக்கிறதா? எங்கே, என்ன? பிரச்னை புரிந்து தீர்வுக்கு வழி செய்து

குறையை, நிறையாக மாற்றி விட்டோமா? இப்படிப் பல கேள்விகளை நமக்கு நாமே கேட்டு, தேவையான நடவடிக்கைகளில் இறங்க இப்போது நாம் கொஞ்சம் 'நின்று நிதானிக்க' வேண்டும் என்பது என் ஆசை.

நம் பசிக்கு நாம்தான் சாப்பிட வேண்டும். நம் உறக்கத் தேவைக்கு நாம்தான் தூங்க வேண்டும். எவ்வளவுதான் ஒருவர் மீது மற்றவர் உயிராக இருப்பினும், அடுத்தவருக்காக இவைகளை யாரும் செய்ய முடியாது. தனி நபர் மேம்பாடு என்பதும் உறக்கம், பசி போன்றதுதான். நம் வளர்ச்சிக்கு நாம்தான் முனைய வேண்டும். சரியான திசையில் போகிறோமா என்று அறிய ஆங்காங்கு இருக்கும் வழிகாட்டி மரங்களின் உதவியை நாடலாம். ஆனால் அவை நம்மோடு வாரா. பயணிப்பது நாம் மட்டுமே.

உங்கள் முயற்சிகள் வெற்றி பெற, முழுமையான மனிதராக நீங்கள் ஒவ்வொருவரும் வளர, வாழ எனது வாழ்த்துக்கள்.

16856
3288079